# பாடத்திட்டம்

# المنهج التعليمي



مركز توعية الجاليات بالقصيم
FOREIGNERS GUIDANCE CENTER IN GASSIM ZONE
BURAYDAH P.O.BOX 142 TEL: 063248960 FAX: 063245414

التاميلية

201

بسم الله الرحمن الرحيم

# المنهج التعليمي

الجزء الأول

تشرف بإعداده وترجمته:

## شعبة توعية الجاليات بالزلفي


السعودية - الزلفي ١١٩٣٢ - ص.ب: ١٨٢

ت: ٠٦٤٢٢٥٦٥٧ - فاكس: ٤٢٢٤٢٣٤



حقوق الطبع محفوظة

ولا يسمح بطبعه مطلقا إلا بإذن خطي من الشعبة


# பாடத்திட்டம்

**பாகம் 1**

**தயாரிப்பு:**

## சுல்பி வெளிநாட்டவர் அழைப்பு மையம்


தபால் பெட்டி எண் 182

சுல்பி- 11932

சவூதி அரேபியா

போன்: 064225657    பேக்ஸ்: 064224234



பதிப்புரிமை தயாரித்தவர்களுக்கு மட்டுமே

இதைப் பிரசுரிக்க விரும்புவர்கள்

இந்த ஜாலியாத்தின் எழுத்துப்பூர்வமான

அனுமதி பெறாமல் பிரசுரிக்கக் கூடாது.

# المنهج التعليمي

## أعده وترجمه إلى اللغة التاميلية

## شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الأولى: ١٤٢١/٢ هـ.

ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢١هـ
*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*
شعبة توعية الجاليات (الزلفي)
المنهج التعليمي -الزلفي
١٤٠ ص؛ ١٧/٢٤ سم
ردمك: ٠-٧٧-٨١٣-٩٩٦٠
(النص باللغة التاميلية)
١- الإسلام - مبادىء عامة أ- العنوان
ديوي ٢١١ ٢١/٠٧٠٨

رقم الإيداع: ٢١/٠٧٠٨
ردمك: ٠-٧٧-٨١٣-٩٩٦٠

الصف والإخراج: **شعبة توعية الجاليات في الزلفي**

# முன்னுரை

## முதல் பதிப்பு

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக! சாந்தியும் அருளும் நபி(ஸல்)அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் உண்டாவதாக!

சுல்பியிலுள்ள ஜாலியாத்- வெளிநாட்டவர் அழைப்பு மையம் இந்தப் பாடத்திட்டத்தை சமர்ப்பிப்பதில் பெறுமையடைகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் இதன் மூலம் மக்களுக்குப் பலன் தருமாறும் இப்பணியை அவனது திருமுகத்துக்காகவே ஆக்கி அதனை ஏற்றுக் கொள்ளுமாறும் அவனிம் வேண்டுகிறோம்.

இந்த பாடத்திட்டத்தை மிக எளிய நடையில், சுருக்கமாகவும் அதே நேரத்தில் இஸ்லாமிய சட்டதிட்டங்களை அதனூடே இலகுவான முறையில் விளக்கும் வண்ணம் அமைத்துத் தருவதற்கு பெரிதும் அக்கறை காட்டியிருக்கிறோம்.

மேலும் ஜாலியாத்- வெளிநாட்டவர் அழைப்பு மையங்கள் மற்றும் இஸ்லாமிய அழைப்பு மையங்களில் உள்ளவர்களும் மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற அக்கறையுள்ளவர்களும் தங்களுத் தேவையானதை இதில் பெற்றுக் கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | அடிப்படைக் கொள்கை | 5 |
| 2 | தூய்மை மற்றும் தொழுகையின் சட்டங்கள் | 19 |
| 3 | ஜகாத் | 31 |
| 4 | நோன்பின் சட்டங்கள் | 38 |
| 5 | ஹஜ், உம்ராவின் சட்டங்கள் | 44 |
| 6 | திருமணத்தின் சட்டதிட்டங்கள் | 55 |
| 7 | முஸ்லிம் பெண்மணிக்குரிய சட்டங்கள் | 65 |
| 8 | இஸ்லாமிய வாழ்வும் நெறியும் | 78 |
| 9 | இறுதி நாள் | 101 |
| 10 | நபிகள் நாயகம் | 111 |
| 11 | உணவின் சட்டங்கள் | 132 |
| 12 | உம்ராவின் சட்டதிட்டங்கள் | 136 |

# அடிப்படைக் கொள்கை
# أصول العقيدة

## தவ்ஹீத்

தவ்ஹீதென்பது அல்லாஹ்வுக்குரிய பண்புகளையும் அவனுக்கு செலுத்த வேண்டிய வணக்க வழிபாடுகளையும் அவனுக்கு மட்டும் சொந்தமாக்குவதாகும்.
அல்லாஹ் கூறுகிறான்: நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி வேறெதற்காகவும் படைக்கவில்லை. (51:56) மேலும் அல்லாஹ்வை வணங்குங்கள், அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். (4:36)

தவ்ஹீத் மூன்று வகைப்படும். தவ்ஹீதுர் ருபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீதுல் அஸ்மா, வஸ்ஸிஃபாத்.

## தவ்ஹீதுர் ருபூபிய்யா

இது படைத்தல், நிர்வகித்தல், ஆட்சி செய்தல் ஆகியவற்றில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதாகும். அதாவது அல்லாஹ் தான் இவ்வுலகத்தைப் படைத்தவன். அவனே அதனை நிர்வகிப்பவன். அவனே ரிஸ்க்- வாழ்க்கை ஆதாரம் வழங்குபவன். உயிர்ப்பிப்பவனும் அவனே. மரணமடையச் செய்பவனும் அவனே. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அதிகாரம் அவனுக்கே உரியது என்று ஏற்றுக் கொள்வதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: வானம் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு உணவளிக்கின்ற படைப்பாளன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இருக்கின்றானா? வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. (35:3) “எவனுடைய கையில் (இப்பேரண்டத்தின்) ஆட்சியதிகாரம் உள்ளதோ அவன் பாக்கி யமிக்கவன். மேலும் அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன்”. (67:1)

அல்லாஹ்வின் ஆட்சி உலகிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய ஆட்சியாகும். அதில் அவன் விரும்பியது போல் ஆட்சி செய்வான்.

நிர்வகிப்பதில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது என்பது அவன் மாத்திரமே அனைத்துப் படைப்பினங்களையும் நிர்வகிக்கக் கூடியவன் என்று பொருள். அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவையே! அனைத்துலகங்களுக்கும் அதிபதியாகிய அல்லாஹ் அருள் வளமிக்கவன். (7:54)

இதுதான் அனைத்துப் படைப்பினங்களையும் உள்ளடக்கிய நிர்வகித்தலாகும்.
மனிதர்களில் மிக சொற்பமானவர்களே இந்த வகைத் தவ்ஹீதை வெளிப்படையில் நிராகரிக்கின்றார்கள். ஆனால் அவர்களின் உள்ளங்கள் அதை ஏற்றுக் கொள்ளத்தான் செய்கின்றன. “அவர்களின் உள்ளங்கள் அவற்றை (உண்மையென) ஏற்றுக் கொண்ட போதிலும் அதனை அவர்கள் மறுத்தார்கள்.” என்று அல்லாஹ் கூறுவதுபோல.

## தவ்ஹீதுல் உலூஹிய்யா

வணக்க வழிபாடுகளை இறைவனுக்கு மட்டும் செலுத்துவதாகும். அல்லாஹ்வுடன் வேறொரு கடவுளை ஏற்படுத்திக் கொண்டு அதனை வணங்கக் கூடாது. அதன் நெருக்கத்தைப் பெற நாடக்கூடாது. இந்த தவ்ஹீதுக்காகத்தான் அல்லாஹ் மனிதர்க

ளைப் படைத்தான். இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். வேதங்கள் இறக்கியரு ளப்பட்டன. அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்கு வதற்காக அன்றி வேறெதற்காகவும் நான் படைக்கவில்லை. (51:56) (நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறை வன் என்னைத் தவிர வேறு யாருமில்லை என நாம் வஹீ அறிவிக்காமல் இல்லை. (21:25) இந்த வகைத் தவ்ஹீதைத் தான் இணைவைப்பாளர்கள் ஏற்கமறுத்தனர். இ றைத்தூதர்கள் இதன் பால் அழைத்தபோது "எங்கள் மூதாதையர்கள் வழிபட்ட தெய் வங்களை விட்டுவிட்டு அல்லாஹ் ஒருவனை வணங்க வேண்டும் என்பதற்காகவா நீர் எங்களிடம் வந்திருக்கிறீர்" என்று அவர்கள் கூறினார்கள். (7:70)

எனவே வணங்கங்களில் எதையும் அல்லாஹ்விற்கு நெருக்கமான மலக்கிற்கோ இ றைத்தூதருக்கோ நல்லடியார்களுக்கோ படைப்பினங்களில் வேறு எவருக்குமோ செலு த்திவிடக் கூடாது. ஏனெனில் வணக்க, வழிபாட்டை அல்லாஹ்வுக்கு மட்டுமே செலுத் தினாலே தவிர ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## தவ்ஹீத் அஸ்மா, ஸி∴பாத்

இது அல்லாஹ் தனக்கு என்னென்ன திருப்பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறி யுள்ளானோ அல்லது அவனது தூதர் அவனுக்கு என்னென்ன திருப்பெயர்கள், பண்பு கள் இருப்பதாகக் கூறியுள்ளார்களோ அவற்றில் அவனை ஏகத்துவப்படுத்துவதாகும். அதாவது அவன் தனக்கு இருப்பதாக உறுதிப்படுத்தியிருப்பவற்றை மாற்றாமல், மறுக் காமல், உருவகப்படுத்தாமல், ஒப்பாக்காமல் அப்படியே உறுதிப்படுத்த வேண்டும். எனவே அல்லாஹ் தனக்கு சூட்டியிருக்கக் கூடிய திருநாமங்களுக்கு மாற்று விளக்கம் கொள்ளாமல் அதற்குரிய எதார்த்த நிலையிலேயே ஈமான் கொள்வது அவசியமாகும்.

உதாரணமாக அல்லாஹ் தனக்கு ஹய்யுல் கய்யூம்- நித்திய ஜீவன், பேரண்டம் மு ழுவதையும் நன்கு நிர்வகிப்பவன் எனப் பெயர் சூட்டியுள்ளான். எனவே நாம் ஹய்யு எ ன்பது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்று என்று நம்புவது கடமையாகும். அத்துட ன் அதில் அடங்கியிருக்கின்ற தன்மையை நம்புவதும் அவசியமாகும். அதுதான் பரிபூர ணமான ஜீவிதம். அதற்கு, 'முன்பு இல்லை' என்ற நிலையும் கிடையாது. 'பின்பு அழிவு' என்ற நிலையும் இருக்காது.

இன்னும் அல்லாஹ் தனக்கு ஸமீ∴- கேட்பவன் எனப் பெயர் சூட்டியள்ளான். நாம் ஸமீ∴ என்பது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒரு திருநாமமென நம்புவதும் கேட்பது அவனது பண்புகளில் ஒரு பண்பு என நம்புவதும் அவசியமாகும்.

மற்றொரு உதாரணம்: அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் கை கட்டப்பட்டிருக்கி றது என்று யூதர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய கைகள் தாம் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதன் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டார்கள். அல்லாஹ்வின் இரு கைகளோ விரிக்கப்பட்டே இருக்கின்றன. அவன் தான் நாடியவாறு அள்ளி வழங்குகின் றான். (5:64)

அல்லாஹ் தனக்கு தாராளமான நன்கொடை வழங்கக்கூடிய இரு கைகள் இருப்ப தாக உறுதிப்படுத்தியுள்ளான். நாமும் அவ்வாறே அல்லாஹ்வுக்கு தாராளமான நன் கொடை வழங்கக்கூடிய இரு கைகள் இருக்கிறதென நம்புவது கடமையாகும். எனினு ம் நமது உள்ளத்தில் அதற்கு ஒரு வடிவத்தை எண்ணாமலும் நாவால் அந்த இரு கைகளுக்கும் ஒரு அளவைக் கூறாமலும் அவ்விரு கைகளையும் படைப்பினங்களின்

கைகளுக்கு ஒப்பாக்காமலும் ஈமான் கொள்வது அவசியமாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் யாவற்றையும் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். (42:11)

தவ்ஹீதுகளில் இந்த தவ்ஹீத் பற்றி சுருக்கமான கருத்து என்னவெனில் அல்லாஹ் வுடைய திருநாமங்கள், பண்புகளில் அல்லாஹ்வோ அவனது தூதரோ எவற்றை உறு திப்படுத்திச் சொல்லியுள்ளார்களோ அவற்றை மாற்றாமல், மறுக்காமல், உருவகப்படு த்தாமல், ஒப்பாக்காமல் அவற்றுக்குரிய எதார்த்தமான நிலையில் நம்புவது நம்மீது கடமையாகும்.

## லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பொருள்

லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது மார்க்கத்தின் அஸ்திவாரமாகும். இஸ்லாமிய மார்க்கத்தில் இதற்கு மிகப்பெரும் அந்தஸ்து இருக்கிறது. இதுவே இஸ்லாமியக் கடமை களில் முதற்கடமையும் ஈமானின் கிளைகளில் மிக உயர்ந்ததுமாகும். செயல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இக்கலிமாவை மொழிவதும் அதற்கேற்ப செயல்படுவதும் நிபந்த னையாகும்.

இதற்குரிய சரியான பொருள் உண்மையில் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதாகும். இதைத் தவிர வேறு பொருள் கொள்ளக் கூடாது. இதனுடைய பொருள் அல்லாஹ்வைத் தவிர படைப்பவன் வேறு யா ருமில்லை என்பதோ அல்லது பொருட்களை நூதனமாக உற்பத்தி செய்பவன் அல்லா ஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதோ அல்லது உலகத்தில் இருப்பது அல்லா ஹ்வைத் தவிர வேறு எதுவுமில்லை என்பதோ அல்ல.

## இக்கலிமாவுக்கு இரு அம்சங்கள் உள்ளன

1- மறுத்தல்: இது லாஇலாஹ- வணக்கத்திற்குரியவன் யாருமில்லை- என்று நாம் சொல்லும்போது வணக்கத்திற்குரிய தகுதி எவருக்கும் இல்லை என்று மறுத்துச் சொல்வதாகும்.

2- உறுதிப்படுத்துதல்: உறுதிப்படுத்துதல் என்பது இல்லல்லாஹ்- அல்லாஹ்வைத் தவிர- என்று நாம் சொல்லும்போது வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ்விற்கு மட் டுமே உள்ளது. இதில் அவனுக்கு இணையாக யாரும் கிடையாது என உறுதிப்ப டுத்துவதாகும்.

எனவே அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணங்கப்படக் கூடாது. வணக்க வ கைகளில் எதுவும் அல்லாஹ் அல்லாதவருக்கு செலுத்தப்படக் கூடாது. யார் இந்தக் கலிமாவை- இதன் பொருள் அறிந்து, இணைவைப்பதை நிராகரிக்க வேண்டும் ஏகத்து வத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற இதன் தேட்டத்தை உறுதியாக நம்பி அதன் பிரகாரம் செயல்பட்ட வண்ணம்- சொல்கிறாரோ அவரே உண்மையான முஸ்லிம். இக் கலிமாவின் படி நம்பிக்கை கொள்ளாமல் செயல் மட்டும் உள்ளவன் நயவஞ்சகன். இக் கலிமாவிற்கு மாற்றமாக இணைவைத்து செயல்படுபவன் காபிர், முஷ்ரிக். அவன் இக் கலிமாவை நாவால் மொழிந்தாலும் சரியே.

## லாஇலாஹா இல்லல்லாஹ்வின் சிறப்பு

**இக்கலிமாவிற்கு அநேக சிறப்புகளும் பலன்களும் உள்ளன. அவற்றில் சில:**

1- இக்கலிமா நரகம் செல்லத் தகுதியானவனை நிரந்தரமாக நரகத்தில் இருப்பதைத் தடுப்பதற்கு காரணமாக இருக்கிறது. இதற்கு ஆதாரமாக ஸஹீஹான ஹதீஸ் வந்துள்ளது. ஒரு மணிக்கோதுமை அளவு ஒருவனது உள்ளத்தில் நன்மையிருக்கும் நிலையில் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறியவன் நரகிலிருந்து வெளியேற்றப் படுவான். ஒரு தொலிக் கோதுமை அளவு ஒருவனது உள்ளத்தில் நன்மையிருக்க லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறியவனும் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவான். ஒரு மக்காச் சோளம் அளவு நன்மை உள்ளத்திலிருக்க லாஇலாஹ இல்லல்லாஹ் கூறியவனும் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவான். நபிமொழி (புகாரி, முஸ்லிம்)

2- மனிதர்களும் ஜின்களும் இதற்காகத்தான் படைக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்கல்லாமல் வேறு எதற்காகவும் நான் படைக்கவில்லை. (51:56)

3- தூதர்கள் அனுப்பப்பட்டதும் வேதங்கள் இறக்கப்பட்டதும் இதற்காகத்தான். அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உமக்கு முன்னர் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் என்னைத்தவிர வேறு யாருமில்லை. என்னையே வணங்குங்கள் என நாம் வஹீ அறிவிக்காமலில்லை. (21:25)

4- இதுவே இறைத்தூதர்களின் அழைப்பிற்குரிய திறவுகோலாகும். எல்லா இறைத் தூதர்களும் இதன் பக்கம்தான் மக்களை அழைத்தார்கள். அவர்கள் அனைவரும் தம் மக்களிடம் “அல்லாஹ்வை வணங்குங்கள் அவனையன்றி வேறு இறைவன் உங்களுக்குக் கிடையாது” என்றே கூறினார்கள். (7:73)

5- இக்கலிமா அல்லாஹ்வை நினைவு கூர்வதற்கு மிகச் சிறந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நானும் எனக்கு முன் சென்ற நபிமார்களும் கூறியதில் மிகச் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை அவன் தனித்தவன் அவனுக்கு இணையாக எதுவும் கிடையாது- என்பதாகும். (முஅத்தா)

## லாஇலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள்

லாஇலாஹ இல்லல்லாஹ்விற்கு ஏழு நிபந்தனைகள் உள்ளன. ஒரு அடியான் அவற்றில் எந்த ஒன்றுக்கும் முரண்படாமல் அந்த ஏழையும் ஒன்றாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளாத வரையில் அது செல்லாது. அவை:

1- அறிவு: அதாவது இக்கலிமாவின் மறுத்தல், உறுதிப்படுத்துதல் என்ற பொருளையும் அப்பொருள் வலியுறுத்துகின்ற செயலையும் அறியவேண்டும். எனவே ஒரு அடியான் நிச்சயமாக அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன். அவன் அல்லாதவற்றை வணங்குவது பயனற்றது பிரயோஜனமில்லாதது என அறிந்து அதற்கேற்ப செயல்படுவானேயானால் அவனே இதன் பொருளைத் தெரிந்தவனாவான். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என நீர் அறிந்துகொள்வீராக. (47:19) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என அறிந்தவனாக ஒருவன் மரணமடைந்தால் அவன் சுவர்க்கம் புகுவான்.

2- உறுதி: அதாவது இக்கலிமாவை- ஜின், மனித ஷைத்தான்கள் ஏற்படுத்துகின்ற சந்தேகங்கள் வராமல் தெளிந்த உள்ளத்துடன் உறுதியாக மொழிவதாகும். மட்டுமின்றி இதன் பொருளை மிக உறுதியாக நம்பி இதைக் கூறிட வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக (உண்மையான) முஃமின்கள் யாரென்றால் அவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிய பின்னர் (அதுபற்றி எத்தகைய) சந்தேகமும் கொள்ளமாட்டார்கள். (49:15) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி சொல்கிறேன் என்கிற இவ்விரண்டு கலிமாவையும் எவ்வித சந்தேகமுமின்றி நம்பி ஒரு அடியான் அல்லாஹ்வை சந்திப்பானேயானால் அவன் சுவர்க்கத்தில் நுழைவான். (முஸ்லிம்)

3- ஏற்றுக்கொள்ளல்: அதாவது இக்கலிமாவின் தேட்டம் அனைத்தையும் உள்ளத்தால் உறுதிகொண்டு நாவால் மொழிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மூலம் வந்துள்ள எல்லாச் செய்திகளையும் மெய் என்று நம்பி அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றில் எதனையும் மறுத்துவிடக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்: இறைத்தூதர் தம் இறைவனிடமிருந்து தனக்கு அருளப்பட்டதை நம்புகிறார். முஃமின்களும் நம்புகின்றனர். இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் நம்புகின்றனர். மேலும் அல்லாஹ்வுடைய தூதர்கள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டுவதில்லை என்றும் மேலும் நாங்கள் செவியேற்றோம் அடிபணிந்தோம். எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம். உன்னிடமே (நாங்கள்) திரும்பி வர வேண்டியிருக்கிறது என்றும் கூறுகின்றனர். (2:285) மார்கச் சட்டங்களில் அல்லது குற்றவியல் சட்டங்களில்- உதாரணமாக திருட்டு அல்லது விபச்சாரத்திற்குரிய தண்டனை பலதாரமணம் அல்லது வாரிசுரிமைச் சட்டம் போன் றவைகளில் சிலவற்றை ஆட்சேபிக்கிறவர்கள் அல்லது மறுப்பவர்கள் இக்கலிமாவை நிராகரிப்பவர்களில், ஏற்றுக்கொள்ளாதவர்களில் சேர்ந்துவிடுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தைப் பற்றி கட்டளையிட்டுவிட்டால் அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு எந்த ஒரு முஃமினான ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. (33:36)

4- கீழ்ப்படிதல்: கலப்பற்ற ஏகத்துவக் கலிமா எதை அறிவிக்கின்றதோ அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏற்றுக் கொள்வதற்கும் கீழ்ப்படிவதற்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால் ஏற்றுக் கொள்வதென்பது அதற்குரிய சரியான பொருளை வார்த்தையால் வெளிப்படுத்துவது. கீழ்ப்படிதலென்பது செயல்களால் பின்பற்றுவதாகும். ஒருவன் லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பொருளை அறிந்து, அதை உறுதி கொண்டு அதை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறான் எனினும் அவன் அறிந்ததற்கேற்ப கீழ்ப்படியவில்லை யென்றால் அது அவனுக்கு பயனளிக்காது. அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இறைவன் பால் திரும்பி அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படியுங்கள். (39:54) இன்னும் கூறுகிறான்: உம் இறைவன் மீது சத்தியமாக அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக்கி நீர் தீர்ப்புச் செய்தது பற்றி தம் மனங்களில் எத்தகைய அதிருப்தியையும் கொள்ளாது அதை முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாகமாட்டார்கள். (4:65)

5- உண்மை: அல்லாஹ்விடம் உண்மையாக நடந்து கொள்ளுதல். இது அவனுடைய நம்பிக்கையில், அடிப்படைக்கொள்கையில் உண்மையாளனாக இருப்பதைக் குறிக்கும். அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையாளர்களுடன் இருங்கள். (9:119) உண்மையான உள்ளத்துடன் யாரேனும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறினால் அவர் சுவர்க்கம் புகுவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்) ஒருவன் இக்கலிமாவை நாவினால் சொல்லிக் கொண்டு அதன் அர்த்தத்தை உள்ளத்தால் மறுத்தால் நிச்சயமாக அது அவனுக்கு ஈடேற்றமளிக்காது. மாறாக அவன் நயவஞ்சகர்களின் கூட்டத்தில் சேர்ந்துவிடுவான். நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்த அனைத்தையுமோ அல்லது அதில் சிலவற்றையோ பொய்ப்படுத்துவது உண்மைக்கு முரணானதாகும். ஏனெனில் அல்லாஹுத்தஆலா நபி(ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படியவும் அவர்களை உண்மைப்படுத்தவும் ஏவியுள்ளான். நபிக்குக் கீழ்ப்படிதலை தனக்கு கீழ்ப்படிதலோடு சேர்த்துக் கூறியிருக்கின்றான். "அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள் (அவனுடைய) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் என(நபியே!) நீர் கூறுவீராக" (24:54)

6- வாய்மை: மனிதன் தனது செயல்களை தூய எண்ணத்தைக் கொண்டு- ஷிர்க்கின் சாயல் படிந்த அனைத்தை விட்டும் சுத்தப்படுத்துவதாகும். அதாவது சொல், செயல் அனைத்தும் அல்லாஹ்வின் திருமுகத்துக்காகவும் அவனது திருப்தியைத் தேடியும் கலப்பற்ற முறையில் ஏற்படவேண்டும். அதில் முகஸ்துதி, பிறர் பாராட்ட வேண்டுமென்பது, பயன் கருவது, சுயநலன், வெளிப்படையான அல்லது மறைமுகமான மனோ இச்சை, அல்லது அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்றி ஒரு மனிதனின் பிரியத்திற்காகவோ அல்லது ஒரு மத்ஹபுக்காகவோ அல்லது ஒரு கட்சிக்குக் கீழ்ப்படிவதற்காகவோ ஒரு செயலைச் செய்வது போன்ற எந்தக் கலப்படமும் இருக்கக்கூடாது. எனினும் தனது செயல் மூலம் அல்லாஹ்வின் திருமுகத்தையும் மறுமையையும் நாடக்கூடியவனாக இருப்பது அவசியமாகும். மக்களில் எவருடைய பிரதிபலனுக்கோ நன்றி பாராட்டுதலுக்கோ தனது உள்ளத்தில் இடமளித்துவிடக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்வீராக! தூய்மையான கீழ்ப்படிதல் முற்றிலும் அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும். (39:3) கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கியவர்களாக அவனையே வணங்கவேண்டுமென்றே அவர்கள் ஏவப்பட்டுள்ளார்கள். (98:5) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இத்பான்(ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியவராக லாஇலாஹ இல்லல்லாஹ் என்று யார் கூறினாரோ அவருக்கு அல்லாஹ் நிச்சயமாக நரகத்தை ஹராமாக்கிவிட்டான். (புகாரி, முஸ்லிம்)

7- அன்பு: இம்மகத்தான கலிமாவையும் இதன் தேட்டத்தையும் இது எதை அறிவிக்கிறதோ அதையும் நேசிக்க வேண்டும். அந்த வகையில் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்க வேண்டும். மற்ற எல்லாவற்றினுடைய நேசத்தைவிட அவர்கள் இருவரின் நேசத்துக்கே முன்னுரிமை வழங்கவேண்டும். நேசத்திற்குரிய நிபந்தனைகளையும் அதற்கு அவசியமானவற்றையும் கடைபிடிக்க வேண்டும். ஆகவே கண்ணியப்படுத்துதல், மகத்துவப்படுத்துதல், பயப்படுதல், அவனிடம் ஆதரவு வைத்தல் ஆகியவற்றுடன் அல்லாஹ்வை நேசிக்கவேண்டும். பொதுவாக மக்கா, மதீனா, பள்ளிகள் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான இடங்களையும்- ரமழான், துல்ஹஜ்ஜின் முதல் பத்து நாட்கள் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான காலங்களையும் நபிமார்கள், ரசூல்மார்கள், மலக்குகள், சத்தியவான்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்

கள் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான மனிதர்களையும் தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான செயல்களையும், திக்ர், குர்ஆன் ஓதுதல் போன்ற சொற்களையும் நேசிக்கவேண்டும். மனவிருப்பங்கள், மனோ இச்சைகளைவிடவும் அல்லாஹ்வின் விருப்பங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அல்லாஹ் வெறுத்தவற்றை வெறுப்பதும் இறைநேசமே. ஆதலால் இறைநிராகரிப்பாளர்களையும் இறைநிராகரிப்பு, பாவம், இறைவனுக்கு மாறுசெய்தல் ஆகியவற்றையும் வெறுக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: ஈமான்கொண்டவர்களே! உங்களில் யாரேனும் அவனது மார்கத்தை விட்டு மாறிவிட்டால் அப்போது அல்லாஹ் வேறொரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவர்களும் அவனை நேசிப்பார்கள். அவர்கள் முஃமின்களிடம் பணிவாகவும் நிராகரிப்போரிடம் கடினமயாகவும் இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவார்கள். நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள். (5:54)

## முஹம்மது ரசூலுல்லாஹ்வின் பொருள்

இதன் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் மனித சமுதாயம் முழுமைக்கும் அனுப்பப்பட்ட தூதருமாவார்களென அகமும் (நம்பிக்கையாலும்) புறமுமாக (சொல்லாலும் செயலாலும்) ஏற்றுக்கொள்வதும் இதன் தேட்டத்தின் படி செயல்படுவதுமாகும். அதாவது அவர்கள் ஏவியவற்றில் அவர்களுக்குக் கீழ்ப்படிவது, அவர்கள் அறிவித்தவற்றை உண்மைப்படுத்துவது, அவர்கள் விலக்கியவற்றை விட்டும் விலகிக்கொள்வது, மற்றும் அவர்கள் மார்க்கமாக்கியவற்றைக் கொண்டு மட்டுமே அல்லாஹ்வை வணங்குவதாகும்.

முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என சாட்சி சொல்வதற்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. அவை அப்துஹு, வரசூலுஹு- அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதருமாவார்கள்- என்பதாகும். இவ்விரண்டும் நபி (ஸல்) அவர்கள் விஷயத்தில் வரம்பு மீறுவதையும் தரக்குறைவாகக் கருதுவதையும் அகற்றிவிடுகிறது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் அவனுடைய திருத்தூதராகவும் இருக்கிறாகள். அவர்கள் சிறப்பான இந்த இரு தன்மைகளில் மக்களிலேயே மிகப் பூரணமானவர்களாக இருக்கிறார்கள்.

இந்த இடத்தில் அப்து என்பதன் பொருள் வணக்கம் புரியும் இறைவனின் அடியார் என்பதாகும். அதாவாது நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதர்தான். எதிலிருந்து மனிதன் படைக்கப்பட்டுள்ளானோ அதிலிருந்தே அவர்களும் படைக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய மனிதர்களுக்கு உள்ளதுதான் அவர்களுக்கும். அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) நீர் கூறுவீராக! நிச்சயமாக நான் உங்களைப்போன்ற ஒரு மனிதன் தான். (18:110) புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனே தன் அடியார் மீது இவ்வேதத்தை இறக்கியருளினான். இதில் எவ்விதக் கோணலையும் வைத்திடவில்லை. (18:1)

ரசூல் என்பதன் பொருள் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லவும் நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்யவும் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கவும் மனித சமுதாயம் முழுவதற்கும் தூதராக அனுப்பப்பட்டவர் என்பதாகும். இந்த இரு தன்மைகளைக் கொண்டு சாட்சி சொல்வது நபி (ஸல்) அவர்கள் விஷயத்தில் வரம்பு மீறுவதையும் தரக்குறைவாகக் கருதுவதையும் நீக்கிவிடுகிறது. தம்மை நபி (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்கின்ற பெரும்பாலோர் அவர்கள்

விஷயத்தில் வரம்பு மீறி அவர்களை அடிமை அந்தஸ்திலிருந்து கடவுள் அந்தஸ்திற்கு உயர்த்திவிடுகிறார்கள். அல்லாஹ்வை விடுத்து அவர்களைக் கொண்டே பாதுகாப்புத் தேடுகிறார்கள். தேவைகளை நிறைவுசெய்தல், கஷ்டங்களை நீக்குதல் போன்ற அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் முடியாதவற்றை அவர்களிடமே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் அவர்களின் தூதுத்துவத்தை மறுத்துவிடுகிறார்கள். அல்லது அவர்களைப் பின்பற்றுவதில் வரம்பு மீறி அவர்கள் கொண்டுவந்தவற்றிற்கு மாற்றமான கூற்றுக்களையே ஆதாரமாகக் கொள்கிறார்கள்.

## ஈமானின் கடமைகள்

நிச்சயமாக சொல், செயல்கள் சரியான கொள்கையின் அடிப்படையில் உண்டானால்தான் அவை சரியானது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது மார்க்க ஆதாரங்களான குர்ஆன், ஹதீஸிலிருந்து அறியப்பட்ட விஷயமாகும். கொள்கை ஆதாரமற்றதாக இருக்குமானால் அதன் மூலம் உருவாகக்கூடிய சொல், செயல்கள் வீணானதாக ஆகிவிடும். அல்லாஹ் கூறுகிறான்: மேலும் எவன் ஈமானை நிராகரித்துவிடுகிறானோ அவனின் நற்செயல் அழிந்துவிடும். அவன் மறுமையில் நஷ்டமடைந்தவர்களில் இருப்பான். (5:5) உமக்கும் உமக்கு முன்னுள்ளவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்னவெனில் நீர் இணைவைப்பீரானால் நிச்சயமாக உமது நல்லறங்கள் அழிந்துவிடும். நிச்சயமாக நீர் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவீர். (39:65)

உண்மையில் சரியான கொள்கை என்பது அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகள், வேதங்கள், தூதர்களையும், மறுமை நாளையும், நன்மை, தீமை யாவும் அவன் விதித்த விதிப்படியே நடைபெறுகின்றன என்பதையும் நம்புவதில் மட்டுமே அடங்குகின்றது என்பதை இறைவேதமும் இறைத் தூதரின் வழிகாட்டுதலும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டன. இந்த ஆறு விஷயங்கள்தான் சரியான அடிப்படைக் கொள்கையாகும். இவற்றைக் கொண்டுதான் கண்ணியமிக்க அல்லாஹ்வின் வேதம் இறங்கியது. இவற்றைக் கொண்டு தான் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அனுப்பப்பட்டார்கள். இவற்றுக்கு ஈமானின் கடமைகள் என்றும் கூறப்படும்.

## 1- அல்லாஹ்வை நம்புவது

அல்லாஹ்வை நம்புவது என்றால் நிச்சயமாக அல்லாஹ் தான் வணக்கத்திற்குத் தகுதியான உண்மையான இறைவன் என நம்புவதாகும். ஏனெனில் அவன்தான் அடியார்களைப் படைத்தவன், அவர்களுக்கு உபகாரம் செய்பவன், அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குபவன், அவர்களின் இரகசியங்களையும் வெளிப்படையான நிலைகளையும் அறிபவன், அவர்களில் கட்டுப்பட்டு நடப்பவர்களுக்குக் கூலி வழங்கவும், மாறு செய்பவர்களுக்குத் தண்டனை வழங்கவும் சக்தியுள்ளவன். இந்த வணக்கத்திற்காகத்தான் அல்லாஹ் மனிதர்களையும் ஜின்களையும் படைத்தான். இந்த வணக்கத்தைச் செய்யுமாறே அவர்களை ஏவவும் செய்தான்.

அல்லாஹ் கூறுகிறான்: ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி வேறெதற்காகவும் நான் படைக்கவில்லை. நான் அவர்களிடமிருந்து எந்த வாழ்வாதாரத்தையும் நாடவில்லை. அவர்கள் எனக்கு உணவளித்திட வேண்டுமென்றும் நான் நாடவில்லை. நிச்சயமாக அல்லாஹ்வே உணவளிப்பவனாகவும் பெரும் ஆற்றலுடையவனாகவும் வலிமை மிக்கவனாகவும் இருக்கிறான். (51:56-58)

இந்த உண்மையை விளக்கி இதன்பால் மக்களை அழைப்பதற்காகவும் இதற்கு மா றுசெய்பவர்களை எச்சரிக்கை செய்வதற்காகவும்தான் அல்லாஹ் தூதர்களை அனுப் பிவைத்தான். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக நாம் எல்லா சமுதாயத்தவர்களுக் கும் அல்லாஹ்வை வணங்குங்கள் ஷைத்தான்களை விட்டும் விலகிச் செல்லுங்கள் என (போதிக்குமாறு) தூதர்களை அனுப்பிவைத்தோம். (16:36)

இத்தகைய வணக்க வழிபாட்டின் எதார்த்த நிலை என்னவெனில் பிரார்த்தனை செ ய்தல், பயப்படுதல், ஆதரவு வைத்தல், தொழுகை, நோன்பு, அறுத்துப் பலியிடுதல், நே ர்ச்சை செய்தல், போன்ற அனைத்து வணக்க வகைகளையும் அச்சம் கொண்டும் ஆ வல் கொண்டும் பணிவான முறையில் அதே சமயம் அல்லாஹ்வை பரிபூரணமாக நேசிப்ப துடனும் அவனது கண்ணியத்திற்குப் பணிவதுடனும் அவனுக்கு மட்டுமே செய்வதா கும். திருக்குர்ஆனில் பெரும்பாலான விஷயங்கள் இம்மகத்தான அடிப்படை அம்சத் தைப் பற்றி தான் இறங்கியிருக்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) வணக்கத்தை அவனுக்கே உரித்தாக்கிய நிலை யில் நீர் அல்லாஹ்வை வணங்குவீராக! தெரிந்துகொள்ளுங்கள் தூய்மையான மார் க்கம் அல்லாஹ்வுக்கே உரியதாகும். (39:2-3) அவனைத் தவிர வேறெவரையும் நீங் கள் வணங்கக் கூடாதென உம் இறைவன் விதித்துள்ளான். (17:23) வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கிய நிலையில் அவனையே அழையுங்கள். இறைநிராகரிப் பாளர்கள் இதனை வெறுத்தாலும் சரியே!. (40:14)

அல்லாஹ் தனது அடியார்கள் மீது கடமையாக்கிய அனைத்தையும் நம்புவதும் அ ல்லாஹ்வை நம்புவதில் அடங்கும். உதாரணமாக இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைக் கடமைகளான வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமி ல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி சொல் வது, தொழுகையை நிலைநிறுத்துவது, ஜகாத் கொடுப்பது, ரமழானில் நோன்பு நோற் பது, கண்ணியமிக்க அல்லாஹ்வின் ஆலயத்திற்குச் சென்று வர சக்தி பெற்றவர்கள் ஹஜ் செய்வது ஆகியவற்றையும் இன்னும் தூய்மைமிக்க இம்மார்க்கம் கொண்டு வந்து ள்ள ஏனைய கடமைகளையும் நம்புவதாகும். இக்கடமைகளிலேயே மிக முக்கியமான தும் மகத்துவமிக்கதும் லாஇலாஹ இல்லல்லாஹ்- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை என நம்புவதாகும்.

மேலும் அல்லாஹ்தான் அகிலத்தார்களைப் படைத்து அவர்களின் காரியங்களை தனது அறிவையும் ஆற்றலையும் கொண்டு அவன் நாடியது போன்று நிர்வகித்து வரு கின்றான். அவனே இவ்வுலகத்திற்கும் மறு உலகிற்கும் அதிபதி. அகில உலகமனைத் தையும் படைத்துப் பாரிபாலிப்பவன். அவனைத் தவிர வேறு படைப்பாளன் அவனைத் தவிர வேறு நாயன் எவருமில்லை. அடியார்களைச் சீர்திருத்தம் செய்யவும் இம்மை, மறு மை வாழ்விற்கு எதில் ஈடேற்றமிருக்கிறதோ அதன் பால் அவர்களை அழைக்கவும் அவ ன் தூதர்களை அனுப்பி வைத்தான். வேதங்களையும் இறக்கி வைத்தான். இன்னும் இவையனைத்திலும் அவனுக்கு இணையேதும் இல்லை என்று நம்புவதும் அல்லாஹ் வை நம்புவதில் அடங்கும். அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் அனைத்துப் பொருட்க ளையும் படைத்தவனாவான். அவனே ஒவ்வொரு பொருளுக்கும் பொருப்பாளனாகவும் இருக்கின்றான். (39:11)

கண்ணியமிக்க இறைவேதத்திலும் நம்பிக்கைக்குரிய அவன் தூதர் மூலமும் வந்து ள்ள இறைவனின் அழகிய திருநாமங்களையும் உயர்வுமிக்க அவனுடைய பண்புகளை யும் மாற்றாமல், மறுக்காமல், உருவகப்படுத்தாமல், ஒப்பாக்காமல் நம்பிக்கை கொள்

வதோடு இவை அறிவிக்கின்ற மகத்தான அர்த்தங்களையும் நம்பவேண்டும். அவ்வர்த்தங்கள்தான் அல்லாஹ்வின் பண்புகளாகும். இப்பண்புகளில் எதையும் அவனுடைய படைப்புகளுக்கு ஒப்பாக்காமல் அவனுக்கே உரித்தான விதத்தில் இவற்றைக் கொண்டு அவனை வர்ணித்துக் கூறுவது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்: அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் (யாவற்றையும்) கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். (42:11)

## 2- மலக்குகளை நம்புவது

இவர்களை பொதுவாகவும் குறிப்பாகவும் ஈமான் கொள்ள வேண்டும். எவ்வாறெனில் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்கு மலக்குகளிருக்கிறார்கள் அவன் தன்னை வணங்குவதற்காகவே அவர்களைப் படைத்துள்ளான். அவர்களில் அர்ஷைச் சுமக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்கள், நரக, சுவர்க்க பாதுகாவலர்கள், அடியார்களின் செயல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டவர்கள் எனப் பலவகையினர் இருக்கின்றனர் என நம்ப வேண்டும்.

மேலும் குறிப்பாக ஜிப்ரீல், மீகாயீல், நரகப் பாதுகாவலர் மாலிக், சூர் ஊதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மலக்கு இஸ்ராஃபீல் போன்ற அல்லாஹ்வும் அவனது தூதரும் பெயர் குறிப்பிட்டு சொல்லியிருக்கின்றவர்களையும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள: வானவர்கள் ஒளியாலும் ஜின்கள் நெருப்பின் ஜுவாலையிருந்தும் படைக்கப்பட்டார்கள். (ஏற்கனவே) உங்களுக்குக் கூறப்பட்டுவிட்ட ஒன்றிலிருந்து (அதாவது மண்ணிலிருந்து) ஆதம் (அலை) படைக்கப்பட்டார்கள். (முஸ்லிம்)

## 3- வேதங்களை நம்புவது

அல்லாஹ் தனது உண்மையை விளக்குவதற்காகவும் தன் பால் மக்களை அழைப்பதற்காகவும் தன்னுடைய நபிமார்கள், ரசூல்மார்கள் மீது வேதங்களை இறக்கிவைத்துள்ளான் எனப் பொதுவாக நம்புவது அவசியமாகும். குறிப்பாக தவ்ராத், இன்ஜீல், ஜபூர், குர்ஆன் போன்ற அல்லாஹ் பெயர் குறிப்பிட்டுச் சொன்ன வேதங்களை நம்ப வேண்டும். திருக்குர்ஆன்தான் இவற்றில் மிகச் சிறந்ததும் இறுதியானதும் ஆகும். இது முந்தைய வேதங்களை விட உயர்வானதும் அவற்றை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது.

மேலும் இது எத்தகையது என்றால் இதையும் ஆதாரப்பூர்வமான நபிவழியையுமே பின்பற்றுவதோடு எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக எடுத்துக்கொள்வது அனைத்து சமுதாயத்தவர் மீதும் கடமையாகும். ஏனெனில் அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களை ஜின், மனித சமுதாயம் அனைத்திற்கும் தூதராக அனுப்பி அவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவதற்காக இந்தக் குர்ஆனையும் அவர்களுக்கு இறக்கி வைத்துள்ளான். இத்திருக்குர்ஆனை, அல்லாஹ் இதயங்களிலுள்ள நோய்களைக் குணப்படுத்தக் கூடியதாகவும் யாவற்றையும் மிகத் தெளிவாக விவரிக்கக் கூடியதாகவும் நேர்வழி காட்டக்கூடிய தாகவும் அகிலத்தார்களுக்கு ஓர் அருட்கொடையாகவும் ஆக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: இது நாம் இறக்கி வைத்த அருள்மிக்க வேதமாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். மேலும் நீங்கள் (அவனை) அஞ்சுங்கள். கிருபை செய்யப்படுவீர்கள். (6:155) உமக்கு இவ்வேதத்தை நாம் இறக்கியருளியுள்ளோம். அது யா

**வற்றையும் மிகத் தெளிவாய் விவரிக்கக்கூடியதாய் இருக்கிறது. முற்றிலும் (இறைவனுக்கு) கீழ்ப்படிந்து வாழும் மக்களுக்கு இது நேர்வழி காட்டக்கூடியதாகவும் அருளாகவும் ஒரு நற்செய்தியாகவும் இருக்கிறது. (16:89)**

## 4- தூதர்களை நம்புவது

**தூதர்களைப் பொதுவாகவும் குறிப்பாகவும் நம்புவது அவசியமாகும். நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறவும் நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்யவும் சத்தியத்தின் பால் அவர்களை அழைப்ப தற்காகவும் தூதர்களை அனுப்பிவைத்தான். யார் அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொ ள்கின்றாரோ அவர் நற்பாக்கியம் பெற்று வெற்றியடைந்து விட்டார். யார் அவர்களுக்கு மாறுசெய்கின்றாரோ அவர் ஏமாற்றமும் கைசேதமும் அடைந்து தோல்வியடைந்துவிட் டார். இறைத்தூதர்களில் நம்முடைய நபி முஹம்மது (ஸல்) அவர்கள் தாம் இறுதியான வரும் மிகச் சிறந்தவருமாவார்கள்.**

**அல்லாஹ் கூறுகிறான்: திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் அல்லாஹ்வை வணங்குங்கள் ஷைத்தான்களை விட்டும் விலகுங்கள் என (போதிக்குமாறு) ஒரு தூத ரை அனுப்பிவைத்தோம். (16:36) முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையரல்லர். எனினும் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களில் இறுதியானவராக வும் இருக்கின்றார். (33:40)**

**அவர்களில் அல்லாஹ்வும் அவன் தூதரும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற வர்களை நாம் குறிப்பாக நம்ப வேண்டும். உதாரணமாக நூஹ், ஹூத், ஸாலிஹ், இப் றாஹீம் (அலை) மற்றும் பலர்.**

## 5-இறுதி நாளை நம்புவது

**அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் சொன்ன மரணத்திற்குப் பின்னர் நிகழவிருக் கின்ற அனைத்து விஷயங்களையும் நம்புவது இதில் அடங்கும். உதாரணமாக மண் ணறையின் சோதனை, அதன் வேதனை, அங்கு கிடைக்கும் இன்பம், மறுமை நாளில் ஏற்படுகின்ற அமளிகள், துன்பங்கள், பாலம், தராசு, கேள்வி கணக்கு, நற்கூலி, தண் டனை, மக்களுக்கு வினைப்பட்டியல்களை அளிப்பது. அப்போது தம் வினைப்பட்டிய லை வலது கையில் வாங்குவோர் இருப்பார்கள். தம் வினைப்பட்டியலை இடது கையில் அல்லது தம் முதுகுக்குப் பின்னால் வாங்குவோரும் இருப்பார்கள்.**

**இன்னும் நம்முடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் தடாகத்தை நம்புவதும் சுவர்க்கம், நரகம், முஃமின்கள் அல்லாஹ்வைப் பார்ப்பது, அவ ர்களிடம் அல்லாஹ் பேசுவது ஆகியவற்றையும் மற்றும் குர்ஆனிலும் ஆதாரப்பூர்வமான நபிமொழியிலும் வந்துள்ள யாவற்றையும் நம்புவதும் இதில் அடங்கும். எனவே இவைய னைத்தையும் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விளக்கிய முறைப்படி நம்புவது கடமையாகும்.**

## 6- விதியை நம்புவது

**இதில் நான்கு விஷயங்கள் உள்ளன:**

**1- நிச்சயமாக அல்லாஹ் இதுவரை நடந்ததையும் இனி நடக்கவிருக்கின்றவற்றையும் அறிந்துள்ளான். இன்னும் தன்னுடைய அடியார்களின் நிலைமைகள், அவர்களின்**

வாழ்வாதாதாரங்கள் ஆயுட்காலம், அவர்களின் செயல்கள் மற்றும் அவர்களுடைய இதர விஷயங்கள் அனைத்தையும் அவன் அறிந்துள்ளான். இதில் எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்ததல்ல என நம்புவது. அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (9:115)

2- அவன் நிர்ணயித்துள்ள எல்லாவற்றையும் அவன் எழுதி வைத்துள்ளான் என நம்புவது. அல்லாஹ் கூறுகிறான்: நாம் ஒவ்வொன்றையும் ஒரு தெளிவான பதிவேட்டில் கணக்கிட்டுக் குறித்து வைத்துள்ளோம். (36:12)

3- செயல்படுத்தப்படுகிற அவனது நாட்டத்தை நம்புவது. அல்லாஹ் நாடியது நடக்கின்றது. அவன் நாடாதது நடக்காது. அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் தான் நாடுகின்றவற்றைச் செய்வான். (3:40)

4- உலகிலுள்ள அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையே என நம்புவது. அவனையன்றி வேறு படைப்பாளன் யாருமில்லை. அவனைத் தவிர வேறு பரிபாலிப்பவன் எவனுமில்லை. அல்லாஹ் கூறுகிறான்: அவன் தான் உங்களைப் படைத்துப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹ்! அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஒவ்வொரு பொருளையும் படைத்தவன் அவனே. எனவே நீங்கள் அவனையே வணங்குங்கள். அவனே எல்லாவற்றிற்கும் பொருப்பாளனாக இருக்கின்றான். (6:012)

## இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக் கூடியவை:

ஒரு முஸ்லிம் சில நேரம் பல்வேறு காரியங்களைச் செய்வதன் மூலம் தனது மார்க்கத்தைவிட்டும் வெளியேறிவிடுகின்றான். அவற்றில் மிக ஆபத்துக்குரியதும் அதிகமாக நடக்கக் கூடியதும் பத்து காரியங்களாகும்.

**1- அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்:**

அல்லாஹ் கூறுகிறான்: எவன் அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கின்றானோ அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவர்க்கத்தைத் தடை செய்திருக்கின்றான். அவனுடைய இருப்பிடம் நரகமாகும். மேலும் இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை. (5:72)

இறந்தவர்களிடம் பிரார்த்தனை செய்வது, அவர்களிடம் உதவி தேடுவது, அவர்களுக்கு நேர்ச்சைச் செய்வது, அறுத்துப் பலியிடுவது ஆகிய அனைத்தும் இணைவைப்புதான்.

**2- இடைத்தரகரை ஏற்படுத்துவது:**

எவன் தனக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே இடைத்தரகர்களை ஏற்படுத்தி அவர்களிடம் பிராத்திக்கவும் பரிந்துரை செய்யத்தேடவும் அவர்களிடமே தன்னுடைய காரியங்களை ஒப்படைக்கவும் செய்கின்றானோ அவன் காபிராகிவிட்டான். பள்ளி வாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். எனவே அங்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அழைக்காதீர்கள். (72:18)

3- இணைவைப்பாளர்களை காபிர் என ஒருவன் கருதவில்லையானால் அல்லது அவர்களின் குஃப்ரில்- இறைநிராகரிப்பில் சந்தேகம் கொண்டால் அல்லது அவர்களின் கொள்கையைச் சரியெனக் கருதினால் அவனும் காபிராகிவிட்டனான்.

4- நபி(ஸல்)அவர்கள் காட்டிய வழியை விடவும் மற்ற வழிகள் பரிபூரணமானவை என்றோ அல்லது அவர்கள் கொண்டு வந்த சட்டத்தை விடவும் மற்ற சட்டங்கள் சிறந்தவை என்றோ ஒருவன் நம்பினால் அவனும் காபிராகிவிட்டான்.

உதாரணமாக மனிதர்கள் இயற்றிய அமைப்புகள், சட்டங்கள் இஸ்லாமியச் சட்டங்களை விடவும் சிறந்தது என்றோ அல்லது இஸ்லாமிய வாழ்க்கை முறையை நடைமுறைப்படுத்துவது இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்றோ அல்லது இச்சட்டம்தான் முஸ்லிம்கள் பின்தங்கியிருப்பதற்குக் காரணம் என்றோ அல்லது இச்சட்டம் மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை மட்டும்தான் எடுத்துச் சொல்கின்றது. வாழ்க்கையின் மற்ற பிரச்சனைகளில் தலையிடுவதே இல்லை என்றோ ஒருவன் நம்பினால் அவனும் காபிராகிவிட்டான்.

அல்லது திருடியவனின் கையை வெட்டுவதற்கோ அல்லது விபச்சாரத்தில் ஈடுபட்டவனுக்கு- அவன் திருமணமானவனாக இருந்தால் மரணதண்டனை கொடுப்பதற்கோ அல்லாஹ்வின் சட்டத்தைச் செயல்படுத்துவது இக்காலத்திற்குப் பொருநதாது என ஒருவன் கருதினால் அவனும் காபிராகிவிட்டான். அதுபோல கொடுக்கல் வாங்கல், குற்றவியல் சட்டங்கள் அல்லது இவையல்லாததில் அல்லாஹ்வின் சட்டத்தை விட்டுவிட்டு வேறு சட்டத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்குவது கூடுமென ஒருவன் நம்பினால் அவனும் காபிராகிவிட்டான். அது ஷரீஅத் சட்டத்தை விடவும் சிறந்ததென அவன் நம்பாவிட்டாலும் சரியே. காரணம் இப்படி நம்புபவன் இதனால் அல்லாஹ் தடை செய்ததை ஆகுமாக்கிவிட்டவனாக ஆகின்றான். அல்லாஹ் தடை செய்ததை ஆகுமாக்கிக் கொண்டவர்கள் அனைவருமே காபிர்கள்தான்.

5- நபி(ஸல்)அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில் ஒன்றை ஒருவன் வெறுத்தால் அவனும் காபிராகிவிட்டான். அதை அவன் செயல்படுத்தினாலும் சரியே. அல்லாஹ் கூறுகிறான்: ஏனெனில் அல்லாஹ் இறக்கி வைத்ததை அவர்கள் வெறுத்தார்கள். எனவே அவர்களின் செயல்களை அவன் வீணாக்கி விட்டான். (47:9)

6- நபி(ஸல்)அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில் ஏதேனும் ஓர் அம்சத்தை அல்லது அம்மார்க்கம் வழங்குகின்ற கூலியையோ தண்டனையையோ ஒருவன் பரிகாசம் செய்தால் அவன் காபிராகிவிடுவான். அல்லாஹ் கூறுகிறான்: (நபியே) நீர் கூறும்: அல்லாஹ்வையும் அவனது வசனங்களையும் அவனது தூதரையுமா நீங்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தீர்கள்? உங்கள் தவறுகளை நீங்கள் நியாயப்படுத்த வேண்டாம். நீங்கள் இறைநம்பிக்கை கொண்ட பின் திண்ணமாக நிராகரித்துவிட்டீர்கள். (9:65,66)

7- ஸிஹ்ர்- சூனியம்: யாரேனும் சூனியம் செய்தால் அல்லது சூனியம் செய்வதை ஏற்றுக் கொண்டால் அவன் காபிராகிவிடுவான். அல்லாஹ் கூறுகிறான்: ஆனால் அவர்கள் இரு வரும் நிச்சயமாக நாங்கள் (உங்களுக்கு) சோதனையாக இருக்கிறோம். (இச் சூனியத்தைக் கற்று) நீங்கள் காபிராகிவிடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்யாமல் எவருக்கும் இதைக் கற்றுக் கொடுக்கவில்லை (2:102)

8- முஸ்லிம்களுக்கு எதிராாக காபிர்களுக்கு உதவி செய்வது. அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் எவரேனும் அவர்களை உற்ற நண்பர்களாய் ஆக்கிக் கொண்டால் நிச்சயமாக அவரும் அவர்களைச் சார்ந்தவர்தான். நிச்சயமாக அல்லாஹ் அக்கிரமக்காரர்களுக்கு நேர்வழி காட்ட மாட்டான். (5:51)

9- மக்களில் சிலருக்கு முஹம்மத்(ஸல்) அவர்களின் மார்க்கத்தை விட்டும் வெளியேறும் அனுமதி உண்டு, அது கூடும் என்று யாராவது கருதினால் அவரும் காபிராகிவிட்டார். அல்லாஹ் கூறுகிறான்: இஸ்லாத்தை விடுத்து வேறொரு மார்க்கத்தை யாரேனும் மேற்கொள்ள விரும்பினால் அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக் கொள்

எப்படமாட்டாது. மேலும் மறுமையில் அவன் நஷ்டமடைந்தவர்களில் ஒருவனாக இருப்பான். (3:85) அதாவது முஹம்மத் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தி யாருக் கெல்லாம் எட்டியிருக்கின்றதோ அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய மார்க் கத்தை விடுத்து வேறு மார்க்கத்தைப் பின்பற்றுவது கூடாது. மேலும் அவர்களு டைய வழியை விடுத்து வேறு வழியைப் பின்பற்றுவதில் தான் வெற்றி இருக்கிறது என்று நம்புவதும் கூடாது.

10- அல்லாஹ்வின் மார்க்கத்தைப் படிக்காமலும் செயல்படுத்தாமலும் புறக்கணிப்பது. அல்லாஹ் கூறுகிறான்: தன்னுடைய இறைவனின் வசனங்கள் மூலம் அறிவுரை வழ ங்கப்பட்ட பிறகும் அதனைப் புறக்கணித்துவிட்டவனை விட கொடிய அக்கிரமக்கா ரன் யார்? இத்தகைய குற்றவாளிகளை நிச்சயமாக நாம் பழிவாங்கியே தீருவோம். (32:22) புறக்கணிப்பது என்றால் ஒரு மனிதன் முஸ்லிமாகுவதற்குரிய அடிப்படை விஷயங்களைப் படிக்காமல் புறக்கணிப்பதாகும். மார்க்கத்தின் விளக்கங்களைப் படிக்காது புறக்கணிப் பது இங்கே நோக்கமல்ல.

இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக் கூடியவை என்று மேலே குறிப்பிட்ட அனைத் தைப் பொறுத்தும் வினையமாகச் செய்பவன் விளையாட்டாகச் செய்பவன் என்று எந்த வித்தியாசமும் இல்லை. இவற்றைச் செய்பவர் யாராயினும் இஸ்லாத்தை விட்டும் வெளி யேறிவிடுவார். ஆனால் நிர்பந்தத்திற்குள்ளானவனைத் தவிர. அவன் மீது குற்றமில்லை. அல்லாஹ் மிக அறிந்தவன்.

# தூய்மை மற்றும் தொழுகையின் சட்டங்கள்
# احكام الطهارة والصلاة

## சுத்தமும் அசுத்தமும்

மழை நீர், கடல் நீர் போன்றவை சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். அவ்வாறே பயன்படுத்தப்பட்ட தண்ணீரையும் சுத்தம் செய்வதற்காக மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதுபோன்றே சுத்தமான பொருள் தண்ணீருடன் கலந்து தண்ணீர் எனும் நிலையை மாற்றிவிடாமல் அதன் அசல் தன்மையிலேயே இருந்தால் அந்தத் தண்ணீரையும் சுத்தம் செய்யப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அசுத்தம் கலந்துவிட்ட நீரைப் பயன்படுத்தக் கூடாது. இது நீரின் சுவையையோ வாடையையோ அல்லது நிறத்தையோ அந்த அசுத்தம் மாற்றிவிட்டால்தான். அவற்றில் எதுவும் மாறவில்லையெனில் சுத்தம் செய்வதற்காக அதைப் பயன்படுத்துவது கூடும்.

பாத்திரத்திலிருந்து குடித்து மீதமுள்ள தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதும் ஆகுமானதே. ஆனால் நாய், பன்றி குடித்து மீதமான தண்ணீரைத் தவிர. ஏனெனில் இந்தத் தண்ணீர் அசுத்தமாகும்.

அசுத்தம்: ஒரு முஸ்லிம் எதைவிட்டும் தவிர்ந்து கொள்வதும் அது பட்ட இடத்தைக் கழுவதும் கடமையாகுமோ அதுவே அசுத்தமாகும்.

உடையிலோ, உடலிலோ அசுத்தம் பட்டுவிட்டால் அதைக் கழுவது கடமையாகும் அது பார்வைக்குத் தென்படக்கூடிய அசுத்தமாக இருந்தால். உதாரணமாக இரத்தம். கழுவிய பிறகு நீங்குவதற்கு சிரமமான சுவடு எஞ்சியிருந்தால் அது பற்றிக் குற்றமில்லை. பார்வைக்குத் தென்படாத அசுத்தமாக இருந்தால் அதைக் கழுவினால் போதும். ஒரு தடவையாயினும் சரியே!

தரையில் அசுத்தம் பட்டுவிட்டால் அதில் தண்ணீரை ஊற்றிவிடுவதன் மூலம் அது சுத்தமாகின்றது. அதுபோல அசுத்தம் திரவப்பொருளாக இருந்தால் அது காய்ந்து விடுவதன் மூலமும் தரை சுத்தமாகின்றது. அசுத்தம் திடப்பொருளாக இருந்தாலோ அதை நீக்கினாலே தவிர தரை சுத்தமாகாது.

## அசுத்தத்தினுடைய சில சட்டங்கள்

1. ஒருவன் மீது ஒரு பொருள் பட்டுவிட்டால் அது அசுத்தமா? இல்லையா? என்று தெரியாவிட்டால் அதுபற்றி யாரிடமும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதுபோல அதைக் கழுவதும் அவசியமில்லை.
2. ஒருவன் தொழுது முடித்த பிறகு தன் உடலிலோ உடையிலோ அசுத்தத்தைப் பார்க்கிறான், அது அசுத்தம் என்று அவனுக்கு முன்னரே தெரியாமலிருந்தால் அல்லது தெரிந்தும் அதை மறந்துவிட்டால் அவனது தொழுகை ஆகுமானதே!
3. ஆடையில் அசுத்தம் பட்ட இடம் எதுவென்று ஒருவனுக்குத் தெரியாவிட்டால் ஆடை முழுவதும் கழுவது அவசியமாகும்.

**4. அசுத்தங்கள் பலவகைப்படும்:**

**அ) மலம், ஜலம்.**

**ஆ) வதீ: இது சிறுநீருக்குப் பிறகு வெளியேறக் கூடிய வெண்மையான, கட்டியான வெட்டையாகும்.**

**இ) மதீ: இது பாலுணர்வு மேலிடும்போது வெளியேறக் கூடிய வெண்மையான, வள வளப்பான வெட்டையாகும்.**

**இந்த அசுத்தங்கள் ஆடையிலோ உடலிலோ பட்டுவிட்டால் அவற்றைக் கழுவது அவசியமாகும். எனினும் இந்திரியம் சுத்தமானதே! ஆனால் அது ஈரமாக இருந்தால் கழுவதும் காய்ந்திருந்தால் சுரண்டி அகற்றுவதும் விரும்பத்தக்கதாகும்.**

**ஈ) அதன் இறைச்சியை உண்ண அனுமதி இல்லாத பிராணியின் சிறுநீர் மற்றும் விட்டை. இவ்விரண்டும் அசுத்தமாகும். அதன் இறைச்சியை உண்ண அனுமதி உள்ள பிராணியின் சிறுநீரும் விட்டையும் அசுத்தமாகாது.**

## மலம், ஜலம் கழிப்பது

**மலம், ஜலம் கழிப்பதன் ஒழுங்குமுறைகள்:**

**1. கழிப்பறையில் நுழையும்போது** بِسْمِ ا لله اَللَّهُمَّ إِنِّى أَعُوذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِثِ
**'பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் குப்ஸி வல்கபாயிஸ்' என்று கூறி இடது காலை முன்வைத்து நுழைய வேண்டும்.**
**(பொருள்: இறைவா! ஆண், பெண் ஷைத்தான்களை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன்)**

**வெளியே வரும்போது வலது காலை முன்வைத்து** غُفْرَانَكَ **'ஃகுஃப்ரானக' என்று கூறி வெளியே வரவேண்டும். (பொருள்: இறைவா! உன்னிடம் நான் பாவமன்னிப்புக் கோருகிறேன்)**

**2. அல்லாஹ்வின் திருநாமம் உள்ளவற்றை உடன் எடுத்துச் செல்லக் கூடாது. அது காணாமல் போய்விடும் என்ற அச்சம் இருந்தாலே தவிர!**

**3. திறந்த வெளியில் மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்கவோ பின்னோக்கவோ கூடாது.**

**4. மக்களைவிட்டும் மானத்தை மறைத்துக் கொள்ளவேண்டும். இதில் அலட்சியம் காட்டக் கூடாது. பொதுவாக ஆண் மறைக்க வேண்டிய பகுதி தொப்புளிலிருந்து முட்டுக்கால் வரையாகும். பெண் உடல் முழுவதும் மறைத்துக் கொள்ள வேண்டியவையே. ஆனால் தொழுகையில் முகத்தைத் தவிர.**

**6. மலஜலம் கழித்த பின்னர் தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் கற்கள், காகிதம் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். மேலும் சுத்தம் செய்யும்போது இடது கையைப் பயன்படுத்த வேண்டும்.**

## உளூ

**உளூ இல்லாமல் தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவரது தொழுகையை- அவருக்கு உளூ நீங்கிவிட்டால் மீண்டும் உளூச் செய்து தொழாத வரை அதனை அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை. (முஸ்லிம்)**

## உளூச் செய்யும் முறை

உளூச் செய்யும்போது தொடராகவும் ஒன்றன் பின் ஒன்றாகவும் செய்ய வேண்டும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்வது சுன்னத்தாகும். நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்துகொண்டிருந்த ஒரு மனிதரைப் பார்த்தார்கள். அவரிடம் தண்ணீரை விரயம் செய்யாதே! தண்ணீரை விரயம் செய்யாதே! என்று கூறினார்கள். (இப்னுமாஜா)

1. உளூச் செய்கின்றேன் என்று நாவால் மொழியாமல் மனதால் எண்ணிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நிய்யத் என்பது ஒன்றைச் செய்வதாக உள்ளத்தால் எண்ணுவதாகும். பிறகு பிஸ்மில்லாஹ் கூறவேண்டும்.
2. இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்
3. மூன்று முறை வாய்க் கொப்பளித்து நாசியில் தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்ய வேண்டும்
4. முகத்தை- அகலவாக்கில் ஒரு காதிலிருந்து மறு காது வரை, நீளவாக்கில் தலை முடி முளைக்கும் இடத்திலிருந்து நாடிக் குழி வரை- மூன்று முறை கழுவ வேண்டும்.
5. இரு கைகளையும் விரல்களின் நுனியிலிருந்து முழங்கை வரை முதலில் வலது கை பிறகு இடது கை என மூன்று முறை கழுவ வேண்டும்.
6. ஒரு தடவை தலைக்கு மஸஹ் செய்ய வேண்டும். அதாவது இரு கைகளையும் தண்ணீரில் நனைத்து அவ்விரண்டையும் தலையின் முன்பாகத்தில் வைத்து பிடரி வரை தடவி ஆரம்பித்த இடத்திற்கு மீண்டும் கைகளைக் கொண்டு வரவேண்டும்.
7. பிறகு காதுகளில் ஒரு முறை மஸஹ் செய்ய வேண்டும். அதாவது இரு ஆட்காட்டி விரல்களை இரு காதுகளுக்குள் நுழைத்து கட்டை விரல்களால் காதுகளின் வெளிப்புறத்தைத் தடவ வேண்டும்.
8. இரண்டு கால்களையும் விரல்களின் நுனியிலிருந்து கரண்டை வரை முதலில் வலது கால் பிறகு இடது கால் என மூன்று முறை கழுவ வேண்டும்.
9. பிறகு அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என ஹதீஸில் வந்த துஆவை ஓத வேண்டும்.

أَشْهَدُ أَنْ لا اِلهَ اِلَّا اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

## காலுறைகள் மீது மஸஹ் செய்தல்

இஸ்லாமிய மார்க்கம் காலுறைகள் மீது மஸஹ் செய்வதற்கு அனுமதியளித்து நமக்கு எளிமைப்படுத்தியுள்ளது. காலுறைகள் மீது மஸஹ் செய்வது நபி(ஸல்)அவர்களின் நடைமுறை மூலம் நிருபணமானதாகும். நபி(ஸல்) அவர்கள் தமது தலைப்பாகைக்கும் காலுறைகளுக்கும் மஸஹ் செய்வதை நான் பார்த்திருக்கிறேன் என்று அபூ ஜஃபர் பின் அம்ரு(ரலி) அறிவிக்கும் ஹதீஸ் புகாரியிலும், ஒரு நாள் இரவு நான் நபி (ஸல்) அவர்களுடன்(பயணத்தில்) இருக்கும்போது அவர்கள் ஒரு இடத்தில் இறங்கி தமது தேவையை நிறைவேற்றிவிட்டு பிறகு வந்தார்கள். என்னிடமிருந்த ஒரு பாத்திரத்திலிருந்து தண்ணீரை நான் அவர்களுக்கு ஊற்றினேன். அவர்கள் உளூ செய்து விட்டு தமது காலுறைகளுக்கு மஸஹ் செய்தார்கள் என்று முஃகீரா பின் ஷுஃபா(ரலி)அறிவிக்கும் ஹதீஸ் முஸ்லிமிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் காலுறைகள் மீது மஸஹ் செய்வதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. உளூ செய்துவிட்டு காலுறை அணிந்திருக்க வேண்டும்.

காலுறைகளின் மேற்பகுதியில் மஸஹ் செய்ய வேண்டும். அடிப்பகுதியில் மஸஹ் செய்யக் கூடாது.

மஸஹ் செய்வதற்குரிய கால அளவு ஊரில் தங்கியிருப்பவருக்கு ஒரு நாளும் பயணிக்கு மூன்று நாட்களுமாகும். இக்கால அளவு முடிந்து விட்டாலோ அல்லது மஸஹ் செய்த பின் காலுறைகளைக் கழற்றி விட்டாலோ அல்லது குளிப்பு கடமையாகி விட்டாலோ மஸஹ் செய்தது நீங்கிவிடும்.

## உளூவை நீக்கும் காரியங்கள்

மலஜலம் கழிப்பது, காற்றுப் பிரிவது, மதி, வதி என்னும் வெட்டை வெளியாவது, இந்திரியம் வெளிப்படுவது (இந்திரியம் வெளிப்பட்டால் குளிப்பும் கடமையாகிவிடும்) தூக்கம், வெட்கத்தலத்தை துணியின்றி நேரடியாகத் தொடுவது, ஒட்டக இறைச்சி உண்பது, உணர்விழந்து போவது.

## குளிப்பது

சுத்தம் செய்கிறேன் எனும் நிய்யத்துடன் வாய்க்கொப்பளித்து, நாசிக்கு தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்து உடம்பு முழுவதும் தண்ணீர் ஊற்றி கழுவுவதற்கே குளிப்பது என்று பொருள். ஐந்து காரணங்களால் குளிப்பு கடமையாகின்றது.

1. தூக்கத்திலோ விழிப்பிலோ இச்சையுடன் இந்திரியம் வெளிப்படுவது. ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி. இச்சையின்றி இந்திரியம் வெளியானால் குளிப்பு கடமையாகாது. இதுபொல ஸ்கலிதம் வெளிப்பட்டதாகக் கனவு கண்டு இந்திரியம் தென்படவில்லையானாலும் குளிப்பு கடமையாகாது. ஆயினும் ஈரத்தையோ அதற்கான அடையாளத்தையோ கண்டால் குளிப்பு கடமையாகிவிடும்.
2. ஆண் குறியின் முன்பகுதி யோனியின் மலர்ப்பகுதியில் நுழைவது. இந்திரியம் வெளியாகாவிட்டாலும் சரியே.
3. மாதவிடாய், பிரசவ இரத்தம் நின்று விடுவது.
4. மரணமடைதல். இதுவும் ஒரு காரணம் எனும் அடிப்படையில்தான் மய்யித்தைக் குளிப்பாட்டுவது கடமையாகிறது.
5. ஒருவன் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினால் குளிப்பது அவனுக்குக் கடமை.

## துடக்கு உடையவருக்குத் தடுக்கப்பட்டவை

1. திருக்குர்ஆனைத் தொடுவது, அதைச் சுமப்பது, இதேபோன்றுதான் பார்த்தோ பார்க்காமலோ, சப்தமிட்டோ, சப்தமில்லாமலோ குர்ஆனை ஓதுவதும் மனப்பாட மாகவோ ஏட்டிலிருந்தோ குர்ஆனை ஓதுவதும். (இது விஷயத்தில் கருத்து வேறுபாடுள்ளது)
2. துடக்கு உடையவரோ மாதவிடாய்ப் பெண்ணோ பள்ளியில் தங்குவது கூடாது. ஆனால் பள்ளிக்குள் சென்று வருவதில் குற்றமில்லை.

## தயம்மும் செய்தல்

ஊரில் இருக்கும்போதும் பயணத்தில் இருக்கும்போதும் தயம்மும் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தயம்மும் என்பது உளூவுக்குப் பகரமாக அல்லது குளிப்புக் பகரமாகச் செய்ய வேண்டிய ஒன்றாகும். இது பின்வரும் காரணங்களுக்காகச் செய்யப்படும்.

1. தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் அல்லது தண்ணீர் இருந்தும் சுத்தம் செய்வதற்குப் போதுமாகாது என்றால் தயம்மும் செய்துகொள்ளலாம். ஆனால் முன்னதாக எங்கேனும் தண்ணீர் இருக்கிறதா? என்று தேடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் தயம்மும் செய்து கொள்ளலாம். அல்லது தண்ணீர் அருகில் இருந்து அதைத் தேடிச் செல்லும்போது தன் உயிருக்கோ பொருளுக்கோ ஊறு விளையும் என அஞ்சினால் தயம்மும் செய்து கொள்ளலாம்.
2. உளூவினுடைய உறுப்புக்களில் காயம் இருந்தால் அதைத் தண்ணீரால் கழுவதால் பாதிப்பு ஏற்படுமானால் ஈரக்கையால் தடவ வேண்டும். அதனாலும் பாதிப்பு ஏற்படும் என்றால் தயம்மும் செய்து கொள்லாம்.
3. தண்ணீர் அல்லது வானிலை கடும் குளிராக இருக்கும்போது தண்ணீரைப் பயன்படுத்துவதால் இடையூறு ஏற்படும் என அஞ்சினால் தயம்மும் செய்து கொள்ளலாம்.
4. தண்ணீர் இருந்தும் குடிப்பதற்குத் தேவைப்பட்டால் தயம்மும் செய்துகொள்ளலாம்.

## தயம்மும் செய்யும் முறை

முதலில் நிய்யத்து செய்து கொள்ள வேண்டும். பிறகு இரண்டு கைகளையும் பூமியில் ஒரு முறை அடித்து முகத்திலும் இரு கைகளையும் மணிக்கட்டு வரையிலும் தடவிக் கொள்ள வேண்டும்.

உளூவை நீக்கக்கூடிய காரியங்கள் அனைத்தும் தயம்முமையும் நீக்கிவிடும். மேலும் தயம்மும் செய்த ஒருவருக்கு தொழுகைக்கு முன்போ அல்லது தொழுதுகொண்டிருக்கும்போதோ தண்ணீர் கிடைத்துவிடுமானால் தயம்மும் நீங்கிவிடும். தொழுது முடித்த பிறகு தண்ணீர் கிடைத்தால் அவரது தொழுகை நிறைவேறிவிடும்.

## தொழுகை

1. தொழுகை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் இரண்டாவது கடமையாகும். இது பருவமடைந்த புத்தியுள்ள முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும். அறிஞர்களின் ஏகோபித்த முடிவின்படி தொழுகையை விட்டவன் காபிராவான். மறுமை நாளில் கேட்கப்படும் முதல் கேள்வி தொழுகை பற்றித்தான்.
2. ஒரு நாளைக்கு ஃபஜர், லுஹர், அஸர், மஃரிப், இஷா ஆகிய ஐந்து தொழுகைகளையும் பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவது ஆண்களுக்கு கடமையாகும். அமைதியாகவும் கம்பீரமாகவும் பள்ளிக்கு வருவது ஒரு முஸ்லிமுக்கு மார்க்கமாக்கப்பட்டுள்ளது. அதுபோல பள்ளிக்குள் நுழைந்ததும் உட்காருவதற்கு முன்னால் இரண்டு ரக்அத்துகள் தொழுவது சுன்னத்தாகும்.
3. தொழுகையில் மானத்தை மறைப்பது அவசியமாகும். அது ஆண்களைப் பொறுத்து தொப்புளிலிருந்து முட்டுக் கால் வரையாகும். பெண்களைப் பொறுத்து உடல் முழுவதுமாகும். ஆனால் தொழும்போது பெண்கள் முகத்தை மறைக்கக் கூடாது. தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு கிப்லாவை முன்னோக்குவது ஒரு நிபந்தனை என்பதைப் போன்றதாகும் இது!
4. தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது கடமையகும். நேரம் வருவதற்கு முன்னால் தொழுவது கூடாது. நேரத்தை விட்டும் தொழுகையை பிற்படுத்துவது தடுக்கப்பட்டதாகும்.

## தொழுகையின் நேரங்கள்

- லுஹர் தொழுகையின் நேரம் சூரியன் உச்சி சாயத் துவங்கியதிலிருந்து ஒரு பொருளின் நிழல் அதன் உயரத்தின் அளவுக்கு வரும் வரை.
- அஸர் நேரம் ஒரு பொருளின் நிழல் அப்பொருளின் உயரத்தினளவை அடைந்தவுடன் ஆரம்பமாகி சூரியன் மறையும் வரை நீடிக்கின்றது.
- மஃரிப் நேரம் சூரியன் மறைந்ததிலிருந்து செம்மேகம் மறையும் வரை. செம்மேகம் என்பது சூரியன் மறைந்த பிறகு தோன்றக் கூடியது.
- இஷா நேரம் செம்மேகம் மறைந்ததிலிருந்து இரவின் பகுதி வரை.
- ஃபஜ்ர் நேரம் அதிகாலை உதயமானதிலிருந்து சூரியன் உதயமாகும் வரை.

## தொழும் முறை

ஒரு முஸ்லிமுக்கு தொழுகையில் பணிவும் நிதானமும் அவசியமாகும்.

1. அங்கும் இங்கும் திரும்பாமல் சரிவு இல்லாமல் கிப்லாவை முன்னோக்க வேண்டும்.
2. தான் தொழும் தொழுகையை நாவால் மொழியாமல் மனதால் எண்ணிக்கொள்ள வேண்டும்.
3. பிறகு அல்லாஹு அக்பர் என்று தக்பீரதுல் இஹ்ராம் என்ற முதல் தக்பீரைக் கூறிக் கொள்ள வேண்டும். தக்பீர் கூறும்போது இரு கைகளையும் தோள் புஜங்களுக்கு நேராகவோ காதுகளுக்கு நேராகவோ உயர்த்திக் கொள்ள வேண்டும்.
4. பிறகு வலது முன்கையை இடது முன்கையின் மீது வைத்து அதை நெஞ்சின் மீது வைக்க வேண்டும்.
5. பிறகு ஆரம்ப துஆவை ஓத வேண்டும்.

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ وَلاَ إِلَهَ غَيْرُكَ

'சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக' என்று கூறவேண்டும்.
(பொருள்: இறைவா! உன்னைப் புகழ்வதுடன் துதிக்கவும் செய்கிறேன். உனது திருப்பெயர் அருட்பேருடையது. உனது ஆற்றல் மிகவும் உயர்ந்தது. உன்னைத் தவிர வணக்கத்திற்குரியஇறைவன் வேறு யாரும் இல்லை)

6. பிறகு أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ 'அவூதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்' என்று கூற வேண்டும்.
(பொருள்: விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்)
7. பிறகு பிஸ்மில்லாஹ்வுடன் ஸூரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டும்.
8. பிறகு திருக்குர்ஆனில் தனக்குத் தெரிந்ததை ஓத வேண்டும்.
9. பிறகு அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கூறி ருகூஃ செய்ய வேண்டும். தக்பீர் கூறும் போது இரு கைகளையும் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்திக் கொள்ள வேண்டும். ருகூவில سُبْحَانَ رَبِّيَ الْعَظِيمِ 'சுப்ஹான ரப்பியல் அழீம்' என்று மூன்று முறை கூறுவது சுன்னத்தாகும்.

(பொருள்: மகத்தான என் இறைவன் பரிசுத்தமானவன்) இதல்லாத வேறு திக்ரை யும் கூறிக் கொள்ளலாம். ஒரு முறையாயினும் சரியே.

10. பிறகு سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என்று கூறி ருகூவிலி ருந்து எழவேண்டும்.
(பொருள்: புகழ்பவரின் புகழ் வார்த்தைகளை இறைவன் கேட்டுக் கொண்டான்) இர ண்டு கைகளையும் தோள் புஜங்கள் வரை உயர்த்திக் கொள்ள வேண்டும்.
இமாமைப் பின்பற்றித் தொழுபவர் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என்பதற்குப் பதி லாக رَبَّنَا وَلَكَ الْحَمْدُ 'ரப்பனா வலகல் ஹம்த்' என்று கூற வேண்டும்.
(பொருள்: எங்கள் இறைவனே! உனக்கே எல்லா புகழும்)

11. நிலையில்

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَاوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

'ரப்பனா வலகல் ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வமில்அல் அர்ழி வமில்அ மாஷிஃத மின் ஷையின் பஃது' என்று கூற வேண்டும்.
பொருள்: இறைவா! வானங்கள் நிறைய பூமி நிறைய இவையன்றி நீ எதை நாடுகின் றாயோ அவை நிறைய உனக் கே புகழனைத்தும்.

12. பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி முதல் ஸஜ்தா செய்ய வேண்டும். ஸஜ்தாவில் இரு பாதங்கள், இரு முட்டுக்கால்கள், நெற்றியுடன் மூக்கு ஆகிய ஏழு உறுப்புக்கள் தரையில் படுமாறு ஸஜ்தா செய்ய வேண்டும். இரு கைகளையும் விலாப்புறங்களை விட்டும் அகற்றி வைக்க வேண்டும். கால் விரல்களை கிப்லாவை முன்னோக்கி வை க்க வேண்டும். ஸஜ்தாவில் سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்று மூன்று முறை கூறுவது சுன்னத்தாகும். (பொருள்: உயர் வான என் இறை வன் தூயவன்) இதல்லாத வேறு திக்ரையும் கூறிக் கொள்ளலாம். ஒரு முறையாயி னும் சரியே!

13. பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்த வேண் டும். இடது பாதத்தின் மீது அமர்ந்து வலது பாதத்தை நட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இடது கையை இடது முட்டுக்காலுக்கு அடுத்துள்ள இடது தொடையி ன் ஓரத்தில் வைக்க வேண்டும். வலது கையை வலது முட்டுக்காலுக்கு அடுத்து ள்ள வலது தொடையின் ஓரத்தில் வைக்க வேண்டும். இந்த இருப்பில்

رَبِّ اغْفِرْلِي وَارْحَمْنِي وَاهْدِنِي وَارْزُقْنِي وَاجْبُرْنِي وَعَافِنِي

'ரப்பிஃக்பிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வர்ஸுக்னீ வஜ்புர்னீ வஆஃபினீ' என்று கூற வேண்டும். (பொருள்: என் இரட்சகனே! என்னை மன்னித்தருள்வாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! எனக்கு ரிஸ்க் வழங்குவா யாக! எனக்கு ஆறுதல் அளிப்பாயாக! எனக்கு நிவாரணம் அளிப்பாயாக!)

14. பிறகு இரண்டாம் ஸஜ்தாவைச் செய்ய வேண்டும். முதல் ஸஜ்தாவைப் போலவே இதையும் செய்ய வேண்டும். முதல் ஸஜ்தாவில் கூறியது போலவே இதிலும் கூற வே ண்டும்.

15. பிறகு இரண்டாம் ஸஜ்தாவிலிருந்து அல்லாஹு அக்பர் என்று கூறி எழுந்து நிலைக்கு வர வேண்டும். முதல் ரக்அத்தைப் போலவே இரண்டாம் ரக்அத்தையும் தொழ வேண்டும். ஆனால் இதில் 'சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ் முக வதஆலா ஜத்துக வலாஇலாஹ கைருக' என்ற ஆரம்ப துஆவை ஓதக் கூடாது. இரண்டாம் ரக்அத்தை முடித்த பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி இரண்டு ஸஜ்தாக்களுக்கு இடையில் அமர்வது போலவே அமர வேண்டும். இந்த இருப்பில் அத்தஹிய்யாத்தை ஓத வேண்டும். 'அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு' என்று கூறும்போது ஆட்காட்டி விரலை அசைக்க வேண்டும்.

அத்தஹிய்யாத் வருமாறு:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ، اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِينَ، أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ. أَعُوذُ بِاللهِ مِنْ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமாஸல்லைத்த அலாஇப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமாபாரக்த அலாஇப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.

அவூதுபில்லாஹி மின் அதாபி ஜஹன்னம வமின் அதாபில் கப்ரி வமின் ஃபித்னதில் மஹ்யா வல்மமாத்தி வமின் ஃபித்னதில் மஸீஹித் தஜ்ஜால் என்று கூற வேண்டும். பிறகு தான் விரும்பும் இவ்வுலக மறு உலக நலனை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும்.

(பொருள்: காணிக்கைகள், வணக்கங்கள் மற்றும் நற்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். நபியே அமைதியும் அல்லாஹ்வின் கருணையும் அருட்பேருகளும் உங்கள் மீது உண்டாகட்டும். எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் அமைதி உண்டாகட்டும். வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் கூறுகிறேன்.

யா அல்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் கருணை பொழிவாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் நீ கருணை பொழிந்தது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். அதுபோல முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் அருட்பேருகள் பொழிவாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி

வந்தவர்கள் மீதும் நீ அருட்பேருகள் பொழிந்தது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். நரகத்தின் வேதனையிலிருந்தும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் குழப்பத்திலிருந்தும் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்தும் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்)

16. பிறகு முகத்தை வலது புறம் திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று கூறவேண்டும். அதுபோல முகத்தை இடது புறம் திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று கூறவேண்டும்.

<u>குறிப்பு:</u> மூன்று அல்லது நான்கு ரக்அத்து தொழுகையாக இருந்தால் முதல் அத்தஹிய்யாத்தில் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என்பது வரை கூறிவிட்டு அல்லாஹு அக்பர் என்று கூறி நிலைக்கு வர வேண்டும். அப்போது இரு கைகளையும் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்திக் கொள்ள வேண்டும். நிலையில் வலது முன் கையை இடது முன் கையின் மீது வைத்து அதை நெஞ்சின் மீது வைக்க வேண்டும். பிறகு எஞ்சியிருக்கும் ரக்அத்தை இரண்டாம் ரக்அத்தைப் போலவே தொழுது கொள்ள வேண்டும். ஆனாலும் ஸூரத்துல் பாத்திஹாவை மாத்திரம் ஓதிக் கொள்ள வேண்டும்.

17. இரண்டாம் ரக்அத்தைத் தவிர உள்ள கடைசி அத்தஹிய்யாத்தில் இருப்பிடம் தரையில் படுமாறு அமர்ந்து இடது காலை வலது காலுக்குக் கீழ் வலப்பக்கம் வெளிப்படுத்தி வலது கால் பாதத்தை நட்டுவைத்துக் கொள்ள வேண்டும். இரு கைகளையும் தொடை மீது முதல் அத்தஹிய்யாத்தில் வைத்தது போலவே வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இருப்பில் அத்தஹிய்யாத் முழுவதையும் ஓதி ஸலாம் கொடுக்க வேண்டும்.

## ஜமாஅத் தொழுகையில் தாமதமாக வந்து சேர்ந்தவர்

ஒருவர் இமாமுடன் சேர்ந்து தொழும்போது தவறிய ரக்அத்தை இமாம் ஸலாம் கொடுத்த பிறகு பூர்த்தி செய்ய வேண்டும். எந்த ரக்அத்தில் அவர் இமாமுடன் சேருகிறாரோ அதுவே அவருக்கு முதல் ரக்அத்தாகும். இமாமுடன் அவர் ருகூவை அடைந்துவிட்டால் அந்த ரக்அத்தை அடைந்து கொள்வார். ஒருவருக்கு இமாமுடன் ருகூஃ கிடைக்கவில்லையென்றால் அவருக்கு அந்த ரக்அத் முழுமையாகத் தவறியதாக ஆகிறது.

தாமதாக வருபவர் பள்ளிக்குள் நுழைந்ததும் உடனே ஜமாஅத்தில் சேர்ந்து விட வேண்டும். அவர்கள் நிலையிலோ ருகூவிலோ ஸுஜூதிலோ அல்லது வேறு எந்த நிலையில் இருந்தாலும் சரியே. அடுத்த ரக்அத்துக்கு அவர்கள் எழுந்து வருவதை எதிர்பார்க்கக் கூடாது. தக்பீரதுல் இஹ்ராம் என்ற முதல் தக்பீரை நின்று கொண்டே நிறைவேற்ற வேண்டும். நோயாளியைப் போன்று தக்க காரணமுள்ளவரைத் தவிர.

## தொழுகையை வீணாக்கக்கூடியவை

1. வேண்டுமென்றே பேசுவது, சிறிதளவாயினும் சரியே!
2. கிப்லாவை விட்டும் திரும்புவது, முழு உடலுடன்!
3. பின் துவாரத்தின் வழியாகக் காற்று வெளியேறுவது. மேலும் உளூ, குளிப்பை கடமையாக்கக் கூடிய காரியங்கள் நிகழ்வது.
4. தேவையில்லாமல் அதிகமான அசைவுகள் தொடர்ந்து நடைபெறுவது.
5. சிரிப்பது, சிறிதளவாயினும் சரியே!

6. ருகூஃ, ஸுஜூத், நிலை, அமர்வு ஆகியவற்றை வேண்டுமென்றே அதிகப்படுத்து வது.
7. வேண்டுமென்றே இமாமை முந்துவது.

## தொழுகையில் ஏற்படும் மறதி

தொழுகையில் ஒருவன் தவறு செய்தால் அதாவது முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்வது போன்ற முக்கியமான ஒன்றை மறந்துவிட்டால் இறுதியில் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும். அத்தவறு தொழுகையினுள் ஏற்பட்ட குறைபாடாகக் கணிக்கப்படும் வகையில்! இந்த ஸஜ்தாவை ஸலாம் கொடுப்பதற்கு முன் செய்ய வேண்டும். இத்தவறு தொழுகையில் அதிகப்படுத்திய செயலாக இருக்குமானால் இந்த ஸஜ்தாவை ஸலாம் கொடுத்த பிறகு செய்ய வேண்டும். பின்னர் மீண்டும் ஸலாம் கொடுக்க வேண்டும்.

தொழுகையில் அதிமுக்கிய கடமை (ருகுன்) ஒன்றை மறந்துவிட்டால் அதைத் திரும்பச் செய்வது அவசியமாகும். அப்போதுதான் தொழுகை கூடும். பிறகு இறுதியில் மறதிக்காக ஸஜ்தாவும் செய்ய வேண்டும்.

## தொழுகையின் வாஜிபுகள்

(இரண்டாம் நிலைக் கடமைகள்).

1. தக்பீரதுல் இஹ்ராம் என்ற முதல் தக்பீரைத் தவிர ஏனைய தக்பீர்கள்
2. ருகூவில் சுப்ஹான ரப்பியல் அழீம் என்று கூறுவது.
3. இமாமாகவோ தனியாகவோ நின்று தொழும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா என்று கூறுவது.
4. ருகூவிலிருந்து எழுந்த பிறகு ரப்பனா லகல் ஹம்த் என்று கூறுவது.
5. ஸுஜூதில் சுப்ஹான ரப்பியல் அஃலா என்று கூறுவது.
6. இரண்டு ஸஜ்தாக்களுக்கிடையில் ரப்பிஃக் ஃபிர்லீ என்று கூறுவது.
7. முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்வது.
8. அதில் அத்தஹிய்யாத்து ஓதுவது.

## தொழுகையின் ருகன்கள்

(முதல் நிலைக் கடமைகள்)

1. சக்தி இருக்கும்போது நின்று தொழுவது.
2. தக்பீரத்துல் இஹ்ராம் என்ற முதல் தக்பீர்.
3. ஒவ்வொரு ரக்அத்திலும் பாத்திஹா ஓதுவது.
4. ருகூஃ செய்வது.
5. ருகூவிலிருந்து எழுந்து நிலையில் நிற்பது.
6. ஏழு உறுப்புக்கள் தரையில் படுமாறு ஸஜ்தா செய்வது.
7. ஸஜ்தாவிலிருந்து எழுவது
8. இரண்டு ஸஜ்தாக்களுக்கிடையில் அமர்வது.
9. நிதானம்.
10. கடைசி அத்தஹிய்யாத்துக்காக அமர்வது.
11. அதில் அத்தஹிய்யாத்து ஓதுவது.

12. நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து சொல்வது.
13. ஸலாம் கொடுப்பது.
14. இக்கடமைகளை வரிசையாகச் செய்வது.

## தொழுகைக்குப் பிறகு ஓதவேண்டிய திக்ருகள்

أستغفر الله ، أستغفر الله ، أستغفر الله ، اللهم انت السلام ومنك السلام تباركت يا ذا الجلال والأكرام

- அஸ்த:.க்பிருல்லாஹ், அஸ்த:.க்பிருல்லாஹ், அஸ்த:.க்பிருல்லாஹ் அல்லாஹும்ம அன்த ஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம்.
  பொருள்: அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். இறைவா! நீ எல்லாக் குறைகளை விட்டும் பாதுகாப்பு பெற்றவன். உன்னிடமிருந்தே பாதுகாப்பு ஏற்படுகின்றது. மதிப்பும் மகத்துவமும் மிக்கவனே! நீ உயர்ந்து விட்டாய்!.

لا إله إلا الله وحده لاشريك له له الملك وله الحمد وهو على كل شيء قدير
اللهم لا مانع لما أعطيت ولا معطي لما منعت ولا ينفع ذا الجد منك الجد

- லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அ:.தைத்த வலா மு:.திய லிமா மன:.த வலா யன்:.பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்.
  பொருள்: வணக்கத்திற்குரியவன அல்லாஹ்வைத தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சியும் அவனுக்கே! புகழும் அவனுக்கே! அவன் அனைத்துப் பொருட்களின் மீதும ஆற்றலுடையவன். இறைவா! நீ கொடுப்பதைத் தடுப்பவர் எவருமில்லை. நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவருமில்லை. மதிப்புடைய எவரும் எந்தப் பயனும் அளிக்கமாட்டார். மதிப்பு உன்னிடமே உள்ளது.

لاحول ولا قوة إلا بالله لا إله إلا الله ولا نعبد إلا إياه له النعمة وله الفضل وله الثناء الحسن لا إله إلا الله مخلصين له الدين ولو كره الكافرون

- லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ். லாயிலாஹ இல்லல்லாஹு வலா ந:. புது இல்லா இய்யாஹு லஹுன் நி:.மது வலஹுல் :.பழ்லு வலஹுஸ் ஸனாவுல் ஹஸனு லாயிலாஹ இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் கா:. பிருன்.
  பொருள்: அல்லாஹ்வின் துணையின்றி நல்லவற்றைச் செய்யவோ தீயவற்றிலிருந்து விலகவோ இயலாது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனைத் தவிர வேறு எவரையும் நாங்கள் வணங்கமாட்டோம். அருட்கொடை அவனுக்குரியது. பேருபகாரமும் அவனுக்குரியது. அழகிய புகழும் அவனுக்குரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எருமில்லை. நிராகரிப்போர் விரும்பாவிட்டாலும் வணக்கங்களை அவனுக்கு மட்டுமே கலப்பற்ற முறையில் செய்வோம்.

لا إله إلا الله وحده لاشريك له له الملك وله الحمد يحي ويميت وهو على كل شيء قدير

- லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர்.
  இதை மஃரிபுக்குப் பிறகும் பஜ்ருக்குப் பிறகும் பத்து தடவை ஓதுவது விரும்பத்தக்க தாகும்.
  பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சி அதிகாரம் அவனுக்குரியதே! அவனுக்கே எல்லாப் புகழும்! அவனே வாழ்வும் மரணமும் அளிக்கின்றான். அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன்.
- பிறகு சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33 தடவை, அல்லாஹு அக்பர் 33 தடவை. பிறகு நூறாக செய்ய லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர் என ஒரு தடவை கூறவேண்டும்.
- ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஆயதுல் குர்ஸி, குல்ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பின் நாஸ் ஓத வேண்டும். இந்த மூன்று ஸூராக்களையும் மஃரிபுக்குப் பிறகும் பஜ்ருக்குப் பிறகும் மூன்று தடவை ஓதுவது விரும்பத்தக்கதாகும்.

## கடமையான தொழுகைக்கு முன்- பின் உள்ள சுன்னத்துகள்

ஊரில் இருக்கும்போது 12 ரக்அத்துகள் சுன்னத்தான தொழுகைகளைப் பேணித் தொழுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் விரும்பத்தக்கதாகும். அவை: லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகள், லுஹருக்குப் பின் இரண்டு ரக்அத்துகள், மஃரிபுக்குப் பின் இரண்டு ரக்அத்துகள், இஷாவுக்குப் பின் இரண்டு ரக்அத்துகள், சுபுஹுக்கு முன் இரண்டு ரக்அத்துகள். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் இவற்றைப் பேணி வந்ததுடன் "ஒரு நாளைக்கு 12 ரக்அத்துகள் நஃபிலாக (உபரியாக) யார் தொழுது வருகிறாரோ அவருக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படும்" என்றும் கூறியுள்ளார்கள். அதுபோலவித்ரு தொழுவது ஒரு முஸ்லிமுக்கு சுன்னதாகும். இதன் நேரம் இஷா தொழுகைக்குப் பிறகுஇருந்து பஜ்ரு உதயமாகும் வரை. வித்ரு தொழுகையும் பஜ்ருடைய முன் சுன்னத்தும் நபி(ஸல்) அவர்கள்- பயணத்திலும் சரி, ஊரிலும் சரி- விடாமல் தொழுது வந்த சுன்னத்தான தொழுகைகளில் உள்ளவையாகும்.

# ஜகாத்
# أحكام الزكاة

## ஜகாத்தின் சட்டம்

**ஜகாத் இஸ்லாத்தின் கடமைகளில் மூன்றாவது கடமையாகும். ஒரு முஸ்லிம் நிஸாப் எனும் உச்சவரம்பு பணம் பெற்றிருந்து ஒரு வருடம் முடிந்துவிட்டால் அவன் மீது ஜகாத் கடமையாகிவிடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான்: தொழுகையை நிலை நிறுத்துங்கள், ஜகாத் கொடுங்கள்.... (2:110)**

**இஸ்லாத்தில் ஜகாத் கடமையாக்கப்பட்டிருப்பதில் சில தத்துவங்களும், பல பயன்களும் உள்ளன. அவை வருமாறு:**

**1- மனிதனைக் கஞ்சத்தனத்திலிருந்து தூரமாக்குவது தூய்மைப்படுத்துவது.**

**2- முஸ்லிமுக்கு தர்ம சிந்தனையை ஏற்படுத்துவது.**

**3- செல்வந்தனுக்கும் ஏழைக்குமிடையே நேசத்தை நிரந்தரமாக்குவது. ஏனெனில் மனித உள்ளங்கள் தமக்கு உபகாரம் செய்பவர்களை நேசிப்பதன் மீதே படைக்கப்பட்டுள்ளன.**

**4- ஏழை முஸ்லிமின் தேவை நிறைவு செய்யப்பட்டு போதுமான ஒரு நிலையை உருவாக்குது.**

**5- மனிதனை பாவங்களை விட்டும் தூய்மைப்படுத்துவது. பாவங்களை அழித்து, பதவிகளை உயர்த்துவதற்கும் ஜகாத் காரணமாக அமைகிறது எனும் வகையில்!**

## எவற்றில் ஜகாத் கடமை?

**தங்கம், வெள்ளி, வியாபாரச் சரக்குகள், கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்) பூமியில் விளையும் தானியங்கள், பழங்கள் மற்றும் உலோகங்கள் ஆகியவற்றில் ஜகாத் கடமையாகும்.**

## தங்கம், வெள்ளி

**தங்கம், வெள்ளி எந்த வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் அவற்றில் ஜகாத் கடமையாகும். நிஸாப் எனும் உச்சவரம்பு அளவு தங்கம், வெள்ளி யாரிடம் உள்ளதோ அவர் மீது ஜகாத் கடமையாகும். தங்கத்தில் நிஸாப் அளவு 20 மிஸ்கால் அதாவது எழுபது கிராமாகும். வெள்ளியின் நிஸாப் 20 திர்ஹம் அதாவது நாநூற்று அறுபது கிராமாகும். யார் தங்கத்திற்குரிய நிஸாப் அளவை வைத்திருக்கின்றாரோ அவர் தன்னிடமுள்ளதில் இரண்டரை சதவீதம் ஜகாத் கொடுப்பது அவர் மீது கடமையாகிவிடுகிறது. அது ஒன்றறை கிராமாகும். வெள்ளியின் நிஸாபை வைத்திருப்பவரின் மீது பதினொன்றரை கிராம் கடமையாகும்.**

**ரொக்கப் பணமாக ஒருவர் ஜகாத் கொடுக்க விரும்பினால் எந்த நாளில் ஓராண்டு பூர்த்தியாகின்றதோ அந்த நாளில் ஒரு கிராம் தங்கம் அல்லது வெள்ளியின் விலை மதிப்பைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதன் மதிப்புக்கு நிகரான பணத்தை ஜகாத் கொடுக்க வேண்டும். உதாரணமாக ஒருவரிடம் நூறு கிராம் தங்கம் இருந்தால் அவருக்கு அதில் ஜகாத் கடமையாகிவிடுகின்றது. ஏனெனில் அவர் நிஸாப் எனும் உச்சவரம்பைப் பெற்றுவிட்டார். அதற்குரிய ஜகாத இரண்டரை கிராமாகும்.**

இந்த ஜகாத்தை அவர் ரொக்கப் பணமாக கொடுக்க நாடினால் ஜகாத் கடமையான நாளின் தங்கத்தின் விலை மதிப்பைக் கேட்டு, இரண்டரை கிராம் தங்கத்தின் மதிப்பிற்குச் சமமான தொகையை ஜகாத் கொடுக்க வேண்டும்.

இதுபோன்றே ரொக்கப் பணம் ஜகாத்தின் நிஸாபை அடைந்து, ஓராண்டு பூர்த்தியாகிவிட்டால் அதில் ஜகாத் கடமையாகிவிடுகின்றது. எனவே ஒருவனிடம் எழுபது கிராம் தங்கமளவிற்கு ரொக்கப் பணம் இருக்குமானால் அவன் மீது ஜகாத் கடமையாகிவிடுகிறது. இரண்டறை சதவீத அளவு கணக்கிட்டு அவன் ஜகாத் கொடுக்க வேண்டும். எனவே ஒரு முஸ்லிமிடம் பணமிருந்து, ஓராண்டு பூர்த்தியாகிவிட்டால் அவன் தங்க வியாபாரியிடம் எழுபது கிராம் தங்கத்தின் விலை மதிப்பைக் கேட்க வேண்டும். அத்தொகை போன்று அவனிடமிருக்குமானால் அதற்கு அவன் ஜகாத் கொடுக்கவேண்டும். வியாபாரி கூறியதை விட அவனிடம் குறைவாக இருக்குமானால் அவனுக்கு ஜகாத் கடமையாகாது.

உதாரணமாக ஒருவனிடம் முப்பதாயிரம் ரூபாய் இருந்து, ஓராண்டும் நிறைவு பெற்றிருந்தால் அவன் தனது நாட்டின் நாணய மதிப்பீடு தங்கத்தின் அளவைக் கொண்டிருக்குமானால் தங்கத்தின் ஒரு கிராம் விலையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது தனது நாட்டின் நாணய மதிப்பீடு வெள்ளியைக் கொண்டிருக்குமானால் ஒரு கிராம் வெள்ளியின் விலையைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போது எழுபது கிராம் தங்கத்தின் விலை நாற்பதாயிரமாக இருக்குமானால் அவனுக்கு ஜகாத் கடமையாகாது. ஏனெனில் அவனிடமுள்ள இந்தத் தொகை ஜகாத் கொடுக்குமளவுள்ள தொகையல்ல. வெள்ளிக்கும் இவ்வாறே செய்து கொள்ளவேண்டும்.

## வியாபாரச் சரக்குளுக்குரிய ஜகாத்

பொருள் வசதியைப் பெற்று அதை வியாபாரத்தில் முதலீடு செய்யக் கூடிய முஸ்லிமான வியாபாரியின் மீது ஜகாத் கொடுப்பதை வருடம் ஒரு முறை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. இது, அவன் அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி செய்வதற்காகவும் தன் சகோதரர்களில் தேவையுடையவர்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவும் ஆகும்.

அசையாப் பொருள், பிராணி, உணவு, பானம், கார் போன்றவற்றில் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய அனைத்திலும் ஜகாத் கடமையாகின்றது. இவற்றில் ஜகாத்திற்குரிய நிபந்தனை: பணம் நிஸாப் எனும் உச்ச வரம்பை எட்டியிருக்கவேண்டும். அவற்றை வெள்ளி, தங்கம் இவ்விரண்டில் ஒன்றின் கிரயத்துக்கு ஈடாக மதிப்பிடவேண்டும். அவற்றின் மொத்தக் கிரயத்தில் இரண்டறை சதவீதம் ஜகாத் கடமையாகும். ஒருவனின் வியாபாரப் பொருளின் கிரயமாக ஒரு லட்சம் ரூபாய் இருக்குமானால் அவன் அதில் 2500 ரூபாய் ஜகாத் கொடுப்பது கடமையாகும். வியாபாரிகள் ஒவ்வொரு வருடமும் தங்களது இருப்பை விலை மதிப்பீடு செய்வது கடமை. பிறகு அவற்றின் ஜகாத்தை கொடுப்பார்கள். ஒரு வியாபாரி ஒரு வருடம் பூர்த்தியாக பத்து நாட்களிருக்கும்போது ஒரு பொருளை விலைக்கு வாங்கினால் அதை மற்றய பொருள்களுடன் சேர்த்து அதற்கு ஜகாத் கொடுத்து விடவேண்டும். வியாபாரத்தை எந்த நாள் ஆரம்பித்தானோ அந்த நாளிலிருந்து வருடம் ஆரம்பமாகிவிடுகிறது. எல்லா முஸ்லிம்களும் தங்களிடமுள்ளவற்றிற்கு ஒவ்வொரு வருடமும் ஜகாத் கொடுக்க வேண்டியதிருப்பதால் இது வருடாந்திர ஜகாத் என்று ஆகிவிட்டது.

தீனி கொடுத்து வளர்க்கும் கால்நடைகள் வியாபாரத்திற்குரியவையாக இருக்குமானால் அவை ஜகாத்தின் அளவை அடைந்தாலும் அடையாவிட்டாலும் சரியே! அவற்றின் விலை மதிப்பீடு நிஸாபுக்கு மேல் போகும்போது அவற்றின் பேரில் ஜகாத் கடமையாகிவிடும். எனவே அவன் அவற்றிற்கு நாணயத்தைக் கணக்கிட்டு ஜகாத்கொடுக்க வேண்டும்.

## பங்குகளுக்கு ஜகாத்

இக்காலத்தில் மக்கள் அசையாச் சொத்துக்களிலும் மற்றவற்றிலும் பங்குகள் போடும் பழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். இன்னும் இவர்களில் சிலர் அப்பங்குளில் ஒரு தொகையை சில சமயங்களில் பல ஆண்டுகளாக முடக்கிவைப்பவர்களும் இருக்கின்றனர். அத்தொகை கூடவும் செய்யும் குறையவும் செய்யும். இவை வியாபாரப் பொருள்களாகக் கணிக்கப்படுவதால் இப்பங்குகளுக்கும் ஜகாத் கொடுக்கவேண்டும். எனவே ஒரு முஸ்லிம் ஒவ்வொரு ஆண்டும் அவற்றின் மதிப்பைக் கணக்கிட்டு அவற்றிற்குரிய ஜகாதைக் கொடுக்க வேண்டும். அல்லது அவற்றை விற்று அவற்றின் கிரயத்தைப் பெற்றுக் கொள்ளும் போது அந்த வருடங்கள் அனைத்திற்கும் ஜகாத் கொடுக்க வேண்டும்.

## விளைபொருளுக்குரிய ஜகாத்

சேமிக்கப்படக்கூடிய, நிறுக்கப்படக்கூடிய பேரீத்தம் பழம், திராட்சை போன்ற கனி வகைகளிலும் மணிக்கோதுமை, தொலிக்கோதுமை, அரிசி போன்ற தானியங்களிலும் ஜகாத் கடமையாகும். எனினும் பழங்களிலும் காய்கறிகளிலும் ஜகாத் கடமையில்லை. விளைபொருள்கள் நிஸாப் எனும் உச்சவரம்பை அடைந்துவிட்டால் ஜகாத் கட்டாயமாகும். ஜகாத்தின் அளவு 675 கிலோவாகும். கோதுமைக்குரிய நிஸாப் 552 கிலோவாகும். ஓராண்டு பூர்த்தியாக வேண்டும் என்பது இவற்றில் நிபந்தனையில்லை.

இவை மழை நீர், ஆற்று நீர் போன்ற தண்ணீரால் செலவின்றி நீர்ப்பாசனம் செய்யப்பட்டு விளைந்திருக்குமானால் பத்து சதவீதம் ஜகாத் கடமையாகும். தண்ணீருக்காகச் செலவு செய்யப்பட்டிருக்குமானால் ஐந்து சதவீதம் ஜகாத் கடமையாகும். உதாரணமாக ஒருவன் கோதுமையை செலவின்றி நீர் பாசனம் செய்து அதில் அவனுக்கு 800 கிலோ கிடைத்திருக்குமானால் அதில் பத்தில் ஒன்று 80 கிலோ-கடமையாகும். செலவுடன் பாசனம் செய்திருந்தால் இருபது சதவீதம் அதாவது 40 கிலோ கடமையாகும்.

## கால்நடைகளுக்குரிய ஜகாத்

கால்நடைகள் என்றால் ஒட்டகம், மாடு, வெள்ளாடு, செம்மறி ஆடு, ஆகியவையாகும். இவற்றில் கீழ் காணும் நிபந்தனைகளுடன் ஜகாத் கடமையாகும்.

1- நிஸாப் எனும் உச்சவரம்பை எட்டவேண்டும். ஒட்டகத்தின் நிஸாப் ஐந்து. செம்மறி ஆடு, வெள்ளாடு இவற்றின் நிஸாப் நாற்பது. மாட்டின் நிஸாப் முப்பது. இதற்கு குறைவானதில் ஜகாத் கிடையாது.
2- இவை உரிமையாளரின் கைக்கு வந்து ஓராண்டு பூர்த்தியாகி இருக்க வேண்டும்.
3- இக்கால்நடைகள் வருடத்தில் அதிக நாட்கள் வெளியே சென்று மேய்ந்ததாக இருக்கவேண்டும். தீனி கொடுத்து வளர்க்கப்பட்டவையாகவோ அல்லது அவற்றுக்கான தீனி விலைக்கு வாங்கப்பட்டவையாகவோ இருந்தால் அல்லது அவற்றுக்கான தீனி

யை உரிமையாளரே சேகரிக்கிறார் என்றால் இதுபோன்ற கால்நடைகளுக்கு ஜகாத் கடமையில்லை. ஆனால் இவை வருடத்தில் அதிக நாட்கள் மேய்ந்தவையாக இருந்தால் ஜகாத் கடமையாகும்.

4- அவை பணியில் ஈடுபடுத்தப்படாதவையாக இருக்கவேண்டும். அவற்றின் உரிமையாளன் அவற்றை விவசாயத்திலோ அல்லது சுமை தூக்கவோ அல்லது வேறு வேலைகளுக்கோ அவற்றைப் பயன்படுத்தாமல் இருக்கவேண்டும்.

## ஒட்டகம்

ஜகாத்திற்குரிய நிஸாப் ஐந்து ஒட்டகங்கள் இருந்தால் ஒட்டகத்தில் ஜகாத் கடமையாகும். ஒரு முஸ்லிமிடம் ஐந்துக்கு மேல் ஒன்பது வரை ஒட்டகங்கள் அவனது உடமையிலிருந்தால் ஓர் ஆண்டு நிறைவடைந்திருந்தால் அவற்றில் ஒரு ஆடு ஜகாத் கடமையாகும். பத்துக்கு மேல் பதினான்கு வரை இருந்தால் அவற்றில் இரண்டாடு கடமையாகும். பதினைந்திற்கு மேல் பத்தொன்பது வரை மூன்றாடுகள். இருபதிற்கு மேல் இருபத்து நான்கு வரை நான்கு ஆடுகள். இருபத்தைந்திற்கு மேல் முப்பத்தைந்து வரை ஒரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். இது அவனுக்கு கிடைக்கவில்லையானால் இரு வயது பூர்த்தியான ஒரு ஆண் ஒட்டகம். 36 க்கு மேல் 45 வரை இரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். 46 க்கு மேல் 60 வரை மூன்று வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். 61 க்கு மேல் 75 வரை நான்கு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். 76 க்கு மேல் 90 வரை இரு வயது பூர்த்தியான இரு பெண் ஒட்டகம். 91 க்கு மேல் 120 வரை மூன்று வயது பூர்த்தியான இரு ஆண் ஒட்டகங்கள். இதற்கு மேல் அதிகமானால் ஒவ்வொரு நாற்பதுக்கும் இரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். ஒவ்வொரு ஐம்பதுக்கும் மூன்று வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம். கீழ் காணும் அட்டவணை ஒட்டகத்திற்குரிய ஜகாத்தை தெளிவுபடுத்துகிறது.

| எண்ணிக்கை | ஜகாத் |
|---|---|
| 5 முதல் 9 வரை | ஒரு ஆடு |
| 10 முதல் 14 வரை | இரு ஆடு |
| 15 முதல் 19 வரை | மூன்று ஆடு |
| 20 முதல் 24 வரை | நான்கு ஆடு |
| 25 முதல் 35 வரை | ஒரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம் அல்லது இரு வயது பூர்த்தியான ஒரு ஆண் ஒட்டகம் |
| 36 முதல் 45 வரை | இரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம் |
| 46 முதல் 60 வரை | மூன்று வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம் |
| 61 முதல் 75 வரை | நான்கு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம் |
| 76 முதல் 90 வரை | இரண்டு வயது பூர்த்தியான இரு பெண் ஒட்டகங்கள் |
| 91 முதல் 120 வரை | மூன்று வயது பூர்த்தியான இரு ஒட்டகங்கள் |

இதற்கு மேல் அதிகமாக இருந்தால் ஒவ்வொரு 40 க்கும் இரு வயது பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகமும் ஒவ்வொரு ஐம்பதுக்கும் மூன்று வயது பூர்த்தியான ஒரு ஒட்டகமும் கொடுக்க வேண்டும்.

## மாடுகள்

ஒரு வனிடம் 30-க்கு மேல் 39 வரை மாடுகள் இருந்தால் ஒரு வயது பூர்த்தியான ஒரு பசுவும், 40 க்கு மேல் 59 வரை இரு வயது பூர்த்தியான ஒரு பசுவும், 60 க்கு மேல் 69 வரை ஒரு வயது பூர்த்தியான இரண்டு காளைகளும், 70 க்கு மேல் 79 வரை இரு வயது பூர்த்தியான ஒரு பசுவும் ஒரு வயது பூர்த்தியான ஒரு காளையும் பின்னர் ஒவ்வொரு 30 க்கும் ஒரு வயது பூர்த்தியான ஒரு காளையும், ஒவ்வொரு 40 க்கும் ஒரு வயது பூர்த்தியான பசுவும் கொடுக்க வேண்டும்.

| எண்ணிக்கை | ஜகாத் |
|---|---|
| 30 முதல் 39 வரை | ஒரு வயது பூர்த்தியான பசு ஒன்று |
| 40 முதல் 59 வரை | இரு வயது பூர்த்தியான பசு ஒன்று |
| 60 முதல் 69 வரை | ஒரு வயது பூர்த்தியான காளை இரண்டு |
| 70 முதல் 79 வரை | இரு வயது பூர்த்தியான பசு ஒன்றும் ஒரு வயது பூர்த்தியான காளை ஒன்றும் |

## ஆடுகள்

ஒருவனிடம் 40 முதல் 120 வரை ஆடுகள் இருந்தால் அவன் ஒரு ஆடு கொடுப்பது கடமையாகும். 121 முதல் 200 வரை இரு ஆடுளும், 201 முதல் 300 வரை மூன்று ஆடுகளும், 301 முதல் 400 வரை நான்கு ஆடுகளும், 401 முதல் 500 வரை ஐந்து ஆடுகளும் கொடுக்கவேண்டும். பின்னர் இதற்கு மேல் அதிகமாகும் பட்சத்தில் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் சராசரி ஒரு ஆடு கொடுக்க வேண்டும்.

| எண்ணம் | ஜகாத் |
|---|---|
| 40 முதல் 120 வரை | ஒரு ஆடு |
| 121 முதல் 200 வரை | இரு ஆடுகள் |
| 201 முதல் 300 வரை | மூன்று ஆடுகள் |
| 301 முதல் 400 வரை | நான்கு ஆடுகள் |
| 401 முதல் 500 வரை | ஐந்து ஆடுகள் |

பின்னர் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒரு ஆடு கொடுக்க வேண்டும்.

## ஜகாத் பெறத் தகுதியானவர்கள்

அல்லாஹ் கூறுகிறான்: (ஜகாத் என்னும்)தானதர்மங்களெல்லாம் ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் இந்த தானதர்மங்களை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்களது உள்ளம் ஈர்க்கப்பட்டவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடன்பட்டவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்) வழிப்போக்கர்களுக்கும் உரியனவாகும். (இது)அல்லாஹ் விதித்த கடமையாகும். அல்லாஹ்(யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன். (9:60)

அல்லாஹ் ஜகாத் பெறத் தகுதியான எட்டு வகைக் கூட்டத்தினரை விளக்கிக் கூறியுள்ளான். இஸ்லாத்தில் ஜகாத் சமுதாயத்தையும் தேவையுடையோரையும் சென்றடைகின்றது. ஏனைய மார்க்கங்களிலுள்ளது போல-மார்க்க வீற்பன்னர்களுக்கு மட்டுமே

கொடுக்கப்பட மாட்டாது.

1- ஃபகீர் (ஏழை): உயிர் வாழ்வதற்குப் போதுமான தேவைகளில் பாதிக்கும் குறைவாக பெற்றிருப்பவர்.

2- மிஸ்கீன்: உயிர் வாழ்வதற்குப் போதுமான தேவைகளில் பாதிக்கு மேல் பெற்றிருப்ப வர். எனினும் அவர் போதுமான முழுமையான அளவைப் பெற்றுக் கொள்வதில்லை. இவர்களுக்கு பல மாதங்களுக்கான அல்லது ஒரு வருடத்திற்குப் போதுமான அளவிற்குரிய பணம் ஜகாத் நிதியிலிருந்து கொடுக்க வேண்டும்.

3- ஜகாத் தொகையை வசூலிப்பவர்கள்: ஜகாத் தொகையை செல்வந்தர்களிடமிருந்து சேகரிப்பதற்காக ஆட்சியாளரால் நியமிக்கப்படுபவர்கள். அவர்கள் செல்வந்தர்க ளாயிருந்தாலும் அவர்களது அந்தஸ்த்திற்கேற்ப அவர்களது வேலைக்குரிய கூலி யைக் கொடுக்க வேண்டும்.

4- உள்ளம் ஈர்க்கப்பட்டவர்கள்: தம் மக்களிடத்தில் மரியாதைக்குரிய தலைவர்களில் எவர்கள் இஸ்லாத்திற்கு வருவார்கள் என்றோ முஸ்லிம்களுக்குத் தொல்லை தராம லிருப்பார்கள் என்றோ எதிர்பார்க்கப்படுகிறதோ அத்தகையவர்கள். இவ்வாறே இ ஸ்லாத்தில் புதிதாக வந்தவர்களுக்கும் அவர்களது உள்ளங்கள் இஸ்லாத்தின் பால் நேசமாக்கப்படுவதற்காகவும், அவர்களின் உள்ளங்களில் ஈமான் உறுதியாகு வதற்காகவும் அவர்களுக்கு ஜகாத் கொடுக்க வேண்டும்.

5- அடிமைகளை உரிமைவிடுவதற்காகவும் எதிரிகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவும் ஜகாத் கொடுக்கப்பட வேண்டும்.

6- கடன்பட்டவர்கள்: இவர்களுடைய கடனை அடைப்பதற்காக ஜகாத் நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். ஆயினும் இவர்கள் முஸ்லிம்களாகயிருப்பதும், கடனை அடைப்தற்கு வசதியுள்ள செல்வந்தர்களாக இல்லாமலிருப்பதும், அவர்களது கட ன் பாவத்திற்குரியதாக இல்லாமலிருப்பதும் தற்காலிக கடனாக இருப்பதும் ஷர்த் தாகும்.

7- அல்லாஹ்வின் பாதையில்: ஊதியத்தை எதிர்பார்க்காமல் வணக்கமாகக் கருதி போ ர்புரிபவர்கள். அவர்களின் செலவிற்காக அல்லது ஆயுதங்கள் வாங்குவதற்காக ஜகாத் கொடுக்க வேண்டும். மார்க்கக் கல்வியைத் தேடுவதும் ஜிஹாதைச் சேர்ந்த துதான். மார்க்கக் கல்வியில் ஈடுபடுவதை நாடும் ஒரு மனிதன் தன்னிடம் பொருளா தார வசதியில்லாமலிருக்குமானால் அவன் மாாக்கக் கல்வியைத் தேடுவதில் ஈடுபடு மளவிற்கு போதுமான தொகையை மட்டும் ஜகாத் நிதியிலிருந்து கொடுப்பது கூடும்.

8- வழிப்போக்கன்: ஊருக்குச் செல்ல முடியாமல் வழியிலேயே நின்றுவிட்ட ஒரு பயணி. அவனது ஊரில் அவன் செல்வந்தனாக இருந்தாலும் அவன் ஊர் போய்ச் சேருமள விற்கு ஜகாத் தொகையிலிருந்து கொடுக்க வேண்டும்.

ஜகாதின் நிதி பள்ளிகட்டுவதற்கும் சாலைகளை சீர்படுத்துவதற்கும் செலவிடு வது கூடாது.

குறிப்பு:-

1- முத்து, பவளம், மீன் இன்னும் இவை போன்ற கடலிலிருந்து எடுக்கப்படுபவற்றில் வி யாபாரத்திற்கென ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர மற்றவற்றில் ஜகாத் கடமையில்லை.

2- வாடகைக்கான கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் ஜகாத் கடமையி ல்லை. எனினும் வாடகைப் பணம் நிஸாப் எனும் உச்சவரம்பை எட்டியிருந்து ஓரா

ண்டு பூர்த்தியாகிவிடுமானால் அதில் ஜகாத் கடமையாகும். உதாரணமாக ஒருவன் ஒரு வீட்டை வாடைக்கு விட்டு அதன் வாடகயை எடுத்துக் கொள்கிறான். அவன் வாடகையாக எடுத்துக் கொண்ட தொகைக்கோ அல்லது அதில் சிறிதளவுக்கோ- அவை ஜகாத்தின் அளவவ எட்டும் பட்சத்தில்- ஓராண்டு பூர்த்தியாகிவிடுமானால் அதில் ஜகாத் கடமையாகும்.

# நோன்பின் சட்டங்கள்
# أحكام الصيام

ரமழான் மாதம் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றாகும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து காரியங்கள் மீது அமைக்கப்பட்டுள்ளது. வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் நிச்சயமாக முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி பகர்வது, தொழுகையை நிலைநிறுத்துவது, ஜகாத் கொடுப்பது, இறை இல்லத்தைத் தரிசிப்பது(ஹஜ் செய்வது)ரமழான் மாதம் நோன்பு நோற்பது. (புகாரி)

நோன்பென்பது அல்லாஹ்வின் பால் நெருங்கும் நிய்யத்துடன் உண்ணல், குடித்தல், உடலுறவு கொள்ளல் போன்ற நோன்பை முறித்துவிடும் காரியங்களை விட்டும் பஜ்ரு உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை தன்னைத் தடுத்துக் கொள்வதாகும். ரமலான் மாதம் நோன்பு நோற்பது கடமை என்பது ஏகோபித்த முடிவாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும். (2:185)

இது புத்தி சீர் நிலையிலுள்ள, பருவ வயதை அடைந்த ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டாயமாகும். பருவ வயதை அடைவதென்பது, பதினைந்து வயதை அடைவது அல்லது மர்மஸ்தலத்தில் முடி முளைப்பது அல்லது கனவில் இந்திரியம் வெளிப்படுவது போன்றவற்றால் ஏற்படுகிறது. பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படுவது எனும் கூடுதலான காரணம் கொண்டு பெண் பருவமடைகிறாள். எனவே ஒரு சிறுவனுக்கு இவற்றில் ஏதேனும் ஒன்று ஏற்பட்டுவிட்டால் அவன் பருவ வயதை அடைந்தவனாகிவிடுகிறான்.

## ரமழானின் சிறப்புகள்

அல்லாஹ் ரமழான் மாதத்தை மற்ற மாதத்திற்கில்லாத பல சிறப்பம்சங்களைக் கொண்டு சிறப்பித்துள்ளான். அவற்றில் சில:

1. நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரை அவர்களுக்காக மலக்குகள் பாவமன்னிப்புத் தேடுகின்றனர்.
2. அல்லாஹ் தனது சுவர்க்கத்தை ஒவ்வொரு நாளும் அழகுபடுத்துகிறான். எனது நல்லடியார்கள் தம் கஷ்டங்களையும், சிரமங்களையும் பொருட்படுத்தாமல் அமல்களில் ஈடுபடுவதற்கும் பிறகு உன் பக்கம் வருவதற்கும் நெருங்கிவிட்டார்கள் என அதை நோக்கிக் கூறுகிறான்.
3. மூர்க்கத்தனமான ஷைத்தான்கள் விலங்கிடப்படுகிறார்கள்.
4. ஆயிரம் மாதங்களைவிட சிறப்பான மகத்துவமிக்க ஓர் இரவு இதில் உள்ளது.
5. ரமழானின் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகின்றது.
6. ரமழானின் ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரகத்திலிருந்து விடுதலை வழங்குகிறான்.
7. ரமழானில் செய்கின்ற உம்ரா, ஹஜ்ஜு க்குச் சமமாகும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ரமழானில் ஈமானுடனும் நன்மையை நாடியவராகவும் நோன்பு நோற்கின்றாரோ அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (புகாரி, முஸ்லிம்) மேலும் கூறினார்கள்: ஆதமுடைய மகன் செய்கின்ற எல்லா

நற்செயல்களுக்கும் பத்திலிருந்து எழுநூறு மடங்குகள் வரை கூலி கொடுக்கப்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான்: நோன்பைத் தவிர. ஏனெனில் நோன்பு எனக்குரியது அதற்கு நானே கூலி கொடுப்பேன். (இப்னுமாஜா)

## ரமழான் வருகையை உறுதி செய்தல்

ரமழான் வருகை இரு காரியங்களால் உறுதியாகும்:

1. ரமழான் பிறை பார்ப்பது: பிறை பார்க்கப்பட்டால் நோன்பு கட்டாயமாகிவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறை பார்த்து நோன்பு பிடியுங்கள். பிறை பார்த்து நோன்பு விடுங்கள். (புகாரி, முஸ்லிம்) ரமழான் மாதம் உறுதி செய்யப்படுவதற்கு நீதமான ஒருவர் பிறை பார்ப்பது போதும், ஷவ்வால் பிறையைக் கண்டு நோன்பு விடுவதற்கு நீதமான இருவர் பார்ப்பது கட்டாயமாகும்.
2. ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாகப் பூர்த்தியாக்குவது. முப்பது நாட்கள் பூர்த்தியாகிவிட்டால். 31 வது நாள் ரமழான் நாட்களில் முதல் நாளாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பிறை பார்க்க முடியாத அளவிற்கு மேக மூட்டம் இருந்தால் மாதத்தின் எண்ணிக்கையை முப்பதாகப் பூர்த்தியாக்கிக் கொள்ளுங்கள்.

## நோன்பு விடுவதற்கு சலுகையளிக்கப்பட்டவர்கள்

1. நோயாளி: தனது நோய் நீங்கிவிடுமென எதிர்பார்க்கிறான் ஆயினும் நோன்பு நோற்பது அவனுக்குக் கஷ்டமாக உள்ளது. இப்படிப்பட்டவன் நோன்பை விட அனுமதி வழங்கப்படுகிறான். பின்னர் விடுபட்ட நோன்பைக் கழா செய்ய வேண்டும். எனினும் தனது நோய் நீங்கிவிடுமென எதிர்பார்க்க முடியாத நிரந்தர நோயுடையவன் நோன்பு நோற்பது கட்டாயமில்லை. அவன் ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு 550 கிராம் அளவு உணவு வழங்க வேண்டும் அல்லது அவன் விட்டுவிட்ட நோன்பின் எண்ணிக்கை அளவுக்கு உணவு தயாரித்து ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.
2. பயணி: ஒரு பயணி தனது ஊரிலிருந்து புறப்பட்டுத் திரும்பி வரும் வரை நோன்பை விட்டுவிட அனுமதியளிக்கப்படுகிறான். அவன் எந்த நோக்கத்திற்காகப் பயணம் செய்தானோ அந்நோக்கம் முடிந்த பின்னர் அங்கு தங்கியிருக்க வேண்டுமென்ற எண்ணமில்லாமல் அங்கு இருக்கும் வரை அவன் பயணத்திலேயே இருந்து கொண்டிருக்கிறான். இப்பயணத்திற்குரிய தொலை தூரம் 80 கிலோ மீட்டரும் அதற்கு அதிகமுமாகும்.
3. ஒரு பெண் கர்ப்பிணியாகவோ அல்லது பாலூட்டும் தாயாகவோ இருந்தால் தனக்கோ தனது குழைந்தைக்கோ இடையூறு ஏற்படுமெனப் பயந்தால் நோன்பை விட அனுமதிக்கப்படுகிறாள். காரணம் நீங்கிவிட்ட பின்னர் விடுபட்ட நோன்பைக் கழா செய்ய வேண்டும்.
3. முதியவர்: இவர் நோன்பு பிடிப்பது சிரமமாக இருந்தால் நோன்பு விட அனுமதியளிக்கப்படுவார். இவருக்கு கழா கிடையாது. ஆனால் ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு உணவு கொடுக்க வேண்டும்.

## நோன்பை முறிப்பவை

1. வேண்டுமென்றே உண்பது, குடிப்பது: மறதியாக உண்பது, குடிப்பது நோன்பை முறிக்காது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாரேனும் மறந்த நிலையில் உண்ண

வோ குடிக்கவோ செய்தால் அவர் நோன்பை அப்படியே பூர்த்தி செய்து கொள் ளட்டும். (முஸ்லிம்) மூக்கு வழியாக தண்ணீர் வயிற்றினுள் சேர்ந்து விடுவதும் நரம்பு வழியாக உணவு, இரத்தம் செலுத்துவதும் நோன்பை முறித்துவிடும். ஏனெனில் இவை நோன்பாளிக்கு உணவாக அமைகிறது.

2. உடலுறவு கொள்தல்: நோன்பாளி உடலுறவு கொண்டுவிட்டால் நோன்பு முறிந்து விடும். அவர் நோன்பைக் கழா செய்வதுடன் அபராதமும் கட்டாயமாகும். அபராதம் அடிமையை உரிமைவிடுவது, அடிமை கிடைக்கவில்லையானால் தொடர்ந்து இரு மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும். இவ்விரண்டு மாதங்களில் மார்க்க ரீதியான காரணம் அல்லது உடல் ரீதியான காரணமின்றி நோன்பை விட்டுவிடக் கூடாது. மார்க்க ரீதியான காரணமென்பது ஹஜ்ஜுப் பெருநாளும் அதை அடுத்து வரக்கூடிய அய்யாமுத் தஷ்ரீக் எனக் கூறப்படும் 11, 12, 13 ஆகிய நாட்களுமாகும். உடல் ரீதி யான காரணமென்பது வியாதி, நோன்பை விடவேண்டுமென்ற நோக்கமின்றி பயணம் செய்தல் ஆகியவையாகும். எக்காரணமுமின்றித் தொடர் நோன்பை ஒருவன் விட் டுவிட்டால்- அது ஒரு நாளாயினும் சரி- தொடர் உண்டாவதற்காக அவன் மீண்டும் புதிதாகத் தொடர்வது கட்டாயமாகும். தொடராக நோன்பு நோற்க அவன் சக்தி பெறவில்லையாயின் 60 ஏழைகளுக்கு உணவு வழங்க வேண்டும்.

3. விந்து வெளிப்படுதல்: முத்தமிடுவது அல்லது சுயஇன்பத்தில் ஈடுபடுவது போன்ற காரணங்களால் இந்திரியத்தை வெளிப்படுத்துவது. இப்படிச் செய்பவன் அபராத மின்றி நோன்பைக் கழா செய்ய வேண்டும். கனவில் விந்து வெளிப்படுவதால் நோன்பு முறியாது.

4. இரத்தத்தை வெளிப்படுத்துதல்: ஹிஜாமத் எனும் இரத்தம் குத்தி எடுப்பதற்காக வோ இரத்ததானம் செய்வதற்காகவோ இரத்தத்தை வெளிப்படுத்துதல். இரத்தப் பரிசோதனைக்காக எடுக்கப்படும் குறைவான இரத்தம் நோன்பை முறிக்காது. இவ் வாறே பொன்னி மூக்கு உடைதல், காயம், பல்பிடுங்குதல் போன்ற சுய விருப்பமின் றி வெளியேறும் இரத்தம் நோன்பில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

5. வாந்தி எடுத்தல்: வேண்டுமென்றே வாந்தி எடுத்தால் நோன்பு முறிந்துவிடும். சுய விருப்பமின்றி வாந்தி வந்தால் நோன்பு முறியாது.

நோன்பை முறித்துவிடும் இக்காரியங்களில் ஒன்றை நோன்பாளி- தெரிந்தவனாக, ஞாபகமுடன், வேண்டுமென்றே - செய்தால் அவனது நோன்பு முறிந்துவிடும். மார்க் கச் சட்டத்தை அறியாதவனாக அல்லது நேரம் தெரியாதவனாக இருந்தால்- உ தாரணமாக அதிகாலை ஆகவில்லை என எண்ணுவது அல்லது சூரியன் மறைந்து விட்டதென எண்ணுவது இன்னும் இதுபோல - அவன் அறியாதவன், மறதியாகச் செய்துவிட்டான் என்பதால் நோன்பு முறியாது. இவ்வாறே ஒருவன் சுயவிருப்பமின்றி, நிர்ப்பந்திக்கப்பட்டவனாக சாப்பிட்டிருந்தால் அவனது நோன்பு நிறை வேறி விடும்.

6. மாதவிடாய், பிரசவ இரத்தம் வெளிப்படுதல்: ஒரு பெண் எப்போது மாதவிடாய், பிரசவ இரத்தத்தைக் காண்கிறாளோ அப்போதே அவளது நோன்பு முறிந்துவிடும். மாதவிடாய், பிரசவ இரத்தம் வந்தவர்கள் நோன்பு நோற்பது ஹராமாக இருப்பது போல ரமழானுக்குப் பின்னர் அவர்கள் விட்ட நோன்புகளைக் கழா செய்வது கட் டாயமாகும்.

## நோன்பை முறிக்காதவை

1. குளித்தல், நீந்துதல், வெப்பத்தைத் தனித்துக் கொள்வதற்காக தண்ணீர் கொண்டு குளிர் ஏற்படுத்திக் கொள்ளுதல்.
2. அதிகாலை வந்துவிட்டதென உறுதியாகத் தெரியத வரை உண்பது, குடிப்பது, உடலுறவு கொள்வது.
3. பல் துலக்குதல் (மிஸ்வாக் செய்தல்). பகலில் மிஸ்வாக் செய்வதால் நோன்பிற்கு எந்தக் குறையும் ஏற்படாது. மட்டுமின்றி அப்படி மிஸ்வாக் செய்வது முஸ்தஹப்பான காரியங்களில் ஒன்றாகும்.
4. உணவல்லாத ஹலாலான எந்த மருந்து கொண்டும் வைத்தியம் செய்து கொள்வது. உணவு (குளுக்கோஸ்) ஊசி அல்லாத மற்ற ஊசி போட்டுக் கொள்வது கூடும். கண், மூக்கில் சொட்டு மருந்திட்டுக் கொள்வது. அதன் ருசியைத் தொண்டையில் பெற்றுக் கொண்டாலும் சரியே. இளப்புக்காக ஸ்ப்ரேயைப் பயன்படுத்துவதும் இது போன்றுதான். உணவில் ருசி பார்ப்பதால் நோன்பு முறியாது. ஆனால் வயிற்றினுள் எதுவும் சென்று விடக்கூடாது என்பது நிபந்தனை. வாய் கொப்பளிப்பது, நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது பற்றி குற்றமேதுமில்லை. எனினும் அதனால் ஏதும் வயிற்றினுள் செல்கின்ற அளவுக்குப் பலமாக தண்ணீர் செலுத்தக் கூடாது. இதுபோன்றே வாசனைப் பொருள்களை உபயோகிப்பதும் அவற்றை மோந்து பார்பதும் குற்றமில்லை.
5. மாதவிடாய்க்காரிக்கும், பிரசவ இரத்தம் வந்தவளுக்கும் இரவிலேயே இரத்தம் நின்றுவிட்டால் அதிகாலை வரை குளிப்பதைப் பிற்படுத்திக் கொள்வது கூடும். பின்னர் அவ்விருவரும் ஃபஜ்ருத் தொழுகைக்காகக் குளித்துக் கொள்ள வேண்டும். பெருந்துடக்குடையவனும் இதுபோன்றே செய்து கொள்ள வேண்டும்.

## முக்கியக் குறிப்புகள்

1. ஒரு காஃபிர் ரமழான் பகலில் இஸ்லாமாகிவிட்டால் மீதமுள்ள நேரத்தில் உண்பதையும் குடிப்பதையம் தடுத்துக் கொள்வது கட்டாயமாகும். அதை அவன் கழா செய்ய வேண்டியதில்லை.
2. நோன்பின் நிய்யத்தை இரவிலேயிலே வைப்பது கட்டாயமாகும். அது அதிகாலைக்கு முன்புள்ள இரவின் எந்த நேரத்திலாயினும் சரி. இது ஃபர்ழான நோன்பிற்கு மட்டும் தான். நபிலான நோன்பிற்கு அதிகாலை உதித்த பின்னரும் நிய்யத் வைத்துக் கொள்வது கூடும். அது சூரியன் உயர்ந்த பின்னராயினும் சரியே. ஆயினும் அவன் பகலில் ஏதும் உண்ணாமலிருப்பது நிபந்தனையாகும்.
3. நோன்பாளி நோன்பு திறக்கும் நேரத்தில் தனக்குப் பிரியமானவற்றைத் துஆச் செய்து கொள்வது விரும்பத்தக்கதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பாளி நோன்பு திறக்கும் நேரத்தில் கேட்கும் துஆ மறுக்கப்படமாட்டாது. "தஹபள் ளமவு வப்தல்லதில் உருக் வஸபதல் அஜ்ரு இன்ஷா அல்லாஹ்" என்ற துஆ ஹதீஸில் வந்துள்ளது.

ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوقُ وَثَبَتَ الْأَجْرُ إِنْ شَاءَ اللَّهُ

பொருள்: தாகம் தணிந்தது. நரம்புகள் நனைந்தன. அல்லாஹ் நாடினால் கூலியும் கிடைத்துவிடும்.

4. பகலின் இடையில் நோன்பு வந்துவிட்டதென அறிந்துவிட்டவர் எஞ்சியிருக்கும் நேரத்தில் உண்பது, குடிப்பதைத் தடுத்துக் கொள்வதும் அதைக் கழா செய்வதும் கட்டாயமாகும்.

5. கழா நோன்புள்ளவர் - பொறுப்பை நீக்கிக் கொள்ள- அதில் தீவிரம் காட்டுவது விரும்பத்தக்கதாகும். பிற்படுத்தவும் செய்யலாம். அதுபோல விடுபட்ட நோன்புகளைத் தொடராகவோ விட்டு விட்டோ கழா செய்யலாம். ஆனால் மறு ரமழான் வரும் வரை எவ்விதக் காரணமுமின்றி பிற்படுத்தக் கூடாது.

## நோன்பின் சுன்னத்துகள்

1. ஸஹர் செய்தல்: நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஸஹர் உணவு உண்ணுங்கள் நிச்சயமாக ஸஹர் உணவில் பரக்கத் உள்ளது. (புகாரி,முஸ்லிம்) ஸஹர் உணவை இரவின் கடைசி வரைப் பிற்படுத்துவது சுன்னத்தாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தவர் நோன்பு துறப்பதை விரைவுபடுத்தி, ஸஹர் உணவை பிற்படுத்தும் வரை நன்மையிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள். (அஹ்மத்)

2. நோன்பு திறத்தல்: சூரியன் மறைந்துவிட்டதென உறுதியாகத் தெரிந்துவிட்டால் நோன்பு திறப்பதைத் தீவிரப்படுத்த வேண்டும். கனிந்த பேரீத்தம் பழம் கொண்டு நோன்பு திறப்பது சுன்னத். அது கிடைக்காதபோது கனிந்து வரும் பேரீத்தம் பழம் கொண்டும் அதுவும் கிடைக்காத போது தண்ணீர் கொண்டும் இவற்றில் எவுதும் கிடைக்காதபோது எது கிடைக்கின்றதோ அது கொண்டு நோன்பு திறப்பது சுன்னத்தாகும்.

3. துஆச் செய்தல்: நோன்பு நோற்றிருக்கும் போது குறிப்பாக நோன்பு திறக்கும் சமயம் துஆச் செய்து கொள்ள வேண்டும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: மூன்று துஆக்கள் ஏற்கப்படும். நோன்பாளியின் துஆ, அநீதமிழைக்கப்பட்டவனின் துஆ, பயணியின் துஆ. (பைஹகி)

நோன்பாளி இரவில் தொழுவது அவசியமாகும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ரமழான் இரவில் எவர் ஈமானுடனும் நன்மையைத் தேடியவராகவும் நின்று வணங்குகிறாரோ அவரது முன் சென்ற பாவங்கள் மனன்னிக்கப்படுகின்றன. (புகாரி,முஸ்லிம்) தராவீஹ் தொழுகையை இமாமுடன் பூர்த்தி செய்வது அவசியமாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் தனது இமாமுடன் அவர் தொழுகையை முடித்துச் செல்கின்றவரை தொழுகிறாரோ அவரது முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (திர்மிதி,தாரமி) இன்னும் ரமழானில் தர்மம் செய்வதை அதிகப்படுத்துவதும் அவசியமாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: தர்மங்களில் தலை சிறந்த தர்மம் ரமழானில் செய்யப்படும் தர்மமாகும். (திர்மிதி) மேலும் ரமழானில் குர்ஆன் ஓதுவதில் நன் முயற்சியுடன் ஈடுபடுவதும் அவசியமாகும். ஏனெனில் ரமழான் குர்ஆன் (இறங்கிய)மாதமாகும். குர்ஆன் ஓதுபவருக்கு ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு நன்மையும் ஒரு நன்மைக்கு அது போன்ற பத்து மடங்குகளும் உண்டு.

## தராவீஹ் தொழுகை

தராவீஹ் என்பது ரமழான் இரவில் ஜமாஅத்தாகத் தொழும் தொழுகையாகும். அதன் நேரம் இஷாத் தொழுகைக்குப் பின்னிருந்து அதிகாலை உதிக்கும் வரையிலாகும். ரமழான் இரவில் தொழும்படி நபி(ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள். தராவீஹ்

தொழுகையின் சுன்னத்தான எண்ணிக்கை 11 ரக்அத்துகளாகும். ஒவ்வொரு இரு ரக் அத்துகளில் ஸலாம் கொடுத்துக் கொள்ள வேண்டும். 11 ரக்அத்துக்களுக்கு மேல் அ திகமாக்கினால் குற்றமில்லை. தராவீஹ் தொழுகை நடத்துவதில் சுன்னத்தான முறை தொழுகையாளிகளுக்குச் சிரமம் ஏற்படாத அளவு நீட்டி நிதானமாகத் தொழுவதாகும். குழப்பம் ஏற்படாதென்றிருக்குமானால் தராவீஹ் தொழுகைக்காக பெண்கள் பள்ளிக்கு வருவதில் குற்றமில்லை. எனினும் அவர்கள் அலங்காரங்களை வெளிப்படுத்தாமலும் வாசனை பூசிக்கொள்ளாமலும் தங்களை மூடிமறைத்தவர்களாகவும் வருவது நிபந்த னையாகும்.

## சுன்னத்தான நோன்பு

1. ஷவ்வால் மாத ஆறு நோன்புகள். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஒருவர் ரமழா னில் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வாலில் ஆறு நோன்புகள் நோற் றால் அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவர் போலாவார். (முஸ்லிம்)
2. திங்கள், வியாழக் கிழமைகள் தோறும் நோன்பு வைப்பது.
3. ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாட்கள். அவை அய்யாமுல் பீழ் எனும் வெள்ளை நாட்களாகும். அதாவது மாதத்தின் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள்.
4. ஆஷுரா நாள் (முஹர்ரம் பத்தாம்)நாள். அதற்கு முன் ஒரு நாள் அல்லது பின் ஒரு நாள் சேர்த்து நோன்பு வைப்பது சுன்னத்தாகும்.
5. அரஃபா நாள். அது துல்ஹஜ் மாதம் 9 ஆம் நாள் ஆகும்.

## நோன்பு நோற்கத் தடைசெய்யப்பட்ட நாட்கள்

1. நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள்.
2. தஷ்ரீக்குடைய மூன்று நாட்கள். அவை துல்ஹஜ் மாதத்தி ன் 11, 12, 13 ஆகிய மூன்று தினங்களாகும். இதிலிருந்து ஹஜ்ஜுக் கிரான், ஹஜ்ஜுத் தமத்துஃ செய்ப வர்கள் விதிவிலக்குப் பெறுகிறார்கள் பலிப்பிராணிகளைப் பெறவில்லையாயின்!
3. மாதவிடாய், பிரசவ இரத்தம் வரக்கூடிய நாட்கள்.
4. ஒரு பெண் தன் கணவன் ஊரிலிருக்கும் சமயம் அவனது அனுமதியின்றி நோன்பு நோற்பது கூடாது. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண் அவளது கணவன் ஊரிலிருக்கும் சமயம் அவனது அனுமதியின்றி ரமழான் அல்லாத காலங்களில் நோன்பு நோற்கக் கூடாது. (புகாரி, முஸ்லிம்)

# ஹஜ், உம்ராவின் சட்டங்கள்
# أحكام الحج والعمرة

## ஹஜ்ஜின் சட்டமும் சிறப்பும்

ஹஜ், முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் வாழ்நாளில் ஒரு முறை கடமை யாகும். இது இஸ்லாமியக் கடமைகளில் ஐந்தாவது கடமையாகும். அல்லாஹ் கூறுகி றான்: அந்த ஆலயத்திற்குச் சென்று வர மக்களில் யார் சக்தி பெற்றவர்களோ அவர் கள் அதை ஹஜ் செய்வதானது அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடமையாகும். (3:97) நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து காரியங்கள் மீது அமைக்கப் பட்டுள்ளது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, நிச்சய மாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் எனச் சாட்சி பகர்வது, தொழுகையை நிலை நிறுத்துவது, ஜகாத் கொடுப்பது, ரமழான்மாதம் நோன்பு நோற் பது, ஹஜ் செய்வது. (புகாரி)

ஹஜ், அல்லாஹ்வின் பக்கம் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மிகச் சிறந்த செயல்களில் ஒன்றாகும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: யார் பெண்களிடத்தில் உற வாடாமலும் பாவம் செய்யாமலும் இந்த வீட்டை ஹஜ் செய்கிறாரோ அவர் (பாவங்கள் அழிக்கப்பட்டு) அன்று பிறந்த பாலகன் போலாகிவிடுகிறார் (முஸ்னத் தயாலிஸி)

## ஹஜ்ஜின் நிபந்தனைகள்

ஹஜ்- வயது வந்த, புத்தி சீராக உள்ள, சக்தி பெற்ற அனைத்து முஸ்லிம்களுக் கும் கடமையாகும். சக்தி பெறுவதென்பது சென்று வருவதற்கும் வாகனச் செலவிற் கும் சக்தி பெறுவதாகும். உதாரணமாக, சென்று, திரும்பும் வழியில் உணவு, நீர், உடை, வாகனம் ஆகியவற்றிற்குச் செலவு செய்யச் சக்தி பெற்றவனாக இருப்பது போல. இச்செலவு தன் குடும்பத்தினருக்கும் தனது செலவின் கீழுள்ளவர்களுக்கும் போக மேல்மிச்சமாக இருக்க வேண்டும்.

சக்தி பெறுவதென்பதில் பயணம் அச்சமற்றிருப்பதும் உடல் ஆரோக்கியமும் சேரும். ஹஜ்ஜை நிறைவேற்விடாமல் தடுக்கும் நோய், தொற்று நோய் ஏற்படாமல் ஆரோக்கிய மாக இருக்கும் வகையில்! பெண்களுக்கும் இதே நிபந்தனைதான் என்றாலும் அவளு டன் அவளுடைய கணவர் அல்லது அவள் மணம் முடித்துக் கொள்ள ஹராமாக்கப்ப ட்ட ஒருவர் செல்வது அவசியமாகும். இன்னும் அவள் இத்தாவிலிருக்கும் பெண்ணாக வுமிருக்கக் கூடாது. ஏனெனில் இத்தாவிலிருக்கும் பெண்கள் அவர்களின் இல்லங்க ளிலிருந்து வெளியே செல்வதை அல்லாஹ் தடுத்துள்ளான். எனவே யாருக்கேனும் இத்தடைகளில் ஒரு தடையிருக்குமானால் அவருக்கு ஹஜ் கடமையில்லை.

## ஹஜ்ஜின் ஒழுக்கங்கள்

1- ஹஜ் செய்ய விரும்புபவர் தான் ஹஜ்ஜுக்குப் பயணமாகும் முன்னர் தனக்குத் தே வையான ஹஜ்ஜின் சட்டங்களைப் படித்தோ கேட்டோ தெரிந்து கொள்வதும் ஒரு ஆலிம்-அறிஞர் அடங்கிய நண்பர்களோடு செல்வதில் ஆர்வம் கொள்வதும் அவசி யமாகும்.

2- தனது ஹஜ்ஜைக் கொண்டு அல்லாஹ்வின் உவப்பையும் அவனுடைய நெருக்கத்தைப் பெறுவதையும் நாடவேண்டும்
3- பயனற்ற பேச்சுக்களை விட்டும் நாவைப் பாதுகாக்க வேண்டும். அதிகமாக திக்ர், துஆ செய்ய வேண்டும்
4- பிற மனிதர்களுக்கு தொல்லை கொடுப்பதை விட்டும் தற்காத்துக் கொள்ள வேண்டும். ஹாஜிகளில் எவருக்கும் தொல்லை கொடுக்காமலிருப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
5- பெண் பர்தா அணிந்து தன்னை மூடிமறைத்துக் கொள்வதும் ஆண்களின் நெருக்கடியை விட்டு தூரமாகிட வேண்டும்.
6- ஹஜ் செய்பவர் தான் வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதை ஒரு உல்லாசப் பயணமாகக் கருதக் கூடாது. அப்பயணத்தில் தன்னையும் தன்னுடனுள்ளவர்களையும் போட்டோ எடுத்துக் கொள்வதும் தவறாகும். இப்படி சில ஹாஜிகள் செய்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழி காட்டுவானாக!

## இஹ்ராம்

இஹ்ராம் என்பது ஹஜ் அல்லது உம்ரா உடைய வணக்கத்தில் பிரவேசிப்பதாகும். இஹ்ராமிலுள்ளவருக்கு அதற்கு முன்னர் ஹலாலாக இருந்த சில காரியங்கள் ஹராமாகிவிடுகின்றன. ஏனெனில் அவர் ஒரு வணக்கத்தில் புகுந்துவிட்டார். ஹஜ் அல்லது உம்ராவை விரும்புகிறவர் மக்காவிற்கு வெளியில் நபி (ஸல்) அவர்கள் நிர்ணயம் செய்த எல்லைகளில் ஏதேனும் ஒரு எல்லையிலிருந்து முன்னோக்கி வருபவராக இருந்தால் இஹ்ராம் கட்டாயமாகும்.

## எல்லைகள்

1- துல்ஹுலைஃபா: இது மதீனாவிற்குச் சமீபமாக உள்ள ஒரு கிராமமாகும். தற்போது இதற்கு (அப்யார் அலி) எனக் கூறப்படுகிறது. இது மதீனாவாசிகளுக்குரிய எல்லையாகும்.
2- அல்ஜுஹ்ஃபா: இது ராபிஃக் என்னும் ஊருக்கு அருகில் உள்ள ஒரு சிறிய ஊராகும். தற்போது மக்கள் ராபிஃகிலிருந்தே இஹ்ராம் கட்டிக் கொள்கிறார்கள். இது சிரியாவாசிகளின் எல்லை.
3- கர்னுல் மனாஸில்: (ஸைலுல்கபீர்) இது தாயிஃபிற்குச் சமீபமான ஒரு இடம். இது நஜ்து வாசிகளின் எல்லையாகும்.
4- யலம்லம்: இது மக்காவிலிருந்து சுமார் 70 கி.மீ. தூரத்திலுள்ளது. இது யமன் வாசிகளின் எல்லையாகும். (இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கும் இதுவே எல்லையாகும்.)
5- தாதுல் இர்க்: இது இராக்வாசிகளின் எல்லையாகும்.

இவ்வைந்து இடங்களும் மேலே குறிப்பிட்ட ஊர்வாசிகளுக்கும் இவ்விடங்கள் வழியாக வருகின்றவர்களுக்கும் எல்லைகளாகும். இந்த எல்லைளுக்கு உள்ளே உள்ளவர்களும் ஹரமில் உள்ளவர்களும் அவர்கள் இருக்கின்ற இடங்களிலிருந்தே இஹ்ராம் செய்து கொள்ள வேண்டும்.

## இஹ்ராமின் சுன்னத்கள்

**இஹ்ராமுக்கு முன் செய்ய வேண்டிய சுன்னத்தான காரியங்கள்:**

1- நகங்களை வெட்டுவது, அக்குள் முடிகளைப் பிடுங்குவது அல்லது மழிப்பது, மீசையைக் கத்தரிப்பது, மர்மஸ்தலத்தின் முடியை மழிப்பது, குளிப்பது, ஆடைகளி லன்றி உடம்புக்கு மட்டும் மணம் பூசிக்கொள்வது. ஆடைகளுக்குப் பூசக்கூடாது.

2- தையலாடைகளைக் களைவது, வேஷ்டி உடுத்தி துண்டைப் போர்த்திக் கொள் வது, பெண் தன்னை மூடி மறைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவதுடன் தான் விரும்பிய ஆடைகளை அணிந்து கொள்ளலாம். அழகலங்காரங்களை வெளிப்படு த்தக் கூடாது. அன்னிய ஆடவர்கள் வரும்போது முகத்தையும் முன் கைகளையும் மறைத்துக் கொள்ளவேண்டும். கையுறைகளையும் முகத்தை மறைப்பதையும் தவிர் த்துக் கொள்ள வேண்டும்.

3- பள்ளிக்குச் சென்று அந்நேரம் தொழுகை நேரமாக இருந்தால் ஜமாஅத்துடன் தொழுவது அல்லது உளூவின் சுன்னத்தான இரு ரக்அத்துகளைத் தொழுவது. அதன் பின்னர் இஹ்ராமைத் தொடங்குவது.

## ஹஜ்ஜின் செயல் முறைகள்

**ஹஜ்ஜின் செயல் முறைகள் மூன்று வகைப்படும்.**

### 1- ஹஜ்ஜுத் தமத்துஃ:

இது உம்ராவிற்கு மட்டும் இஹ்ராம் செய்தல். பின்னர் ஹஜ்ஜுடைய நேரத்தில் மக் காவில் தங்கியிருக்குமிடத்தில் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக்கொள்வது. எல்லையில் "லப்பைக் உம்ரத்தன் முதமத்திஅன் பிஹா இலல் ஹஜ்" எனக் கூறிக் கொள்ள வேண் டும். (பொருள்: இறைவா! உம்ராவை ஹஜ்ஜுடன் சேர்த்து நிய்யத்துச் செய்தவனாக உன் சமூகம் வந்துவிட்டேன்)

தமத்துவுதான் ஹஜ் வகைகளில் சிறந்ததாகும். குறிப்பாக ஹஜ்ஜு தொடங்குவதற் கு சில மாதம் முன்பே மக்கா வருபவர்களுக்கு இதுவே மிகச் சிறந்தது. பின்னர் மக்கா வில் அவர் இருக்குமிடத்திலிருந்தே ஹஜ்ஜுக்காக மீண்டும் ஒரு முறை இஹ்ராம் கட்டிக் கொண்டு "லப்பைக் ஹஜ்ஜன்" எனக் கூறவேண்டும். (பொருள்: இறைவா! ஹஜ்ஜை நிய் யத் செய்தவனாக உன்னிடம் வந்துவிட்டேன்) இவ்வகை ஹஜ் செய்பவர் குர்பானி கொ டுப்பது கட்டாயமாகும். குர்பானி ஒருவருக்கு ஒரு ஆடு அல்லது ஏழு நபருக்கு ஒருமாடு அல்லது ஒரு ஒட்டகம்.

### 2- ஹஜ்ஜுல் கிரான்:

இது ஹஜ்ஜுக்கும் உம்ராவிற்கும் சேர்த்து இஹ்ராம் செய்து கொள்வதாகும். இவர் "லப்பைக் உம்ரதன் வஹஜ்ஜன்" எனக் கூறவேண்டும். இவர் ஆரம்பமாக உம்ராச் செ ய்துவிட்டு பின் அந்த இஹ்ராமுடனேயே துல்ஹஜ் 10 ம் நாள்- நஹ்ருடைய நாள் வரை இருக்க வேண்டும். உம்ராவை ஹஜ்ஜுடன் சேர்த்து விடுவதன் மூலம் கிரான் ஏற்படுகி றது. இது பெரும்பாலும் ஹஜ்ஜுடைய காலத்திற்கு முன்னர் உம்ராச் செய்து முடித்து விட்டு பின்னர் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக் கொள்ளப் போதாத குறுகிய நேரத்தில் வருபவர்களுக்காகும். இந்த ஹஜ்ஜுக்கும் குர்பானி கட்டாயமாகும்.

**3- ஹஜ்ஜுல் இஃப்ராத்:**

**இது ஹஜ்ஜைமட்டும் நிய்யத் செய்வதாகும் இவர் எல்லையிலிருந்து இஹ்ராம் கட்டிக்கொண்டு "லைப்பைக் ஹஜ்ஜன்" எனக் கூறிக் கொள்ள வேண்டும். இவருக்கு குர்பானீ கட்டாயமல்ல.**

**விமானத்தில் பயணம் செய்பவராக இருந்தால் எல்லையில் இஹ்ராம் கட்டிக் கொள்வது கட்டாயமாகும். எல்லையைத் தெரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தால் அதற்கு முன்னர் போதுமான கால அளவில் இஹ்ராம் கட்டிக்கொள்ள வேண்டும். எல்லையில் செய்ய வேண்டிய சுத்தம், மணம் பூசுதல், நகங்கள் வெட்டுதல், இஹ்ராம் ஆடை அணிதல் ஆகியவற்றைச் செய்ய விரும்பினால் விமானத்தில் ஏறுவதற்கு முன்னரோ அல்லது விமானத்தில் வைத்தோ முழுமையாகச் செய்து கொள்ளலாம். பின்னர் எல்லையை அடைவதற்கு முன்னர் அல்லது அதை அடைந்து கொள்ளும் நேரத்தில் இஹ்ராமை நிய்யத் செய்து கொள்ளலாம்.**

## இஹ்ராம் முறை

**1- ஹஜ்ஜுத் தமத்துஃ செய்ய விரும்புகிறவர் "லப்பைக் உம்ரதன் முதமத்திஅன் பிஹா இலல் ஹஜ்" என்று கூறிக்கொள்ள வேண்டும்.**
**2- ஹஜ்ஜுக் கிரான் செய்பவர் "லப்பைக் உம்ரத்தன் வஹஜ்ஜன்" எனக் கூற வேண்டும்.**
**3- இஃப்ராத் செய்ய விரும்புகிறவர் "லப்பைக் ஹஜ்ஜன்" எனக் கூற வேண்டும்.**

**இஹ்ராம் செய்த பின்னர் தல்பியாச் சொல்வதும் அதை இஹ்ராம் செய்ததிலிருந்து கஃபதுல்லாஹ்வை அடைந்து தவாஃப்-வலம் வருவதை ஆரம்பிக்கும் வரை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பது சுன்னத்தாகும்.**

<u>தல்பியா:</u>

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لاشَرِيْكَ لَكَ

**லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லப்பைக் லாஷரீக்கலக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிஃமத்த லகவல் முல்க், லாஷரீக்க லக்.**

**(பொருள்: உன்னிடம் வந்துவிட்டேன். இறைவா! உன்னிடமே வந்து விட்டேன். உன்னிடமே வந்துவிட்டேன். உனக்கு யாதொரு இணையுமில்லை. உன்னிடமே வந்துவிட்டேன் நிச்சயமாக புகழும் அருட்பாக்கியங்களும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு யாதொரு இணையுமில்லை)**

## இஹ்ராமில் தடுக்கப்பட்டவை

**இஹ்ராம் கட்டிக் கொண்டவருக்கு பின் வருபவை ஹராமாகும்.**

**1- தலை முடியையும் உடம்பின் ஏனைய பாகங்களிலுள்ள முடிகளையும் நீக்குவது. எனினும் தேவையின் நிமித்தம் இலேசாகத் தலையைச் சொரிவதால் (முடிவிழுவதால்) குற்றமில்லை.**
**2- நகங்களை வெட்டுதல். எனினும் நகம் உடைந்து விட்டால் அல்லது அது அவனுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தால் அதை வெட்டுவது குற்றமல்ல.**
**3- வாசனைப் பொருட்களை உபயோகிப்பது (வாசனைச் சோப்புக்கும் இதே சட்டம்தான்)**
**4- உடலுறவும் அதற்கு தூண்டுதலாக உள்ள செயல்களும்! திருமணம் முடித்தல்**

**இச்சையுடன் பார்த்தல், அணைத்தல், முத்தமிடுதல் போன்று!**
**5- கையுறைகள் அணிதல்.**
**6- வேட்டைப் பிராணிகளைக் கொல்லுதல்.**

**இவ்வனைத்தும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஹராமானதாகும். ஆண்களுக்கு அதிகப்படியாக இன்னும் சில ஹராமாகின்றன.**

**அ- தையல் ஆடை அணிவது. எனினும் இஹ்ராமிலுள்ளவன் பெல்ட், கண்ணாடி, வாட்ச் போன்ற தேவையுள்ள பொருட்கள் அணிவது கூடும்.**
**ஆ- தலையை ஒட்டினாற்போல ஏதேனும் ஒன்றைக் கொண்டு தலையை மறைத்தல். தலையோடு ஒட்டாமல் சற்று உயரமாக வைத்து தலையை மறைத்துக் கொள்வது குற்றமில்லை. உதாரணமாக குடை, வாகனம், கூடாரம் போன்று!**
**இ- காலுறை அணிவது. செருப்புக் கிடைக்கவில்லையானால் காலுறை அணிந்து கொள்ளலாம்.**

**தடுக்கப்பட்ட இவற்றில் ஒன்றை யாரேனும் செய்துவிட்டால் அவனுக்கு மூன்று நிலைகள் உள்ளன:**
**1- தக்க காரணமின்றிச் செய்பவன். இவன் பாவியாவான். அபராதம் உண்டு.**
**2- தேவைக்காகச் செய்பவன். இவன் பாவியாகமாட்டான். அபராதம் உண்டு.**
**3- தக்க காரணத்துடன் செய்பவன். அதாவது அறியாமலோ, மறந்தோ, நிர்ப்பந்தமாகவோ செய்வது போல. இவனுக்கு குற்றமுமில்லை. அபராதமுமில்லை.**

## தவா.்.ப் (வலம் வருதல்)

**மஸ்ஜிதுல் ஹராமில் (கஃபத்துல்லாவில்) நுழையும் போது வலது காலை வைத்து**

بِسْمِ اللّٰهِ وا لصَّلَاةُ والسَّلَامُ عَلى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ اغْفِرْ لي ذُنُوْبِي وَا فْتَحْ لِي اَبْوَابَ رَحْمَتِكَ

**பிஸ்மில்லாஹி, வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ் அல்லாஹும் மக்.்.பிர்லீ துநூபி வ.்.ப்தஹ்லீ அப்வாப ரஹ்மத்திக்க**
**என்று கூறுவது சுன்னத்தாகும். (பொருள்: அல்லாஹ்வின் பெயர் கூறி நுழைகிறேன். கருணையும் ஈடேற்றமும் அல்லாஹ்வின் தூதர் மீது; உண்டாவதாக! இறைவா! என்னுடைய பாவங்களை மன்னித்துவிடு. உனது அருள்வாயில்களை எனக்குத் திறந்துவிடு) இந்த துஆ எல்லாப் பள்ளிகளுக்கும் பொதுவானதாகும். பின்னர் கஃபாவை வலம் வருவதற்காக அதை முன்னோக்க வேண்டும்.**

**தவா.்.ப் என்பது அல்லாஹ்விற்கு வணக்கம் செய்யும் எண்ணத்தில் ஹஜருல் அஸ்வதிலிருந்து ஆரம்பித்து இடது புறமாக க.்.பாவை ஏழு முறை சுற்றி வருவதாகும். முடிக்கும் போது ஹஜருல் அஸ்வதில் முடிக்க வேண்டும். தவா.்.ப் செய்யும் போது உளூவுடன் இருக்க வேண்டும்.**

## தவா.்.ப் செய்யும் முறை

**1- ஹஜருல் அஸ்வதின் பக்கம் சென்று அதைத் தனது வலது கையால் தொட்டு பிஸ்மில் லாஹி அல்லாஹு அக்பர் எனக் கூற வேண்டும். இத்துடன்**

اَللّٰهُمَّ اِيْمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ وَاتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ

**அல்லாஹும்ம ஈமானம்பிக வதஸ்தீகம் பிகிதாபிக வவ.்.பாஅம் பிஅஹ்திக வத்திபா**

அன் லிசுன்னத்தி நபிய்யிக. என்பதையும் சேர்த்து சொன்னால் சிறப்பாகும். (பொருள்: இறைவா! உன்னை நம்பிக்கை கொண்டு, உன்னுடைய வேதத்தை உண்மைப்படுத்தி, உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி, உன்னுடைய நபியின் சுன்னத்தை பின்பற்றியவனாக இதை நான் செய்கிறேன்) முடிந்தால் அக்கல்லை முத்தமிட வேண்டும். அதை முத்தமிட முடியவில்லையெனில் கல்லைத் தொட்ட தனது கையை முத்தமிட்டுக் கொள்ள வேண்டும். ஹஜருல் அஸ்வதைத் தொட முடியவில்லையானால் அதை முன்னோக்கி அல்லாஹு அக்பர் எனக் கூறி தனது கை கொண்டு அதன் பால் சுட்டிக் காட்ட வேண்டும். தனது கையை முத்தமிடக் கூடாது. பின்னர் கஅபத்துல்லாவை தனது இடப்புறமாக்கி தவாஃபைத் தொடங்க வேண்டும். தான் விரும்பிய துஆக்களைக் கேட்கலாம் அல்லது தனக்குத் தெரிந்த குர்ஆன் வசனங்களை ஓதலாம். தனது மொழியில் தனக்கும் தான் விரும்பியவருக்கும் துஆச் செய்யலாம். இங்கு துஆச் செய்வதற்கென குறிப்பான துஆக்கள் ஏதுமில்லை.

2- ருக்னுல் யமானியை அடைந்துவிட்டால், முடிந்தால் அதைத் தொட்டு பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் எனக் கூற வேண்டும். தனது கையை எமுத்தமிடக் கூடாது. முடியாவிட்டால் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டும். அதன் பக்கம் தனது கையால் சுட்டிக் காட்டவும், தக்பீர் சொல்லவும் கூடாது. ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதுக்குமிடையில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

"ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன் நார்" எனக் கூறிக் கொள்ள வேண்டும். (எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மையைத் தருவாயாக! நரக வேதனையை விட்டும் எங்களைக் காப்பாயாக!)

3- ஹஜருல் அஸ்வதை அடைந்துவிட்டால் வலது கையால் தொட வேண்டும். முடியவில்லையானால் அல்லாஹு அக்பர் எனக் கூறி தனது கையால் சுட்டிக் காட்ட வேண்டும். இப்படிச் செய்வது கொண்டு தவாஃபின் ஏழு சுற்றுக்களில் ஒரு சுற்று முடிவடைந்து விடுகிறது. மீதமுள்ள சுற்றுக்களையும் இவ்வாறே பூர்த்தி செய்யவும்.

4- தொடர்ச்சியாக வலம் வந்து கொண்டிருக்க வேண்டும். ஏழு சுற்றுக்களைப் பூர்த்தியாக்கும் வரை முதல் சுற்றில் செய்தது போலவே செய்ய வேண்டும். ஹஜருல் அஸ்வதைக் கடந்து செல்லும் போதெல்லாம் தக்பீர் சொல்லிட வேண்டும். இதுபோன்றே ஏழாவது சுற்றுக்குப் பின்னரும் தக்பீர் சொல் வேண்டும்.

முதல் மூன்று சுற்றுக்களில் தொங்கோட்டம் ஓடுவது சுன்னத்தாகும். மீதமுள்ள நான்கு சுற்றுக்களில் நடந்தே செல்ல வேண்டும். தொங்கோட்டம் என்பது கால் எட்டுகளை சுருக்கி வைத்து சற்று வேகமாக நடப்பதாகும். மேலும் இந்த தவாஃபில் மேல் அங்கியின் நடுப்பகுதியை வலது அக்குளுக்குக் கீழ் சுற்றிக் கொண்டு வந்து இரு ஓரங்களையும் இடது தோள் புஜத்தின் மீது போட்டுக் கொள்ள வேண்டும். வலது தோள் புஜம் மட்டும் திறந்திருக்க வேண்டும். இதுவும் சுன்னத்தாகும்.

தொங்கோட்டமும் மேலங்கியை இவ்வாறு போட்டுக்கொள்வதும் உம்ரா செய்யக் கூடியவரும், ஹஜ் செய்யக் கூடியவரும் மக்காவுக்கு வரும்போது செய்யக் கூடிய முதல் தவாஃபில் மட்டும்தான். மேலும் இவ்விரண்டும் ஆண்களுக்கு மட்டும்தான்.

## தவா∴புக்குப் பின்னர்

**தவா∴புக்குப் பின்னர் மகாம் இப்றாஹீமுக்குப் பின்னால் நின்று மகாம் அவனுக்கும் கஅபத்துல்லாவுக்குமிடையே இருக்கும் விதமாக இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது சுன்னத்தாகும். தொழுவதற்கு முன்னால் மேலங்கியை இரண்டு தோள் புஜங்கள் மீதும் நெஞ்சின் மீதும் போட்டுக் கொள்ள வேண்டும்.**

**அப்படித் தொழும்போது முதல் ரக்அத்தில் ∴பாத்திஹாவும் குல்யாஅய்யுஹல் கா∴பிரூனும் இரண்டாவது ரக்அத்தில் ∴பாத்திஹாவும் குல்ஹுவல்லாஹு அஹதும் ஓத வேண்டும். கடுமையான நெருக்கடியினால் மகாம் இப்றாஹீமுக்குப் பின்னால் தொழ முடியவில்லையானால் பள்ளியின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தொழுது கொள்ளலாம். பிறகு ஸம் ஸம் தண்ணீரை வயிறு புடைக்க அதாவது அதிகமாகக் குடிப்பது சுன்னத்தாகும்.**

## ஸயீ செய்வது

**பின்னர் ஸயீ செய்யுமிடத்திற்குச் சென்று ஸ∴பாவின் பக்கமாகச் செல்ல வேண்டும். அதை நெருங்கும் போது إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ "இன்னஸ் ஸ∴பா வல்மர்வத மின் ஷஆயிரில்லாஹ்" எனும் வசனத்தை ஓதிக்கொள்ள வேண்டும்.**
**(பொருள்: ஸ∴பா, மர்வா இரு குன்றுகளும் இல்லாஹ்வின் சின்னங்களில் உள்ளவையாகும்)**

**கஅபாவைக் காணுமளவிற்கு ஸ∴பாவில் ஏற வேண்டும். பின்னர் கஅபாவை முன்னோக்கி தனது இரு கைகளையும் உயர்த்தி, அல்லாஹ்வைப் புகழ்ந்து தான் விரும்பிய துஆவைக் கேட்க வேண்டும். உதாரணமாக**

لا إِلهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ؛ لا إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ؛ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِي وَيُمِيْتُ وَهُوَ عَلَي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ؛ لا إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ أَنجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

**லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தா அன்ஜஸ வ∴தா வநஸர அப்தா வஹஸமல் அஹ்ஸாப வஹ்தா**

**(பொருள்: வண்ககத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன் அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்குரியதே! புகழ் அனைத்தும் அவனுக்கே! மேலும் அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் நிறைந்தவன்! அல்லாஹ் ஒருவனைத் தவிர வணககத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. அவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றினான். தன் அடியாருக்கு உதவினான். அவன் ஒருவனே எதிரிக் கூட்டத்தினரைத் தோல்வியுறச் செய்தான்!**

**என மூன்று முறை கூறிக் கொண்டு நீண்ட நேரம் துஆச் செய்ய வேண்டும். பின்னர் அதிலிருந்து இறங்கி மர்வாவை நோக்கிச் செல்லவேண்டும். பச்சைத் தூணை அடைந்தால் அடுத்த பச்சைத் தூணை அடையும் வரை முடிந்த அளவு வீரைந்து செல்வது சுன்னத்தாகும். இப்படிச் செய்யும் போது யாருக்கும் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். வீரைந்து செல்வது ஆண்களுக்கு மட்டுமே பெண்களுக்கல்ல.**

மர்வாவை அடைந்துவிட்டால் அதில் ஏறி கிப்லாவை முன்னோக்கி கைகளை உயர்த்தி ஸஃபாவில் கூறியது போலக் கூற வேண்டும். இப்படி ஒருவர் செய்துவிட்டால் அவர் ஸயீக்குரிய ஏழு தடவைகளில் ஒன்றை முடித்துவிட்டார். துஆவிற்குப் பின்னர் மர்வாவிலிருந்து ஸஃபாவை நோக்கிச் செல்ல வேண்டும். முந்திய தடவை செய்தது போலவே செய்து கொள்ளவேண்டும். ஸயீயின் இடையில் துஆவை அதிகப்படுத்திக் கொள்வது சுன்னத்தாகும்.

ஹஜ் செய்பவர் ஹஜ்ஜுத் தமத்துஃ செய்பவராக இருந்தால் ஸயீக்குப் பின்னர் தலை முடியைக் கழைந்து, உம்ராவை முடித்து, சாதாரண ஆடைகள் அணிந்து இஹ்ராமை விட்டும் விடுபடுவார். எட்டாவது நாள் வந்துவிட்டால் அவர் இருக்குமிடத்திலேயே ளுஹர் தொழுகைக்கு சிறிது முன்னர் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக் கொள்ள வேண்டும். உம்ராவின் இஹ்ராமில் செய்த அனைத்தையும் செய்துகொள்ள வேண்டும். பின்னர் இஹ்ராமை நிய்யத் செய்து லப்பைக் ஹஜ்ஜன் எனக் கூறி, தல்பியாவைக் கூற வேண்டும். பின்னர் ளுஹர், அஸர், மக்ரிப், இஷா, ஃபஜ்ர் தொழுகைகளை மினாவில் சுருக்கித் தொழவேண்டும்.

## துல்ஹஜ் 8-ஆம் நாள்

ஹாஜி மினாவுக்குச் சென்று அங்கு ளுஹர், அஸர், மக்ரிப், இஷா, ஃபஜ்ர் ஆகிய தொழுகைகளைத் தொழவேண்டும். இவற்றில் நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்களாகச் சுருக்கித் தொழுது கொள்ள வேண்டும்.

## 9-ஆம் நாள் (அரஃபா நாள்)

இந்நாளில் பின் வருவமாறு செயல்படுவது ஷரீஅத்தின் கட்டளையாகும்.

1- சூரியன் உதித்த பின்னர் ஹாஜி அரஃபாவிற்குச் சென்று அங்கு சூரியன் மறையும் வரை தங்கவேண்டும். சூரியன் உச்சி சாய்ந்து விட்டால் ளுஹரையும் அஸரையும் சேர்த்து இரண்டு இரண்டு ரக்அத்தாகத் தொழ வேண்டும். தொழுகைக்குப் பின்னர் திக்ர், துஆ, தல்பியாவில் ஈடுபடவேண்டும். துஆவையும் அல்லாஹ்வுக்குப் பணிவதையும் அதிகப்படுத்துவது சுன்னத்தாகும். தனக்காகவும் பிற முஸ்லிம்களுக்காகவும் துஆக் கேட்கவேண்டும். தான் விரும்பியவற்றையெல்லாம் கேட்கலாம். துஆச் செய்யும்போது கைகளை உயர்த்துவது விரும்பத்தக்கதாகும்.

அரஃபாவில் தங்குவது ஹஜ்ஜின் முதல் நிலைக் கடமைகளில் ஒன்றாகும். எவரேனும் அரஃபாவில் தங்கவில்லையானால் அவரது ஹஜ் நிறைவேறாது. அங்கு தங்குவதற்கான நேரம் 9-ம் நாள் சூரியன் உதயமானதிலிருந்து 10-ஆம் நாள் ஃபஜ்ர் உதயமாகும் வரையாகும். எனவே ஒருவர் இந்த நேரத்தின் இரவிலோ பகலிலோ கொஞ்ச நேரம் தங்கிவிட்டால் அவரது ஹஜ் பூரணமடைந்து விடுகிறது. ஹாஜி அரஃபாவின் எல்கைக்குள் நுழைந்து விட்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

2- அரஃபா தினத்தின் சூரியன் மறைந்துவிட்டதென நன்கு தெரிந்தால் முஸ்தலிஃபாவை நோக்கி அமைதியாகவும் கம்பீரமாகவும் உரத்த குரலில் தல்பியாக் கூறிக் கொண்டும் செல்ல வேண்டும்.

## முஸ்தலி∴பா

முஸ்தலி∴பாவை அடைந்ததும் மக்ரிப், இஷாத் தொழுகைகளை சேர்த்து இஷாவை மட்டும் சுருக்கித் தொழ வேண்டும். தொழுத பின்னர் உணவு தயார் செய்வதையும் இன்ன பிற காரியங்களையும் செய்து கொள்ளலாம். ∴பஜ்ருத் தொழுகைக்கு சுறுசுறுப்பாக எழுந்து விடுவதற்காக சீக்கிரமாகத் தூங்குவது சிறப்பாகும்.

## 10- ஆம் நாள் (பெரு நாள்)

1- ∴பஜ்ருத் தொழுகையின் நேரம் வந்துவிட்டால் ∴பஜ்ருத் தொழுது வீட்டு அதே இடத்தில் அமர்ந்து நல்ல வெளிச்சம் வரும் வரை திக்ர், துஆவை அதிகப்படுத்த வேண்டும்.

2- ஏழு பொடிக் கற்களைப் பொறுக்கிக் கொண்டு தல்பியாக் கூறியவராக சூரியன் உதயமாகும் முன் மினாவை நோக்கிச் செல்ல வேண்டும்.

3- ஜம்ரத்துல் அகபா (ஜம்ரத்துல் குப்ரா) வை அடையும் வரை தல்பியாவைக் கூறிக் கொண்டே இருக்க வேண்டும். அங்கே கற்களை ஒவ்வொன்றாக எறிய வேண்டும். ஒவ்வொரு கல் எறியும் போதும் அல்லாஹு அக்பர் எனக் கூறவேண்டும்.

4- கல் எறிந்த பின்னர் அவர் ஹஜ்ஜுத் தமத்து∴ அல்லது ஹஜ்ஜுல் கிரான் செய்தவராக இருந்தால் குர்பானீ கொடுக்க வேண்டும். குர்பானீ இறச்சியை அவர் சாப்பிடுவதும் தர்மம் செய்வதும் முஸ்தஹப்பாகும்.

5- குர்பானீ கொடுத்த பின்னர் தலை முடி முழுவதையும் மழிக்கவோ முழுவதையும் வெட்டிக் கொள்ளவோ வேண்டும். மழிப்பதே சிறந்தது. பெண் ஒவ்வொரு தலைப் பின்னல்களிலிருந்தும் விரல் நுனி அளவிற்கு (சுமார் 3 செ.மீ) வெட்டிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் இஹ்ராமின் காரணமாக தடுக்கப்பட்டிருந்த ஆடை அணிதல் மணம் பூசுதல், நகம் வெட்டுதல், முடிவெட்டுதல் போன்ற அனைத்தும் ஹலாலாகும். எனவே அதன் பின்னர் அவர் குளிப்பது, சுத்தம் செய்வது, மணம்பூசுவது, ஆடைகள் அணிவது முஸ்தஹப்பாகும். எனினும் உடலுறவு மட்டும் கஅபத்துல்லாவை வலம் வருவது வரை தடுக்கப்பட்டதாகவே இருக்கும்.

6- ஹஜ்ஜுடைய தவா∴பை நிறைவேற்றுவதற்காக மஸ்ஜிதுல் ஹராமிற்குச் செல்ல வேண்டும். இதற்கு தவா∴புல் இ∴பாழா எனக் கூறப்படும். கஅபத்துல்லாவில் 7 தடவை வலம் வந்த பின்னர் இரண்டு ரக்அத்துக்கள் தொழ வேண்டும். பின்னர் ஸயீச் செய்யுமிடத்திற்குச் சென்று ஸ∴பா, மர்வாக்கிடையே ஏழுதடவை ஸயீச் செய்ய வேண்டும். ஸயீக்குப் பின்னர் இஹ்ராமின் காரணமாகத் தடுக்கப்பட்டிருந்த அனைத்தும் ஹலாலாகும் மனைவியிடம் உடலுறவு கொள்வது உட்பட.

7- ஹாஜி மினாவில் 11,12 ஆவது இரவுகள் தங்குவது கட்டாயமாகும். 12 ஆவது இரவு ஊருக்குப் புறப்படாமல் பிந்திவிடுபவர் 13 ஆவது இரவும் தங்குவது கட்டாயமாகும். இரவு தங்க வேண்டுமென்பதன் கருத்து, இரவில் அதிக நேரம் அங்கு தங்க வேண்டு மென்பதாகும்.

கல்லெறிதல் பின்னர் குர்பானீ கொடுத்தல் பின்னர் முடி எடுத்தல் பின்னர் வலம் வருதல் என வரிசைக்கிரமமாகச் செய்வது சுன்னத்தாகும். அவற்றை வரிசை மாறிச் செய்தாலும் குற்றமில்லை.

## 11-ஆம் நாள்

**இந்நாளில் ஹாஜி கல்லெறிவது கட்டாயமாகும். சூரியன் உச்சி சாய்ந்ததிலிருந்து கல்லெறியும் நேரம் ஆரம்பமாகிவிடுகிறது. அதற்கு முன்னால் கூடாது. சிறிய தூணிலிருந்து ஆரம்பித்து பின்னர் நடுத்தூணில் எறிந்த பின்னர் பெரிய தூணில் எறிந்து முடிக்கவேண்டும்**

## எறியும் முறை

**1- 21 பொடிக் கற்களைத் தன்னுடன் எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சிறிய தூணுக்குச் சென்று ஏழு கற்களை ஒவ்வொரு கல்லுடனும் அல்லாஹு அக்பர் எனக் கூறி எறிய வேண்டும். கற்கள் தொட்டியினுள் விழுவதைக் கவனிக்க வேண்டும். கற்களை ஒன்றன் பின் ஒன்றாக எறிய வேண்டும்.**

**2- சிறிது வலது பாகம் சென்று நின்று கொண்டு நீண்ட நேரம் துஆச் செய்வது சுன்னத்தாகும்.**

**3- இதன் பிறகு நடுத்தூணுக்குச் சென்று ஏழு கற்களை ஒவ்வொன்றாக அல்லாஹு அக்பர் எனக் கூறி எறிய வேண்டும்.**

**4- பிறகு சிறிது இடது புறம் சென்று நின்று கொண்டு நீண்ட நேரம் துஆச் செய்வது சுன்னதாகும்.**

**5- பெரிய தூணுக்குச் சென்று ஏழு கற்களை ஒவ்வொன்றாக தக்பீர் கூறி எறிய வேண்டும். பின்பு அங்கு நிற்காமல் சென்று விட வேண்டும்.**

## 12-ஆம் நாள்

**1- 11- ஆம் நாள் செய்தது போலவே செய்து கொள்ள வேண்டும். ஹாஜி தாமதமாகி 13 ஆவது நாள் தங்கியிருக்க விரும்பினால் அதுவே சிறந்ததாகும். அப்படி இருந்து விட்டால் 11, 12 ஆவது நாட்களில் செய்தது போலவே செய்து கொள்ள வேண்டும்.**

**2- 12- ஆம் நாள் கல்லெறிந்த பின்னர் அல்லது தாமதமாகச் செல்பவர் 13- ஆம் நாள் கல்லெறிந்த பின்னர் கஅபாவுக்குச் சென்று தவாஃப் செய்யவேண்டும். பின்பு முடிந்தால் மகாம் இப்றாஹீமுக்குப் பின்னால் முடியாவிட்டால் பள்ளியின் ஏதாவது ஒரு பாகத்தில் இரண்டு ரக்அத்துகள் தொழுவது சுன்னதாகும். இத்தவாஃப் மாதவிடாய்ப் பெண்ணுக்கும் பிரசவத் துடக்கு உடையவளுக்கும் கிடையாது.**

**3- இதன் பின்னர் ஹாஜி வேறு எதிலும் ஈடுபடாமலிருப்பது கட்டாயமாகும். எனினும் திக்ர், துஆ, பயனுள்ளவற்றைச் செவியேற்பது போன்றவற்றில் ஈடுபட்டவராக மக்காவிலிருந்து வெளியேற வேண்டும். தவாஃபுக்குப் பின்னர்- நண்பர்களை எதிர்பார்ப்பது அல்லது சாமான்களை எடுத்துக் கொள்வது அல்லது வழியில் தேவைப்படுபவற்றை வாங்கிக் கொள்வது போன்ற காரணங்களுக்காக சிறிது நேரம் தங்கியிருப்பது குற்றமல்ல.**

## ஹஜ்ஜின் ருகுன்கள்

**(முதன் நிலைக் கடமைகள்)**

**1- இஹ்ராம் கட்டுவது.**

**2- அரஃபாவில் தங்குவது.**

**3- தவாஃபுல் இஃபாழா (பெருநாளில் செய்யும் தவாஃப்)**

4- ஸஃபா மர்வாவுக்கு இடையே ஸயீ செய்வது.

இக்கடமைகளில் ஏதேனும் ஒன்றை ஒருவர் விட்டுவிட்டால் அவரது ஹஜ் நிறைவேறாது.

## ஹஜ்ஜின் வாஜிபுகள்

(இரண்டாம் நிலைக் கடமைகள்)

1- எல்லையில் இஹ்ராம் கட்டுவது.
2- அரஃபாவில் பகலில் தங்கியவர் சூரியன் மறையும் வரை அங்கு தங்குவது.
3- பலவீனர்களையும் பெண்களையும் தவிர மற்றவர்கள், அதிகாலை நன்கு வெளுக்கும் வரை முஸ்தலிஃபாவில் தங்குவது. பலவீனர்களும் பெண்களும் பாதி இரவு வரை தங்குவது கூடும்.
4- தஷ்ரீக்குடைய இரவுகளில் மினாவில் தங்குவது. (தஷ்ரீக்குடைய இரவுகள் 11,12,13 ஆகிய இரவுகளாகும்)
5- தஷ்ரீக்குடைய நாட்களில் கல்லெறிவது.
6- தலை முடி மழிப்பது அல்லது கத்தரிப் பது.
7- தவாஃபுல் வதாஃ.

இவற்றில் ஒன்றை யாரேனும் விட்டுவிட்டால் அவர் குர்பானி கொடுப்பது கட்டாயமாகும். அதாவது ஒரு ஆடு, அல்லது ஏழு நபர் சேர்ந்து ஒரு மாடு அல்லது ஒரு ஒட்டகம் அறுத்து ஹரம் ஷரீஃபிலுள்ள ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.

## நபி(ஸல்) அவர்களின் பள்ளிவாசலைத் தரிசித்தல்

நபி(ஸல்)அவர்களின் பள்ளியில் தொழுவதற்காக அதைத் தரிசிப்பது முஸ்தஹப்பாகும். ஹதீஸில் வந்துள்ளது: இங்கு தொழுவது மஸ்ஜிதுல் ஹராம் அல்லாத ஏனைய பள்ளிகளில் தொழும் ஆயிரம் தொழுகைகளை விடச் சிறந்ததாகும். இப்பள்ளியைத் தரிசிப்பது ஷரீஅத்தின் நடைமுறை என்பது காலம் முழுவதுமாகும். அதற்கென குறிப்பிட்ட நேரம் கிடையாது. அது ஹஜ்ஜில் செய்ய வேண்டிய காரியங்களில் உள்ளதல்ல.

ஒரு முஸ்லிம் இப்பள்ளியில் இருக்கும் வரை நபி(ஸல்)அவர்களின் கப்ரையும் அவர்களின் இரு நண்பர்களான அபூபக்ர்(ரலி), உமர்(ரலி)யின் கப்றுகளையும் சந்திப்பது முஸ்தஹப்பாகும். கப்று ஸியாரத் ஆண்களுக்கு மட்டுமே. பெண்களுக்கல்ல. நபி(ஸல்) அவர்கள் அடக்கமாகியுள்ள அறையின் பகுதியை தொடுவது அல்லது அதை வலம் வருவது அல்லது துஆச் செய்யும்போது அதை முன்னோக்குவது கூடாது.

# திருமணத்தின் சட்டதிட்டங்கள்
# أحكام النكاح

## திருமணத்திற்குரிய நிபந்தனைகள்

1- மணமகன், மணமகளின் சம்மதம்: தனக்கு விருப்பமில்லாத பெண்ணை திருமணம் செய்யுமாறு ஓர் ஆணையும், தனக்கு விருப்பமில்லாத ஆணை திருமணம் செய்யுமாறு ஒரு பெண்ணையும் வற்புறுத்தக் கூடாது. இஸ்லாம் பெண்ணின் சம்மதமில்லாமல் அவளுக்கு மணம் முடித்து வைப்பதைத் தடை செய்துள்ளது. ஒரு பெண் ஒருவனை மண முடிக்க மறுத்துவிட்டால் அவளின் தந்தை உட்பட எவரும் அவனை மணந்து கொள்ளுமாறு அவளை வற்புத்துவது கூடாது.

2- வலி (பொறுப்பாளர்): பொருப்பாளர் இல்லாமல் திருமணம் செல்லாது. ஏனெனில் பொருப்பாளர் இல்லாமல் திருமணம் கூடாது என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். நூல்கள்: (திர்மிதி, அபூதாவூத்) ஒரு பெண் தானாகவே மணம் முடித்துக் கொண்டால் அது செல்லாது, அத்திருமணத்தை அவள் தானாக நடத்திக்கொண்டாலும் சரி அல்லது வேறு யாரிடத்திலும் அவள் பொறுப்பு ஒப்படைத்துக் கொண்டாலும் சரி.

- ஒரு முஸ்லிமான பெண்ணுக்கு காஃபிர் வலியாக முடியாது. பொறுப்பாளரில்லாத பெண்ணிற்கு அந்த ஊர்த் தலைவர் திருமணம் நடத்திவைப்பார்.
- அப்பெண்ணின் உறவினர்களில் பருவமடைந்த, புத்தி சீர்நிலையிலுள்ள, நேர்மையானவராக பொறுப்பாளர் இருக்க வேண்டும்.
- <u>பொருப்பாளரின் வரிசை வருமாறு</u>: தந்தை பிறகு அவரால் வஸிய்யத் செய்யப்பட்டவர், பிறகு தந்தை வழிப் பாட்டன், தந்தை வழிப் பாட்டன் ஒன்றுக்கு மேற்பட்டவர் இருந்தால் அவர்களில் தந்தைக்கு மிக நெருங்கியவர் வலியாக வருவார். பிறகு அவளுடைய மகன், பிறகு மகனுடைய மகன், இப்படியே எத்தனை தலைமுறை இறங்கிச் சென்றாலும் சரி. பிறகு அவளுடைய உடன் பிறந்த சகோதரன், பின்னர் தகப்பன் வழிச் சகோதரன், பின்னர் உடன்பிறந்த சகோதரனின் பிள்ளைகள், பின்பு தகப்பன் வழிச் சகோதரனின் பிள்ளைகள், பிறகு தாய் தகப்பனின் சிறிய, பெரிய தந்தையர், பின்பு தகப்பன் வழி சிறிய, பெரிய தந்தையர், பின்பு அவர்களின் நெருக்கமான பிள்ளைகள், பின்பு அவளின் தகப்பனின் சிறிய, பெரிய தந்தையர் பின்பு அவர்களின் பிள்ளைகள். பின்பு பாட்டனின் சிறிய, பெரிய தந்தையர், பின்னர் அவனுடைய பிள்ளைகள்.
- பொறுப்பாளர் ஒரு பெண்ணை மண முடித்துக் கொடுக்கும் முன்னால் அவளிடம் அனுமதி கேட்டுக் கொள்வது அவசியமாகும். பொறுப்பாளர் அவசியமென்பதன் நோக்கம் விபச்சாரத்திற்குரிய வழியை அடைத்துவிடுவதே. ஏனெனில் விபச்சாரம் செய்பவன் ஒரு பெண்ணிடம் உனக்கு இவ்வளவு தருகிறேன் என்னை மணந்து கொள் எனக் கூறி தனது நண்பர்களில் அல்லது மற்றவர்களில் இருவரை சாட்சியாக்கிக் கொள்வது ஒன்றும் இயலாத காரியமல்ல.

3- இரு சாட்சிகள்: திருமண ஒப்பந்தம் நடைபெறுகிறபோது முஸ்லிம்களில் நீதமுள்ள இருவரோ, இருவருக்கு மேற்பட்டவர்களோ பங்குகொள்வது அவசியமாகும். அவர்கள் விபச்சாரம், மது அருந்துதல் போன்ற பெரும்பாவங்களில் ஈடுபடாதவர்களாகவும் நம்பத்தகுந்தவர்களாகவும் இருப்பது அவசியமாகும்.

**திருமண ஒப்பந்தத்திற்குரிய வார்த்தை:**

மணமகன் அல்லது அவனால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர் ஒப்பந்த நேரத்தில் உங்களது மகளை எனக்கு அல்லது என் பொறுப்பாளருக்கு மணமுடித்துக் கொடுங்கள் என்று சொல்ல வேண்டும். அதற்கு வலி -பெண்ணின் பொருப்பாளர் எனது மகளை அல்லது எனது பொறுப்பிலுள்ள இன்னவளை நான் உனக்கு மணமுடித்துத் தந்துவிட்டேன் என்று கூறவேண்டும். மணமகன், இவளை மணமுடித்துத் தந்ததை நான் ஒப்புக் கொண்டேன் என்று சொல்ல வேண்டும். மணமகன் தான் விரும்பியவரைத் தனக்கு பொறுப்பாளராக நியமிக்கலாம்.

4- மஹ்ர் (மணக்கொடை): மணமகன் மணப் பெண்ணுக்கு மஹ்ர் கொடுப்பது கட்டாயமாகும். மஹ்ரில் விரும்பத்தக்கது என்ன வென்றால் அது குறைவாக இருப்பதாகும். மஹ்ர் எந்த அளவுக்கு குறைவாகவும் இலேசாகவும் உள்ளதோ அந்த அளவுக்கு அது சிறப்பானதாகும். மஹ்ருக்கு "ஸதாக்" என்றும் சொல்லப்படும்.

- மஹ்ர் தொகையை திருமண ஒப்பந்த நேரத்தில் குறிப்பிடுவதும், அந்த நேரத்திலேயே அதைக் கொடுத்துவிடுவதும் சுன்னத்தாகும். எனினும் முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை ஒரு கால தவணை வரை பிற்படுத்துவதும் கூடும்.
- ஒருவன் உடலுறவு கொள்ளுமுன் தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டால் மஹ்ரில் பாதியை அவள் எடுத்துக் கொள்ள வேண்டும். திருமண ஒப்பந்தம் முடிந்து உடலுறவு கொள்ளுமுன் கணவன் இறந்து விட்டால் சொத்துரிமையும், முழு மஹ்ரும் அவளுக்குண்டு.

## திருமணத்திற்குப் பின்னுள்ள நடவடிக்கைகள்

**1- செலவுக்கு பணம் கொடுத்தல்**

கணவன் தன் மனைவிக்கு உணவு, பானம், உடை, தங்குமிடம் முதலியவற்றை நல்ல முறையில் செலவிட வேணடும். அவசியமான இந்தச் செலவுகளில் எதையேனும் கொடுக்காமல் கஞ்சத்தனம் செய்தால் அவன் பாவியாவான். இந்நேரத்தில் அவனின் பொருளில் போதுமானதை அவள் எடுத்துக் கொள்வதோ அல்லது அவன் பெயரில் கடன் வாங்கிக் கொள்வதோ கூடும். அப்படி அவள் கடன் வாங்கிவிட்டால் அவன் அதை நிறைவேற்றுவது அவசியமாகும்.

வலீமா விருந்தும் அவன் செலவில்தான் நடத்த வேண்டும். வலீமா என்பது திருமண நாட்களில் கணவன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து மக்களை அதற்கு அழைப்பதாகும். இது நபி(ஸல்) அவர்களால் ஏவப்பட்ட ஒரு சுன்னத்தாகும். அவர்களும் இதைச் செய்துள்ளார்கள்.

**2- சொத்துரிமை**

ஒருவன் ஒரு பெண்ணை எப்போது முறையாக திருமணம் செய்து கொண்டானோ அப்போதே அவர்களிருவருக்குமிடையே சொத்துரிமை ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில்- அவர்களுக்கு பிள்ளைகள் இல்லையென்றால் உங்களுக்குப் பாதி பாகமுண்டு. அவர்களுக்குப் பிள்ளையிருந்தால் அவர்கள் விட்டுச் சென்றதில் கால் பாகம்தான் கிடைக்கும் (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாசனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான். இன்னும் உங்களுக்கு பிள்ளைகளில்லாதிருந்தால் நீங்கள் விட்டுச் சென்றதில் அப்பெண்களுக்குக் கால் பாகம்தான்- உங்களுக்கு பிள்ளைகளிருந்தால் அவர்களுக்கு நீங்கள்

**விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான் கிடைக்கும். (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாசனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். (4:12) இந்த சொத்துரிமையில் அவன் அவளுடன் உடலுறவு கொண்டாலும், உடலுறவு கொள்ளா விட்டாலும் எந்த வித்தியாசமுமில்லை.**

## திருமணத்தின் சுன்னத்துகளும் ஒழுங்குமுறைகளும்

**1- திருமணத்தை பகிரங்கமாக அறிவிப்புச் செய்வதும், மணமக்களுக்கு துஆச் செய்வதும் சுன்னத்தாகும். மணமகன் அல்லது மணமகளுக்கு**

بَارَكَ اللّٰهُ لَكَ وَ بَارَكَ عَلَيكَ وَجَمَعَ بَيْنَكُمَا فِى خَيْرٍ

**பாரக்கல்லாஹு லக்க வபாரக்க அலைக்க வஜமஅ பைனக்குமா ஃபீ ஹைர் எனக் கூறவேண்டும். (பொருள்: அல்லாஹ் உமக்கு அகத்திலும் புறத்திலும் பரகத் செய்வானாக! உங்கள் இருவரையும் நலவில் ஒரு சேர வாழவைப்பானாக!)**

**2- உடலுறவு கொள்ள விரும்பும்போது**

بِسْمِ اللهِ اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

**பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மார ஸக்தனா எனக் கூறுவது சுன்னத்தாகும். (பொருள்: அல்லாஹ்வின் திருப் பெயர் கொண்டு...!. இறைவா! எங்களை ஷைத்தானிடமிருந்து பாகாப்பாயாக! மேலும் எந்தக் குழந்தைகளை எங்களுக்கு நீ வழங்கினாயோ அவர்களையும் ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பாயாக!)**

**3- கணவன், மனைவி இருவரும் உடலுறவின் போது தங்களிடையே நடந்த விஷயங்களை வெளியே கூறுவது வெறுக்கத்தக்கதாகும்.**

**4- மாதவிடாய், பிரசவ இரத்தம் வரும் நேரத்திலும், அவ்விரண்டும் நின்ற பிறகு குளித்து சுத்தமாகும் முன்பும் ஒருவன் தன் மனைவியிடம் உடலுறவு கொள்வது ஹராமாகும்.**

**5- பெண்ணின் பின் துவாரத்தில் உடலுறவு கொள்வது ஹராமாகும். நிச்சயமாக இது இஸ்லாம் ஹராமாக்கிய பெரும்பாவங்களில் ஒன்றாகும்.**

**6- கணவன் உடலுறவில் தனது மனைவிக்குரிய உரிமையை முழுமையாக வழங்குவது கடமையாகும். மேலும் அவள் கர்ப்பமாவதை விரும்பாத காரணத்தால் "அஸல்" செய்யாமலிருப்பது அவனுக்குக் கடமையாகும். அவளது அனுமதியையும் நிர்பந்தத்தையும் முன்னிட்டே தவிர! (அஸல் என்பது உடலுறவின் போது கர்பத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளும் இயல்பான ஒரு வழிமுறையாகும். ஆணுறை, காப்பர்- டி போன்றவற்றை பயன்படுத்துவதும் இதன் அர்த்தத்தின் கீழ் வரும்)**

## மனைவி எப்படி இருக்க வேண்டும்?

**திருமணத்தின் நோக்கம் சுகம் அனுபவிப்பதும், நல்ல குடும்படுத்தையும் ஆரோக்கியமான சமுதாயத்தையும் உருவாக்குவதும் ஆகும். திருமணமாகக்கூடிய பெண் இவ்விரு நோக்கங்களும் முழுமையாக நிறைவேறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். அவள்தான் புற, அக அழகுள்ளவளெனக் கூறத் தகுந்தவள். புற அழகு என்பது பரிபூரணமான உடலமைப்பு இருப்பதாகும். அக அழகென்பது மார்க்கமும் நற்குணமும் பரிபூரணமாக இருப்பதாகும் புற, அக அழகுள்ள பெண்ணை திருமண முடித்துக் கொள்ள முடியுமானால் அல்லாஹ்வின் நல்லுதவியால் அதுவே பூரணமும், நற்பாக்கியமுமாகும்.**

**இதுபோன்றே இறையச்சமுள்ள, நல்லொழுக்கமுள்ள ஆணை மணந்து கொள்வதற்கு பெண்ணும் ஆர்வம் காட்டவேண்டும்.**

## மணம் புரிவதற்கு விலக்கப்பட்ட பெண்கள்

**இவர்கள் இரு வகையினராவர்: நிரந்தரமாக விலக்கப்பட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் வரை விலக்கப்பட்டவர்கள்.**

**நிரந்தரமாக விலக்கப்பட்டவர்கள் மூன்று வகையினர்:**

### 1- உறவுமுறையால் விலக்கப்பட்டவர்கள்

**இவர்கள் ஏழு பேர். அல்லாஹ் கூறுகிறான்: உங்களுக்கு (மணமுடிக்க) விலக்கப்பட்டவர்கள் உங்கள் தாய்மார்கள், உங்கள் புதல்வியர், உங்கள் சகோதரிகள், உங்கள் தந்தையரின் சகோதரிகள், உங்கள் தாயின் சகோதரிகள், உங்கள் சகோதரனின் புதல்வியர், உங்கள் சகோதரியின் புதல்வியர். (4:23)**

**அ) தாய்மார்கள்: இவர்களில் தாயும், தாய், தந்தை வழிப் பாட்டியரும் அடங்குவர்.**

**ஆ) புதல்வியர்: இவர்களில் சொந்தப் புதல்வியர்களும், மகன் வழிப் பேத்திகளும் மகள் வழிப் பேத்திகளும் அடங்குவர்.**

**இ) சகோதரிகள்: இவர்களில் உடன் பிறந்த சகோதரிகளும், தாய் வழி, தந்தை வழிச் சகோதரிகளும் அடங்குவர்.**

**ஈ) மாமியர்: இவர்களில் அவனுடைய மாமியரும், அவனுடைய தகப்பன், பாட்டன்களின் மாமியரும், அவனின் தாய், பாட்டியரின் மாமியரும் அடங்குவர்.**

**உ) சிற்றன்னையர், பெரியன்னையர்: இவர்களில் அவனின் சிற்றன்னையரும், பெரியன்னையரும் அவனுடைய தந்தை, பாட்டனின் சிற்றன்னையரும், பெரியன்னையரும், அவனின் தாய், பாட்டியரின் சிற்றன்னையரும், பெரியன்னையரும் அடங்குவர்.**

**ஊ) சகோதரனின் புதல்வியர்: உடன் பிறந்த சகோதரனின் புதல்வியரும், தந்தை வழிச் சகோதரனின் புதல்வியரும், தாய் வழிச் சகோதரனின் புதல்வியரும், இவர்களின் புதல்வர்களின் புதல்வியரும், புதல்வியர்களின் புதல்வியர்களும் இப்படியே எத்தனை தலை முறை இறங்கிச் சென்றாலும் அனைவரும் அடங்குவர்.**

**எ) சகோதரியின் புதல்வியர்: இவர்களில் உடன் பிறந்த சகோதரியின் புதல்வியரும், தாய், தந்தை வழிச் சகோதரியின் புதல்வியரும், இவர்களின் புதல்வியரின் புதல்வியரும், அவர்களின் புதல்வியரின் புதல்வியரும் இப்படியே எத்தனை தலைமுறை இறங்கிச் சென்றாலும் அனைவரும் அடங்குவர்.**

### 2- பால்குடியினால் விலக்கப்பட்ட பெண்கள்

**இவர்கள் உறவுமுறையால் விலக்கப்பட்டவர்கள் போன்றுதான். உறவுமுறையில் விலக்கப்பட்டவர்கள் பால்குடி உறவிலும் விலக்கப்பட்டவர்களே என்பது நபிமொழி. எனினும் பால்குடியினால் ஹராமாக்கப்படுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. அவை வருமாறு:**

**1- ஐந்து அல்லது அதற்கு அதிகமான தடவைகள் வாய் வைத்து பால் குடித்திருக்க வேண்டும். ஒரு குழந்தை ஒரு பெண்ணிடம் ஒரு தடவையில் நான்கு மிடர் பால் குடித்திருந்தால் அவள் அவனுக்குத் தாயாக மாட்டாள்.**

**2- பால்குடி மறப்பதற்கு முன் பால் குடித்திருக்க வேண்டும். அதாவது அந்த ஐந்து தடவையும் பால்குடி மறப்பதற்கு முன்பாக இருக்க வேண்டும். அதற்குப் பின்னராக இருந்தால் அல்லது சில தடவைகள் பால்குடி மறப்பதற்கு முன்பும் சில தடவைகள்**

பின்புமாக இருந்தால் அவள் அக்குழந்தைக்கு தாயாகமாட்டாள். பால்குடியின் இந் நிபந்தனைகள் பூரணமாகிவிட்டால் அக்குழந்தை அப்பெண்ணுக்கு பிள்ளையாகிவி டுகிறது. அவளின் பிள்ளைகள் இக்குழந்தைக்கு உடன் பிறந்தவர்களாகிவிடுகிறார் கள். அப்பிள்ளைகள் இக்குழந்தை பால்குடிக்கும் முன் பிறந்திருந்தாலும் சரி அல் லது பிறகு பிறந்திருந்தாலும் சரி. பாலூட்டியவளின் கணவனின் பிள்ளைகளும் இக் குழந்தைக்கு உடன் பிறந்தவர்களாகிவிடுகிறார்கள். அப்பிள்ளைகள் இவனுக்கு பா லூட்டியவளின் பிள்ளைகளாக இருந்தாலும் சரி அல்லது மாற்றாந் தாயின் பிள்ளை களாக இருந்தாலும் சரி.

இந்த இடத்தில் ஒன்றை நாம் அறிந்து கொள்வது அவசியமாகிறது. அதாவது பால் குடித்த குழந்தையின் உறவினர்களில் அதனுடைய சந்ததியினரைத் தவிர வேறு யா ருக்கும் அந்த பால்குடியில் சம்பந்தமில்லை. அதனால் எவ்வித மாறுதலும் ஏற்படாது.

## 3- திருமண உறவால் விலக்கப்பட்ட பெண்கள்

1- தகப்பன், பாட்டனின் மனைவியர்: ஒருவன் எப்போது ஒரு பெண்ணைத் திருமண ஒப்பந்தம் செய்துவிடுகிறானோ அப்போதே அப்பெண் அவனுடைய மகன்களுக்கும், மகனுடைய மகன்களுக்கும், மகளுடைய மகன்கள் இப்படியே எத்தனை தலை முறை இறங்கிச் சென்றாலும் அவர்கள் அனைவருக்கும் ஹராமாகிவிடுகிறாள். அவ ளுடன் அவன் உடலுறவு கொள்ளாமலிருந்தாலும் சரி.

2- மகன்களின் மனைவியர்: ஒருவன் எப்போது ஒருத்தியைத் திருமண ஒப்பந்தம் செய் துவிடுகிறானோ அப்போதே அவனின் தகப்பன், பாட்டன்கள் இப்படியே எத்தனை த லைமுறையானாலும் அவர்களுக்கு இத்திருமண ஒப்பந்தத்தினால் மட்டுமே அவள் ஹராமாகிவிடுகிறாள். இவர்கள் தந்தை வழியிலுள்ளவர்களானாலும் சரி, தாய் வழியி லுள்ளவர்களானாலும் சரி. அவளுடன் அவன் உடலுறவு கொள்ளாவிட்டாலும் சரி.

3- மனைவியின் தாயும், அவளுடைய பாட்டிகளும்: ஒருவன் ஒரு பெண்ணை எப்போது திருமண ஒப்பந்தம் செய்துவிடுகிறானோ அப்போதே அத்திருமண ஒப்பந்தத்தினால் மட்டும் அவளுடைய தாயும் பாட்டிகளும் அவனுக்கு ஹராமாகிவிடுகிறார்கள். அவ ளுடன் அவன் உடலுறவு கொள்ளவில்லையென்றாலும் சரி. அப்பாட்டிகள் தகப்பன் வழியாயினும் சரி அல்லது தாய் வழியாயினும் சரி.

4- மனைவியின் மகள்களும், அவளின் மகன்கள் மற்றும் மகள்களின்- மகள்களும் இ வர்கள் எத்தனை தலைமுறையானாலும் சரி: ஒருவன் ஒரு பெண்ணை மணமுடித் து அவளுடன் எப்போது உடலுறவு கொண்டுவிடுகிறானோ அப்போதே இவர்கள் அவனுக்கு ஹராமாகிவிடுகிறார்கள். இவர்கள் இவன் மணமுடிப்பதற்கு முன் பிறந்த வர்களாயிருந்தாலும் சரி அல்லது அதற்குப் பின் பிறந்தவர்களாயிருந்தாலும் சரி. அவர்களிருவருக்குமிடையே உடலுறவுக்கு முன்பே பிரிவு ஏற்பட்டு விட்டால் இவர் கள் அவனுக்கு ஹராமாகமாட்டார்கள்.

## ஒரு குறிப்பிட்ட காலம் வரை விலக்கப்பட்ட பெண்கள்

இவர்கள் பல வகையினர்.

1- மனைவியின் சகோதரி, அவளுடைய தந்தையின் சகோதரி மற்றும் தாயின் சகோதரி: மனைவி மரணமடையும் வரை அல்லது மணவிலக்கால் அவளைப் பிரிந்து இத்தா முடிவடையும் வரை இவர்கள் அவனுக்கு ஹராமாவார்கள்.

2- கணவன் மரணம் அடைந்தால் இத்தா இருப்பவள்: அதாவது ஒரு பெண் அவளுடை ய கணவன் இறந்து இத்தா இருந்து கொண்டிருந்தால் அவளை மண முடிப்பதும்

பெண் கேட்டுச் செல்வதும் கூடாது இத்தா காலம் முடியும் வரை!

3- ஹஜ், உம்ராவிற்காக இஹ்ராம் கட்டியிருப்பவளை அவள் இஹ்ராமிலிருந்து விடுபடும் வரை மணமுடிப்பது கூடாது.

## தலாக்- விவாகரத்து

தலாக் கூறுவது வெறுக்கத்தக்கதாகும். எனினும் ஒரு பெண் தன்னுடைய கணவனுடன் வாழ்க்கையைத் தொடர்வதால் அல்லது ஒரு கணவன் தன்னுடைய மனைவியுடன் வாழ்க்கையைத் தொடர்வதால் துன்பம் அடைவதனால் சில நேரங்களில் விவாகரத்து இன்றியமையாததாக ஆனபோது அல்லது வேறு காரணங்களுக்காக அது அவசியமானபோது அல்லாஹ் தன் அடியார்களுக்கு விவாகரத்தை ஆகுமாக்கியது அவனது அருளில் ஒன்றானது. எனவே ஒருவன் தன் மனைவியை வெறுத்து அவளுடன் வாழ்க்கை நடத்துவதை பொறுத்துக்கொள்ள முடியவில்லையானால் அவளை தலாக் சொல்வதில் குற்றமில்லை. எனினும் பின்வரும் ஒழுங்கு முறைகளைப் பேணுவது அவசியமாகும்.

1- மாதவிடாய் காலத்தில் தலாக் சொல்லக் கூடாது. அவ்வாறு தலாக் சொல்லி விட்டால் அவன் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்தவனாகவும், ஹராமைச் செய்தவனாகவும் ஆகிவிடுகிறான். இந்நேரத்தில் அவளை மீண்டும் அழைத்து, அவள் துப்பரவாகும் வரை விட்டுவைப்பது கடமையாகும். பின்னர் விரும்பினால் அவளை தலாக் சொல்வான். மிகச் சிறந்த முறையாதெனில் இரண்டாம் முறை மாதவிடாய் ஏற்படும் வரை தலாக் சொல்லாமலிருப்பதாகும் துப்பரவாகிவிட்டால் விரும்பினால் தன்னுடன் வைத்துக் கொள்வான், விரும்பினால் தலாக்கும் சொல்வான்.

2- அவள் தூய்மையாக இருக்கும் போது அவளுடன் உடலுறவு கொண்ட நிலையில் தலாக் சொல்லக் கூடாது அவள் கர்ப்பம் தரித்திருப்பது தெளிவானாலே தவிர! ஒருவன் தன் மனைவியை, அவள் மாதவிடாயிலிருந்து சுத்தமான பிறகு அவளிடம் உடலுறவு வைத்துக் கொண்டு பிறகு தலாக் சொல்ல விரும்பினால் மீண்டும் அவளுக்கு மாதவிலக்கு ஏற்பட்டு அதிலிருந்து அவள் சுத்தமாகாத வரை அவளை தலாக் சொல்லக் கூடாது. அதனால் நாட்கள் அதிகமானாலும் சரியே. அவள் சுத்தமாகிவிட்டால் அவளிடம் உடலுறவு கொள்வதற்கு முன்னால் விரும்பினால் அவளை அவன் தலாக் சொல்லலாம். ஆனால் அவள் கர்ப்பம் தரித்திருப்பது தெளிவாகி விட்டால் அல்லது அவள் கர்ப்பிணியாக இருந்தால் அவளை தலாக் விடுவதில் குற்றமில்லை.

## தலாக்கினால் ஏற்படும் விளைவுகள்

தலாக் என்பது மனைவியை பிரிந்துவிடுவது என்றாகிவிட்டபோது அப்படி பிரிவதன் விளைவால் அநேக சட்ட நிலைகள் ஏற்படுகின்றன. அவை வருமாறு:

1- கணவன் தன் மனைவியிடம் தனித்திருந்த பிறகு அல்லது உடலுறவு கொண்ட பிறகு தலாக் சொன்னால் அவள் இத்தா இருப்பது அவசியமாகும். அவளுடன் உடலுறவு கொள்வதற்கோ அல்லது தனித்திருப்பதற்கோ முன்பு தலாக் சொல்லியிருந்தால் இத்தா வேண்டியதில்லை.

- இத்தா என்பது மாதவிடாய் வரக்கூடிய பெண்ணாக இருந்தால் மூன்று மாதவிடாய்கள். மாதவிடாய் வராதவளாக இருந்தால் மூன்று மாதங்கள் காத்திருப்பதாகும்.

கர்ப்பமுற்றவளாக இருந்தால் குழந்தையைப் பெற்றெடுப்பது வரை காத்திருப்ப தாகும்.

- இத்தாவின் நோக்கம் தலாக் சொல்லப்பட்டவளை திரும்ப அழைத்துக் கொள்வ தற்கான சந்தர்ப்பத்தைக் கணவனுக்கு வழங்குவதாகும். அதுபோல அவள் கர் ப்பமுற்றிருக்கிறாளா? இல்லையா? என்பதை உறுதி செய்வதுமாகும்.

2- ஒருவன் தனது மனைவியை இதற்கு முன்பு இரண்டு தடவைகள் தலாக் சொல்லியி ருந்தால் அவனுக்கு அவள் ஹராமாகிவிடுகிறாள். அதாவது ஒருவன் தனது மனை வியை ஒரு தடவை தலாக் சொல்லிவிட்டு இத்தா காலத்திலேயே அவளை திரும்ப அழைத்துக் கொள்கிறான் அல்லது இத்தா முடிந்து திருமணத்தைப் புதுப்பி த்துக் கொள்கிறான். அதன் பிறகுஇரண்டாம் முறை தலாக் சொல்லிவிட்டு இத்தா கால த்திலேயே திரும்ப அழைத்துக் கொள்கிறான் அல்லது இத்தா முடிந்து திருமணத் தைப் புதுப்பித்துக் கொள்கிறான். பிறகு மூன்றாம் முறை தலாக் சொல்லிவிட்டால் அவன் அப்பெண்ணை மணந்துகொள்ள முடியாது. ஆனால் அவள் வேறொருவனை முறையாக திருமணம் செய்து, அவன் அவளுடன் உடலுறவு கொண்டு பிறகு அவ ளை அவன் விரும்பாமல் தலாக் கூறினால் இப்போது அவள் முதல் கணவனுக்கு ஹலாலாகிவிடுகிறாள். மூன்று முறை தலாக் விட்டவர்கள் மீது அப்பெண்ணை அல் லாஹ் ஹராமாக்கியிருப்பது அவர்களின் கணவர்கள் செய்யும் அநீதியைத் தடுத்து அவர்களுக்கு அல்லாஹ் கிருபை செய்திருப்பதாகும்.

## குல்வு

இது ஒரு பெண் தனக்குப் பிடிக்காத கணவனை விட்டும் விலகுவதற்காக அவன் கொடுத்த மஹ்ரைத் திருப்பிக் கொடுத்து விவாகரத்தை வேண்டுவதாகும். கணவன் அவளை வெறுத்து அவளைப் பிரிந்துவிட விரும்பினால் அவளிடமிருந்து மஹர் தொகை யை வாங்க உரிமை கிடையாது. அவனுக்குரிய உரிமை அவளிடம் பொறுமையாகயி ருப்பது அல்லது விவரகரத்து செய்வதுதான்.

கணவன் தன் மனைவி தன்னை விட்டும் பிரிந்துபோக வேண்டுமென்பதற்காக நோ வினை செய்யக்கூடாது என்பது போல பெண் அவனால் துன்பம் அடைந்து அவனுடன் பொறுமையாக இருக்க முடியவில்லையானால்தான் பிரிந்துபோவதைக் கோரவேண்டும். கணவன் அவளுக்குக் கொடுத்த மஹரை விடவும் கூடுதலாக அவளிடம் வாங்காமலி ருப்பது விரும்பத்தக்கதாகும்.

## திருமணத்தில் நீடிப்பதற்கான அல்லது அதை முறிப்பதற்கான அதிகாரம்

கணவன், மனைவி இருவருக்கும் திருமண ஒப்பந்தத்தைத் தக்க வைத்துக் கொ ள்வதற்கும் ஏதேனுமொரு காரணத்திற்காக திருமணத்தை ரத்து செய்வதற்கும் அதி காரம் இருக்கிறது. உதாரணமாக கணவன் மனைவியிடமோ, மனைவி கணவனிட மோ நோயையோ, அல்லது இயற்கையான குறையையோ காண்பது போல! இக்குறையை திருமண ஒப்பந்த நேரத்தில் அவனிடமோ அவளிடமோ சொல்லப்படவுமில்லை! இந் நேரத்தில் இருவருக்கும் திருமண ஒப்பந்தத்தைத் தக்கவைத்துக் கொள்ளவோ முறித் துவிடவோ அதிகாரம் இருக்கிறது. உதாரணமாக,

1- அவ்விருவரில் ஒருவர் பைத்தியம் பிடித்தவராகயிருப்பது அல்லது திருமணத்தின்

பூரண உரிமையை பாழாக்கிவிடக்கூடிய நோயால் பீடிக்கப்பட்டவராகயிருப்பது. இந் நேரத்தில் பாதிக்கப்பட்டவர் திருமண ஒப்பந்தத்தை முறித்துவிடுவது கூடும். இது உடலுறவுக்கு முன்பாக இருக்குமானால் கணவன் அவளுக்குக் கொடுத்த மஹறைத் திரும்பப் பெற்றுக்கொள்வது கூடும். உடலுறவுக்குப் பிறகு என்றால் எதனையும் திரும்பப் பெறக் கூடாது. அவளுடைய உறவினர்களில் யார் அந்தக் குறையை அறிந்திருந்து ஏமாற்றினாரோ அவரிடம் அந்த மஹறை கணவன் திருப்பிக் கேட்பார் என்றொரு கருத்து உள்ளது.

2- ரொக்க மஹர் கொடுக்க முடியாமலாகிவிடுவது! இந்த நேரத்தில் திருமண ஒப்பந்தத்தை முறிப்பதில் பெண்ணுக்குரிய உரிமை உடலுறவுக்கு முன்தான். உடலுறவுக்குப் பிறகு அந்த உரிமையில்லை.

3- அவளுக்கு செலவுக்கு பணம் கொடுக்க வசதியில்லாமலிருப்பது. ஒருவன் அவளுக்கு செலவுக்கு பணம் கொடுக்க வசதி பெறவில்லையானால் அவள் முடிந்த அளவு எதிர்பார்க்கவேண்டும். பிறகு நீதி மன்றத்தை அனுகி திருமணத்தை முறித்துக் கொள்ள அவளுக்கு உரிமை உண்டு.

4- கணவன் காணாமல் போய் அவனிருக்குமிடம் தெரியவுமில்லை, தனது மனைவிக்கான செலவுத் தொகையை வீட்டுவைத்திருக்கவுமில்லை, அவளுக்குச் செலவுக்குக் கொடுக்கும்படி யாரையும் பொறுப்பாக்கவுமில்லை, யாரும் அவளுக்கு செலவுக்குக் கொடுக்க முன் வரவுமில்லை, அவளுக்கு செலவுக்குக் கொடுத்துவிட்டு அவளின் கணவனிடம் திரும்பப் பெற்றுக் கொள்பவரும் இல்லை, இதுபோன்ற நேரங்களில் ஷரீஅத் நீதிபதியின் துணை கொண்டு திருமணத்தை முறித்துக் கொள்ள அவள் உரிமை பெறுகிறாள்.

## முஸ்லிமல்லாதவரை திருமணம் செய்வது

யூத, கிறிஸ்தவரல்லாத நிராகரிப்புக் கொள்கை உடைய பெண்ணை மணம்புரிவது முஸ்லிமுக்கு விலக்கப்பட்டதாகும். மேலும் முஸ்லிம் பெண் முஸ்லிமல்லாதவனை மணப்பதும் கூடாது. அவன் யூதனகாவோ கிறிஸ்தவனாகவோ இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரியே! ஒரு பெண் தனது கணவனுக்கு முன்பே முஸ்லிமாகிவிட்டால் தன்னை சுகம் அனுபவிக்க தன் கணவனுக்கு இடமளிக்கக் கூடாது.

## இதோ முஸ்லிமல்லாதவர்களை மணமுடிப்பதோடு மட்டும் தொடர்புடைய சில சட்டங்கள்:

1- காஃபிரான கணவன், மனைவி இருவரும்- திருமணம் செய்ய விலக்கப்பட்ட (சகோதரி- மாமி போன்ற) உறவுடையவளாய் மனைவி இருப்பது போன்ற- அல்லது அவளை மணம்புரிவது அவனுக்கு ஹலால் அல்ல என்பது போன்ற மார்க்க ரீதியான தடை ஏதும் இல்லாத பட்சத்தில் அதே திருமணத்திலேயே அவர்களிருவரும் நீடிப்பார்கள். அப்படி தடை ஏதும் இருந்தால் அவ்விருவரையும் பிரித்து வைக்கப்படும்.

2- வேதக்காரியின் கணவன் இஸ்லாத்தைத் தழுவினால் அவர்களிருவரும் அதே திருமணத்திலேயே இருந்து கொள்ளலாம்.

3- வேதக்காரர்களல்லாத கணவன், மனைவி இருவரில் ஒருவர் உடலுறவுக்கு முன் இஸ்லாத்தைத் தழுவி விட்டால் அவர்களின் நிகாஹ் முறிந்துவிடும்.

4- வேதக்காரனாக இருந்தாலும் சரி மற்றவனாக இருந்தாலும் சரி -முஸ்லிமல்லாதவனின் மனைவி உடலுறவுக்கு முன் முஸ்லிமாகிவிட்டால் நிகாஹ் முறிந்து போகும்.

ஏனெனில் முஸ்லிமானவள் கா∴பிருக்கு ஹலாலாக மாட்டாள்.

5- கா∴பிரின் மனைவி உடலுறவுக்குப் பின் முஸ்லிமாகிவிட்டால் இத்தா முடியும் வரை அவளின் விஷயம் நிறுத்திவைக்கப்படும். இத்தா முடிந்த பின்னும் அவன் இஸ்லாமாகாவிட்டால் திருமணம் முறிந்துபோகும். பிறகு அவள் யாரை விரும்புகிறாளோ அவரை மணந்து கொள்வாள். அவள் விரும்பினால் அவனை அவள் எதிர்பார்த்திருக்கலாம். இந்த இடைக் காலத்தில் அவளுக்கு அவனிடம் எந்த உரிமையுமில்லை. இதுபோன்றே அவனுக்கும் அவளிடம் எந்த உரிமையும் கிடையாது. அவன் முஸ்லிமாகிவிட்டால் திருமணத்தைப் புதுப்பிக்காமலேயே அவன் அவளுக்கு கணவனாகிவிடுகிறான். அவள் அவனை பல ஆண்டுகள் எதிர்பார்த்தாலும் சரி. வேதக்காரி அல்லாதவளின் கணவன் முஸ்லிமானாலும் இதே சட்டம்தான்.

6- உடலுறவுக்கு முன்பே மனைவி இஸ்லாத்தை விட்டும் மாறிவிட்டால் திருமணம் முறிந்துவிடும். அவளுக்கு மஹரும் கிடையாது. இதே போல் கணவன் இஸ்லாத்தை விட்டும் மாறிவிட்டால் திருமணம் முறிந்துவிடும். அவன் பாதி மஹர் கொடுக்க வேண்டும். அவ்விருவரில் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய ஒருவர் இஸ்லாத்தில் இணைந்துவிட்டால் அவர்களிருவருக்கிடையே தலாக் ஏற்படாமலிருந்தால் முந்தைய திருமணத்தின் அடிப்படையிலேயே அவர்களிருவரும் இருந்து கொள்வார்கள்.

## வேதக்காரிகளை மணப்பதன் தீங்குகள்

அல்லாஹ் திருமணத்தை அனுமதித்திருப்பதன் நோக்கம் பண்பாட்டைச் சீர்படுத்துவதும், சீர்கேடுகளிலிருந்து சமுதாயத்தைத் தூய்மைப்படுத்துவதும், கற்பு நெறியைப் பாதுகாத்துக் கொள்வதும், சமூகத்தில் தூய்மையான இஸ்லாமிய கட்டுக் கோப்பை நிலை நிறுத்துவதும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரென சான்று பகரக்கூடிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதும்தான். மார்க்கப் பற்றும், சிறப்பும், நற்குணமும் நல்லொழுக்கமும் உள்ள பெண்ணை மணமுடிப்பதன் மூலம்தான் இதுபோன்ற சீர்திருத்தங்கள் ஏற்படும். வேதக்காரப் பெண்ணை ஒரு முஸ்லிம் மணப்பதால் ஏற்படும் விளைவுகளையும் தீங்குகளையும் நாம் சுருக்கமாகக் கீழே தருகிறோம்.

1- குடும்பத்தினுள்: சிறிய குடும்பத்திற்குள் கணவன் செல்வாக்கு உள்ளவனாக இருந்தால் அது பெண்ணிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி பெரும்பாலும் அவள் இஸ்லாம் குறித்து திருப்தி கொள்ளலாம். சில சமயம் இதற்கு மாறான நிலையும் உருவாகலாம். அப்பெண் இஸ்லாம் அல்லாத தனது மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பவளாக இருந்து மது அருந்துதல், பன்றி இறைச்சி உண்ணுதல், கள்ளக் காதலனை வைத்துக் கொள்ளல் போன்றவற்றை தனது மார்க்கம் அனுமதிக்கிறது என எண்ணி செயல்படுபவளாகவும் ஆகிவிடலாம். இதனால் அவளும் அவளின் குடும்பமும் சிதறுண்டு, பண்பாடுகள் கட்டவிழ்ந்து போகும். குழந்தைகள் தீய வழியில் வளர்ந்து விடுவார்கள்.

சில சமயம் நிலைமை மேலும் மோசமாகிவிடும். மதமாச்சரியமும் பிடிவாதமும் உள்ள மனைவி தனது குழந்தைகளை வேண்டுமென்றே சர்ச்சுகளுக்கு அழைத்துச் சென்றால் கிறிஸ்தவர்களின் வணக்க முறைகளை அவர்களும் பழகிக்கொள்வார்கள். இளமையில் வருவது தான் முதுமையிலும் வரும்.

2- சமூகத்தில் ஏற்படும் விளைவுகள்: முஸ்லிம் சமுதாயத்தினுள் வேதக்காரிகள் அதிகரிப்பது ஆபத்தான விஷயமாகும். சமுதாயத்தில் அதனால் ஆபத்து என்னவென்றால்

இஸ்லாமிய சமுதாயம் வீழ்ச்சியடைந்து கிறிஸ்தவ சமுதாயத்தின் உலகாயத வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கின்ற நிலையில்- இதுஇன்றைக்கு இருக்கின்றது- இப்பெண்கள் இஸ்லாமியச் சமுதாயத்தினுள் ஆபத்தான சிந்தனை ரீதியான யுத்தத்திற்கு தூது செல்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். இன்னும் இதைத் தொடர்ந்து சமுதாயக் கட்டுப்பாடுகளும் பண்பாடுகளும் சீர்குலைந்து போய்விடுவதோடு கிறிஸ்தவக் கலாச்சாரங்களும் நுழைந்துவிடுகின்றன. இவற்றின் பட்டியலில் முதல் வரிசையில் இருப்பது அறைகுறை ஆடைகளுடன் ஆண்களும், பெண்களும் கலந்துறவாடும் பழக்கமும், இஸ்லாமிய போதனைகளுக்கு மாற்றமான சில பழக்கங்களும் தான்!

# முஸ்லிம் பெண்மணிக்குரிய சட்டங்கள்
# كتاب المرأة المسلمة

## இஸ்லாத்தில் பெண்கள் நிலை

இஸ்லாத்தில் பெண்களுக்கிருக்கிற உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு முன் பெண்கள் குறித்து மற்ற சமூகத்தினரின் நிலைபாடு என்ன? அவர்களை எப்படி நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

கிரேக்கர்கள் பெண்களை வியாபாரப் பொருட்களாகவே கருதினர். அவர்களுக்கென எந்த உரிமையும் இருக்கவில்லை. உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கே என்றனர். இன்னும் அப்பெண்களுக்குச் சொத்துரிமை, செல்வத்தை நிர்வகித்தல் போன்ற உரிமைகள் தடுக்கப்பட்டிருந்தன. அவர்களில் பிரபல தத்துவ ஞானி சாக்ரடீஸ் என்பவன், "பெண்கள் இருப்பது உலகின் வீழ்ச்சிக்கு மிகப்பெரும் மூலகாரணமாகும். மேலும் பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள். அம்மரத்தின் புறத் தோற்றம் அழகாக இருக்கும். எனினும் அதன் கனிகளை சிட்டுக்குருவிகள் தின்றவுடனேயே இறந்துவிடுகின்றன" என்று கூறியுள்ளான்.

ரோமானியர்கள் பெண்களுக்கு "ஆன்மா" என்று எதுவுமில்லை என்று கருதிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் பெண்களுக்கு எந்த மதிப்பும் உரிமையும் இருந்ததில்லை "பெண்ணுக்கு ஆன்மா இல்லை" என்பது அவர்களின் கோசமாகிவிட்டிருந்தது. அதனால்தான் அவர்கள் மீது கொதிக்கின்ற எண்ணெயை ஊற்றியும், தூண்களில் கட்டியும் வேதனை செய்தார்கள். இதுமட்டுமின்றி குற்றமற்ற பெண்களை குதிரைகளின் வால்களில் கட்டி அவர்கள் மரணித்து போகின்ற அளவிற்கு மிக விரைவாக ஓட்டிவிடுவார்கள்.

பெண்கள் விஷயத்தில் இந்தியர்களின் கண்ணோட்டமும் இவ்வாறுதான் இருந்துள்ளது. அவர்கள் இன்னும் ஒருபடி அதிகமாக கணவன் இறந்துவிட்டால் அவனின் சிதையுடன் மனைவியையும் எரித்துவிடுபவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

சீனர்கள் பெண்களை நற்பாக்கியத்தையும் செல்வங்களையும் அழித்துவிடக் கூடிய தண்ணீருக்கு ஒப்பாக்கினர். அவர்கள் தம் மனைவியரை உயிரோடு புதைத்து விடுவதற்கும் விற்றுவிடுவதற்கும் உரிமை பெற்றிருந்தனர்.

பெண்கள் சாபத்திற்குரியவர்களென யூதர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் அவள் தான் ஆதம் (அலை) அவர்களை வழிகெடுத்து மரக்கனியை சாப்பிடச் செய்து விட்டாள். மேலும் பெண்ணுக்கு மாதவிடாய் வந்துவிட்டால் அவள் அசுத்தமானவள், வீட்டையும் அவள் தொடும் எல்லாப் பொருள்களையும் அசுத்தப்படுத்திவிடக்கூடியவள் எனவும் கருதுகிறார்கள். பெண்ணுக்குச் சகோதரர்களிருந்தால் அவள் தன் தந்தையின் சொத்தில் சிறிதும் உரிமை பெறமாட்டாள் எனவும் கருதுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள், பெண்களை ஷைத்தான் எனக் கருதுகிறார்கள். கிறுத்தவ மத அறிஞர்களில் ஒருவர் பெண் மனித இனத்தைச் சார்ந்தவளல்ல எனக் கூறினார். இன்னும் புனித பூனபெஃன்தூரா என்பவன் கூறினான்: "நீங்கள் பெண்ணைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதிவிடாதீர்கள். அதுமட்டுமல்ல அவளை வனாந்தர ஜீவனாகக் கூட கருதாதீர்கள். மாறாக நீங்கள் காண்பது நிச்சயமாக

ஷைத்தானின் உருவத்தைத்தான். இன்னும் நீங்கள் செவியேற்கும் அவளது சப்தம் பாம்பின் சீற்றம் தான்"

மேலும் கடந்த (19ஆம்) நூற்றாண்டின் மத்திய காலம் வரை ஆங்கிலேயே பொதுச் சட்டப்படி பெண்கள் பிரஜா உரிமை கொடுக்கப்படாதவர்களாக இருந்தனர். இது போன்றே பெண்களுக்கென எந்த தனிப்பட்ட உரிமைகளும் கிடையாது. இன்னும் அணியும் ஆடை உட்பட எந்தப் பொருளையும் சொந்தப்படுத்திக் கொள்வதற்கும் அவளுக்கு உரிமையில்லை. 1567 ஆம் ஆண்டு ஸ்காட்லண்ட் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாதென சட்டம் இயற்றியது. இவ்வாறே எட்டாவது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேயப் பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமானவர்கள் என்பதால் இன்ஜீலைப் படிக்கக் கூடாதென சட்டம் இயற்றியது.

பிரஞ்சுக்காரர்கள் 586 ஆம் ஆண்டில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா? இல்லையா? என ஆய்வு செய்து முடிவெடுக்க ஒரு மகாநாட்டைக் கூட்டினர். அதில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள்தான். எனினும் அவர்கள் ஆண்களுக்குப் பணிவிடை செய்வதற்காகவே படைக்கப்பட்டவர்களென தீர்மானம் போட்டனர். 1805ம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் சட்டத்தில் ஒரு கணவன் தனது மனைவியை விற்பது கூடுமென்றே இருந்துள்ளது. மனைவியின் விலை ஆறு பெனி (அரை ஷிலிங்) என நிர்ணயமும் செய்யப்பட்டது. (பெனி, ஷிலிங் penny, schilling என்பது ஆங்கிலேய நாணயத்தின் பெயர்கள்)

இஸ்லாத்திற்கு முன்பு வரை அரேபியர்களின் கண்ணோட்டம் பெண்கள் இழிந்த பிறவிகள் என்பதாக இருந்தது. அவளுக்கு சொத்துரிமை கிடையாது. அவர்களை ஒரு பொருட்டாகக் கருதப்படமாட்டாது. அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. மட்டுமல்லாமல் அவர்களில் பெரும்பாலோர் தம் பெண்மக்களை உயிருடன் புதைப்பவர்களாக இருந்துள்ளனர்.

இவ்வனைத்து அநியாயங்களைப் பெண்களை விட்டும் நீக்கவும் நிச்சயமாக ஆண்களும் பெண்களும் சமமானவர்கள்தான் என விளக்கவும் இஸ்லாம் வந்தது.

ஆண்களுக்கு உரிமைகளிருப்பது போல் பெண்களுக்கும் உரிமைகளிருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், பெண்ணிலிருந்தே படைத்தோம். பின்னர் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைப் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் மிக பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ அவர் தாம் அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், யாவற்றையும் சூழ்ந்தறிபவன். (49:13) ஆண் அல்லது பெண் ஈமான் கொண்ட நிலையில் நற்கருமங்கள் செய்தால் அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள். சிறிதளவும் அநீதமிழைக்கப்பட மாட்டார்கள். (4:124) மனிதன் தன் பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென நாம் அறிவுறுத்தியுள்ளோம். (46:15)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃமின்களில் பூரண ஈமானுடையவர்கள் அவர்களில் அழகிய குணமுடையவர்களே. தனது மனைவியிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, மனிதர்களில் நான் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டியவர் யார்? எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உன் தாய் எனக் கூறினார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய தாய் எனக் கூறினார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். உன் தாய் என்றே கூறி

னார்கள். பின்பு யார்? எனக் கேட்டார். உன் தந்தை எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) இது பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும்.

## பெண்களுக்குரிய பொதுவான உரிமைகள்

நிச்சயமாக பெண்களுக்கு பொதுவான சில உரிமைகள் உள்ளன. அவற்றை அவர்கள் அவசியம தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை அவர்கள் விரும்பும்போது பூரணமாகச் செய்து கொள்வதைச் சமூகம் அங்கீகரிக்கவும் செய்கின்றது. அவ்வுரிமைகள் வருமாறு:

1- சொந்தமாக்கிக் கொள்ளல்: வீடுகள், விவசாய நிலங்கள், தொழிலகங்கள், தோட்டங்கள், வெள்ளி, தங்கம், கால்நடை வகைகள் இவற்றில் விரும்பியவற்றை ஒரு பெண் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளலாம். அவள் தாயாக மகளாக சகோதரியாக எவ்வாறு இருப்பினும் சரி

2- திருமணம் செய்வது, கணவனைத் தேர்வு செய்வது, தனக்கு விருப்பமில்லாதவனை ஏற்கமறுப்பது, தனக்கு இடையூறு ஏற்பட்டால் திருமண ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வது போன்றவற்றிலும் அவள் உரிமை பெறுகிறாள். இவை பெண்களுக்கு உறுதியாய் வழங்கப்பட்டுள்ள உரிமைகளாகும்.

3- எவையெல்லாம் அவள் மீது கடமையோ அவையனைத்தையும் கற்றுக் கொள்தல்: உதாரணமாக அல்லாஹ்வை அறிவது, அவனுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களையும் அதை நிறைவேற்றும் முறையையும் அறிவது. இன்னும் அவள் நிறை வேற்றக் கடமைப்பட்ட உரிமைகளையும் தனக்குத் தேவையான ஒழுக்கங்களையும் தான் கடைபிடிக்க வேண்டிய சிறந்த பண்பாடுகளையும் அறிவது. ஏனெனில் வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீ அறிந்துகொள். (47:19) என அல்லாஹ்வும், கல்வியைத் தேடுவது ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும் (இப்னுமாஜா) என நபி (ஸல்) அவர்களும் பொதுவாகவே சொல்லியிக்கிறார்கள்.

4- செலவு செய்தல்: தனது பொருளில் தான் நாடியதைத் தர்மம் செய்து கொள்வதற்கும், தனக்கும் தனது கணவன், பிள்ளைகள், தாய், தந்தையர்கள் ஆகியோருக்கு தனது விருப்பப்படி வீண், விரயமில்லாத அளவுக்கு செலவு செய்து கொள்வதற்கும் உரிமை பெறுகிறாள். இவ்விஷயத்தில் பெண்களும் ஆண்களைப் போன்று உரிமை பெறுகிறார்கள்.

5- விருப்பு, வெறுப்புக் கொள்தல்: அவள் நல்ல பெண்களை விரும்பவும், அவர்களைச் சந்திக்கவும், அன்பளிப்புகள் வழங்கவும் செய்யலாம் கணவனது விருப்பத்துடன், திருமணமான பெண்ணாக இருந்தால்! இன்னும் அவர்களுக்குத் தபால்கள் அனுப்பி அவர்களின் நிலைமைகளைக் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். கஷ்டகாலங்களில் அவர்களுக்கு ஆறுதலும் ஒத்துழைப்பும் வழங்கிக் கொள்ளலாம். அல்லாஹ்வுக்காக என வாய்மையுடன் கெட்ட பெண்களை வெறுத்து, அவர்களை வீட்டும் ஒதுங்கிவிடுவதும் கூடும்.

6- மரணசாசனம்: அவளின் சொத்தில் மூன்றில் ஒன்றை அவளது ஜீவிதகாலத்தில் மரண சாசனம் எழுதிக் கொள்வதற்கும் மரணத்திற்குப் பின்பு அதைச் செயல்படுத்தச் செய்யவும் அவளுக்கு உரிமை உண்டு. அது விஷயத்தில் யாரும் அவளை ஆட்சேபனை செய்ய முடியாது! ஏனெனில் மரணசாசனம் எழுதுவதென்பது பொதுவான மனித உரிமைகளைச் சார்ந்ததாகும். எனவே இது ஆண்களைப் போல் பெண்க

ளுக்கும் உள்ளது. ஏனெனில் அல்லாஹ்விடம் நன்மையைப் பெறுவதை விட்டு யாரும் யாரையும் தடுக்க முடியாது. என்றாலும் மரணசாசனம் மூன்றில் ஒரு பகுதியை விட அதிகமாகாமலிருப்பது நிபந்தனையாகும். இதில் ஆண்களும் பெண்களும் சமமே.

7- பட்டாடை, தங்கம் அணிதல்: பட்டையும், தங்கத்தையும் பெண்கள் அணிந்து கொள்வது கூடும். இவ்விரண்டும் ஆண்களுக்கு ஹராமாகும். ஆயினும் ஆடைகளைக் கழற்றி நிர்வாணமாக இருப்பதும், அரை குறை ஆடை அணிவதும், தலையைத் திறந்து போடுவதும், கழுத்து, மார்பு முதலியவற்றை மறைக்காதிருப்பதற்கும் அவளுக்கு உரிமை இல்லை. ஆனால் கணவனிடத்தில் அவ்வாறு செய்வது அவளுக்கு ஹலால் ஆகும்.

8- அலங்கரித்துக் கொள்ளல்: தனது கணவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்ள உரிமை பெறுகிறாள். எனவே அவள் சுாமா இட்டுக்கொள்ளவும் விரும்பினால் இரு கன்னங்களிலும் உதடுகளிலும் சிகப்புச்சாயம் வைத்துக் கொள்ளவும் செய்யலாம். மிக அழகிய அணிகலன்கள் அணிந்து கொள்ளலாம். எனினும் முஸ்லிமல்லாத பெண்களுக்கே உரிய அல்லது தவறான நடத்தையுள்ள பெண்களுக்கே உரிய ஆடைகளை அணியக்கூடாது. இவற்றை அவள் அணியக் கூடாது என்பது சந்தேகம் தவறுகளிலிருந்து தூரமாகுவதற்காகவே.

9- உண்பது, குடிப்பது: நல்ல, சுவையான பானங்களை பருகவும் அதுபோன்ற உணவுகளை உண்ணவும் அவளுக்கு உரிமையுண்டு. உண்பதிலும் குடிப்பதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் எந்தப் பாகுபாடுமில்லை. அனுமதிக்கப்பட் உணவு- பானம் எனில் அவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனுமதிக்கப்பட்டவைதான். தடுக்கப்பட்ட உணவு-பானம் எனில் அவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தடுக்கப்பட்டவைதான். அல்லாஹ் கூறுகிறான்: உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக வீண்விரயம் செய்பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை (7:31) இங்கு இருபாலாரையும் நோக்கியே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## மனைவிக்கு கணவன் நிறைவேற்ற வேண்டிய உரிமைகள்

ஒரு பெண்ணுக்கு அவளது கணவன் செய்ய வேண்டிய சில குறிப்பிட்ட கடமைகளிருக்கின்றன. இக்கடமைகள் தன் கணவனுக்கு அவள் செய்ய வேண்டிய சில குறிப்பிட்ட கடமைகளுக்குப் பகரமாகிவிடுகின்றன.

அவை அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாற்றமில்லாக் காரியங்களில் கணவனுக்கு கட்டுப்பட்டு நடப்பது, அவன் உண்பதற்கும் பருகுவதற்கும் தயார் செய்து கொடுப்பது, அவனது படுக்கையைச் சீராக வைத்துக்கொள்வது, அவனுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுவது, அவர்களை வளர்ப்பது, அவனது பொருளையும் மானத்தையும் பாதுகாப்பது, தனது கற்பைப் பாதுகாத்துக் கொள்வது, அனுமதிக்கப்பட்ட வகைகளில் அவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்வது, அழகுபடுத்திக் கொள்வது போன்றவைகளாகும். இவை ஒரு பெண் தன்னுடைய கணவனுக்குச் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளிலுள்ளவையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: மனைவியர் மீது கணவர்களுக்கு உள்ள உரிமைகளைப் போலவே முறைப்படி கணவர்கள் மீது மனைவியருக்கும் உரிமையுண்டு (2:228)

முஃமினான பெண் இவற்றை அறிந்து எவ்வித வெட்கமும் பயமுமின்றி இவ்வுரிமைகளைக் கேட்டுப் பெறவேண்டும் என்பதற்காக இவற்றைக் கூறுகிறோம். இவற்றில் சிலவற்றை அவள் மன்னித்துவிட்டாலான்றி கணவன் இவற்றை முழுமையாக மனைவிக்கு வழங்குவது கடமை.

1- அவன் தனது வசதி, வசதியின்மை இரு நிலைகளையும் கவனித்து அவளுக்குச் செலவுக்குக் கொடுக்க வேண்டும். ஆடை, உணவு, குடிப்பு, மருத்துவம், தங்குமிடம் இவற்றிற்கான செலவை அவள் பெற்றுக் கொள்வாள்.
2- ஆண், பெண்ணை நிர்வகிக்க வேண்டியவனாகயிருப்பதால் அவளின் மானம், மரியாதை, உடல், பொருள், மார்க்கம் இவை அனைத்திலும் அவளைப் பாதுகாக்க வேண்டும். ஒரு பொருளைப் பாதுகாத்துக் கவனித்து வருவதென்பது அதனை நிர்வகித்து வருபவனின் பொறுப்பிலுள்ளதாகும்.
3- அவளின் மார்க்க விஷயங்களில் அவசியமானவற்றை அவளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவனுக்கு இயலாவிட்டால் அல்லாஹ்வின் இல்லங்களிலும், கல்விக்கூடங்களிலும் நடைபெறுகின்ற பெண்களுக்குரிய மார்க்கக் கூட்டங்களுக்குச் சென்றுவர அனுமதியளிக்க வேண்டும். ஆனால் அவ்விடங்கள் குழப்பத்தை விட்டும் பாதுகாப்பானவையாக இருப்பதோடு அவனுக்கோ அவளுக்கோ அதில் இடையூறு ஏற்படாமலிருப்பதும் அவசியமாகும்.
4- அவளிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: அவர்களோடு நல்லமுறையில் வாழ்க்கை நடத்துங்கள். (4:119)

நல்ல முறையில் வாழ்க்கை நடத்துதல் என்பதில் உடலுறவில் அவளுக்குரிய உரிமையைக் குறைத்திடாமலிருப்பது, ஏசிப்பேசியோ இழிவுபடுத்தியோ அவளுக்கு தொல்லை கொடுக்காமலிருப்பது ஆகியவை அடங்கும். இன்னும் அவள் தனது உறவினர்களைச் சந்தித்து வருவதால் குழப்பம் ஏற்படுமென அவன் பயப்படாதபோது அவளைத் தடுக்காமலிருப்பதும், அவளுக்கு முடியாத வேலைகளைச் செய்யும்படி சிரமம் கொடுக்காமலிருப்பதும், சொல்லிலும் செயலிலும் அவளுடன் அழகியமுறையில் நடந்து கொள்வதும் அதில் அடங்கும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: தம் மனைவியரிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். உங்களில் நான் என்னுடைய மனைவியரிடத்தில் சிறந்தவராக இருக்கின்றேன். (திர்மிதி) மேலும் கூறினார்கள்: பெண்களைக் கண்ணியமாக நடத்துபவர்களே நல்லவர்கள். அற்பர்கள்தாம் அவர்களை இழிவாக நடத்துவர்.

## பர்தா அணிதல்

நிச்சயமாக இஸ்லாம், குடும்பம் வீழ்ந்து, சின்னா பின்னப்பட்டுப் போகாமல் அதைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ளது. இதனால் அதைச் சுற்றி ஒழுக்கங்கள் மற்றும் நற்குணங்களாலான உறுதிவாய்ந்த வேலியை எழுப்பியுள்ளது. காரணம் மனிதர்கள் நிம்மதியாகவும் சமுதாயம் தூய்மையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக! அச்சமுதாயத்தில் இச்சைகள் தூண்டப்பட முடியாது. காம உணர்வுகள் கிளறப்பட முடியாது. இஸ்லாம் குழப்பத்தின் பால் இட்டுச் செல்லக் கூடியவற்றைத் தடுப்பதற்கான

தடைகளையும் ஏற்படுத்தியுள்ளது. ஆண், பெண் இருபாலாரும் தம் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும்படியும் ஏவியுள்ளது.

நிச்சயமாக பெண்ணைக் கண்ணியப்படுத்துவதற்காகவும், இழிவிலிருந்து அவளின் மான மரியாதையை பாதுகாப்பதற்காகவும், குழப்பவாதிகள் மற்றும் தீய எண்ணம் உடையவர்களின் கெடுதியை விட்டும் அவளைத் தூரப்படுத்துவதற்காகவும், கண்ணியத்தின் விலைமதிப்பை அறியாதவர்களிடமிருந்து அவளைப் பாதுகாப்பதற்காகவும், விஷப்பார்வைகளுக்குக் காரணமான குழப்பத்தின் வாசலை அடைத்திடுவதற்காகவும், பெண்ணின் கண்ணியத்தையும் கற்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே பெண்கள் பர்தா அணிவதை அல்லாஹ் மார்க்கக் கடமையா க்கியுள்ளான்.

பெண்கள் தங்களின் இரு முன் கைகளையும் முகத்தையும் தவிர உள்ள எல்லா பாகங்களையும் மூடி மறைத்துக் கொள்ள வேண்டும். இன்னும் அன்னிய ஆண்களின் முன்னிலையில் தனது அழகையும் கவர்ச்சியையும் வெளிப்படுத்தக் கூடாதென இஸ்லாமிய அறிஞர்கள் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர். முகத்தையும் முன் கைகளையும் மறைக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதில் அறிஞர்கள் இரு பிரிவினராக பிரிந்து விட்டனர். ஒவ்வொரு பிரிவினரிடத்திலும் தங்களது கருத்திற்கேற்ற ஆதாரங்கள் உள்ளன.

பர்தாவைப் பற்றியும் அதன் அவசியம் மற்றும் அதன் அளவு பற்றியும் ஏராளமான ஆதாரங்கள் வந்துள்ளன. ஒவ்வொரு பிரிவினரும் இந்த ஆதாரங்களில் ஒரு பகுதியை வைத்து ஆதாரம் காட்டியுள்ளனர். தங்களின் கருத்திற்கு மாற்றமாகத் தோன்றக்கூடிய ஆதாரங்களைப் பல்வேறு விளக்கங்களைக் கூறி சரிக்கட்டியுள்ளனர்.

அல்லாஹ் கூறுகிறான்: அப்பெண்களிடம் எதையாவது கேட்பதாகயிருந்தால் திரை மறைவிலிருந்து கேட்டுக் கொள்ளுங்கள். இதுவே உங்களின் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் தூய்மையானது. (33:53) நபியே! உங்களின் மனைவியரிடத்திலும், உங்கள் பெண்மக்களிடத்திலும் முஃமின்களின் பெண்களிடத்திலும் அவர்கள் தங்களின் தலை முன்றானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக. அவர்களை (கண்ணியமானவர்களென) அறிந்து கொள்வதற்கும் அவர்கள் தொல்லைக்கு ஆளாகாமலிருப்பதற்கும் இதுவே மிகவும் ஏற்ற முறையாகும். மேலும் அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் கிருபை மிக்கவனாகவும் இருக்கின்றான். (33:59) (நபியே!) முஃமினான பெண்களிடம் நீர் கூறுவீராக! அவர்கள் தங்களின் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். தங்களின் வெட்கத்தலங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தங்கள் அலங்காரத்தை அவற்றில் வெளியே தெரியக்கூடியதைத் தவிர (வேறெதையும்) வெளிக்காட்டாதிருக்க வேண்டும். இன்னும் தங்கள் முன்றானைகளால் தங்களின் மார்பகங்களை மறைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் தங்களின் கணவரிடத்திலே தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்த வேண்டாம். (24:31)

நபி (ஸல்) அவர்களின் மனைவியான ஆயிஷா (ரலி) கூறினர்கள்: முஃமினான பெண்கள் நபி (ஸல்) அவர்களுடன் பஜ்ருத் தொழுகையில் தங்களை பர்தாத் துணிகளால் மூடி மறைத்துக் கொண்டவர்களாகக் கலந்து கொள்வார்கள் பின்பு தொழுகை முடிந்ததும் தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வார்கள். இருட்டில் அவர்கள் யார் என்றே தெரியாது. (நஸயீ) மேலும் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இஹ்ராம் கட்டியவர்களாக இருந்தபோது வாகனக்காரர்கள் எங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் எங்களுக்கு நேராக

வருகிறபோது பெண்களில் ஒவ்வொருவரும் தம் முகமூடிகளைத் தலைகளிலிருந்து முகங்களின் மீது தொங்கவிட்டுக் கொள்வார்கள். அவர்கள் எங்களைக் கடந்து சென்று விட்டால் முகங்களைத் திறந்து கொள்வோம். (அபூதாவூத்) முதன் முதலாவதாக ஹிஜ்ரத் சென்ற பெண்களுக்கு அல்லாஹ் கிருபை செய்வானாக! “தங்களின் முன்றானைகளால் அவர்கள் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொள்ளட்டும்...” என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கிவைத்தபோது தங்களின் துப்பட்டிகளைக் கிழித்துத் தங்களின் மார்பகங்களை மறைத்துக் கொண்டார்கள் என்றும் ஆயிஷா (ரலி) கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது நூல்: புகாரீ.

இவ்விஷயத்தில் ஆதாரங்கள் அதிகமாக உள்ளன. பர்தா விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தும் எல்லா உலமாக்களும் குழப்பம் ஏற்படுமென்ற பயமிருக்கிறபோது பெண் தனது முகத்தை மறைப்பது கட்டாயம் என்பதில் ஏகமனதாக முடிவெடுத்திருப்பது போல நிர்ப்பந்தமான நேரங்களில் முகத்தைத் திறந்து கொள்ளலாமென்ற விஷயத்திலும் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர் சிகிச்சைக்காக மருத்துவரிடம் இருப்பதைப் போன்று! பெண்கள் தங்களின் முகங்களைத் திறந்து கொள்வது கூடுமெனச் சொல்லக் கூடியவர்களும் கூட குழப்பம் ஏற்படுமென்ற பயமிருக்குமானால் பெண்கள் தங்களின் முகங்களை மூடிக்கொள்வது கட்டாயமென உறுதியாகக் கூறியுள்ளனர்.

இந்தக் காலத்தில் குழப்பத்தைப் பற்றி எவ்வளவு கடுமையாக அஞ்சவேண்டியிருக்கிறது! குழப்பம் எல்லை மீறியிருக்கிறது. எங்கும் பரவியிருக்கிறது. தீயவர்களோ நிறைந்து போய்விட்டனர். கடைவீதிகளிலும் பல்வேறு இடங்களிலும் அவர்கள் நிரம்பியுள்ளனர். இறையச்சமுள்ளவர்களும் சிறந்தவர்களும் குறைந்துவிட்டனர்.

பெண்கள் அந்நிய ஆடவர்களுடன் கலந்துறவாடுவதையும் இஸ்லாம் ஹராமாக்கி இருக்கிறது. இவையனைத்தும் பண்பாடுகள், சிறப்புக்கள், குடும்பங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்காகும். குழப்பத்தின் வாசல்களையும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகளையும் அடைப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் இஸ்லாம் அக்கறை கொள்கிறது. பெண் வெளியே செல்வதால், அந்நிய ஆடவர்களுடன் கலந்து விடுவதால், பர்தா முறையை மேற்கொள்ளாமலிருப்பதால் இச்சைகள் தூண்டப்படுகின்றன, தவறுக்கான காரணகாரியங்கள் எளிதாக்கப்படுவதோடு அவற்றை அடைவதும் இலேசாக்கப்படுகின்றது. அல்லாஹ் கூறுகிறான்: (நபியின் மனைவியர்களே!) நீங்கள் உங்களின் வீடுகளிலேயே தங்கிவிடுங்கள். முன்னர் அறியாமைக் காலத்துப் பெண்கள் திரிந்ததைப் போன்று திரிந்து கொண்டிருக்காதீர்கள். (33:33) நபி (ஸல்) அவர்களின் மனைவியரிடம் நீங்கள் ஏதாவது ஒன்றைக் கேட்பதாக இருந்தால் திரைமறைவிலிருந்து கேட்டுக் கொள்ளுங்கள். (33:53)

ஆண்களும் பெண்களும் கலந்துறவாடுவதை நபி (ஸல்) அவர்கள் கண்டிப்பாகத் தடை செய்துள்ளார்கள். அதற்குக் காரணமான அனைத்தையும் வழிபாட்டுத்தலங்களில் கூட தடுத்துள்ளார்கள்.

பெண், சில சந்தர்ப்பங்களில் தனது அவசியத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பவரில்லாதபோது தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் அல்லது தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் உணவைத் தேடிக்கொள்வதற்காக விற்பதற்கும் வாங்குவதற்கும் அல்லது இதுபோன்ற அவசியத் தேவைகளுக்காக ஆண்களிருக்கும் இடத்திற்கு போகவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிவிடுகிறாள். அந்தச் சூழ்நிலையில் அவள் மார்க்க வரம்புகளைப் பேணி தனது அலங்காரத்தை வெளிப்படுத்தா

**மல் இஸ்லாமிய முறைப்படி தன்னை மறைத்துக் கொண்டு வெளியேறி, ஆண்களை விட்டும் நீங்கி, அவர்களுடன் கலந்திடாதவாறு சென்று வருவதில் குற்றமில்லை.**

**ஒரு பெண் அந்நியருடன் தனித்திருப்பதை ஹராமாக்கியிருப்பது குடும்பத்தையும் பண்பாட்டையும் பாதுகாப்பதற்கு இஸ்லாம் அமைத்துள்ள சிறந்த வழியாகும். நபி (ஸல்) அவர்கள் ஒரு பெண் தன்னுடைய கணவன் அல்லது மஹ்ரமான (அவள் மணம் புரிய விலக்கப்பட்ட) ஆண் இல்லாதபோது அந்நிய ஆணுடன் தனித்திருப்பது குறித்து கடுமையாக எச்சரித்துள்ளார்கள். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் உள்ளங்களையும் குணங்களையும் கெடுப்பதற்கு பேராசை உள்ளவனாக இருக்கின்றான்.**

## மாதவிடாய், பிரசவ இரத்தத்தின் சட்டங்கள்

### மாதவிடாயின் காலமும் அதன் வரையறையும்:

**1- பெரும்பாலும் மாதவிலக்கு வரக்கூடிய காலம் 12 வயது முதல் 50 வயது வரை. சில சமயம் பெண்ணின் நிலை, அவளின் சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்து 12 வயதுக்கு முன்னரோ பின்னரோ பலவிதத்தில் அவளுக்கு மாதவிடாய் வந்து விடலாம்.**

**2- மாதவிடாயின் குறைந்த கால அளவிற்கும், அதன் கூடுதலுக்கும் வரையறை கிடையாது.**

## கர்ப்பிணியின் உதிரப்போக்கு

**ஒரு பெண் கர்ப்பமாகிவிட்டால் பெரும்பாலும் இரத்தம் நின்றுவிடும். எனினும் கர்ப்பமடைந்தவள் இரத்தத்தைக் கண்டால் அது குழந்தை பெறுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பாக இருக்குமானால் அத்துடன் பிரசவ வலியும் இருந்தால் அது பிரசவ இரத்தமாகும். குழந்தை பெறுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரோ அல்லது பிரசவ வலியின்றி குறைந்த காலத்திற்கு முன்னரோ இரத்தத்தைக் கண்டால் அது பிரசவ இரத்தமுமல்ல மாதவிடாயுமல்ல. எனினும் குழந்தை பெறும் வரை நிற்காமல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் அது மாதவிடாய் இரத்தமாகும்.**

## விதிவிலக்கான மாதவிடாய்

**விதிவிலக்காக ஏற்படக்கூடிய மாதவிடாய் பலவகையாகும்:**

### 1- அதிகமாகிவிடுவது அல்லது குறைந்துவிடுவது

**உதாரணமாக வழமையாக ஆறு நாட்கள் வரக்கூடிய பெண்ணுக்கு அது நீடித்து ஏழாவது நாளும் வருகிறது. அல்லது வழமையாக ஏழு நாட்கள் வரக்கூடியவள் ஆறு நாட்களிலேயே தூய்மையாகிவிடுகிறாள்.**

### 2- முந்திவிடுவது அல்லது பிந்திவிடுவது

**உதாரணமாக வழக்கமாக மாதக் கடைசியில் மாதவிடாய் வரக்கூடியவள் மாத ஆரம்பத்திலேயே அதைக் கண்டு விடுகிறாள். அல்லது மாத ஆரம்பத்தில் வருவது பழக்கமாக உள்ளவள் மாத இறுதியில் அதைக் காண்கிறாள். எப்போது அவள் இரத்தத்தைக் காண்கிறாளோ அப்போதே அவள் மாதவிடாய்க்காரியாகிவிடுகிறாள். அதிலிருந்து எப்போது சுத்தமாகிவிடுகிறாளோ அப்போதே சுத்தமானவளாக ஆவிடுகிறாள். அது வழக்கத்தை விட அதிகமானாலும் சரி அல்லது குறைந்தாலும் சரி அல்லது முந்தினாலும் சரி, பிந்தினாலும் சரி.**

### 3- மஞ்சள் அல்லது கலங்கல் நிறம்

அதாவது காயத்திலிருந்து வரக்கூடிய சீழ் போன்று மஞ்சளாகவோ அல்லது மஞ்சளுக்கும் கருப்புக்கும் இடைப்பட்ட நிறமாகவோ இரத்தத்தைப் பார்க்கிறாள். அது மாதவிடாய் காலத்திலோ அல்லது சுத்தமாவதற்கு முன் மாதவிடாய்க் காலத்துடன் சேர்ந்தோ இருந்தால் அது மாதவிடாய்தான். அதற்கும் மாதவிடாய் சட்டங்கள்தான். சுத்தமான பிறகு இருந்தால் அது மாதவிடாய் அல்ல.

### 4- மாதவிடாய் நின்று நின்று வருவது

அதாவது ஒரு நாள் இரத்தத்தையும் ஒரு நாள் சுத்தத்தையும் காண்கிறாள் என்றால் இதுபோன்றவற்றிற்கு இரண்டு நிலைகள் உள்ளன.

முதல் நிலை: ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் விட்டு விட்டு வரும் நிலை எல்லா நேரத்திலும் நிரந்தரமாக இருந்தால் அது நோயினால் ஏற்படக்கூடிய தொடர் உதிரப்போக்காகும். இப்படிப்பட்ட பெண்ணுக்கு தொடர் உதிரப்போக்கிற்குரிய சட்டம்தான்.

இரண்டாம் நிலை: மாதவிடாய் விட்டு விட்டு வரும் நிலை நிரந்தரமாக இல்லாமல் சில நேரங்களில் வந்து பிறகு வழக்கமான சுத்த நிலை ஏற்படுதல். ஒரு நாளைவிடக் குறைவாக இரத்தம் வந்து நின்றுவிட்டால் அது சுத்த நிலையல்ல. ஆனால் ஒரு நாளை விடக் குறைவாக இரத்தம் வந்து நின்று விட்டாலும் அது சுத்தமான நிலை என்பதை உறுதிப்படுத்தும் அம்சங்களிருந்தால் அதாவது அவளது வழக்கமான மாதவிடாய் நாட்களின் இறுதியில் இரத்தம் நின்று சுத்தம் ஏற்பட்டால் அல்லது இரத்தம் நிற்கும் போது வெண்மையான திரவம் கர்ப்பப்பையிலிருந்து வெளியேறினால் அது சுத்தமான நிலையேயாகும்.

### 5- இரத்தத்தில் வரட்சி

அதாவது ஒரு பெண் ஈரத்தை மட்டும் பார்க்கிறாள், அப்படிப் பார்ப்பது மாதவிடாய் வந்து கொண்டிருக்கும் காலத்திலோ அல்லது சுத்தமாகுவதற்கு சிறிது முன்னாலோ இருந்தால் அது மாதவிடாய் ஆகும். சுத்தத்திற்கு பின்பாக இருந்தால் தாதவிடாய் அல்ல.

## மாதவிடாயின் சட்டங்கள்

1- மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுக்கு கடமையான, நஃபிலான தொழுகைகளைத் தொழுவது ஹராமாகும். ஆனால் தொழுகை நேரத்தில் முழுமையாக ஒரு ரக்அத் தொழுவதற்குரிய நேரம் அவளுக்குக் கிடைத்தால் அத்தொழுகையைத் தொழுவது அவள் மீது கடமையாகும். அவளுக்கு கிடைத்த நேரம் தொழுகையின் ஆரம்ப நேரமாக இருந்தாலும் சரி அல்லது கடைசி நேரமாகயிருந்தாலும் சரி.

- ஆரம்ப நேரத்திற்கு உதாரணம். அதாவது ஒரு பெண்ணுக்கு சூரியன் மறைந்த பின் ஒரு ரக்அத்து அளவுக்கான நேரம் கடந்ததும் மாதவிடாய் வந்துவிடுகிறது. அவள் சுத்தாமான பின் மக்ரிப் தொழுகையை கழா செய்வது அவள் மீது கடமையாகும். ஏனெனில் மாதவிடாய் வரும் முன்பே அவள் ஒரு ரக்அத்தை அதற்குரிய நேரத்தில் அடைந்துவிட்டாள்.
- கடைசி நேரத்திற்கு உதாரணம். அதாவது ஒரு பெண் சூரியன் உதயமாகு முன் ஒரு ரக்அத் தொழும் நேரத்தில் சுத்தமாகிவிட்டாள். இவளுக்கு சுபுஹூத் தொழுகையை கழா செய்வது கட்டாயமாகும். காரணம் ஒரு ரக்அத்திற்குரிய நேரத்தை

இவள் அடைந்துவிட்டதாள்.

- சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற திக்ருகளை யும், சாப்பிடும்போதும் மற்ற நேரத்திலும் பிஸ்மில்லாஹ் கூறுவதும், ஃபிக்ஹ, ஹதீ ஸ்களைப் படிப்பதும், துஆச் செய்வதும், குர்ஆனைக் கேட்பதும் மாதவிடாய்ப் பெ ண்ணுக்கு ஹராமாகாது. மேலும் அவள் நாவால் மொழியாமல் குர்ஆனைப் பார்த் தோ அல்லது நாவால் மொழியாமல் உள்ளத்தால் சிந்தித்தோ ஓதுவதில் குற்றமி ல்லை. உதாரணமாக குர்ஆனையோ அல்லது குர்ஆன் எழுதப்பட்ட பலகையை யோ முன்னால் வைத்துக் கொண்டு மனதுக்குள் ஓதுவது போல.
- மாதவிடாய்ப் பெண் தேவையுள்ள நேரம் தவிர மற்ற நேரங்களில் குர்ஆனை ஓதாம லிருப்பது மிக்க நல்லது. தேவையுள்ள நேரமென்றால் அவள் மாணவிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியையாகவோ அல்லது தேர்வு நேரத்தில் தேர்வுக்காக பாடம் படிக்க வேண்டிய மாணவியாகவோ இருப்பது போன்றாகும்.

2- ஃபர்லான, சுன்னத்தான நோன்பு நோற்பது ஹராமாகும். அப்படியே அவள் நோன்பு நோற்றால் அது நிறைவேறாது. எனினும் ஃபர்லான நோன்பை அவள் கழா செய்ய வேண்டும். ஒரு பெண் நோன்பு நோற்றிருக்கும் சமயம் மாதவிடாய் வந்துவிட்டால் அந்நேரம் சூரியன் மறைவதற்கு ஒரு வினாடிக்கு முன்பாக இருந்தாலும் நோன்பு முறிந்துவிடும். அது ஃபர்லான நோன்பாகயிருந்தால் அதைக் கழா செய்வது கட்டா யமாகும்.

- ஒரு பெண் சூரியன் மறையும் முன் மாதவிடாய் வருவதாக உணர்ந்தாள். ஆனாலும் சூரியன் மறைந்த பின்புதான் அது வெளியானது. இந்நேரத்தில் அவளின் நோன்பு பூரணமாகிவிடும். ஒரு மாதவிடாய்க்காரி பஜ்ர் உதயமாகி ஒரு வினாடிக்குப் பின் சுத்தமாகி நோன்பு நோற்றால் அவளின் நோன்பு நிறைவேறாது. பஜ்ர் உதயமாவ தற்கு சிறிது நேரத்திற்கு முன் அவள் சுத்தமாகி நோன்பு நோற்றால் அது நிறை வேறிவிடும். பஜ்ருக்குப் பிறகே அவள் குளித்திருந்தாலும் சரி.

3- தவாஃப் (வலம்வருதல்) : மாதவிடாய்க்காரி கஅபத்துல்லாவில் ஃபர்லான, நஃபிலான தவாஃப் செய்வது ஹராமாகும். அப்படி தவாஃப் செய்தால் அது நிறைவேறாது. ஸஃபா, மர்வாவுக்கிடையே ஓடுவது, அரஃபாவிலே தங்குவது, முஸ்தலிஃபா, மினா வில் இரவு தங்குவது, கல்லெறிவது போன்ற ஹஜ், உம்ராவின் ஏனைய செயல்கள் அவளுக்கு ஹராமல்ல. இந்த அடிப்படையில் ஒரு பெண் சுத்தமானவளாக தவாஃப் செய்து முடித்த பின்னாலோ அல்லது ஸஃபா, மர்வாவுக்கிடையே ஓடிக் கொண்டி ருக்கும்போதோ மாதவிடாய் வந்து விட்டால் அதில் எந்த பிரச்சனையும் கிடையாது.

4- பள்ளியில் தங்குதல்: மாதவிடாய்க்காரி பள்ளியில் தங்கியிருப்பது ஹராமாகும்.

5- உடலுறவு கொள்ளுதல்: மாதவிடாயின்போது மனைவியிடம் கணவன் உடலுறவு கொள்வதும், அதற்காக அவள் சம்மதிப்பதும் ஹராமாகும். உடலுறவைத் தவிர தனது இச்சையைத் தணிக்கக் கூடிய முத்தமிடுதல், கட்டியணைத்தல், மர்ம உறு ப்பு அல்லாததில் சுகம் அனுபவித்தல் போன்றவை அவனுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

6- தலாக்: மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது தனது மனைவியை கணவன் தலாக் சொல்வது ஹராமாகும். அவ்வாறு சொல்லிவிட்டால் அல்லாஹ்வுக்கும் அவன் தூத ருக்கும் அவன் மாறு செய்துவிட்டான், ஹராமைச் செய்துவிட்டான். இந்நேரத்தில் அவளை அவன் மீட்டிக் கொள்வதும், சுத்தமாகும் வரை அவளை தன்னுடன் வை

த்துக் கொள்வதும் கட்டாயமாகும். பிறகு அவன் விரும்பினால் அவளைத் தலாக் சொல்லிக் கொள்ளலாம். அவளுக்கு இரண்டாம் முறை மாதவிடாய் ஏற்படும் வரை தலாக் சொல்லாமல் விட்டு விடுவது மிகவும் நல்லது. பிறகு அவள் சுத்தமாகிவிட்டால் அவன் விரும்பினால் அவளை தன்னுடன் வைத்துக் கொள்ளலாம், விரும்பினால் தலாக் சொல்லவும் செய்யலாம்.

7- குளிப்பது கடமை: மாதவிடாய்க்காரி சுத்தமாகிவிட்டால் உடலின் எல்லாப் பகுதியையும் சுத்தப்படுத்திக் குளிப்பது கடமையாகும். தலை முடியின் அடிப்பாகத்திற்குத் தண்ணீர் சேராதென பயப்படுமளவிற்கு அழுத்தமான முறையில் கட்டப்பட்டிருந்தாலே தவிர அவளின் தலை முடியை அவிழ்த்துவிடுவது கட்டாயமில்லை.

- மாதவிடாய்க்காரி தொழுகைக்குரிய நேரத்திலேயே சுத்தமாகிவிட்டால் தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்காக விரைவாகக் குளிப்பது கட்டாயமாகும். அவள் பயணத்திலிருக்கும்போது அவளிடம் தண்ணீர் இல்லையென்றால் அல்லது அவளுடன் தண்ணீர் இருந்து அதைப் பயன்படுத்துவதால் இடையூறு ஏற்படுமெனப் பயந்தால் அல்லது தண்ணீர் அவளுக்கு இடையூறளிக்கும் வியாதியுடையவளாக இருந்தால் தடை நீங்கும் வரை குளிப்பதற்குப் பகரமாக தயம்மும் செய்து கொள்ள வேண்டும். தடை நீங்கிய பின் குளித்துக் கொள்ள வேண்டும்.

## தொடர் உதிரப்போக்கும் அதன் சட்டங்களும்

தொடர் உதிரப்போக்கு என்பது பெண்ணுக்கு தொடர்ந்து இரத்தம் வருவதாகும் என்றைக்கும் நிற்காது, அல்லது மாதத்தில் ஓரிரு நாட்கள் எனும் சில காலத் திற்கு மட்டும் நிற்கும். பிறகு தொடரும்! அவளின் வழக்கத்திற்கு மாறாக பதினைந்து நாட்களுக்கு மேல் வந்தால் அதுவும் தொடர் உதிரப்போக்காகும், அதுவே அவளது வழக்கமாக ஆனாலே தவிர! என இப்படி ஒரு கருத்து உள்ளது.

தொடர் உதிரப்போக்கு உடையவளுக்கு மூன்று நிலைகள் உள்ளன:

1- இவ்வுதிரப்போக்கு வருமுன் அவளுக்கு இயற்கையாக வந்துகொண்டிருந்த மாதவிடாய் காலத்தைத் தெரிந்திருக்க வேண்டும். அக்காலம் வரும்போது அவள் மாதவிடாய்க்காரிதான். அக்காலங்களில் அவளுக்கு மாதவிடாயினுடைய சட்டங்களே. மற்ற நேரங்களில் அவள் தொடர் உதிரப்போக்குடையவள்.

- இதற்கு உதாரணம்: ஒரு பெண்ணுக்கு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் ஆறு நாட்கள் மாதவிடாய் வருகின்றது. பிறகு அவளுக்கு தொடர் உதிரப்போக்கு ஏற்பட்டு நிரந்தரமாகி விடுகிறது. இப்போது அவளுக்கு ஒவ்வொரு மாதத்திலும் ஆரம்பத்திலுள்ள ஆறு நாட்கள் மாதவிடாய் நாட்களாகும். மற்ற நாட்கள் தொடர் உதிரப் போக்குடைய நாட்களாகும். இதன்படி தொடர் உதிரப்போக்குடையவள் அவளுடைய மாதவிடாய்க் காலத்தில் மாதவிடாய்க்காரியாக இருந்துவிட்டு அதன் பின்னர் குளித்து, தொழுது கொள்ளவேண்டும். தொடர்ந்து வரக்கூடிய இரத்தத்தை அவள் பொருட்படுத்த வேண்டியதில்லை.

2- ஒரு பெண் முதன் முதலில் எப்போது இரத்தத்தைக் காண்கிறாளோ அப்போதிருந்தே அவளுக்கு தொடர் உதிரப்போக்கு தான் என்றால் இப்படிப்பட்ட பெண் மாதவிடாய் இரத்தம் எது? தொடர் உதிரப்போக்கு எது? என்பதைப் பிரித்தறிந்து செயல்பட்டுக் கொள்ள வேண்டும். மாதவிடாய் இரத்தமாக இருந்தால் அது கருப்பாக அல்லது கட்டியாக அல்லது வாடையுள்ளதாக இருக்கும். இதல்லாத தன்மையிலிரு

ந்தால் அது தொடர் உதிரப்போக்கு என விளங்கிக் கொள்ள வேண்டும்.

- உதாரணமாக, ஒரு பெண் முதன் முதலில் இரத்தத்தைப் பார்க்கும்போது அது தொடர்ந்து வருவதைக் காண்கிறாள். ஆனால் மாதத்தில் பத்து நாட்கள் கறுப்பாகவும், மீதி நாட்களில் சிகப்பாவும் காண்கிறாள் அல்லது பத்து நாட்கள் கட்டியாகவும், மீதி நாட்களில் இலேசாகவும் காண்கிறாள் அல்லது பத்து நாட்கள் வாடையுடனும், மீதி நாட்களில் வாடையில்லாமலும் காண்கிறாள். இவ்வாறு இருந்தால் அவளின் மாதவிடாய் இரத்தம் முந்திய உதாரணத்தில் கறுப்பானதும், இரண்டாவது உதாரணத்தில் கட்டியானதும், மூன்றாவதில் வாடையுடையதாகவும் ஆகும். மற்ற தன்மையிலுள்ளது தொடர் உதிரப்போக்காகும்.

3- அவள் இரத்தத்தைப் பார்த்த ஆரம்ப காலத்திலிருந்தே தொடர் உதிரப்போக்கு வந்துகொண்டிருக்கிறது. மாதவிடாய் இரத்தம் எது? தொடர் உதிரப்போக்கு எது? என பிரித்தறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவளின் இரத்தம் ஒரே தன்மையிலோ அல்லது குழப்பமான தன்மைகளிலோ இருந்தால் இப்படிப்பட்டவள் பெரும்பாலான பெண்களின் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இவளுடைய மாதவிடாய்க் காலம் ஒவ்வொரு மாதத்திலும் ஆறு அல்லது ஏழு நாட்களாகும். இதன் ஆரம்பம் அவள் இரத்தத்தைப் பார்த்த ஆரம்ப நாளிலிருந்து துவங்குகிறது. மற்ற நாட்கள் தொடர் உதிரப்போக்குடைய நாட்களாகும்.

## தொடர் உதிரப்போக்கின் சட்டங்கள்

தொடர் உதிரப்போக்கின் சட்டம் சுத்தத்தின் சட்டத்தைப் போன்றுதான். தொடர் உதிரப்போக்குடைய பெண்களுக்கும் சுத்தமுடனுள்ள பெண்களுக்குமிடையே எந்த வித்தியாசமுமில்லை பின் வரும் இரண்டு விஷயங்களைத் தவிர.

1- தொடர் உதிரப்போக்குடையவள் ஒவ்வொரு தொழுகைக்கும் உளூச் செய்வது கட்டாயமாகும்.

2- அவள் உளூச் செய்ய விரும்பினால் இரத்தத்தின் அடையாளத்தைக் கழுவிக் கொள்ள வேண்டும். இரத்தம் நிற்பதற்காக ஒரு துண்டுத் துணியை மறைவிடத்தின் மீது கட்டிக் கொள்ள வேண்டும்.

## பிரசவ இரத்தமும் அதன் சட்டமும்

பிரசவ இரத்தமென்பது குழந்தை பிறந்த காரணத்தால் கர்ப்பப்பையிலிருந்து வெளியேறுகின்ற இரத்தமாகும். இது பிரசவித்தவுடன் வரும். அல்லது அதற்குப் பிறகும் அல்லது பிரசவத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னாலும் பிரசவ வலியுடன் வரும். இந்த இரத்தம் எப்போது நின்றுவிடுகிறதோ அப்போதே அவள் சுத்தமாகி விடுகிறாள். நாற்பது நாட்களை விட அதிகமாகி விட்டால் நாற்பதுக்குப் பின்னர் குளித்துவிட வேண்டும். ஏனெனில் அதுதான் பிரசவ இரத்தத்திற்குரிய கூடுதலான கால அளவாகும். இரத்தம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும் சரியே. எனினும் நாற்பது நாட்களை விட அதிகமாக வருவது மாதவிடாய் இரத்தமாக இருந்தால் அதிலிருந்து சுத்தமாகும் வரை மாதவிடாய்க்காரியாக இருந்துவிட்டு பிறகு குளித்துக் கொள்ள வேண்டும்.

மனிதத் தோற்றம் தெளிவாகும் முறையில் முழுக் குழந்தையாக அவள் பெற்றெடுத்தால்தான் அது பிரசவ இரத்தமாகக் கருதப்படும். மனிதனின் தோற்றம் தெளிவாக இல்

லாத சிறிய சதைக் கட்டியைப் பெற்றெடுத்தால் அந்த இரத்தம் பிரசவ இரத்த மல்ல. மாறாக அது நரம்புத் தளர்ச்சியின் இரத்தமாகும். இவளுக்குரிய சட்டம் தொடர் உதிரப்போக்குடையவளின் சட்டமாகும். மனிதத் தோற்றம் தெளிவாகத் தெரியும் வகையிலான காலத்தின் குறைந்த அளவு- கர்ப்பம் தொடங்கியதிலிருந்து 80 நாட்களாகும் பெரும்பாலான நிலை 90 நாட்களாகும். பிரசவ இரத்தத்திற்குரிய சட்டங்கள் முன்னால் கூறப்பட்ட மாதவிடாய்க்குரிய சட்டங்கள் போன்றுதான்.

## மாதவிடாயைத் தடுத்து நிறுத்தக்கூடியவை

ஒரு பெண் இரு நிபந்தனைகளுடன் மாதவிடாயைத் தடுத்து நிறுத்தக்கூடியவற்றை பயன்படுத்துவது கூடும்.

1- தனக்கு இடையூறு ஏற்படுமெனப் பயப்படாமலிருக்க வேண்டும். இடையூறைப் பயந்தால் கூடாது.

2- உடலுறவுக்கு இடைஞ்சலாக இருக்குமானால் கணவனிடம் அனுமதி பெறவேண்டும். மாதவிடாயை வரவழைக்கக் கூடியவற்றைப் பயன்படுத்துவது இரு நிபந்தனைகளுடன் கூடும்.

1- கணவனின் அனுமதி.

2- கடமைகளை விட்டும் தப்புவதற்கான தந்திரமாக இல்லாமலிருக்க வேண்டும். உதாரணமாக தொழுகை, நோன்பு போன்றவற்றை விட்டுவிடுவதற்காக இதைப் பயன்படுத்துவது போல.

கருத்தரித்தலைத் தடுக்கக்கூடியவற்றைப் பயன்படுத்துவது இரு வகைகளாகும்.

1- நிரந்தரமாகத் தடை செய்வது. இது கூடாது.

2- குறிப்பிட்ட காலம் வரை தற்காலிமாகத் தடை செய்வது. ஒரு பெண் அடிக்கடி கர்ப்பமாகக்கூடியவளாக இருந்து அது அவளுக்கு சிரமமாக இருந்தால் இரண்டாண்டுக்கு அல்லது அதுபோல ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கர்ப்பமாக விரும்புகிறாள் என்றால் தற்காலிகமாகத் தடுப்பது கூடும். இதற்கு தனது கணவனின் அனுமதியும், அதனால் அவளுக்கு இடையூறில்லாமலிருப்பதும் நிபந்தனைகளாகும்.

# இஸ்லாமிய வாழ்வும் நெறியும்
# أحكام وآداب إسلامية

## வாய்மையும் இறையச்சமும்

அல்லாஹ் கூறுகிறான்: மார்க்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவர்களாக அவனை அவர்கள் வணங்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தக் கட்டளையும் அவர்களுக்கு இடப்படவில்லை (98:5) என் மார்க்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவனாக அவனையே நான் வணங்குகிறேன் என (நபியே!) நீர் கூறுவீராக! (39:14) (நபியே!) நீர் கூறுவீராக: உங்களின் உள்ளங்களில் உள்ளவற்றை நீங்கள் மறைத்தாலும் அல்லது அதை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லாஹ் அதை அறிகின்றான் (3:29) நிச்சயமாக வானம் பூமியிலுள்ள எந்த வஸ்துவும் அல்லாஹ்விடம் மறைந்து விடாது. (3:29)

நான் நபி (ஸல்) அவர்கள் கூறக்கேட்டுள்ளேனென உமர் (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. நிச்சயமாக ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: மறுமை நாளில் எனது பரிந்துரைக்கு மிகுந்த பாக்கியமுடையவர்கள் உளத்தூய்மையுடன் லாஇலாஹ இல்லல்லாஹ் கூறியவர்களாவர். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உங்களின் உடல்களையோ உங்களின் தோற்றங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்களின் உள்ளங்களையும், செயல்களையுமே பார்க்கிறான். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூதர் (ரலி) கூறினார்கள்: நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வைப் பயந்து கொள். தீமை செய்துவிட்டால் அதைத் தொடர்ந்து நன்மை செய்திடு. அது அத்தீமையை அழித்துவிடும். மக்களிடம் நற்குணத்துடன் பழகிக்கொள்.

**பயன்கள்:**

1- நிச்சயமாக வாய்மைதான் செயல்கள் ஏற்கப்படுவதற்கு நிபந்தனையாகும். அல்லாஹ்விடம் கூலி இரட்டிப்பாக்கப்படுவதற்கும் அதுவே அசியம் என்பது போன்று.

2- நிச்சயமாக அல்லாஹ் இணைவைப்புச் செயலை ஏற்பதில்லை. அது அவனுக்குத் தேவையே இல்லை. அவனது திருமுகத்தையே நாடிச் செய்யப்பட்ட தூய செயல்களைத் தவிர வேறு எதையும் அவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். ஹதீஸ் குதுஸியில் அல்லாஹ் கூறியிருப்பதாக வந்துள்ளது: நிச்சயமாக யாரேனும் ஒரு காரியத்தைச் செய்து அதில் என்னுடன் வேறொருவனைக் கூட்டாக்கினால் அவனையும் அவன் செய்த ஷிர்கையும் விட்டுவிடுவேன், ஏற்கமாட்டேன்.

3- வானம் மற்றும் பூமியிலுள்ள எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்ததல்ல என்ற காரணத்தால் எல்லா நிலையிலும் அவன் நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் எனக் கருதுவதும் அவனைப் பயப்படுவதும் அவசியமாகும்.

## ஷிர்க் பற்றிய எச்சரிக்கையும் தவ்ஹீதின் சிறப்பும்

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும். (31:13) நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான்.

அது அல்லாததை அவன் விரும்பியவருக்கு மன்னிப்பான். (4:48) நீர் இணைவைப்பீரானால் உமது செயல் அழிந்துவிடும். நிச்சயமாக நீர் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராகிவிடுவீரென (நபியே!) உமக்கும் உமக்கு முன்னுள்ளவர்களுக்கும் வஹீ அறிவிக்கப்பட்டுள்ளது. (39:65) ஜின், மனித சமுதாயத்தவரை என்னை வணங்குவதற்காகவே நான் படைத்துள்ளேன். (51:56) அல்லாஹ்வை வணங்குங்கள், ஷைத்தான்களை விட்டும் விலகிச் செல்லுங்கள் (எனபோதிக்கும்) தூதர்களை எல்லா சமுதாயத்தவர்களிலும் நிச்சயமாக நாம் அனுப்பினோம். (16:36)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காமல் எவரேனும் அல்லாஹ்வைச் சந்தித்தால் அவர் சுவர்க்கம் செல்வார். அவனுக்கு எதையாவது இணைவைத்தவனாக ஒருவன் அல்லாஹ்வைச் சந்தித்தால் அவன் நரகம் செல்வான். அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: நாசமாக்கிவிடக்கூடிய ஏழு காரியங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே! அவை யாவை? எனத் தோழர்கள் கேட்டனர். அதற்கவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைப்பது... எனக் கூறினார்கள். முஆது பின் ஜபல் (ரலி) கூறினார்கள்: நான் நபி (ஸல்) அவர்களுடன் கழுதையில் பின்னாலிருந்தபோது, முஆதே! அடியார்கள் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையும் அல்லாஹ் அடியார்களுக்குச் செய்ய வேண்டிய கடமையும் யாதென நீர் அறிவீரா? என நபி (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதருமே மிக அறிந்தவர்களென நான் கூறினேன். அதற்கவர்கள், அடியார்கள் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமை அவர்கள் அல்லாஹ்வுக்கு யாரையும், எதனையும் இணைவைக்காமல் வணங்க வேண்டுமெனவும் அல்லாஹ் அடியார்களுக்குச் செய்ய வேண்டிய கடமை அவனுக்கு எதனையும் இணைவைக்காதவர்களை அவன் வேதனை செய்யாமலிருப்பதுமாகும் எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

**பயன்கள்:**

1- ஷிர்க் ஆபத்து. தவ்பா செய்யாமல் அதை அல்லாஹ் மன்னிக்கமாட்டான். ஷிர்க் அல்லாஹ்வின் நாட்டத்திற்கு கீழுள்ள மற்ற பாவங்களைப் போன்றதல்ல.
2- யார் இனணவைத்தவனாக மரணித்துவிடுகிறானோ அவனது அமல் நிச்சயமாக அழிந்துவிடுகிறது. அவன் நரகத்தில் நிரந்தரமாக வீழ்வதற்குரிய காரணமாகவும் அது ஆகிவிடுகிறது.
3- தவ்ஹீத் சிறப்பு வாய்ந்தது. ஜின்களும் மனிதர்களும் படைக்கப்பட்டதன் நோக்கம் தவ்ஹீதுதான். அது சுவர்க்கம் செல்வதற்குரிய காரணங்களில் மிகமுக்கியமான காரணமாகவும் நரகத்திலிருந்து விடுதலை பெறுவதற்குரிய காரணமாகவும்இருக்கிறது.

## முகஸ்துதியின் ஆபத்து! அதுவும் ஒரு ஷிர்க்

அல்லாஹ் கூறுகிறான்: தொழுகையாளிகளுக்கு கேடுதான். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் தொழுகையில் அலட்சியமாக இருப்பார்கள். அவர்கள் பிறருக்கு காண்பிக் (கவேதான்தொழு) கிறார்கள். மேலும் அற்பமான பொருளைக் (கொடுப்பதைத்) தடுக்கிறார்கள். (107:4-7)

நபி (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேனென அபூஸயீது பின் பஃளாலா (ரலி) கூறினார்கள்: எந்நாளில் சந்தேகமில்லையோ, எந்தகிருதி நாளில் முன்னோர், பின்னோர் அனைவரும் ஒன்று சேர்க்கப்படுவார்களோ அந்நாளில் அறிவிப்புச் செய்யக்

கூடிய ஒருவர், எவன் தனது செயலில் அல்லாஹ்வுக்கு ஒருவரை இணையாக்கினானோ அவன் அவரிடமே தனக்கு நன்மையைத் தேடிக் கொள்ளட்டும். ஏனெனில் இணை வைப்பவனின் இணைவைப்புச் செயல் அல்லாஹ்வுக்குத் தேவை இல்லை என அறிவிப்புச் செய்வார். (திர்மிதி) அபூஸஈதில் குத்ரீ (ரலி) கூறினார்கள்: நாங்கள் தஜ்ஜாலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது எங்களிடையே நபி (ஸல்) அவர்கள் வந்து, மஸீஹுத் தஜ்ஜாலை விட உங்களின் மீது நான் மிகவும் பயப்படக்கூடிய ஒன்றை அறிவிக்கட்டுமா? எனக் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! ஆம் (அறிவியுங்கள்) என்று கூறினோம். அதற்கு அவர்கள் அது மறைமுகமான இணைவைப்பெனக் கூறினார்கள். அதாவது ஒருவர் தொழுவதற்காக நிற்கிறார், அப்போது அவரை வேறொருவர் பார்க்கிறார் என்பதற்காக அத்தொழுகையை அவர் அழகுபடச் செய்வது எனக் கூறினார்கள். (இப்னுமாஜா)

**பயன்கள்:**

1- முகஸ்துதியையும், அதைச் செய்பவர்களையும் கடுமையாக எச்சரித்தல்.
2- நிச்சயமாக மனிதன் சில சமயங்களில் தன்னையறியாமலேயே முகஸ்துதியில் வீழுந்துவிடுகிறான்.
3- நிச்சயமாக பிறருக்கு காட்டுவதற்காக செய்யக் கூடியவனின் செயல் மறுக்கப்படும், ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## பிரார்த்தனை

அல்லாஹ் கூறுகிறான்: என்னிடம் துஆச் செய்யுங்கள். உங்களின் துஆவிற்கு நான் பதிலளிக்கிறேன் என உங்கள் இறைவன் கூறுகிறான். (40:60) எனது அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் சமீபமாக இருக்கிறேன். என்னிடம் பிரார்த்தித்தால் பிரார்த்திப்பவனின் பிரார்த்தனைக்கு நான் பதிலளிக்கிறேன் (என நபியே! நீர் கூறுவீராக) (2:186) உங்களின் இறைவனிடம் பணிவாகவும் அந்தரங்கமாகவும் துஆச் செய்யுங்கள் வரம்புமீறுபவர்களை நிச்சயமாக அவன் நேசிக்கமாட்டான். (7:55)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நுஃமான் பின் பஷீர் (ரலி) கூறினார்கள்: துஆதான் வணக்கம். (திர்மிதி, அபூதாவூது) நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: அடியான் தனது இறைவனுக்கு மிகநெருக்கமாக இருப்பது அவன் சுஜூதிலிருக்கும்போதுதான். எனவே (அதில்) துஆவை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். (முஸ்லிம்) ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் குறைந்த வார்த்தைகளில் நிறைந்த அர்த்தங்களை உள்ளடக்கிக் கொள்ளும் துஆவை விரும்பக் கூடியவர்களாகவும் மற்றவற்றை விட்டுவிடுபவர்களாகவும் இருந்தார்கள். (அபூதாவூது) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உபாதாபின் ஸாமித் (ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிமான அடியான் ஏதேனும் ஒரு துஆவைச் செய்தால் அவன் பாவத்தையோ அல்லது சொந்தபந்தத்தை முறிப்பதைப் பற்றியோ கேட்காத வரை அவன் கேட்டதை அல்லாஹ் அவனுக்கு கொடுத்துவிடுகிறான் அல்லது அதைவிடச் சிறந்ததை மறுமையில் அவனுக்காக சேமித்து வைக்கிறான். அல்லது அவன் கேட்ட அளவிற்கு ஒரு தீமையை அவனை விட்டும் தடுத்துவிடுகிறான். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூதர் (ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிம் தனது சகோதரனுக்காக மறைந்திருந்து செய்கின்ற துஆ அங்கீகரிக்கப்படும். அவனது தலைப்பாகத்தில் (அவனுக்காக) ஏற்படுத்தப்பட்ட ஒரு மலக்கு இருப்பார். இவன் தன் சகோதரனுக்காக நன்மையை வேண்டி துஆச் செய்யும்போதெல்லாம் இவனுக்

காக ஏற்படுத்தப்பட்ட அந்த மலக்கு ஆமீன் எனவும் உனக்கும் இதுபோன்று கிடைக்க ட்டுமாக! எனவும் கூறுவார். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- துஆ ஒரு வணக்கம். அல்லாஹ் அல்லாதவர்களிடம் துஆக் கேட்பது கூடாது. யாரேனும் இறைவனல்லாதவரிடம் துஆக் கேட்டால் நிச்சயமாக அவன் இணைவைத்தவனாகிவிடுகிறான். நபி(ஸல்) அவர்கள் துஆவை வணக்கமாகவும், வணக்கத்திலேயே மிகமுக்கியமான அங்கமாகவும் கணித்திருப்பதால் துஆவிற்கு மகத்தான அந்தஸ்திருப்பதை அறிந்துகொள்.

2- துஆவின்போது சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வது விரும்பத்தக்கதாகும். அது போல ஜவாமிவுல் கலிமைக் கொண்டு துஆச் செய்வது விரும்பத்தக்கதாகும். ஜவாமிவுல் கலிமென்பது குறைந்த வார்த்தைகளில் நிறைந்த அர்த்தத்தை உள்ளடக்கிய துஆவாகும்.

3- ஒரு மனிதன் தனக்கு அல்லது தனது பொருளுக்கு அல்லது தன்னுடைய குழந்தைகளுக்கு பாதகமாக துஆச் செய்வது பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

4- முஸ்லிம்களுக்காக மறைவிலிருந்து துஆச் செய்வது விரும்பத்தக்கதாக ஆக்கப்பட்டுள்ளது.

5- துஆச் செய்பவனுக்கு அவன் கேட்பது கொடுக்கப்படுவது கட்டாயமல்ல. எனினும் அவனது துஆவின் காரணமாக அவன் துஆக் கேட்ட அளவிற்கு அவனை விட்டும் தீமை தடுக்கப்படுகிறது அல்லது அதற்கான நன்மை மறுமை நாளில் அவனுக்காக சேமித்து வைக்கப்பட்டு அதன் பால் அவன் மிகத்தேவையுடையவனாக இருக்கும் போது அவனுக்குக் கொடுக்கப்படுகிறது.

6- ஹராமான பொருளை உண்பதும், ஹராமான ஆடையை அணிவதும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தடையாக இருக்கின்றது.

## கல்வி

அல்லாஹ் கூறுகிறான்: கற்றவர்களும் கல்லாதவர்களும் சமமாவார்களா? என (நபியே!) நீர் கேட்பீராக. (39:9) உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி கொடுக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான். (58:11) எனது நாயனே! எனக்கு கல்வியை அதிகமாக்குவாயாக என (நபியே!) நீர் கூறுவீராக! (20:114) நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்குப் பயப்படுபவர்கள் அறிஞர்கள்தாம். (35:28)

நபி(ஸல்) அவர்கள் கூறியதாக முஆவியா (ரலி) கூறினார்கள்: அல்லாஹ் யாருக்கேனும் நன்மையை நாடினால் அவரை மார்க்கத்தில் விளக்கமுடையவராக ஆக்கிவிடுவான். (புகாரி, முஸ்லிம்) இன்னும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) கூறினார்கள்: யாரேனும் ஒருவர் கல்வியைக் கற்றுக் கொடுத்தால் அதைக் கொண்டு செயல்பட்டவரின் நன்மை அவருக்குக் கிடைக்கும். எனினும் செயல்பட்டவரின் நன்மையில் எதுவும் குறைக்கப்பட மாட்டாது. (இப்னுமாஜா) இன்னும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆதமின் மகன் மரித்துவிட்டால் மூன்று காரியங்களைத் தவிர வேறு எல்லாக் காரியங்களும் அவனை விட்டும் நின்றுவிடுகிறது. (அவை) நிலையான தர்மம், பயனுள்ள கல்வி, அவனுக்காகத் துஆச் செய்யும் நல்ல பிள்ளைகள். (முஸ்லிம்) மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக உன் மூலமாக ஒரு மனிதனுக்கு அல்

லாஹ் நேர்வழி காட்டுவது சென்னிற ஒட்டகங்களை விட உனக்கு சிறந்ததாகும். (புகாரி) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: என் மூலமாக ஒரு செய்தி தெரிந்திருந்தாலும் அதை பிறருக்கு எடுத்துச் சொல்லுங்கள். (புகாரி)

பயன்கள்:

1- இந்த வசனங்களிலும், நபிமொழிகளிலும் கல்வியின் சிறப்பும் கல்வியாளர்களின் சிறப்பும் விளக்கப்பட்டிருக்கின்றது. கல்வியைத் தேடுவது சுவர்க்கம் புகும் காரணங்களில் ஒன்றாக இருப்பது போல மார்க்கத்தில் விளக்கம் பெறுவது அல்லாஹ் அடியானுக்கு நன்மையை நாடியிருப்பதற்குச் சான்றாக இருக்கிறது.
2- மக்களுக்குக் கல்வியைக் கற்றுக் கொடுப்பது, அவர்களுக்கு நன்மையை அறிவித்துக் கொடுப்பது, கல்வியை எடுத்துச் சொல்லுவது இவை குறைவாயினும் இவற்றின் கூலி மகத்தானது. மேலும் அவை மனிதன் இறந்த பின்னும் பயனளிக்கின்றன.
3- கல்வியைத் தேடுவது உபரியான வணக்கங்களை விட மிகச் சிறந்தது.
4- குழந்தைகளை நல்லமுறையில் நல்லொழுக்கம் போதித்து வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

## நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்

அல்லாஹ் கூறுகிறான்: மக்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். நன்மையை ஏவுகிறீர்கள், தீமையைத் தடுக்கிறீர்கள், அல்லாஹ்வை நம்புகிறீர்கள். (3:110) மேலும் (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நற்செயல் புரியுமாறு ஏவுபவர்களாகவும் தீமையைத் தடுப்பவர்களாகவும் உங்களில் ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். அவர்களே வெற்றி பெற்றவர்கள். (3:104)

நபி(ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் என அபூ ஸயீதில் குத்ரி(ரலி) கூறினார்கள்: உங்களில் யாரேனும் தீமையைக் கண்டால் அதை அவர் தன் கையால் தடுக்கட்டும். அதற்கு முடியவில்லையென்றால் தன் நாவால் தடுக்கட்டும் அதற்கும் முடியவில்லையென்றால் தன் உள்ளத்தால் அவர் அதை வெறுக்கட்டும். இது ஈமானில் மிக பலவீனமானதாகும் (முஸ்லிம்) இன்னும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹுதைபா (ரலி) கூறினார்கள்: எனது உயிர் எவன் கையிலிருக்கிறதோ அவன் மீது ஆணையாக நிச்சயமாக நீங்கள் நன்மையை ஏவிக்கொண்டிருங்கள் தீமையைத் தடுத்துக் கொண்டிருங்கள். அவ்வாறு செய்யவில்லையானால் நிச்சயமாக அல்லாஹ் உங்களின் மீது தனது வேதனையை விரைவில் இறக்கிவைப்பான். பிறகு நீங்கள் அவனிடம் துஆச் செய்வீர்கள். உங்களுக்குப் பதில் வழங்கப்படமாட்டாது. (திர்மிதி) நபி(ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேனென அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக மனிதர்கள் அநியாயக்காரனை அவனுடைய இரு கைகளைப் பிடித்து நிறுத்தவில்லையானால் அல்லாஹ் தன்னிடமுள்ள வேதனையை நல்லவர், தீயவர் என்ற பாகுபடின்றி அனைவர் மீதும் பொதுவாக இறக்குகிறான். (அபூதாவூத், திர்மிதி, நஸாயீ)

பயன்கள்:

1- நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது.
2- யார் தீமையைக் காணுகிறாரோ அவர் தம்மால் முடிந்த அளவு அதைத் தடுப்ப...

கட்டாயமாகும்.

3- கையால் தடுப்பதென்பது அதற்கு சக்தியுள்ளவனுக்குத்தான். உதாரணமாக தந்தை தன் வீட்டில் தீமையைத் தடுப்பது அல்லது அதிகாரம் வழங்கப்பட்டவர் அல்லது அவருடைய பிரதிநிதி தனது அதிகாரத்தின் கீழுள்ளவர்களைத் தடுத்து நிறுத்துவது போன்று.

4- உள்ளத்தால் தடுப்பதென்பதில் தீமையை வெறுப்பதும், அதிலிருந்து நீங்குவதும் கட்டாயமாகும்.

5- நன்மையை ஏவாமலிருப்பதும், தீமையைத் தடுக்காமலிருப்பதும் அல்லாஹ்வின் தண்டனைக்குக் காரணமாக அமைவது போல பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப் படாமலிருப்பதற்கும் காரணமாக இருக்கிறது.

## நன்மையை ஏவி தீமையதைத் தடுப்பதற்குரிய ஒழுங்கு முறைகள்

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உம் இறைவனின் வழியில் (மக்களை) விவேகத்துடனும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! அழகிய முறையில் வாதம் புரிவீராக. (16:105) அல்லாஹ்வின் அருளின் காரணமாக (நபியே!) நீர் அவர்களிடம் மென்மையாக நடந்துகொண்டீர். நீர் கடுகடுப்பானவராகவும் கடின உள்ளமுடையவராகவும் இருந்திருந்தால் அவர்கள் உமது சமூகத்திலிருந்து ஓடிப்போயிருப்பார்கள் (3:159)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் மென்மையானவன். அனைத்து காரியங்களிலும் அவன் மென்மையையே விரும்புகிறான். (புகாரீ, முஸ்லிம்) மேலும் நபி (ஸல்) கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக மென்மையாக நடந்து கொள்ளக்கூடிய எல்லாக் காரியங்களும் அழகாகவே அமையும். ஒரு விஷயத்திலிருந்து மென்மை பறிக்கப்பட்டதெனில் அது அதனை அலங்கோலமாக்கிவிடும். (முஸ்லிம்) நான் நபி (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன் என ஜரீருப்னு அப்துல்லாஹ் (ரலி) கூறினார்கள்: யார் மென்மையான தன்மையைத் தடுத்துக் கொண்டாரோ அவர் அனைத்து நன்மை விட்டும் தடுக்கப்பட்ட வராகிவிட்டார். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- மென்மையாக நடந்து கொள்வதன் மீது ஆர்வமூட்டுதல், அழைப்புப் பணியில் நுட்பத்தைப் பின்பற்றுதல். நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல்.

2- காரியங்கள் அனைத்திலும் நயமாக நடந்து கொள்ள ஆர்வமூட்டுதல். நயமான தன்மையை யார் தடுத்துக்கொண்டாரோ அவர் நன்மை அனைத்தும் தடுக்கப்பட்டவனாகிவிடுகின்றார்.

## பெற்றோருக்கு உபகாரம் செய்தல்

அல்லாஹ் கூறுகிறான்: தன் தாய், தந்தையர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென மனிதனுக்கு நாம் உபதேசித்தோம் (29:8) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாதென்றும் பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமெனவும் உமது இறைவன் விதித்துள்ளான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது இருவருமோ நிச்சயமாக உம்மிடம் முதுமையை அடைந்துவிட்டால் அவ்விருவரிடத்திலும் சீ என்று நீர் கூறிவிடாதீர். இன்னும் அவ்விருவரிடமும் மரியாதையான சொல்லைச் சொல்லுவீராக! (17:23) தன் தாய், தந்தையர்களுக்கு (உபகாரம் செய்ய வேண்டுமென) மனிதனுக்கு நாம்

உபதேசித்தோம். அவனின் தாய் அவனை பலவீனத்தின் மேல் பலவீனமாக (கர்ப்ப த்தில்) சுமந்தாள். இன்னும் அவனுடைய பால்குடி மறக்க இரண்டு வருடங்கள் பிடித் தன. நீ எனக்கும், உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! (31:14)

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) கூறினார்கள்: நான் நபி (ஸல்) அவர்களிடம் செயல் களில் எது சிறந்ததெனக் கேட்டேன். தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவ தெனக் கூறினார்கள். பின்பு எதுவெனக் கேட்டேன் பெற்றோருக்கு உபகாரம் செய்வ தெனக் கூறினார்கள் பின் எதுவெனக் கேட்டேன் அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவ தெனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) அபூஹுரைரா (ரலி) கூறினார்கள் ஒரு மனிதர் அல் லாஹ்வின் தூதரிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் நட்பு கொ ள்வதற்கு மனிதர்களில் மிகத் தகுதியானவர் யார்? எனக் கேட்டார். உனது தாய் எனக் கூறினார்கள். பிறகு யார்? எனக் கேட்டார். உன்னுடைய தாய் எனக் கூறினார்கள். பிறகு யார்? எனக் கேட்டார். உன்னுடைய தாய் எனக் கூறினார்கள். பிறகு யார்? எனக் கேட்டார். உன்னுடைய தந்தை எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

பயன்கள்:

1- இஸ்லாம் பெற்றோரைக் கண்ணியப்படுத்துகிறது. அவ்விருவருக்கும் கட்டுப்பட்டு நடக்கும்படியும் உபகாரம் செய்யும் படியும் ஏவுகிறது. அவ்விருவருக்கும் உபகாரம் செய்வதற்கு ஆர்வமூட்டுகிறது.
2- தொழுகையை அதற்குரிய நேத்தில் நிறைவேற்றுதலுக்குப் பிறகு அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமான செயல் பெற்றோருக்கு உபகாரம் செய்வதாகும்.
3- அவ்விருவருக்கும் நோவினை செய்வது, அவர்களிடம் கடினமாகப் பேசுவது, அவர் களைச் 'சீ' எனக் கூறுவது ஆகியவை பற்றி இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கிறது.
4- தாயின் அந்தஸ்து விளக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக வழிப்படுவதிலும், உபகாரம் செய்வதிலும் தந்தையை விட தாய் முன்னுரிமை பெறுகிறார்.

## நற்குணம்

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே நீர் நயமாக நடந் து கொண்டீர். நீர் கடுகடுப்பானவராகவும், கடின உள்ளமுடையவராகவும் இருந்திருந் தால் அவர்கள் உமது சமூகத்தை விட்டும் ஓடிப் போயிருப்பார்கள். (3:159) (நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கிறீர். (68:4)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபுத்தர்தா (ரலி) கூறினார்கள்: மறுமை நாளில் அடியா னின் தராசில் அழகிய குணத்தை விட கனமானது வேறெதுவும் கிடையாது. நிச்சயமாக அல்லாஹ் அருவருப்பான கெட்ட வார்த்தையை வெறுக்கிறான். (திர்மிதி) அபூஹுரை ரா (ரலி) கூறினார்கள்: மனிதர்களைச் சுவர்க்கத்தில் நுழைவிக்கக் கூடிய காரியங்களில் மிக அதிகமானது எதுவென நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் இறையச்சமும் அழகிய குணமும் எனக் கூறினார்கள். (திர்மிதி) மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: முஃமின்களில் பரிபூரணமான ஈமான் உடை யவர்கள் அவர்களில் மிக அழகிய குணமுடையவராவர். தம் மனைவியரிடத்தில் சிறந்த வரே உங்களில் சிறந்தவர். (திர்மிதி) நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக ஒரு முஃமின் தனது அழகிய குணத்தால் பகலில் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்கியவனின் அந்தஸ்தை அடைந்து விடுகிறான். (அபூதாவூது)

**பயன்கள்:**

1- நபி(ஸல்) அவர்களின் அழகிய குணம் விவரிக்கப்பட்டுள்ளது.
2- அழகிய குணத்தின் சிறப்பும் அதன் அந்தஸ்தும் கூறப்பட்டுள்ளது. நிச்சயமாக சுவர்க்கத்தில் நுழைவிக்கும் செயல்களில் நற்குணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது அந்தஸ்துகளை உயர்த்தும். மறுமையில் செயல்கள் நிறுக்கப்டும் என விவரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிமின் தராசில் மிகக் கனமானது இறையச்சமும் அழகிய குணமும் ஆகும்.
3- அழகாகப் பேசவேண்டும், அழகாகச் செயல்பட வேண்டுமென இஸ்லாம் ஆர்வ மூட்டுகிறது. அருவருப்பான சொல், செயலைக் குறித்து எச்சரிக்கை செய்கிறது.
4- கணவன், மனைவிக்கிடையே சுமூக உறவு அமைவதின் முக்கியத்துவம்.
5- ஈமான், வணக்க-வழிபாடுகளால் அதிகரிக்கவும், பாவங்களால் குறையவும் செய்யும்.

## மென்மையும் அமைதியும்

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உம் இறைவனின் வழியில் (மக்களை) விவேகத்துடனும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! அழகிய முறையில் வாதம் புரிவீராக!. (16:105) அல்லாஹ்வின் அருளின் காரணமாக (நபியே!) நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொண்டீர். நீர் கடுகடுப்பானவராகவும் கடின உள்ளமுடையவராகவும் இருந்திருந்தால் அவர்கள் உமது சமூகத்திலிருந்து ஓடிப்போயிருப்பார்கள். (3:159) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் மென்மையானவன். காரியங்கள் அனைத்திலும் அவன் மென்மையையே விரும்புகிறான். (புகாரி, முஸ்லிம்) அஷஜ்ஜு அப்துல் கைஸிடம் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள்: நிச்சயமாக உம்மிடம் பொறுமை, அமைதி எனும் இரு பண்புகள் உள்ளன. அவ்விரண்டையும் அல்லாஹ் விரும்புகிறான். (முஸ்லிம்) மேலும் நபி(ஸல்) கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள்: ஒரு காரியத்தில் மென்மை இருந்தால் அது, அதனை அலங்கரிக்கும். ஒரு காரியத்திலிருந்து மென்மை பறிக்கப்பட்டுவிட்டால் அது, அதனை அலங்கோலப்படுத்திவிடும். (முஸ்லிம்) நபி(ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் என ஜரீருப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: யார் மென்மையான தன்மையைத் தடுத்துக் கொண்டாரோ அவர் அனைத்து நன்மை விட்டும் தடுக்கப்பட்டவராகிவிட்டார். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- அல்லாஹ் மென்மையை விரும்புகிறான். நிச்சயமாக மென்மையாக நடந்து கொள்வது நன்மையை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கின்றது.
2- நிச்சயமாக மக்களிடத்தில் கொடுக்கல், வாங்கல் செய்வதில் மென்மையாக நடந்து கொள்வது சுவர்க்கவாசிகளின் பண்பாடாகும்.
3- பொறுமை சிறப்பு, கோபம் குறித்து எச்சரிக்கை.

## கருணை

அல்லாஹ் நபி(ஸல்) அவர்கள் பற்றிக் கூறுகிறான்: முஃமின்களிடம் மிக்க கருணையுடையவராகவும் பரிவு உடையவராகவும் இருக்கிறார். (9:108) மேலும் முஃமின்கள் பற்றிக் கூறுகிறான்: தங்களுக்கிடையே கருணையுடையவர்களாக இருப்பார்கள். (48:29)

நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி) கூறினார்கள்: மனிதர்க

ளுக்குக். கருணை காட்டாதவனுக்கு அல்லாஹ் கருணை காட்டமாட்டான். (புகாரி, முஸ்லிம்) உண்மையாளரும் உண்மைப்படுத்தப்பட்டவருமான அபுல்காசிம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: துர்ப்பாக்கியமுடையவனிடமிருந்து தான் கருணை பறிக்கப்படுகின்றது. (அஹ்மது, திர்மிதி)

**பயன்கள்:**

1- கருணை காட்டுதல் முஃமின்களின் பண்புகளில் ஒன்று.
2- மனிதர்களுக்குக் கருணை காட்டுவதென்பது அல்லாஹ்வின் கருணையில் நுழைவிக்கும் காரணங்களிலுள்ளதாகும்.
3- உள்ளத்திலிருந்து கருணை அகற்றப்பட்டுவிடுவது மனிதனின் துர்ப்பாக்கியத்திற்கு அடையாளமாகும்.

## அநியாயம் செய்யாதீர்

அல்லாஹ் கூறுகிறான்: அநியாயக்காரர்களுக்கு (மறுமை நாளில்) இரக்கம் காட்டும் நெருங்கிய நண்பனோ, ஏற்றுக் கொள்ளத்தக்க பரிந்துரையாளனோ கிடைக்க மாட்டான். (40:18)

அல்லாஹ்வின் மூலம் நபி (ஸல்) அறிவிப்பதாக அபூதர் (ரலி) கூறினார்கள்: எனது அடியார்களே! நிச்சயமாக நான் என் மீது அநியாயத்தை ஹராமாக்கிவிட்டேன். அதை உங்களுக்கிடையிலும் ஹராமாக்கிவிட்டேன். எனவே நீங்கள் (ஒருவருக்கொருவர்) அநியாயம் செய்யாதீர்கள். (முஸ்லிம்) நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) கூறினார்கள்: அநியாயம் செய்வதைப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அநியாயம் மறுமை நாளின் இருள்களாகும். (முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள் தம்மை யமனுக்கு அனுப்பியபோது, அநீதம் இழைக்கப்பட்டவனின் துஆவை நீ பயந்துகொள். நிச்சயமாக அந்த துஆவுக்கும் அல்லாஹ்வுக்குமிடையே எந்தத் திரையுமில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக முஆத் (ரலி) கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: யாரேனும் ஒருவன் தன் சகோதரனுக்கு அவனது மானமரியாதை விஷயத்திலோ ஏதேனும் ஒரு பொருளிலோ அநியாயம் செய்திருந்தால் தீனாரும் திர்ஹமும் பலன்தராத (மறுமை) நாள் வருவதற்கு முன்னால் அவனிடம் சென்று மன்னிப்பு கேட்டுக் கொள்ளட்டும். அநீதி செய்தவனிடம் நற்செயல்கள் இருந்தால் அவன் செய்த அநியாயமளவிற்கு அவனிடமிருந்து அவை எடுக்கப்படும். அவனிடம் நன்மைகள் இல்லையெனில் அநீதமிழைக்கப்பட்டவனின் தீமைகள் அவன் மீது சுமத்தப்படும். (புகாரி)

**பயன்கள்:**

1- அநீதி இழைப்பதைத் தடைசெய்தல், அது குறித்து அச்சமூட்டுதல்.
2- அநியாயம் செய்தவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் கடும் தண்டனை உண்டு.
3- அநியாயம் செய்தவனுக்கு பாதகமாக அநியாயம் இழைக்கப்பட்டவன் செய்யும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும்.

## முஸ்லிமின் உயிர் புனிதமானது

அல்லாஹ் கூறுகிறான்: ஒரு முஃமினை வேண்டுமென்றே ஒருவன் கொலை செய்து விட்டால் அவனுக்கு தண்டனை நரகமே. அதில் அவன் நிரந்தரமாக இருப்பான். அல்

லாஹ் அவன் மீது கோபம் கொள்கிறான். இன்னும் அவனை சபிக்கிறான். மேலும் அவனுக்குக் கடும் தண்டனையைத் தயாராக வைத்துள்ளான். (4:93) நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அப்துல்லாஹிப்னு மஸ்வூத் (ரலி) கூறினார்கள்: மறுமை நாளில் மனிதர்களுக்கிடையே வழங்கப்படும் முதல் தீர்ப்பு கொலைகள் பற்றியதாகும். (புகாரி, முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) கூறினார்கள்: உலகம் அழிந்துபோவது ஒரு முஸ்லிமைக் கொலை செய்வதை விட அல்லாஹ்விடத்தில் மிக அற்பமானதாகும். (நஸயீ, திர்மிதி)

**பயன்கள்:**

1- ஒரு முஸ்லிம் கொலை செய்யப்படுவது பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. முஃமினுக்கு அல்லாஹ்விடத்திலுள்ள கண்ணியம் விவரிக்கப்பட்டுள்ளது.
2- மறுமை நாளில் மனிதர்களிடையே வழங்கப்படும் முதல் தீர்ப்பு கொலைகள் பற்றியாகும் ஏனெனில் அது மிகப் பெரிய பாவமாகும்.
3- கொலைக் குற்றத்திற்கு உலகில் வழங்கப்படும் தண்டனை பழிக்குப் பழி வாங்குவதாகும். மறுமைத் தண்டனை நரகத்தில் நிரந்தரமாக வீழ்வதாகும்.

## முஸ்லிமின் உரிமைகள்

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக முஃமின்கள் அனைவரும் சகோதரர்களே. (49:10) நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அபூமூஸா(ரலி) கூறினார்கள்: கட்டடங்களில் ஒரு செங்கல் இன்னொரு செங்கலுக்கு உதவியாய் இருப்பது போல ஒரு முஃமின் இன்னொரு முஃமினுக்கு உதவியாக இருப்பான். (புகாரி) நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு சகோதரனாவான். எனவே அவனுக்கு மோசடி செய்ய வேண்டாம். அவனைப் பொய்ப்படுத்த வேண்டாம். (தேவையான) சமயத்தில் அவனுக்கு உதவாமல் இருக்க வேண்டாம். ஒரு முஸ்லிமின் மானம், உயிர், உடமை ஆகியவை மற்றொரு முஸ்லிமுக்கு ஹராமாகும். இறையச்சம் இங்கே இருக்கிறது என நபி அவர்கள் தமது இதயத்தின் பக்கம் சுட்டிக் காட்டினார்கள். ஒருவன் தன் முஸ்லிம் சகோதரனை இழிவாகக் கருதுவது அவருக்குத் தீமை நேரப் போதுமானதாகும். (திர்மிதி) நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) கூறினார்கள்: உங்களில் ஒருவர் தனக்குப் பிரியப்படுவதையே தனது சகோதரனுக்குப் பிரியப்படாத வரை உண்மை முஃமினாக ஆகமுடியாது. (புகாரி) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை அகற்றி மகிழ்வு அளித்தால் கியாமத் நாளின் கஷ்டங்களில் ஒன்றை அல்லாஹ் அவரை விட்டும் அகற்றுவான். கடனால் சிரமப்படுபவருக்கு (கடனைத் தள்ளுபடி செய்து அல்லது கூடுதலான அவகாசம் வழங்கி) யாரேனும் சலுகை வழங்கினால் இவ்வுலகிலும் மறுமையிலும் அவருக்கு அல்லாஹ் சலுகையளிக்கிறான். ஒரு முஸ்லிமின் குறையை யாரேனும் மறைத்தால் இவ்வுலகிலும் மறுமையிலும் அவரது குறையை அல்லாஹ் மறைக்கிறான். ஒரு அடியான் தன் சகோரதனுக்கு உதவும் போதெல்லாம் அல்லாஹ் அவ்வடியானுக்கு உதவுகிறான். (திர்மிதி)

**பயன்கள்:**

1- ஒரு முஃமின் மற்றொரு முஃமினுக்கு சகோதரர். அவர் சிறியவராயினும் பெரியவராயினும் ஆளுபவராயினும் ஆளப்படுபவராயினும் சரியே!
2- முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்திட வேண்டுமென்றும் ஒத்துழைப்பு தேவைப்படுபவருக்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்றும் ஆர்வமூட்டுதல்.

ஆனால் பாவமல்லாத காரியமாக இருக்க வேண்டும்.

3- தேவையுடையவருக்கு உதவி செய்வது சிறந்தது. அதன் கூலி மகத்தானது.

## அண்டை வீட்டாரின் உரிமை

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தையர்களுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டாருக்கும் அந்நிய ரான அண்டை வீட்டாருக்கும் பக்கத்திலிருக்கும் நண்பருக்கும் வழிப்போக்கர்களுக் கும் உபகாரம் செய்யுங்கள். (4:36)

அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் முஃமினாகமாட்டான்! அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் முஃமினாகமாட்டான்! அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் முஃ மினாகமாட்டான்! என நபி (ஸல்) கூறியபோது அல்லாஹ்வின் தூதரே! யாரவன்? எனக் கேட்கப்பட்டது. அதற்கு எவனுடைய தொல்லைகளை விட்டும் அண்டை வீட்டார் பாது காப்பு பெறவில்லையோ அவன் தான் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி) நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரை ரா (ரலி) கூறினார்கள்: எவர் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறாரோ அவர் தனது அண்டை வீட்டாருக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம். எவர் அல்லாஹ்வை யும் மறுமையையும் நம்புகிறரோ அவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்புகிறாரோ அவர் நல்லதை சொல்லட்டும் அல்லது மௌனமாக இருந்து கொள்ளட்டும். (புகாரி)

பயன்கள்:

1- அண்டை வீட்டாருக்கு உபகாரம் செய்வதற்கும் அவர்களுக்குத் தொல்லை கொ டுக்காமலிருப்பதற்கும் ஆர்வமூட்டப்பட்டுள்ளது.

2- ஒரு மனிதன் அண்டை வீட்டாருக்கு- அவர் முஸ்லிமல்லாதவராக இருந்தாலும் சரியே- உபகாரம் செய்வதும் தொல்லை கொடுக்காமலிருப்பதும் அவனிடம் பூரண மான ஈமான் உள்ளது என்பதற்கு அடையாயமாகும்.

## நாவின் ஆபத்து

அல்லாஹ் கூறுகிறான்: எந்தச் சொல்லையும அவன் சொல்வதில்லை, அதனைப் பாதுகாப்பதற்குத் தயாராக உள்ள ஒரு கண்காணிப்பாளர் அவனிடத்தில் இல்லாத நிலையில்! (50:18) எதைப் பற்றிய ஞானம் உனக்கில்லையோ அதைப் பின்தொடர வேண் டாம். நிச்சயமாக செவி, பார்வை, இதயம் இவை ஒவ்வொன்றைப் பற்றியும் (மறுமையில்) கேள்வி கேட்கப்படும். (17:36)

அல்லாஹ்வின் தூதரே! முஸ்லிம்களில் சிறந்தவர் யார்? என்று நான் கேட்டேன். யா ருடைய நாவை விட்டும் கையை விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்பு பெறுகிறார்களோ அவர்தான் சிறந்தவர் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூமூஸல் அஷ்அரீ (ரலி) கூறி னார்கள். (திர்மிதி) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) கூறினார்கள்: யார் இரு தாடைகளுக்கும் இரு தொடைகளுக்குமிடையே உள்ளவற்றிற்குப் பொறுப் பேற்றுக் கொள்கிறாரோ அவருக்கு நான் சுவர்க்கத்துக்குப் பொறுப்பேற்றுக் கொள்கி றேன். (புகாரி) நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன் என அபூஹுரைரா (ரலி) கூறி னார்கள்: ஒரு அடியான் நல்லதா கெட்டதா என சிந்திக்காமல் ஒரு வார்த்தையைப்

பேசிவிடுகிறான், அதன் காரணமாக நிச்சயமாக அவன் மேற்கிற்கும், கிழக்கிற்குமிடையேயுள்ள தூரத்தை விட மிகதூரமாக நரகத்தில் விழுந்துவிடுகிறான். (புகாரீ)

**பயன்கள்:**

1- நாவின் ஆபத்து, அதைத் தற்காத்துக் கொள்வதன் அவசியமும் விவரிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக ஒருவன் சிந்திக்காமல் சொல்கிற ஒரு வார்த்தையால் நரகத்தில் விழுந்து விடுகிறான். அதுபோல அல்லாஹ்வுக்கு மாறான வழிகளில் அவன் தனது நாவைப் பயன்படுத்துவது நரகம் செல்வதற்குரிய காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது. அதைப் பாதுகாத்துக் கொள்வது சுவர்க்கம் செல்வதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். மனிதர்களுக்கு அதிகமான மறதியும், கவனக் குறைவும் பயனற்ற பேச்சுக்களில் தம் நாக்குகளைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்றது.

2- நிச்சயமாக மனிதன் தனது சொல், செயல்களுக்கு கேள்வி, கணக்குக் கேட்கப்படுவான். நிச்சயமாக புலன்களில் மிக ஆபத்திற்குரியது நாவும், மர்ம உறுப்புமாகும்.

## புறம் பேசுவது ஹறாம்

அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் சிலர் சிலரைப் புறம் பேச வேண்டாம் உங்களில் எவரேனும் ஒருவர் இறந்துவிட்ட தன் சகோதரனின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? அதை நீங்களே வெறுக்கிறீர்கள். (49:10)

புறம் பேசுதல் என்றால் என்னவென நீங்கள் அறிவீர்களா? என்று நபி(ஸல்) கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வும் அவனது தூதருமே மிக அறிந்தவர்கள் எனத் தோழர்கள் கூறினர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் உன் சகோதரனைப் பற்றி அவன் விரும்பாததை நீ கூறுவதுதான் எனக் கூறினார்கள். நான் கூறுவது அவனிடம் இருந்தால் அது பற்றி என்ன எண்ணுகிறீர்களெனக் கேட்க்கப்பட்டது? நீ கூறுவது அவனிடமிருந்தால் நிச்சயமாக அவனை நீ புறம் பேசிவிட்டாய். நீ கூறுவது அவனிடம் இல்லையென்றால் நிச்சயமாக நீ அவன் மீது அவதூறு கூறிவிட்டாய் என்று நபி(ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள். (முஸ்லிம்) ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நான் நபி(ஸல்)அவர்களிடம் ஸஃபிய்யா உடைய இன்ன இன்ன விஷயங்கள் உங்களுக்குப் போதுமே! என்று (அதாவது அவர்கள் குட்டையாக இருப்பதை எண்ணிக்) கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நிச்சயமாக நீ கூறிய அந்த வார்த்தையை கடல் நீரில் கலக்கினால் அதனுடன் கலந்து நீரையே கலங்கலாக்கிவிடும் எனக் கூறினார்கள். (அபூதாவூது) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் பிற முஸ்லிமின் உயிர், மானம் மரியாதை, உடைமைகள் யாவும் கண்ணியமானவையாகும். (முஸ்லிம்) மேலும் அல்லாஹ்வையும் மறுமையையும் யார் நம்புகிறாரோ அவர் நல்லதைச் சொல்லட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அவர்கள் கூறினார்கள். (திர்மிதி) நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அபூதர் (ரலி) கூறியதாவது: யார் தன்னுடைய சகோதரனின் மானமரியாதையைக் காக்கின்றாரோ அவரது முகத்தை அல்லாஹ் மறுமையில் நரகத்தை விட்டும் காப்பான்.

**பயன்கள்:**

1- புறம் பேசுவது ஹறாம். அது பெரும்பாவங்களைச் சேர்ந்தது. புறம் பேசியவனுக்கு கடும் தண்டனை.

2- ஒருவன் வெறுக்கும் காரியத்தைக் கூறுவது புறம் பேசுவதாகும், அது ஹறாம்.

உண்மையில் அவனிடம் அது இருந்தாலும் சரியே!

3- புறம் பேசுபவனை வெறுப்பதும் அதை விட்டும் அவனைத் தடுப்பதும் அவசியமாகும். புறம் பேசுவதைக் கேட்பது ஹராமாகும். ஒரு முஸ்லிமின் மானம் மரியாதைக்கு களங்கம் செய்யப்படும் போது அதை மறுத்துரைப்பதன் சிறப்பு, அப்படிச் செய்ப வருடைய முகம் மறுமையில் நரகத்தை விட்டும் பாதுகாக்கப்படுகிறது.

4- புறம் பேசுவதென்பது ஒரு மனிதன் விரும்பாததைச் சொல்வதாகும். அல்லது சைக் கினை செய்வதாகும்.

## உண்மையின் சிறப்பும் பொய்யின் இழிவும்

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக பொய்யை இட்டுக்கட்டுவதெல்லாம் அல்லாஹ் வின் வசனங்களை நம்பாதவர்கள்தான். மேலும் அவர்கள் தான் பொய்யர்கள். (16:105) மு.:.மின்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் உண்மையாளர் களுடன் இருங்கள். (9:119) அவர்கள் அல்லாஹ்விடம் உண்மையாக நடந்திருப்பார் களானால் அது அவர்களுக்குச் சிறந்ததாக இருந்திருக்கும். (47:21)

ஹஸன் பின் அலி (ரலி) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: உனக்கு சந்தேகமாக உள்ளதை நீ விட்டு விட்டு சந்தேகமில்லாததைப் பின்பற்று. ஏனெனில் உண்மை தான் நிம்மதியைத் தரக்கூடியது, பொய் கலக்கமாகும். (திர்மதி, நஸயீ) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அறிவிப்பதாவது: நிச்ச யமாக உண்மை நன்மையின் பால் வழிகாட்டுகிறது. நன்மை சுவர்க்கத்தின் பால் வழி காட்டுகிறது. நிச்சயமாக ஒரு மனிதன் உண்மையைச் சொல்கிறான், மேலும் மேலும் உண்மையைச் சொல்வதற்கே முயற்சிக்கிறான் என்றால் இறுதியில் அல்லாஹ்விடம் அவன் மிக்க உண்மையாளன் என்று எழுதப்படுவான். நிச்சயமாக பொய் பாவத்தின் பால் வழிகாட்டுகிறது. பாவம் நரகின் பால் வழிகாட்டுகிறது. நிச்சயமாக ஒரு மனிதன் பொய் சொல்கிறான், மேலும் மேலும் பொய் சொல்லவே முயற்சிக்கிறான் என்றால் இறு தியில் மிகப் பெரும் பொய்யன் என அல்லாஹ்விடம் எழுதப்படுவான். (புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிப்பதாவது: நா ன்கு காரியங்கள் எவனிடமுள்ளதோ அவன் பச்சை நயவஞ்சகனாவான் அவற்றில் ஏதேனும் ஒன்று அவனிடத்தில் இருந்தால் அதை அவன் விடும் வரை நயவஞ்சகத் தின் ஒரு தன்மை அவனிடத்திலிருக்கும். அவை: நம்பினால் துரோகம் செய்வான், பேசி னால் பொய்யுரைப்பான், உடன்படிக்கை செய்தால் அதை முறித்துவிடுவான். விவாதித் தால் கெட்ட வார்த்தை பேசுவான். (புகாரி, முஸ்லிம்)

**பயன்கள்:**

1- பொய் சொல்வது பற்றிய எச்சரிக்கை. நிச்சயமாக அது நயவஞ்சகர்களின் தன்மை களில் ஒன்றாகும். மக்களிடையே பொய்யைப் பரப்புபவன் கடும் தண்டனைக்குரிய வன்.

2- நிச்சயமாக பொய் பாவத்தின் பால் இழுத்துச் செல்லும். அதுபோல பொய், நரகத் தில் நுழைவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்

3- உண்மையின் சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது. எல்லாக் காரியங்களிலும் உண்மை சொல்ல வேண்டுமென்று ஆர்வமூட்டப்பட்டுள்ளது.

4- நிச்சயமாக பொய் நயவஞ்சகத்தின் அடையாளங்களில் ஒன்றாகும்.

## தவ்பா-பாவமன்னிப்புத் தேடல்

அல்லாஹ் கூறுகிறான்: மு.:மின்களே! நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் பாவம ன்னிப்புக் கோருங்கள் நீங்கள் வெற்றி பெறக் கூடும். (24:31) ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள் தூய்மையான பாவமன்னிப்பாக. (66:8)

அ.:கர்ரு பின் யஸார் (ரலி) அறிவிப்பதாவது: மனிதர்களே! அல்லாஹ்விடம் பாவமன் னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக நான் ஒவ்வொரு நாளும் நூறு முறை பாவமன்னிப் புத் தேடுகிறேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) கூறினார்கள்: தன்னுடைய அடியான் பாவமன்னிப்புத் தேடுவது குறித்து அல்லாஹ் அதிகம் மகிழ்ச்சி அடைபவனாக இருக்கிறான். உங்களில் ஒருவன் தனது ஒட்டகத்தை வனாந்தரத்தில் தவறவிட்ட பிறகு திடீரென அது கிடைக்கப் பெற்ற நிலையில் அவன் அடைகின்ற மகிழ்ச்சியை விடவும் அதிகமாக! (புகாரி, முஸ்லிம்) மேலும் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: எல்லா மனிதர்களும் தவறு செய்யக் கூடியவ ர்களே. தவறு செய்யக் கூடியவர்களில் மிகச் சிறந்தவர்கள் பாவமன்னிப்புத் தேடுபவ ர்களே என நபி (ஸல்) கூறினார்கள். (திர்மிதி) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உமர் பின் கத்தாப் (ரலி) கூறினார்கள்: ஒரு அடியானுக்கு ஸகராத்துடைய நிலை வராமலிருக்கும் வரை அல்லாஹ் அவனது தவ்பாவை ஏற்றுக் கொள்கிறான். (திர்மிதி, இப்னுமாஜா) அபூமூ ஸல் அஷ்அரி (ரலி) அறிவிக்கிறார்கள்: நிச்சயமாக பகலில் பாவம் செய்தவன் மன்னிப் புக் கேட்பதற்காக அல்லாஹ் இரவில் தன் கையை விரித்து வைக்கிறான். இரவில் பாவம் செய்தவன் மன்னிப்புக் கோருவதற்காக பகலில் தன் கையை விரித்து வைக்கிறான். சூரியன் மேற்கில் உதிக்கும் வரை இவ்வாறு செய்கிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- எல்லா நேரத்திலும் தவ்பாச் செய்வது கட்டாயம். தவ்பாச் செய்வது அடியார்களின் வெற்றிக்கும், ஈடேற்றத்திற்கும் காரணமாக உள்ளது. எல்லா பாவங்களிலிருந்தும் பாவமன்னிப்புத் தேடுவது கூடும். அவை எவ்வளவு பெரியவையாக இருந்தாலும் சரியே!

2- பாவமன்னிப்புத் தேடி அல்லாஹ்வின் பக்கம் மீளுவதன் சிறப்பு! அல்லாஹ்வுடைய கருணை மற்றும் அருளின் எல்லையில்லா நிலை! அதனால் தான் அடியான் பாவம ன்னிப்புத் தேடுவது குறித்து அல்லாஹ் மகிழ்சி அடைகிறான்.

3- தவறு செய்வது மனிதனின் இயல்பு. எனினும் பாவங்களுக்காக வருந்தி மன்னிப் புத் தேடுவது அவன் மீது கடமையாகும்.

## தவ்பாவின் நிபந்தனைகளும் அதன் சில சட்டங்களும்

1- உயிர் தொண்டைக் குழியை அடைந்து, மரணம் வருவதற்கு முன் தவ்பாச் செய்து விடவேண்டும்.

2- சூரியன் மேற்கிலிருந்து உதிப்பதற்கு முன் தவ்பாச் செய்து விடவேண்டும். அவ்வாறு உதித்து விட்டால் தவ்பாச் செய்வது பயனளிக்காது.

3- ஒருவன் பாவத்தை விட்டும் உண்மையாகவே தவ்பாச் செய்த பின் மீண்டும் அப்பா வத்தை செய்தால் நிச்சயாமாக அவனது முந்தய தவ்பா ஏற்றுக் கொள்ளப்படும்.

எனினும் புதிதாகச் செய்த பாவத்திற்கு மீண்டும் ஒரு முறை தவ்பாச் செய்வது அவசியமாகும்.

4- பாவம் செய்வதை விட்டுவிட வேண்டும். நடந்துவிட்ட பாவத்திற்காக மனம் வருந்த வேண்டும். மீண்டும் பாவம் செய்யாமலிருக்க உறுதிகொள்ள வேண்டும்.

## ஸலாம் சொல்லுதல்

அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! உங்கள் வீடுகளல்லாத வேறு வீடுகளில் அவ்வீட்டிலுள்ளவர்களிடம் அனுமதி பெற்று, அவர்களிடம் ஸலாம் சொல்லாத வரை நுழையாதீர்கள். (24:27)

நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) கூறினார்கள்: நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவர்க்கம் செல்லமுடியாது நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்காத வரை முஃமின்களாக ஆக முடியாது. நான் ஒரு காரியத்தை உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? அதை நீங்கள் செய்வீர்களானால் ஒருவரையொருவர் நேசம் கொண்டவர்களாகிவிடுவீர்கள். உங்களுக்கிடையே ஸலாம் சொல்வதைப் பரவலாக்குங்கள். (முஸ்லிம்) நபி(ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் என அப்துல்லாஹ் பின் ஸலாம்(ரலி) கூறினார்கள்: மனிதர்களே! ஸலாம் சொல்வதைப் பரவலாக்குங்கள், உணவு வழங்குங்கள், சொந்தபந்தங்களுடன் இணைந்து வாழுங்கள், மக்கள் நித்திரையிலிருக்கும்போது இரவில் தொழுங்கள் சுகமாக சுவர்க்கம் செல்வீர்கள். (திர்மிதி, இப்னுமாஜா) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஒரு சபைக்குச் சென்றால் ஸலாம் சொல்லட்டும். உட்கார வேண்டுமெனத் தோன்றினால் உட்கார்ந்து கொள்ளட்டும். பிறகு எழுந்து செல்லும்போது ஸலாம் சொல்லட்டும். இரண்டாவதாகக் கூறிய ஸலாமை விட முதல் ஸலாம் மிகத் தகுதியானதன்று. (அபூதாவூது, திர்மிதி)

## சில சட்டங்கள்:

1- ஸலாம் சொல்வது சிறந்தது. நிச்சயமாக சுவர்கம் செல்வதற்குக் காரணமாக உள்ள பரஸ்பர நேசத்திற்கு இதுவே வழிவகுப்பதாக உள்ளது.

2- ஸலாமை அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் சொல்வது விரும்பத்தக்கதாகும். ஸலாம் சொல்வதென்பது அறிந்தவர்களுக்கு மட்டுமல்ல.

3- சுன்னத்தான ஸலாமிற்குரிய வார்த்தை அஸ்ஸலாமு அலைக்கும் என்பதாகும். வரஹ்மதுல்லாஹ் என்பதை அதிகப்படுத்துவது சிறந்ததது. வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு என அதிகப்படுத்துவது மிகச் சிறந்தது. ஸலாம் கூறியவருக்கு அவர் கூறியது போன்று பதிலளிப்பது கட்டாயமாகும். அதைவிட அதிகமாகக் கூறுவது விரும்பத்தக்கதாகும்.

4- காஃபிர்களுக்கு நாம் முந்திக் கொண்டு ஸலாம் சொல்வது ஹறாம். அவர்களாக நமக்கு ஸலாம் கூறினால் நாம் வஅலைக்கும் எனக் கூற வேண்டும்.

5- ஒரு சபையில் முஸ்லிம்களும் காஃபிர்களும் இருந்தால் அவர்களுக்கு ஸலாம் சொல்வது கூடும்.

6- இரு முஸ்லிம்கள் பிரிந்து சிறு இடைவெளிக்குப் பின் சந்தித்தாலும் ஸலாம் சொல்லிக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

7- வீடுகளில் அதன் உரிமையாளர்களின் அனுமதியின்றி நுழைவது விலக்கப்பட்ட காரியமாகும்.

## உண்பதன் ஒழுங்கு முறைகள்

நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) கூறினார்கள்: உங்களில் ஒருவர் சாப்பிடும்போது பிஸ்மில்லாஹ் சொல்லிக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மறந்துவிட்டால் (நினைவு வந்ததும்) بِسْمِ اللَّهِ فِى أَوَّلِهِ وَآخِرِهِ பிஸ்மில்லாஹி ஃபீ அவ்வலிஹி வஆகிரிஹி எனக் கூறிக் கொள்ள வேண்டும். பொருள்: இதன் ஆரம்பத்திற்கும் கடைசிக்கும் பிஸ்மில்லாஹ் சொல்லிக் கொள்கிறேன். (திர்மிதி, இப்னுமாஜா) (நீசாப்பிடும்போது) அல்லாஹ்வின் பெயர் கூறிக்கொள். உனது வலக்கரத்தால் சாப்பிடு. உனக்கருகிலிருப்பதிலிருந்து சாப்பிட்டுக்கொள் என நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள் என உமர் பின் அபூஸலமா (ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) கூறினார்கள்: உங்களில் எவரும் தனது இடது கையால் சாப்பிடவோ குடிக்கவோ வேண்டாம். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் இடது கையாலேயே உண்ணவும், குடிக்கவும் செய்கிறான். (முஸ்லிம்) நபி(ஸல்) அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. அவர்கள் விரும்பினால் உண்பார்கள். விரும்பமில்லையென்றால் விட்டுவிடுவார்கள் என அபூஹுரைரா (ரலி) கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

**பயன்கள்:**

1- சாப்பிடும்போது பிஸ்மில்லாஹ் கூறுவது விரும்பத்தக்கதாகும். பிஸ்மில்லாஹ்வை யாரேனும் மறந்துவிட்டால் நினைவு வருகிறபோது பிஸ்மில்லாஹி ஃபீ அவ்வலிஹி, வஆகிரிஹி எனக் கூறிக்கொள்ளவேண்டும். சாப்பிட்டு முடித்ததும்

الحمد لله الذى أطعمني هذا ورزقنيه من غير حول مني ولا قوة

அல்ஹம்துலில் லாஹில்லதீ அத்அமனீ ஹாதா வரஸகனீஹி மின்கைரி ஹவ்லிம் மின்னீ வலா குவ்வா. என்று கூறுவதும் விரும்பத்தக்கது.
பொருள்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அவனே எனக்கு இந்த உணவை அளித்தான். என்னிடமிருந்து எவ்வித முயற்சியும் சக்தியுமின்றியே இதனை எனக்கு அருளினான்.

2- இடது கையால் சாப்பிடக் கூடாது. நிச்சயமாக அது ஷைத்தானுக்கு ஒப்பாவதாகும். எனினும் நிர்ப்பந்தமுள்ளவன் இடது கையால் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

3- உணவைக் குறை கூறாமலிருப்பது சுன்னத்தாகும். எனினும் அவன் விரும்பினால் உண்ணலாம். இல்லையெனில் விட்டுவிடலாம். தெரியப்படுத்துவதற்காக அதன் குறையைக் கூறலாம்.

## மலம் ஜலம் கழித்தல்

நபி(ஸல்) அவர்கள் கழிப்பிடத்திற்குச் செல்லும்போது

اَللّٰهُمَّ اِنِّي اَعُوْذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِثِ

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் குப்ஸிவல் கபாயிஸி எனக் கூறுவார்கள் என அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).
(பொருள்: இறைவா! ஆண், பெண் ஷைத்தான்களின் தீங்கை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்)

நபி(ஸல்) அவர்கள் மல ஜலம் கழித்துவிட்டு வெளியே வரும்போது غُفْرَانَكَ "ஃகுப்ஃரானக" எனக் கூறுபவர்களாக இருந்தார்கள் என நபி(ஸல்)அவர்கள் கூறிய தாக ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (திர்மிதி, அபூதாவூது)
(பொருள்: இறைவா உன்னிடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்)

நபி(ஸல்) அவர்கள் தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் சிறுநீர் கழிப்பதைத் தடைசெய் துள்ளார்கள் என ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)அவர்கள் கூறுகிறார்கள். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- ஒரு முஸ்லிம் கழிப்பிடம் செல்லும் போது அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் குப்ஸி வல்கபாயிஸி எனவும் வெளியே வரும்போது குஃப்ரானக எனவும் கூறுவது விரும்பத்தக்கதாகும்.
2- மக்களை விட்டும் மர்மஸ்தலங்களை மறைத்துக் கொள்வது அவசியம். மலஜலம் கழிக்கும்போது மக்களை விட்டும் தூரமாகச் சென்று மறைவாக இருப்பது விரும்பத் தக்கது. கட்டிடத்துக்கு வெளியே மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக் காமலும், பின்னோக்காமலும் இருப்பதற்கு ஆர்வம்காட்டுவது கடமையாகும்.
3- மலஜல அசுத்தத்தை விட்டு விலகுவதில் கவனமாக இருப்பதும் அதற்குப் பிறகு துப்பரவு செய்வதிலும் அக்கறை கொள்வதும் அவசியமாகும்.
4- இஸ்லாமிய மார்க்கம் மல ஜலம் கழிக்கும் ஒழுக்கம் உட்பட அனைத்துக் காரியங்க ளையும் உள்ளடக்கி இருக்கும் வகையில் அது பரிபூரணமான மார்க்கம் என்பது விளக்கப்பட்டுள்ளது.

## தும்மல், கொட்டாவி

நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) கூறினார்கள்: நிச்சயமாக அல் லாஹ் தும்மலை விரும்புகிறான். கொட்டாவி விடுவதை வெறுக்கிறான். உங்களில் ஒரு வன் தும்மி(அல்ஹம்து லில்லாஹ் எனக்கூறி) அல்லாஹ்வைப் புகழ்ந்தால் அதைக் கேட் கின்ற அனைத்து முஸ்லிம்கள் மீதும் யர்ஹமுகல்லாஹ் எனக் கூறுவது கடமையாகும். ஆனால் கொட்டாவி விடுவது நிச்சயமாக ஷைத்தான் மூலமாக ஏற்படக் கூடியதாகும். எனவே உங்களில் யாரேனும் கொட்டாவி விடும்போது முடிந்த அளவு தடுத்துக் கொள் ளட்டும். உங்களில் கொட்டாவி விடுபவனைக் குறித்து ஷைத்தான் சிரிக்கிறான். (புகாரி)
நபி(ஸல்)அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என அபூமூஸல் அஷ்அரி(ரலி)கூறினார் கள்: உங்களில் ஒருவர் தும்மினால் அவர் அல்ஹம்து லில்லாஹ் எனக் கூறவும் அவ ருடைய சகோதரன் அல்லது நண்பன் யர்ஹமுகல்லாஹ் எனக் கூறவேண்டும். அவர் யர்ஹமுகல்லாஹ் எனக் கூறினால் (தும்மியவன்) யஹ்தீக்குமுல்லாஹ் வயுஸ்லிஹு பா லக்கும் எனக் கூற வேண்டும். (புகாரி) இதன் அரபி வாசகம் வருமாறு:

الْحَمْدُ لِلَّهِ ، يَرْحَمُكَ اللهُ ، يَهْدِيكُمُ اللهُ وَيُصْلِحُ بَالَكُمْ

(அல்ஹம்து லில்லாஹ்- எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! யர்ஹமுகல்லாஹ்-அல் லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக! யஹ்தீக்குமுல்லாஹ் வயுஸ்லிஹு பாலகும்- அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டி உங்கள் நிலையை சீர்படுத்துவானாக)

நபி(ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன் என அபூமூஸல் அஷ்அரி(ரலி) கூறினா ர்கள்: உங்களில் ஒருவன் தும்மி அல்ஹம்து லில்லாஹ் எனக் கூறினால் அவனுக்கு பதில் கூறுங்கள். அவன் அல்ஹம்து லில்லாஹ் எனக் கூறவில்லையானால் நீங்கள்

பதில் கூற வேண்டாம். (முஸ்லிம்) அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் தும்மினால் தம் கை அல்லது ஒரு துணியைக் கொண்டு தமது முகத்தை மூடிக் கொள்வார்கள். அதன் மூலம் தமது சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வார்கள். (அஹ்மது,திர்மிதி)

**பயன்கள்:**

1- தும்மியவர் அல்ஹம்து லில்லாஹ் எனச் சொல்வதைக் கேட்கின்ற அனைவரும் யர்ஹமுகல்லாஹ் எனக் கூறுவது விரும்பத்தக்கது.
2- அவர் அல்ஹம்து லில்லாஹ் கூறவில்லையானால் யர்ஹமுகல்லாஹ் கூற வேண்டியதில்லை.
3- கொட்டாவியை அடக்குவதும் வாயை மூடிக் கொள்வதும் விரும்பத்தக்கதாகும்.
4- கொட்டாவி விடும்போது கையை வாயில் வைத்துக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.
5- தும்மக்கூடிய நேரத்தில் கையாலோ சிறு துணியாலோ முகத்தை மூடிக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.
6- தும்மலோ, கொட்டாவியோ விடும் நேரத்தில் சப்தத்தை உயர்த்துவது வெறுக்கத் தக்கதாகும்.

## நாய் வளர்த்தல்

யாரேனும் ஒருவன் கால் நடைகள் அல்லது பயிர்களைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது வேட்டைக்காகவோ அல்லாமல் நாய் வளர்த்தால் ஒவ்வொரு நாளும் அவனது நன்மையில் ஒரு கீராத் குறைந்துவிடுகின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்) (கீராத்தென்பது பெரிய மலையளவாகும்) மேலும் அவர்கள் அறிவிப்பதாவது: உங்களில் ஒருவரின் பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால் அதை ஏழு முறை கழுவுங்கள். எட்டாவது முறை மண்ணால் கழுவுங்கள் என நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

**பயன்கள்:**

1- வேட்டைக்காகவோ கால்நடைகள் அல்லது விவசாயப் பாதுகாப்புக்காகவோ அல்லாமல் நாய் வளர்ப்பது ஹராமாகும்.
2- நாய்களை வீட்டும் வெருண்டோடுமாறும் நாய்களைத் தவிர்ந்து கொள்ளுமாறும் ஏவப்பட்டுள்ளது.
3- நாய் வாய் வைத்துவிட்ட பாத்திரத்தை ஏழு முறை கழுவி எட்டாவது முறை மண்ணால் கழுவப்பட வேண்டுமென்பதால் அது பெரும் அசுத்தம் என கடுமையாகக் கூறப்பட்டுள்ளது.

## அல்லாஹ்வை நினைவு கூர்வது

அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்யுங்கள். (62:10) ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமாக நினையுங்கள். காலையிலும் மாலையிலும் அவனைத் துதித்துக் கொண்டிருங்கள். (33:41)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூமூஸல் அஷ்அரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: தனது ரப்பைத் துதித்துக் கொண்டிருப்பவனுக்கும் அவனை துதிக்காமலிருப்பவனுக்கும் உதாரணம் உயிருள்ளவனும், உயிரற்றவனும் போன்றதாகும். (புகாரி, முஸ்லிம்) நபி

(ஸல்)அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) கூறினார்கள்: நாவுக்கு இலேசான, தராசுக்குக் கனமான, ரஹ்மானுக்குப் பிரியமான இரு வார்த்தைகள்

سبحان الله وبحمده سبحان الله العظيم

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம்" என்பதாகும். (புகாரி, முஸ்லிம்) (பொருள்: அல்லாஹ்வைப் புகழ்வதோடு அவன் தூயவன் என்றும் மகத்தானவன் என்றும் துதிக்கவும் செய்கிறேன்) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) கூறினார்கள்:

سبحان الله والحمد لله ولااله الا الله والله اكبر

"சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" என நான் கூறுவது சூரியன் எவற்றின் மீதெல்லாம் உதிக்கின்றதோ அவற்றையெல்லாம் விட எனக்குப் பிரியமானதாகும். (முஸ்லிம்) (பொருள்: அல்லாஹ் தூய்மையானவன்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை! அல்லாஹ் மிகப் பெரியவன்!) நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என ஜாபிர்(ரலி) கூறினார்கள்: திக்ரில் மிகச் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதாகும். (திர்மிதி)

## தேர்ந்தெடுக்கப்பட்ட திக்ருகள்

- தூங்கும்போது சொல்ல வேண்டியது:

بسمك اللهم اموت واحيا பிஸ்மிகல்லாஹும்ம அமூத்து வஅஹ்யா

(பொருள்: யா அல்லாஹ்! உனது பெயரைக் கொண்டே மரணிக்கிறேன் உயிர்வாழ்கிறேன்)

- தூக்கத்திலிருந்து விழிக்கும்போது சொல்ல வேண்டியது:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِي أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாதனா வஇலைஹின் நுஷூர் (பொருள்: எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! அவனே நம்மை மரணமென்னும் தூக்கத்தில் ஆழ்த்திய பின் உயிர் பெற்றெழச் செய்தான். மேலும் (நாளை மறுமையில்) மீண்டும் எழுப்பப்பட்டு அவனிடமே செல்ல வேண்டியுள்ளது)

- பயணமாகும்போது சொல்ல வேண்டியது:

بِسْمِ اللّٰهِ، اَلْحَمْدُ لِلّٰهِ سُبْحَانَ الَّذِي سَخَّرَلَنَا هٰذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِيْنَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ

பிஸ்மில்லாஹி அல்ஹம்து லில்லாஹி சுப்ஹானல்லதீ ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன் வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்.
(பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு...எல்லாப் புகளும் அல்லாஹ்வுக்கே! அவனே இந்த வாகனத்தை நமக்கு வசப்படுத்திக் கொடுத்தான். உண்மையில் அதற்கான சக்தியை நாம் பெற்றிருக்கவில்லை. மேலும் திண்ணமாக நாம் நம் இரட்சகன் பக்கமே திரும்பிச் செல்பவர்கள் ஆவோம்)

- ஓரிடத்தில் தங்கும்போது சொல்ல வேண்டியது:

أَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின் ஷர்ரிமா கலக்

(பொருள்: அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்குகளை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்)

- உளூவுக்கு முன்னர் சொல்ல வேண்டியது: பிஸ்மில்லாஹ்
- உளூவுக்கு பின்னர் சொல்ல வேண்டியது:

أَشْهَدُ أَنْ لا إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என ஹதீஸில் வந்த துஆவை ஓத வேண்டும்.

(பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி சொல்கிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. மேலும் முஹம்மது நபி(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி சொல்கிறேன்)

- வீட்டிலிருந்து புறப்படும்போது சொல்ல வேண்டியது:

بِسْمِ اللّهِ تَوَكَّلْتُ عَلَى اللّهِ وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللّهِ

பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி வலாஹவ்ல வலாகுவ்வத இல்லாபில்லாஹ்

(பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு...! அவனையே நான முழுவதும் சார்ந்திருக்கிறேன். அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர எதிலிருந்தும் தப்பிப்பதற்கான சக்தி கிடையாது, எதுவும் செய்ய முடியாது)

- வீட்டிற்குள் நுழையும்போது சொல்ல வேண்டியது:

بِسْمِ اللّهِ وَلَجْنَا وَبِسْمِ اللّهِ خَرَجْنَا وَعَلَى رَبِّنَا تَوَكَّلْنَا

பிஸ்மில்லாஹி வலஜ்னா வபிஸ்மில்லாஹி கரஜ்னா வஅலா ரப்பினா தவக்கல்னா

(பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டே நுழைகின்றோம், அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டே புறப்படுகின்றோம், எங்களின் இரட்சகன் மீதே நம்பிக்கை வைத்துள்ளோம்)

- நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்ல வேண்டிய முறை:

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَ عَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ
إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ، اَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ
وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيد

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமாஸல்லைத்த அலாஇப்ராஹீம வஅலா ஆலிஇப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமாபாரக்த அலாஇப்ராஹீம வஅலா ஆலிஇப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.

(பொருள்: யா அல்லாஹ்! முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் கருணை பொழிவாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் நீ கருணை பொழிந்தது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். யா அல்லாஹ்! முஹம்மது(ஸல்)அவர்கள் மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் அருட்பேருகள் பொழிவாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் நீ அருட்பேருகள் பொழிந்தது போன்று. நிச்சயமாக நீ

**புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன்)**

- **காலையில் சொல்ல வேண்டியவை:**

اَللّٰهُمَّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوتُ وَاِلَيْكَ النُّشُورُ

**அல்லாஹு ம்ம பிக அஸ்பஹ்னா வபிக அம்ஸைனா வபிக நஹ்யா வபிக நமூத்து வஇலைகன் நுஷூ ர்**

**(பொருள்: இறைவா! உன் பெயரைக் கொண்டு காலைப் பொழுதில் நாங்கள் ஆகி விட்டோம். உன் பெயரைக் கொண்டே மாலைப் பொழுதில் ஆனோம். மேலும் உன் பெயரைக் கொண்டே நாங்கள் உயிர் வாழ்கிறோம். உன் பெயரைக் கொண்டே நாங்கள் மரணமாவோம். மேலும் எழுப்பப்படுவதும் உன் பக்கமேயாகும்)**

- **மாலையில் சொல்ல வேண்டியவை:**

اَللّٰهُمَّ بِكَ أَمْسَيْنَا وَبِكَ أَصْبَحْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوتُ وَإِلَيْكَ الْمَصِيرُ.

**அல்லாஹு ம்ம பிக அம்ஸைனா வபிக அஸ்பஹ்னா வபிக நஹ்யா வபிக நமூத்து வஇலைகல் மஸீர்**

**பொருள்: இறைவா! உன் பெயரைக் கொண்டே மாலைப் பொழுதில் நாங்கள் ஆகிவிட்டோம். உன் பெயரைக் கொண்டே காலைப் பொழுதில் ஆனோம். மேலும் உன் பெயரைக் கொண்டே நாங்கள் உயிர் வாழ்கிறோம். உன் பெயரைக் கொண்டே நாங்கள் மரணமாவோம். மேலும் திரும்பி வருவதும் உன் பக்கமேயாகும்.**

## நண்பன்

**அல்லாஹ் கூறுகிறான்: அந்த நாள் வந்து விடும்பொழுது இறையச்சத்துடன் வாழ்ந்தவர்களைத் தவிர ஏனைய நண்பர்கள் அனைவருமே ஒருவருக்கொருவர் பகைவர்களாகிவிடுவார்கள் (43:67) அநியாயம் செய்து விட்டவன் அன்றைய (கியாம) நாளில் தனது இரு கைகளைக் கடித்துக் கொண்டு எனக்கு வந்த கைசேதமே! அல்லாஹ்வின்தூதருடன் ஒரு வழியை நான் எடுத்திருக்கக் கூடாதா? எனக்கு வந்த கைசேதமே! (என்னை வழி கெடுத்த) இந்த மனிதனை நான் நண்பனாக ஆக்கிக் கொள்ளாதிருந்திருக்க வேண்டுமே! நிச்சயமாக அவன் நேரான வழி என்னிடம் வந்த பின்னும் அதிலிருந்து என்னை வழிகெடுத்து விட்டானே எனக்கூறுவான். மேலும் ஷைத்தான் மனிதனுக்கு மிக சதி செய்பவனாகிவிட்டான். (25:27-29) அவர்கள் ஒருவர் மற்றவரின் பக்கம் முன்னோக்கி நிலமைகளை விசாரிப்பார்கள். அவர்களில் ஒருவர் கூறுவார்: (உலகில்) "எனக்கு ஒரு நண்பன் இருந்தான். 'என்ன, உண்மை என ஏற்றுக் கொள்பவரில் நீயும் ஒருவனா? நாம் இறந்து மண்ணோடு மண்ணாகி எலும்புக் கூடுகளாய் ஆன பின்னரும் திண்ணமாக நமக்கு கூலியும் தண்டனையும் வழங்கப்படுமா? - என்றெல்லாம் அவன் என்னிடம் வினவிக் கொண்டிருந்தான். (இப்போது அவன் எங்கிருக்கிறான் என்பதை) நீங்கள் காண விரும்புகின்றீர்களா?" இவ்வாறு கூறிக்கொண்டே அவர் குனிவார். அப்போது நரகின் ஆழத்தில் அவனைக் கண்டு கொள்வார். மேலும் அவனை நோக்கிக் கூறுவார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயம் நீ என்னை அழித்துவிடவே முனைந்தாய். எனது இறைவனின் அருள் இல்லாதிருந்தால் நானும் (நரகத்திற்கு) கொண்டு வரப்பட்டவர்களில் ஒருவனாக இருந்திருப்பேன். (37:50-57)**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தில் இருப்பான். எனவே உங்களில் ஒருவர் யாருடன் நட்பு கொள்வதென சிந்தித்துப் பார்த்துக் கொள்ளட்டும். (அபூதாவூது,திர்மிதி) மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் நிழலைத் தவீர வேறு நிழலே இல்லாத நாளில் அல்லாஹ் தன் அர்ஷின் நிழலின் கீழ் ஏழு நபர்களுக்கு நிழல் கொடுப்பான்: இறைவனுக்காக நேசம் கொண்டு அதற்காகவே ஒன்று சேரக்கூடிய, அதற்காகவே பிரியக்கூடிய இரு மனிதர்கள்... (புகாரீ,முஸ்லிம்)

**பயன்கள்:**

1- ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நண்பன் இருப்பது அவசியமாகும். எனவே நன்மையின் பால் வழிகாட்டக் கூடிய அதற்கு உதவி செய்யக்கூடிய நல்ல நண்பனை அடைந்திட நீ முயற்சி செய்துகொள்.

2- நிச்சயமாக நண்பன் இறைவனுக்கு மாறு செய்வதற்கும் இறைநிராகரிப்பிற்கும் உன்னை இழுத்துச் செல்பவனாக இருந்தால் அவனே விரோதிகளில் மிகக்கெட்ட விரோதியாவான்.

3- காஃபிர்களை நண்பர்களாக்கிக் கொள்வது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள், முஸ்லிம்கள் இறைவனுக்கு வழிப்பட விடாமல் நன்மைகளைச் செய்யவிடாமல் முஸ்லிம்களைத் தடுப்பார்கள்.

## பொறுமை

அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! நீங்கள் பொறுமையாக இருங்கள். (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள். (3:200) நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு பயத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் சோதிப்போம் (இந்த நிலைகளில்) பொறுமையை மேற்கொள்பவர்களுக்கு (நபியே!) நற்செய்தி கூறுங்கள். (2:155)

நபி(ஸல்) அவர்கள் கூறியதாகச் சுஹைப் பின் ஸினான்(ரலி) கூறினார்கள்: முஃமினுடைய எல்லா காரியங்களும் அவனுக்கு நன்மை பயப்பதாகவே உள்ளன. அவனுக்கு நன்மை ஏற்பட்டு அதற்காக நன்றி செலுத்தினால் அதுவும் அவனுக்கு நன்மைதான். அவனுக்குத் தீங்கு ஏற்பட்டு அதற்காக அவன் பொறுத்துக் கொண்டால் அதுவும் அவனுக்கு நன்மைதான். முஃமினுக்கு கிடைத்த இந்த நிலை மிகவும் ஆச்சரியமானதே! (முஸ்லிம்) அனஸ்(ரலி) கூறினார்கள்: என்னுடைய அடியானை அவனுக்குப் பிரியமான இரண்டு கண்களை நான் பறித்துக் கொள்வதன் மூலமாக சோதித்தால் அதை பொறுத்துக் கொண்டால் அவ்விரண்டிற்குப் பகரமாக சுவர்க்கத்தைக் அவனுக்கு கொடுப்பேன் என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (புகாரீ) நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) கூறினார்கள்: ஒரு முஸ்லிமுக்கு கஷ்டம், நோய், துயரம், நோவினை, கவலை, அவனது உடலை முள் தைத்தல் உட்பட்ட எந்தத் துன்பங்கள் ஏற்பட்டாலும் நிச்சயமாக அல்லாஹ் அவற்றின் மூலமாக அவனுடைய பாவங்களை அழித்து விடுகிறான். (புகாரீ,முஸ்லிம்) மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி)கூறினார்கள்: முஃமினான ஆண்களும், முஃமினான பெண்களும் தம் உயிர், பிள்ளைகள், செல்வம் ஆகியவற்றில் சோதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் எந்தக் குற்றமும் அற்றவர்களாக அல்லாஹ்வைச் சந்திக்கும் வரை. (திர்மிதி)

**பயன்கள்:**

1- எல்லாக் காரியங்களிலும் பொறுமை மேற்கொள்வதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது. கோபம் கொள்வது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது. நிச்சயம் கோபம் சோதனையின் கூலியைப் போக்கிவிடுகிறது.
2- ஒரு முஸ்லிமுக்கு சோதனைகள் ஏற்படுவதால் பாவங்கள் அழிக்கப்படுகின்றன.
3- வழிபாடுகளை நிறைவேற்றுவதிலும் பாவங்களை விடுவதிலும் பொறுமையாகயிருப்பது மிகச் சிறந்த பொறுமையாகும்.
4- தனக்கென இறைவன் பங்கிட்டுக் கொடுத்ததை முஸ்லிம் திருப்தி கொள்வது அவசியமாகும். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாகவும் நுண்ணறிவு உடையவனாகவும் இருக்கிறான். அடியார்களின் நலன்களை அவனே மிக்க அறிந்தவனாக இருக்கிறான்

# இறுதி நாள்
# اليوم الآخر

அகிலத்தார்களைப் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனுக்கே புகழனைத்தும். கருணையும் ஈடேற்றமும் நபிமார்கள் ரஸூல்மார்கள் அனைவரினும் மிகச் சிறந்தவர்களான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

நிச்சயமாக மறுமை நாளை நம்புவது ஈமானின் அடிப்படைகளிலும் அதன் ஆறு கடமைகளிலும் ஒன்றாகும். எனவே மறுமை தொடர்பாக இறைவேதத்திலும் ஆதாரப்பூர்வமான நபிவழிகளிலும் வந்தவற்றை நம்பாதவரை ஒருவன் இறை விசுவாசியாக ஆக முடியாது. நிச்சயமாக மறுமை நாளை அறிந்து, அதை அதிகமாக நினைவு கூருவது மனித வாழ்க்கையைச் சீர்படுத்துதல், இறையச்சத்தை ஏற்படுத்துதல், இறைமார்க்கத்தில் உறுதி கொள்ளல் போன்ற பல நன்மைகளுக்கு வழிகோலும். எனவே மறுமை நாளின் அமளிகள், கடுமைகள் குறித்து பராமுகமாக இருப்பதுதான் பெருமளவில் மனிதனின் உள்ளத்தைக் கல்லாக்கி அவனைப் பாவங்கள் புரிந்திட தூண்டக்கூடியதாக உள்ளது.

மறுமை நாள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: அந்நாள் குழந்தைகளை நரைக்கச் செய்துவிடும். (73:17) மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனைப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக இறுதி நாளின் அதிர்ச்சி மகத்தான பெரும் நிகழ்ச்சியாகும். அந்நாளில் பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தான் பாலூட்டும் குழந்தையை மறந்து விடுவதையும் ஒவ்வொரு கர்ப்பிணியும் தான் சுமந்திருக்கும் குழந்தையைப் பெற்றெடுத்து விடுவதையும் நீங்கள் காண்பீர்கள். இன்னும் மனிதர்களை மதி மயங்கியவர்களாகக் காண்பீர்கள். அவர்கள் (மதுவில்) மயங்கியவர்களல்லர். எனினும் அல்லாஹ்வின் வேதனை மிகக் கடுமையானதாகும். (22:1,2)

## மரணம்

மரணம் இவ்வுலகில் உயிருள்ளோரின் இறுதிக்கட்டமாகும். அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுகித்தே தீர வேண்டும். (3:185) பூமி மீதுள்ள எல்லோரும் அழிந்துபோகக் கூடியவர்களே. (55:26) நபி (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) நிச்சயமாக நீரும் மரணிக்கக் கூடியவரே இன்னும் அவர்களும் மரணிக்கக் கூடியவர்களே. (39:30)

இவ்வுலகம் எந்த மனிதருக்கும் நிரந்தரமானதல்ல. அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உமக்கு முன்னால் எந்த மனிதருக்கும் நாம் நிரந்தர வாழ்க்கையை ஏற்படுத்தவில்லை. (21:34)

1- மரணம் என்பது சந்தேகத்திற்கு வழியில்லாத உறுதியான விஷயமாகும். இவ்வாறிருந்தும் மனிதர்களில் பெரும்பாலோர் இதை மறந்திருக்கின்றனர். ஒரு முஸ்லிம் மரணத்தை அதிகமாக நினைப்பதும் மரணத்தைச் சந்திக்கத் தயாராக இருப்பதும் அவசியமாகும். இதுபோன்றே அவன் தன் மறுமை வாழ்விற்காக இவ்வுலக வாழ்வில் அதற்குரிய நேரம் வருவதற்கு முன்னர் நற்செயல்களைச் செய்து தயாராகிக் கொள்வது அவசியமாகும். நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐந்து நிலைமைகள் ஏற்படுவதற்கு முன் ஐந்து நிலைமைகளைப் பேணிக்கொள். மரணத்திற்கு முன்

வாழ்வையும், நோய் வரும் முன் ஆரோக்கியத்தையும், வேலைக்கு முன் ஓய்வை யும், வயோதிகத்திற்கு முன் வாலிபத்தையும், ஏழ்மைக்கு முன் செல்வத்தையும் பே ணிக்கொள்.

உலகிலிருந்து எந்தப் பொருளும்- மரணித்துவிட்டவனுடன் அவனுடைய மண்ண றைக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. நிச்சயமாக அவனுடன் தங்கியிருப்பது அவ னுடைய செயல்கள் மட்டுமே. எனவே நற்செயல்களைச் சித்தப்படுத்திக் கொள்வ தில் நீ அக்கறை கொள். அதன் மூலம் தான் நீடித்த நற்பாக்கியத்தை நீ அடைய முடியும். அல்லாஹ்வின் உதவியால் வேதனையிலிருந்து ஈடேற்றமும் பெற முடியும்.

2- தெரிந்து கொள்: மனிதனின் வாழ்க்கைத் தவணை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாத அளவு தெளிவில்லாத விஷயமாகும். எனவே யார் எப்போது எந்த இடத்தில் மரணமடைவார் என்பதை யாரும் அறிய முடியாது. திண்ணமாக இது அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த மறைவான ஞானங்களுள் ஒன்றாகும்.

3- மரணம் வந்து விட்டால் அதைத் தடுக்கவோ பிற்படுத்தவோ அதை விட்டும் வெரு ண்டோடவோ முடியாது. அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொரு சமுதாயத்தவர்களுக் கும் ஒரு தவணை உள்ளது அவர்களின் தவணை வந்துவிட்டால் அவர்கள் சிறிது நேரம் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள். (7:34)

4- ஒரு முஃமினுக்கு மரணம் வந்துவிட்டால் நறுமணம் வீசுகின்ற அழகிய தோற்றத்து டன் மலக்குல் மௌத்- உயிரைக் கைப்பற்றும் வானவர் அவனிடம் வருகிறார். அவ ருடன் சுவர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறும் அருளுக்குரிய மலக்குகளும் வருகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: எவர்கள் எங்கள் இறைவன் அல்லாஹ்தான் எனக் கூறி பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நிற்கின்றார்களோ அவர்களிடம் மலக்குகள் இறங்கி வந்து நீங்கள் பயப்படாதீர்கள், கவலையும்படாதீர்கள், உங் களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள் எனக் கூறுவார்கள். (41:30)

ஆனால் காஃபிருக்கு மரணம் வந்தால் நாற்றமுள்ள கருமுகமுடைய, பயமுறுத் தும் தோற்றமுள்ள மலக்கு வருவார். வேதனை பற்றி எச்சரிக்கை செய்யக் கூடிய மலக்குகளும் அவருடன் வருவார்கள். அல்லாஹ் கூறுகிறான்: அநியாயக்காரர்கள் மரண வேதனையிலிருக்கும்போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், மலக்குகள் தம் கைகளை நீட்டி உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள். இன்று உங் களுக்கு இழிவு தரும் வேதனைதான் கூலியாகக் கொடுக்கப்படும். ஏனெனில் நீங் கள் அல்லாஹ்வின் மீது உண்மையல்லாததைத்தான் கூறிக் கொண்டிருந்தீர்கள். இன்னும் அவனுடைய வசனங்களை (ஏற்றுக்கொள்வதை) விட்டும் பெருமை அடித் துக்கொண்டிருந்தீர்கள் (என்று கூறுவார்கள்) (6:93)

எனவே மரணம் வந்துவிட்டால் எல்லா மனிதர்களுக்கும் தமது உண்மை நிலை வெளிப்பட்டு விஷயம் தெளிவாகிவிடும். அல்லாஹ் கூறுகிறான்: அவர்களில் எவருக் கேனும் மரணம் வந்துவிடுமானால் என் இறைவனே! என்னை (உலகிற்கு) த்திருப்பி அனுப்பிவிடு நான் விட்டு வந்ததில் நல்லதைச் செய்வதற்காக எனக் கூறுவான். அவ்வாறில்லை நிச்சயமாக அது அவன் கூறும் அர்த்தமற்ற வார்த்தையாகும். அவர் கள் எழுப்பப்படும் நாள் வரை அவர்கள் முன்னே ஒரு திரை இருக்கிறது. (23:99,100) எனவே மரணம் வந்துவிட்டால் காபிஃரும், பாவியும் நல்ல காரியங்கள் செய்வதற்

காக உலகத்திற்குத் திரும்ப வருவதை விரும்புவார்கள். எனினும் நேரம் தவறிவிட்ட பின் கைசேதப்படுவது எந்தப் பலனுமளிக்காது. அல்லாஹ் கூறுகிறான்: அநியாயக்காரர்கள் வேதனையைக் காணும்போது (இதிலிருந்து) தப்பித்து மீள்வதற்கு ஏதேனும் வழியுண்டா? என்று அவர்கள் கூறும் நிலையை நீர் காண்பீர். (42:44)

5- மரணமடையும் முன் யாருடைய கடைசி வார்த்தை 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என ஆகிவிடுகின்றதோ நிச்சயமாக அவர் சுவர்க்கம் செல்வார் என்பது அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்குச் செய்த கிருபையாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: உலகை விட்டுப் பிரியக்கூடிய ஒருவனின் கடைசி வார்த்தை 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்றாகிவிடுமானால் அவன் சுவர்க்கம் செல்வான். (அபூதாவூது) ஏனெனில் அந்த கஷ்டமான நேரத்தில் இந்த வார்த்தையைச் சொல்வதற்கு எந்த மனிதனாலும் முடியாது தூய்மையாக நடந்து கொண்டவனைத் தவிர! தூய்மையாக நடந்து கொள்ளாதவன் மரண மயக்கத்தில் அவனுக்கு ஏற்படுகின்ற சிரமத்தால் இவ்வார்த்தையைச் சொல்வதை விட்டும் கவனமற்றவனாகிவிடுவான். எனவே தான் மரண நேரத்தை அடைந்தவனுக்கு அங்கு இருக்கக்கூடியவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் எனச் சொல்லிக் கொடுப்பது நபிவழியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மண்ணறை

நபி(ஸல்) கூறினார்கள்: மனிதன் மண்ணறையில் வைக்கப்பட்டு அவனுடைய நண்பர்கள் அவனை விட்டும் திரும்பிச் செல்லும்போது அவன் அவர்களின் செருப்பின் ஓசையைக் கேட்பான். இரு மலக்குகள் அவனை உட்காரவைத்து (ஒரு மனிதரைக் காண்பித்து) இம்மனிதரைப்பற்றி நீ என்ன கூறிக்கொண்டிருந்தாய்? என அவனிடம் கேட்பார்கள். ஒரு முஃமின், இவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனின் திருத்தூதருமாவார் என நான் சாட்சி கூறினேன் என்று கூறுவான். நரகத்தில் உனது இருப்பிடத்தைப் பார். இதற்குப் பகரமாக சுவர்க்கத்தில் ஒரு இருப்பிடத்தை அல்லாஹ் உனக்கு ஏற்படுத்திவிட்டான் என அவனிடம் கூறப்படும். அவ்விரண்டையும் அவன் பார்ப்பான். ஒரு காஃபிர் அல்லது நயவஞ்சகனிடம் இம்மனிதரைப்பற்றி நீ என்ன கூறிக் கொண்டிருந்தாய்? எனக் கேட்கப்படும். அதற்கவன், எனக்குத் தெரியாது மக்கள் கூறியதைக் கூறிக்கொண்டிருந்தேன் எனக் கூறுவான். அப்போது அவனிடம் நீ அவரை அறிந்து கொள்ளவுமில்லை, பின்பற்றவுமில்லை எனக் கூறப்படும். பிறகு அவன் மீது இரும்புச் சம்மட்டியால் ஓங்கி அடிக்கப்படும். அப்போது அவன் சப்தமிடுவான். அதை மனிதர்களையும் ஜின்களையும் தவிர அனைவரும் கேட்பார்கள். (நஸயீ)

மண்ணறையில் உடலுக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்படும் என்பது உலகில் மனித அறிவு விளங்கிக் கொள்ள முடியாத மறுமை விஷயமாகும். மனிதன் மண்ணறையில் நற்பாக்கியத்திற்குத் தகுதியானவனாக இருந்தால் நற்பாக்கியம் வழங்கப்படுவான். வேதனைக்குத் தகுதியானவனாகயிருந்தால் வேதனை செய்யப்படுவான் என்ற விஷயத்தில் முஸ்லிம்கள் ஏகமனதாக உறுதி கொண்டுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்: காலையிலும் மாலையிலும் அவர்கள் நரக நெருப்பு முன் கொண்டு வரப்படுவார்கள். மேலும் மறுமைநாள் வந்துவிடும்போது ஃபிர் அவ்னின் கூட்டத்தாரை கடினமான வேதனையில் புகுத்துங்கள் எனக் கூறப்படும். (40:46) மண்ணறை வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

தெளிவான அறிவு மண்ணறை வேதனையை மறுக்காது. காரணம் இதுபோன்ற நிலையை மனிதன் தன் வாழ்வில் பார்க்கத்தான் செய்கிறான். உதாரணமாக தூங்

கக்கூடிய ஒருவன் கனவில் கடினமாக வேதனை செய்யப்படுவதாக உணர்ந்து சப்தமிடுகிறான், உதவியும் தேடுகிறான். ஆனால் அவனுக்கு அருகிலிருப்பவன் இதை உணர்வதில்லை. உயிரோடு உறங்கக்கூடியவனுடைய வேதனையையே அருகிலிருப்பவன் உணரமுடியவில்லை என்பதுபோல மரணித்தவனின் மண்ணறை வேதனையை உயிருள்ளவன் நேரடியாக உணர முடியாது. மண்ணறை வேதனை உடலுக்கும் உயிருக்கும் அளிக்கப்படுவதேயாகும். நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மண்ணறை மறுமையின் தங்குமிடங்களில் ஆரம்ப இடமாகும். இதிலிருந்து ஒருவன் ஈடேற்றம் பெற்றுவிட்டால் இதற்குப் பின்னுள்ளவை இதை விட எளிதானதாகும். இதிலிருந்து ஈடேற்றம் பெறாவிட்டால் இதற்குப் பின்னுள்ளவை இதை விட மிகக் கடினமானதாகும். (திர்மதி) எனவே மண்ணறை வேதனையிலிருந்து முஸ்லிம்கள் பாதுகாப்புத் தேடுவது அவசியமாகும். குறிப்பாக தொழுகையில் ஸலாம் கொடுப்பதற்கு முன் அதை விட்டும் பாதுகாவல் தேடுவது அவசியமாகும்.

இவ்வாறே நரகத்திலும் மண்ணறையிலும் வேதனை செய்யப்படுவதன் முதற் காரணமான பாவங்களிலிருந்து தூரமாகுவதற்கு முயல வேண்டும். இதற்கு மண்ணறை வேதனையென சொல்லப்படுவதற்குரிய காரணம் பெரும்பாலும் மக்கள் மண்ணறையில் தான் அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்பதாகும். ஆனால் தண்ணீரில் மூழ்கியவர்கள், நெருப்பில் எரிந்துபோனவர்கள், மிருகங்களால் தின்னப்பட்டவர்கள், இன்னும் இதுபோன்றவர்கள் திரைமறைவான பர்ஸக்- எனும் உலகில் வேதனை செய்யப்படுவார்கள்அல்லது நற்பாக்கியம் வழங்கப்படுவார்கள்.

மண்ணறை வேதனை என்பது இரும்பாலான அல்லது வேறு ஏதாவது சம்மட்டியால் அடிக்கப்படுவது அல்லது அந்த மய்யித்தின் விலா எலும்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணையும் அளவிற்கு நெருக்கப்படுவது, மண்ணறையில் இருள் நிரப்பப்படுவது, நெருப்பாலான விரிப்பு விரிக்கப்படுவது, நரகிலிந்து ஒரு வாசல் திறந்து வைக்கப்படுவது, அவனின் தீய செயல்கள் துர்நாற்றமுள்ள, அருவருப்பான முகமுடைய மனிதன் போன்று உருவெடுத்து அவனுடன் அமர்ந்திருப்பது, இப்படிப் பல வகைகள் உள்ளன.

அடக்கம் செய்யப்பட்ட மனிதன் கா∴பிராகவோ, நயவஞ்சகனாகவோ இருந்தால் வேதனை நிரந்தரமாக இருக்கும். பாவியான மு∴மினாக இருந்தால் அவனது பாவம் அளவிற்கு வேதனை மாறுபாடும். சிலசமயம் வேதனை நிறுத்தப்படும். ஆனால் மு∴மின், மண்ணறையில் அருள் பாலிக்கப்படுவான். அதாவது அவனது மண்ணறை விசாலமாக்கப்பட்டு ஒளி நிரப்பப்படும். சுவர்க்கவாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அதன் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். சுவர்க்கத்தின் விரிப்பு விரிக்கப்படும். அவனது நற்செயல் அழகிய மனித வடிவில் உருவெடுத்து மண்ணறையில் அவனை மகிழ்விக்கும்.

## இறுதி நாளும் அதன் அடையாளங்களும்

**1- அல்லாஹ் இவ்வுலகத்தை நிரந்தரமாக இருப்பதற்காக படைக்கவில்லை. மாறாக அதற்கென முடிவு நாள் வரும். அந்நாளே மறுமை ஏற்படக்கூடிய நாளாகும். அது ஐயத்திற்கிடமில்லாத உண்மையுமாகும். அல்லாஹ் சொல்கிறான்: நிச்சயமாக இறுதி நாள் வந்தே தீரும் அதில் சந்தேகமில்லை. (40:59) நிராகரிப்பாளர்கள் இறுதி நாள் எங்களிடம் வராமலிருக்கிறதே? எனக் கேட்கிறார்கள் (நபியே!)நீர் கூறும்: ஆம்! என் இறைவனின் மீது சத்தியமாக நிச்சயமாக அது உங்களிடம் வரும். (34:3)**

இறுதிநாள் சமீபமானதே. அல்லாஹ் கூறுகிறான்: இறுதிநாள் நெருங்கிவிட்டது. (54:1) மனிதர்களுக்கு அவர்களுடைய கணக்கு (விசாரணை நாள்) நெருங்கிவிட்டது. ஆனால் அவர்களோ அதைப் புறக்கணித்து பராமுகமாக இருக்கிறார்கள். (21:1)

எனினும் அது நெருக்கமாக இருக்கிறதென்பது மனித அறிவால் அறிந்து கொள்ளக் கூடிய விஷயமல்ல. அதை அவர்கள் அறிந்து கொள்ளவும் முடியாது. எனினும் அல்லாஹ்வின் விசாலமான அறிவையும் உலகத்தில் கடந்துவிட்ட கால அளவையும் கவனிக்கும்போது மறுமைநாள் சமீபமானது என அறியலாம். மறுமை பற்றிய அறிவு அல்லாஹ் தனக்கே சொந்தமாக்கிக் கொண்ட மறைவான விஷயங்களிலுள்ளதாகும். அவன் இவ் விஷயத்தை தன்னுடைய படைப்புகளில் எவருக்கும் அறிவித்துக் கொடுக்கவில்லை. அல்லாஹ் கூறுகிறான்: மக்கள் உம்மிடம் மறுமை நாள் பற்றிக் கேட்கிறார்கள். நிச்சயமாக அது பற்றிய அறிவு அல்லாஹ்விடமே இருக்கிறதென நீர் கூறுவீராக! அதை நீர் அறிவீரா? அது சமீபமாக வந்துவிடலாம். (33:63)

நபி(ஸல்) அவர்கள் இறுதி நாள் நெருங்கிவிட்டதை அறிவிக்கக்கூடிய அடையாளங்களைக் கூறியுள்ளார்கள். அவை: தஜ்ஜால் வருவது, அவனுடைய வருகை மக்களுக்கு மிகப் பெரும் குழப்பமாக அமையும். மக்களில் பெரும்பாலோர் ஏமாந்து போகுமளவிற்கு சில அற்புதங்களைச் செய்து காட்டுவதற்கு அல்லாஹ் அவனுக்கு சக்தி வழங்குவான். அதாவது வானத்திற்கு தஜ்ஜால் உத்தரவு போடுவான். அது மழை பொழியும். புற்பூண்டுகளை முளைவிக்கும்படி பூமிக்கு ஆணையிடுவான். அது அவற்றை முளைவிக்கும். இறந்தவனை உயிர்ப்பிப்பான். இன்னும் இதுபோன்ற அற்புதங்களைச் செய்வான். அவனைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவன் ஒற்றைக் கண்ணன். சுவர்க்கம், நரகம் போன்றதைக் கொண்டு வருவான். அவன் எதை சுவர்க்கம் என்று கூறுவானோ அது நரகமாகும். அவன் எதை நரகமென்று கூறுவானோ அது சுவர்க்கமாகும். அவன் பூமியில் நாற்பது நாட்கள் இருப்பான். அதில் ஒரு நாள் ஒரு வருடம் போன்றும் ஒரு நாள் ஒரு மாதம் போன்றும் ஒரு நாள் ஒரு வாரம் போன்றும் ஏனைய நாட்கள் சாதரண நாட்கள் போன்றுமிருக்கும். பூமியில் மக்கா, மதீனாவைத் தவிர அவன் நுழையாத இடங்களே இருக்காது.

மேலும் மறுமையின் அடையாளங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது சுபுஹுத் தொழுகை நேரத்தில் டமாஸ்கஸின் கிழக்குப் பகுதியிலுள்ள வெள்ளை மனாராவிலிருந்து ஈஸா (அலை) அவர்கள் இறங்கி வருவார்கள். அவர்கள் சுபுஹுத் தொழுகையை மக்களுடன் தொழுவார்கள். அதன் பின் தஜ்ஜாலை தேடிச் சென்று கொன்று விடுவார்கள். சூரியன் மேற்கில் உதிப்பதும் இறுதி நாளின் அடையாளமாகும். அதை மக்கள் காணும்போது நடுங்கி ஈமான் கொள்வார்கள். எனினும் அவர்களின் ஈமான் அவர்களுக்குப் பலனளிக்காது. இறுதி நாளுக்கு மேலும் பல அத்தாட்சிகள் உண்டு.

2- இறுதி நாள் தீய மனிதர்கள் மீதே ஏற்படும். அதாவது இறுதி நாள் ஏற்படும் முன் முஃமின்களின் உயிர்களைக் கைப்பற்றக் கூடிய தூய்மையான காற்றை அல்லாஹ் அனுப்பி வைப்பான். அதன் பின்னர் அல்லாஹ் எல்லாப் படைப்பினங்களையும் மரணிக்கச் செய்து இவ்வுலகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாடினால் சூர் ஊதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மலக்கிடம் அதில் ஊதும்படி ஏவுவான். (சூர் என்பது ஒரு பெரும் கொம்பாகும்) மக்கள் அந்த சப்தத்தைக் கேட்டவுடன் மடிந்து வீழ்வார்கள். அல்லாஹ் கூறுகிறான்: சூர் ஊதப்படும். அப்போது அல்லாஹ் நாடியவர்க ளைத் தவிர வானம், பூமியிலுள்ள அனைவரும் மடிந்து வீழ்வார்கள். (39:68) இது வெள்ளிக்கிழமை

ஏற்படும். அதன் பின்னர் மலக்குகள் அனைவரும் மரணித்துவிடுவார்கள். அல்லாஹ் வைத் தவிர வேறு எவரும் இருக்க மாட்டார்கள்.

3- மனிதனின் உடலனைத்தும் அழிந்துவிடும். மனிதனின் முதுகந்தண்டின் கடைசியி லுள்ள ஒரு சிறு எலும்பைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பூமி தின்றுவிடும். எனினும் நபிமார்கள் உடல்களைப் பூமி தின்னாது. அல்லாஹ் வானிலிருந்து ஒரு தண்ணீரை இறக்கிவைப்பான். (அழிக்கப்பட்ட) உடல்கள் வளர்ந்துவிடும். அல்லாஹ் மக்களை உயி ரூட்டி எழுப்ப நாடினால் சூர் ஊதும் பொறுப்பிற்குரிய மலக்கு இஸ்ராஃபீல் அவர்களை உயிர்ப்பிப்பான். அவர் இரண்டாம் முறை சூர் ஊதுவார். அல்லாஹ் எல்லாப் படைப்பு களையும் உயிர்ப்பிப்பான். மக்கள் தம் மண்ணறைகளிலிருந்து ஆரம்பமாக அல்லாஹ் அவர்களைப் படைத்தது போன்று செருப்பு அணியாதவர்களாக, நிர்வாணிகளாக, விரு த்தசேதனம் செய்யப்படாதவர்களாக வெளிவருவார்கள். அல்லாஹ் கூறுகிறான்: சூர் ஊதப்படும் அந்நேரம் அவர்கள் மண்ணறையிலிருந்து அவர்களின் இறைவனிடம் விரை ந்து வருவார்கள். (36:51) அவர்கள் (தாங்கள் ஆராதனை செய்யும்) கற்களின் பால் விரை ந்து செல்பவர்களைப்போல் அந்நாளில் கபுருகளிலிருந்து வெளியேறுவார்கள். அவர்க ளின் பார்வை கீழ்நோக்கி இருக்கும். இழிவு அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அந்நாள் தான் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த நாளாகும். (70:43,44) முதலாவதாக பூமி பிளந்து வெளிப்படுபவர், ஹதீஸில் வந்துள்ளது போல நம்முடைய நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள்தாம்.

இதன் பின் மக்கள்மஹ்ஷர் மைதானத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். அது பரந்த விசாலமான பூமியாகும். காஃபிர்கள் முகம் குப்புற கொண்டு வரப்படுவார்கள். எப்படி அவர்கள் முகம் குப்புற கொண்டு வரப்படுவர்கள்? என நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப் பட்டது. அதற்கு, அவர்களைப் பாதங்களால் நடக்க வைத்தவன் அவர்களை முகம் குப்புறவும் நடக்கவைக்க சக்தி உள்ளவன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் நல்லுரையைப் புறக்கணித்து நடந்தவன் மறுமையில் குருடனாக எழு ப்பப்படுவான். அந்நாளில் சூரியன் மக்களை நெருங்கியிருக்கும். அப்போது மனிதர்கள் அவரவர்களின் செயல்கள் அளவிற்கு வேர்வையிலிருப்பார்கள். சிலருக்கு கணுக்கால் வரை வேர்வை இருக்கும். சிலருக்கு இடுப்பளவு இருக்கும். இன்னும் சிலர் முழுக்க வேர் வையில் மூழ்கிவிடுவார்கள்.

அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அவனது நிழலின் கீழ் நிழல் கொடுக்கப்படுபவர்களும் அங்கு இருப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினா ர்கள்: அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு நிழல் கொடுப்பான். நீதமாக நடந்து கொண்ட ஆட்சியாளன், அல்லாஹ் வின் வணக்கத்திலேயே வளர்ந்த இளைஞன், தனது உள்ளத்தைப் பள்ளியுடன் தொ டர்புபடுத்திக் கொண்டிருந்த மனிதன், அல்லாஹ்வுக்காக நேசம் கொண்டு அதற்காக வே இணைந்து அதற்காகவே பிரிந்த இரு மனிதர்கள், அந்தஸ்தும், அழகுமுள்ள பெண் தவறு செய்ய அழைத்தபோது நிச்சயமாக நான் அல்லாஹ்வைப் பய்ப்படுகிறேன் எனக் கூறிய மனிதன், வலது கை கொடுப்பதை இடது கை அறியாவண்ணம் தர்மம் செய்த மனி தன், தனித்திருந்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்து, கண்ணீர் வடித்த மனிதன். இது ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் தான். அவர்களும் தம் செயல்கள் குறி த்து விசாரிக்கப்படுவார்கள். அவர்களின் செயல்க்ள் நல்லவையாகயிருந்தால் நன்மை யும் தீயவையாக இருந்தால் தீமையும் உண்டு. கேள்வி, கணக்கும் கூலியும் தண்டனை

யும் ஆண்களுக்கு இருப்பது போலவே பெண்களுக்கும் உண்டு.

அந்நாளில் மக்கள் கடினமான தாகத்திலிருப்பார்கள். அன்றைய ஒரு நாள் (நமது கணக்குப் படி) ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்குச் சமமாகும். எனினும் முஃமினுக்கு ஒரு தொழுகையை நிறைவேற்றும் அளவுக்கு அந்நேரம் கழிந்துவிடும். முஸ்லிம்கள் நபி (ஸல்) அவர்களின் தண்ணீர்த் தடாகத்திற்கு வந்து தண்ணீர் அருந்துவார்கள். தண்ணீர்த் தடாகமென்பது நம்முடை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டும் அல்லாஹ் கொடுத்த மிகப்பெரும் மரியாதையாகும். மறுமை நாளில் நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்தினர் இதில் நீர் அருந்துவார்கள். அதன் தண்ணீர் பாலை விட மிக வெண்மையானதாகவும், தேனைவிட மிகச் சுவையானதாகவும் கஸ்தூரி வாடையை விட மிக நறுமணமுள்ளதாகவுமிருக்கும். அதன் பாத்திரங்கள் வானத்து நட்சத்திரங்களின் எண்ணிக்கை அளவு இருக்கும். அதில் ஒரு முறை நீர் அருந்தியவன் அதன் பின் ஒருபோதும் தாகிக்கவே மாட்டான்.

மஹ்ஷர் மைதானத்தில் மக்கள் தம்மிடையே தீர்ப்புச் செய்யப்படுவதையும் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதையும் எதிர்பார்த்தவர்களாக அங்கு நெடிய காலம் காத்திருப்பார்கள். கடினமான வெப்பத்தில் நிற்பதும் எதிர்பார்ப்பதும் நீண்டு விடுகிறபோது மக்கள் தங்களிடையே தீர்ப்புச் செய்யப்படுவதற்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்பவர்களைத் தேடுவார்கள். அப்போது ஆதம் (அலை) அவர்களிடம் வருவார்கள். அவர்கள் தம் இயலாமையைக் கூறிவிடுவார்கள். பிறகு முறையே நூஹ் (அலை), இப்றாஹீம் (அலை) மூஸா (அலை), ஈஸா (அலை) என ஒவ்வொரு நபியிடமும் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது இயலாமையைக் கூறிவிடுவார்கள். இறுதியாக முஹம்மது (ஸல்) அவர்களிடம் வருவார்கள். அப்போது அவர்கள் அதற்கு தாமே தகுதியானவர் எனக் கூறி, அர்ஷிற்குக் கீழ் சுஜூது செய்வார்கள். அல்லாஹ் அவர்களுக்கு உதிக்கச் செய்கின்ற எல்லாப் புகழ் வார்த்தைகளையும் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்வார்கள். அப்போது முஹம்மதே! உமது தலையை உயர்த்தும், நீர் கேளும் கொடுக்கப்படுவீர். பரிந்துரை செய்யும், உமது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும் எனக் கூறப்படும். அப்போது அல்லாஹ் தீர்ப்புச் செய்யப்படுவதற்கும் கணக்குக் கேட்கப்படுவதற்கும் அனுமதி வழங்குவான். முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தினர்தாம் முதன் முதலில் கேள்வி கணக்கு கேட்கப்படுவார்கள்.

அடியான் செய்த செயல்களில் கேட்கப்படும் முதல் கேள்வி தொழுகை பற்றியாகும். அது சரியாக இருந்து எற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால் ஏனைய செயல்கள் கவனிக்கப்படும். அது மறுக்கப்பட்டுவிட்டால் ஏனைய செயல்களும் மறுக்கப்பட்டுவிடும். இது போன்றே ஒரு அடியான் ஐந்து காரியங்கள் பற்றி விசாரிக்கப்படுவான். அதாவது அவன் தனது வாழ்நாளை எவ்வாறு கழித்தான், தன் வாலிபத்தை எப்படி பயன்படுத்தினான், தன் பொருளை எப்படி சம்பாதித்து எவ்வழியில் செலவழித்தான், தான் கற்றதில் எந்த அளவுக்கு செயல்படுத்தினான் என்றெல்லாம் விசாரிக்கப்படுவான்.

மேலும் அடியார்களிடையே தீர்ப்புச் செய்யப்படும் முதல் காரியம் கொலைகள் பற்றியதாகும். அந்நாளில் பழிக்குப் பழிவாங்குவது நன்மைகளைக் கொண்டும் தீமைகளைக் கொண்டும் அமையும். ஒரு மனிதனின் நன்மை எடுக்கப்பட்டு அவனால் பாதிக்கப்பட்டவனிடம் கொடுக்கப்படும். நன்மைகள் தீர்ந்து விட்டால் பாதிக்கப்பட்டவனின் தீமையை எடுத்து இவனிடம் போடப்படும். அங்கு ஸிராத் என்னும் பாலம் அமைக்கப்படும். அது முடியை விட மெல்லியதாகவும் வாளைவிட கூர்மையானதாகவுமிருக்கும். அது நர

கத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கும். மக்கள் அதில் அவரவர் செயல்களைப் பொறுத்து கடந்து செல்வார்கள். சிலர் கண்சிமிட்டும் நேரத்திற்குள் கடந்து விடுவார்கள். சிலர் காற்று வேகத்தில் செல்வார்கள். வேறு சிலர் மிக விரைவாகச் செல்லும் குதிரை போன் றும் செல்வார்கள். இன்னும் தவழ்ந்து, தவழ்ந்து செல்பவர்களுமிருப்பார்கள். அப்பா லத்தின் மீது கோர்த்திழுக்கக் கூடிய கொழுத்துச் சங்கிலிகளுமிருக்கும். அது மனிதர் களைப் பிடித்து நரகில் தள்ளிவிடும்.

கா∴பிர்களும் மு∴மின்களில் அல்லாஹ்வின் நாட்டப்படி சில பாவிகளும் நரகில் விழு வார்கள். கா∴பிர்கள் நிரந்தரமாக நரகிலேயே கிடப்பார்கள். பாவிகளான மு∴மின்கள் அல்லாஹ் நாடிய அளவிற்கு வேதனை செய்யப்பட்டு பின் சுவர்க்கம் செல்வார்கள் நர கம் சென்று விட்ட ஏகத்துவவாதிகள் சிலருக்கு பரிந்துரை செய்வதற்காக நபிமார்கள், ரசூல்மார்கள், நல்லடியார்கள் ஆகியோரில் தான் நாடியவர்கள் பரிந்துரை செய்ய அல் லாஹ் அனுமதிப்பான். இவர்களால் பரிந்துரை செய்யப்படுபவர்களை அல்லாஹ் நரகி லிருந்து வெளியேற்றுவான்.

இப்பாலத்தை கடந்து சென்ற சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்திற்கும், நரகத்திற்குமி டையே அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பாலத்தில் நிற்பார்கள். அங்கு அவர்களில் சிலரு க்கு சிலரிடமிருந்து கணக்குத் தீர்க்கப்படும். யார் தன் சகோதரனுக்கு அநியாயம் செய் திருக்கிறார் எனில் அவரிடமிருந்து அந்தச் சகோதரருக்காகப் பழிக்குப்பழி வாங்கப்ப டாத வரை- அவர்கள் பரஸ்பரம் மன சந்தோசம் அடையாத வரை அவர்கள் சுவர்க்கம் செல்ல முடியாது. சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்திலும் நரகவாசிகள் நரகத்திலும் நுழை ந்துவிட்டால் மரணம் ஒரு ஆட்டின் வடிவில் கொண்டு வரப்பட்டு சுவர்க்கத்திற்கும் நரக த்திற்குமிடையே அறுக்கப்படும். சுவர்க்கவாசிகளும் நரகவாசிகளும் அதைப் பார்ப்பார் கள். பிறகு சுவர்க்கவாசிகளே! உங்களுக்கு மரணமே கிடையாது இதில் நீங்கள் நிரந் தரமாக இருங்களெனவும், நரகவாசிகளே! உங்களுக்கும் மரணமே கிடையாது இதி லேயே நீங்கள் நிரந்தரமாக இருங்களெனவும் கூறப்படும். மகிழ்ச்சியால் ஒரு வருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் சுவர்க்கவாசிகள் மரணித்து விடுவார்கள். துயரத்தால் ஒருவருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் நரகவாசிகள் மரணித்து விடுவார்கள்.

## நரகமும் அதன் வேதனையும்

அல்லாஹ் கூறுகிறான்: நரகத்தைப் பயந்து கொள்ளுங்கள், அதன் எரிபொருள் மனிதர்களும் கற்களுமாகும். அது கா∴பிர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. (2:24)

நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் கூறினார்கள்: நீங்கள் எரிக்கும் நெருப்பு நர கின் நெருப்பில் எழுபது மடங்குகளில் ஒன்றாகும். அப்போது அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! (பாவிகளைத் தண்டிப்பதற்கு) இதுவே போதுமெனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள், ஒவ்வொரு மடங்கும் இங்குள்ள நெருப்பின் வெப்பத்தைப் போன் றிருக்கும்படியான 69 மடங்குகளைக் கொண்டு நரக நெருப்பு அதிகமாக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

நரகம் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகும். அதில் ஒவ்வொரு அடுக்கும் மற்றதை விட மிகக் கடுமையான வேதனை உள்ளதாகும். அதில் ஒவ்வொரு அடுக்கிலும் தத்த மது செயல்களைப் பொறுத்து அதற்குத் தகுதியானவர்கள் இருப்பார்கள். நயவஞ்சக ர்கள் நரகத்தின் அடித்தட்டிலிருப்பார்கள். அதுதான் மிகக் கடுமையான வேதனைக்கு ரியதாகும். கா∴பிர்களுக்கு நரகத்தில் வேதனை இடைவிடாத நிரந்தர வேதனையா

கும். அவர்கள் நரகில் கரிந்துவிடும்போதெல்லாம் வேதனையை அதிகப்படுத்துவதற்காக திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படுவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களின் தோல்கள் கரிந்திடும்போதெல்லாம் வேறு தோல்களை அவர்களுக்கு நாம் ஏற்படுத்துவோம், அவர்கள் வேதனையை சுவைப்பதற்காக. (4:56) எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களுக்கு நரக நெருப்பு தான். அவர்கள் மரணம் அடையும் வகையில் அவர்களுடைய கதை முடிக்கப்படவும் மாட்டாது. நரகத்திலுள்ள வேதனை அவர்களுக்கு இலேசாக்கப்படவும் மாட்டாது. இவ்வாறே நாம் எல்லா கா∴பிர்களுக்கும் கூலி வழங்குவோம். (35:36)

அதில் அவர்கள் விலங்கிடப்படுவார்கள். அவர்களின் கழுத்துக்களிலும் விலங்கிடப்படும். அல்லாஹ் சொல்கிறான்: இன்னும் அந்நாளில் குற்றவாளிகளைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டவர்களாக (நபியே!) நீர் காண்பீர். அவர்கள் தார் ஆடைகள் அணிந்திருப்பார்கள். அவர்களின் முகங்களை நெருப்பு மூடியிருக்கும். (14:49,50) நரகவாசிகளின் உணவு ஸக்கூம் என்ற கள்ளிமரமாகும். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக ஸக்கூம் (கள்ளி) மரம் பாவிகளின் உணவாகும். அது உருக்கப்பட்ட செம்பு போன்றிருக்கும். அது வெந்நீர் கொதிப்பதைப் போன்று வயிற்றில் கொதிக்கும். (44:41-46)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஸக்கூம் மரத்திலிருந்து ஒரு சொட்டு உலகில் வீழுந்துவிட்டால் உலகிலுள்ளவரின் வாழ்க்கை வீணாகிவிடும். அப்படியானால் அதுவே உணவாக கொடுக்கப்படுபவர்களின் நிலை எப்படி இருக்கும்? (திர்மிதி). நரக வேதனையின் கடுமையையும் சுவர்க்க பாக்கியத்தின் பெருமையையும் பின் வரும் ஹதீஸ் விளக்கிக் காட்டுகிறது: மறுமையில் உலகில் மிகுந்த வசதி வாய்ப்புடன் வாழ்ந்த கா∴பிர்களில் ஒருவன் கொண்டு வரப்படுவான். அவனை நரக நெருப்பில் ஒரு முறை முக்கப்படும். பின்னர் அவனிடம் உனக்கு (உலகில்) ஏதேனும் வசதி இருந்ததா? எனக் கேட்கப்படும். அப்போது அவன் எந்தப் பாக்கியமும் எனக்கிருந்ததில்லையே எனக் கூறுவான். ஒரு முறை நரகத்தில் முக்கியதால் உலக பாக்கியங்கள் அனைத்தையும் அவன் மறந்துவிடுகிறான். இவ்வாறே உலகில் மிகப்பெரும் கஷ்டத்தில் வாழ்ந்த ஒரு மு∴மின் கொண்டு வரப்பட்டு ஒரு முறை சுவர்க்கத்தில் புகுத்தப்படுவான். பின்னர் (உலகத்தில்) ஏதேனும் உனக்கு கஷ்டமிருந்ததா? எனக் கேட்கப்படுவான். அதற்கவன் எந்தக் கஷ்டமும், வறுமையும் எனக்கிருந்ததில்லையே எனக் கூறுவான். சுவர்க்கத்தில் ஒரு முறை புகுத்தப்பட்டதால் உலகில் அவன் அனுபவித்த கஷ்டம், வறுமை, துர்ப்பாக்கியம் அனைத்தையும் அவன் மறந்துவிடுவான். (முஸ்லிம்)

## சுவர்க்கம்

சுவர்க்கம் இறைவனின் நல்லடியார்களுக்குரிய கண்ணியமான நிரந்தரமான வீடாகும். அதிலுள்ள பாக்கியங்கள் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனித உள்ளத்திலும் உதித்திராதவையாகும். அது மனிதன் படித்ததற்கும் கேள்விப்பட்டதற்கும் அப்பாற்பட்டதாகும். அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் செய்த (நற்)செயல்களுக்குக் கூலியாக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண் குளிர்ச்சியை எந்த ஒரு ஆன்மாவும் அறிந்து கொள்ள முடியாது. (32:17) சுவர்க்கத்தின் அந்தஸ்துகள் மு∴மின்களின் செயல்களைப் பொறுத்து ஏற்ற தாழ்வு உடையவையாகும். அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி வழங்கப்பட்டவர்களுக்கும் உயர் அந்தஸ்துகளை அல்லாஹ் வழங்குகிறான். (58:11) சுவர்க்கத்தில் அவர்கள்

விரும்பியவற்றை உண்ணவும் பருகவும் செய்வார்கள். அவற்றில் நிறம் மாறிவிடாத தண்ணீர் ஆறுகளும், ருசி மாறாத பாலாறுகளும், தெளிவான தேனாறுகளும், சுவையான மதுபான ஆறுகளும் உள்ளன. அவர்களின் மது உலக மது போன்றதல்ல. அல்லாஹ் கூறுகிறான்: தெளிவான பானம் நிறைந்த குவளைகள் அவர்களைச் சுற்றிக் கொண்டு வரப்படும் (அது) மிக்க வெண்மையானது, அருந்துபவருக்கு மதுரமானது. அதில் கெடுதியுமிராது. அதனால் அவர்கள் புத்தி தடுமாறவும் மாட்டார்கள். (37:45, 46, 47)

இறைநம்பிக்கையாளர்களுக்கு சுவர்க்கத்தில் ஹூருல் ஈன் பெண்கள் மணமுடித்து வைக்கப்படுவார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "சுவர்க்கத்துப் பெண்களில் ஒரு பெண் உலகத்தாரிடம் வந்துவிட்டால் வானம், பூமிக்கிடையே உள்ளவற்றை ஒளிமயமாக்கிவிடுவாள். அவற்றில் நறுமணத்தை நிரப்பிவிடுவாள்". (புகாரி) சுவர்க்கவாசிகளின் மிகப்பெரும் பாக்கியம் அவர்கள் அல்லாஹ்வைப் பார்ப்பதாகும். சுவர்க்கவாசிகள் மலஜலம் கழிக்கவோ, மூக்குச் சிந்தவோ, உமிழவோ மாட்டார்கள். அவர்களின் சீப்புகள் தங்கமாகவும் வியர்வை கஸ்தூரியாகவுமிருக்கும். அவர்களின் இவ்வருட்பாக்கியம் நின்றுவிடவோ குறைந்திடவோ செய்யாத நிரந்தர பாக்கியமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் சுவர்க்கம் நுழைகிறாரோ அவர் இன்பம் துய்த்திடுவார். சிரமப்பட மாட்டார், நிறந்தரமாக வாழ்வார். சுவர்க்கவாசிகளின் குறைந்த பாக்கியம் உலகமனைத்தும் பத்துமுறை வழங்கப்படுவதைவிடவும் சிறந்ததாகும். நரகிலிருந்து வெளியேறி கடைசியில் சுவர்க்கம் நுழைபவன் தான் இந்தக் குறைந்த பாக்கியம் உடையவன் ஆவான்.

# நபிகள் நாயகம்
# السيرة النبوية

## நபித்துவத்திற்கு முன் அரபியரின் நிலை

சிலை வணக்கம்தான் அன்றைய அரபியர்களிடம் வியாபித்திருந்த மார்க்கமாக இருந்தது. நேரிய மார்க்கத்திற்கு முரண்பட்ட இந்தச் சிலை வணக்கத்தை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டதால் அவர்கள் வாழ்ந்த காலம் அறியாமைக் காலமென அழைக்கப்பட்டது. ஏக இறைவனாகிய அல்லாஹ்வை விடுத்து அவர்கள் வணங்கி வந்த தெய்வங்களில் பிரபலமானவை லாத்,மனாத்,உஸ்ஸா,ஹுப்ல் ஆகியவையாகும். ஆயினும் யூத, கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களும் நெருப்பாராதனை செய்பவர்களும் அரபியர்களில் இருந்தனர். மேலும் இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகிய ஓரிறைக் கொள்ளையைக் கடைபிடித்து வந்த வெகு சிலரும் அவர்களில் இருந்தனர்.

பொருளாதார நிலையைப் பொறுத்தவரை கிராமவாசிகள் மேய்ச்சலைச் சார்ந்திருக்கக் கூடிய கால்நடைகளின் வருவாயையே முழுக்க முழுக்க நம்பி வாழ்ந்து வந்தனர். நகரவாசிகளிடம் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை வியாபாரமும் விவசாயமுமாக இருந்தது. இஸ்லாம் வருவதற்கு சிறிது முன்னர் அரபுத் தீபகற்பத்தில் மக்காநகர் மிகப் பெரும் வியாபாரஸ்தலமாகத் திகழ்ந்து வந்தது. அங்கு பல்வேறு பகுதிகளில் வீடுகளின் அமைப்புகளும் பழக்க வழக்கங்களும் நாகரீகமான முறையில் இருந்தன.

சமூக வாழ்வைப் பொறுத்தவரை அநியாயம் பரவிக் கிடந்தது. அங்கு பலவீனர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டனர். புனிதமானவை எனக் கருதப்பட்டவை அலட்சியப்படுத்தப்பட்டன. பலமுள்ளவர்கள் பலவீனர்களின் உரிமைகளைச் சுரண்டித் தின்றனர். கணக்கின்றி பல மனைவியரை வைத்திருந்தனர். விபச்சாரம் பரவிக்கிடந்தது. அற்பக் காரணங்களுக்காக பல குலங்களிடையே போர்கள் நடந்து கொண்டிருந்தன. இதுவே இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரபு நாட்டினுடைய சூழ்நிலை குறித்த சுருக்கமான கண்ணோட்டமாகும்.

## பலியிடப்பட்ட இருவரின் மகன்

குறைஷிகள் நபிகள் நாயகத்தின் பாட்டனாரான அப்துல் முத்தலிபிடம் தங்களின் சந்ததியினரையும் செல்வத்தையும் குறித்து பெருமையடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அப்துல் முத்தலிப் தனக்கு பத்து ஆண்மக்களை அல்லாஹ் கொடுத்தால் அவர்களில் ஒருவரை தெய்வங்களுக்கு அறுத்துப் பலியிடுவதாக நேர்ச்சை செய்து கொண்டார். அவர் விரும்பியது நடந்தது. அவருக்கு பத்து ஆண் மக்கள் பிறந்தனர். அவர்களில் ஒருவர் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தகப்பனார் அப்துல்லாஹ்.

அப்துல் முத்தலிப் தனது நேர்ச்சையை நிறைவேற்ற நாடிய போது இது மக்களிடம் தவறான முன்னுதாரணமாக ஆகிவிடக் கூடாதென மக்கள் அவரைத் தடுத்தனர். பிறகு அப்துல்லாஹ்வா அல்லது அவருக்கு ஈடாக பத்து ஒட்டகமா? எனச் சீட்டுக் குலுக்கி எடுக்க வேண்டுமென அனைவரும் முடிவு செய்தனர். அப்துல்லாஹ்வின் பெயரே அதில் வந்து விட்டால் மீண்டும் சீட்டுக்குலுக்கிப் போட்டு மேலும் பத்து ஒட்டகங்களை அதிகப்படுத்த வேண்டுமெனவும் முடிவு செய்தனர். பிறகு சீட்டுக்குலுக்கி எடுக்கப்பட்டது. அதில் அப்துல்லாஹ்வின் பெயரே தொடர்ந்து வந்தது. பத்தாவது தடவையில் ஒட்டக

ங்களின் பெயர் வரவே ஒட்டகங்களின் எண்ணிக்கை நூறை எட்டியது. பிறகு நூறு ஒட் டகங்களை அறுத்தனர்.

அப்துல் முத்தலிப் தமது பிள்ளைகளில் அப்துல்லாஹ் மீது மிகப் பிரியமானவராக இருந்தார். குறிப்பாக இந்த சம்பவத்திற்குப் பிறகு! அவர் வாலிபமாகி பெரிய ஆளாக ஆன பிறகு அவரது நெற்றியில் ஒரு ஒளி தோன்றியது. மக்களில் யாருக்கும் அவ்வாறு ஏற்பட்டதில்லை. அப்துல்லாஹ் பெரியவரானதும் அவரின் தகப்பனார் பனூஸஹ்ரா கோத்திரத்தில் வஹ்ப் என்பவரின் மகளான ஆமினா என்ற வாலிபப் பெண்ணைத் தேர்வு செய்து அவருக்கு மணமுடித்து வைத்தார். அப்துல்லாஹ்வின் நெற்றியில் சுடர் விட்டுக் கொண்டிருந்த அந்த ஒளி இத்திருமணத்திற்குப் பின் ஆமினாவின் வயிற்றுக்குள் சென்று விட்டது. அப்துல்லாஹ் இவ்வாழ்க்கையில் தனது பணியை நிறைவு செய்து விட்டார். ஆமினா நபிகள் நாயகத்தை கருவுற்றிருந்த மூன்றாம் மாதம் அப்துல்லாஹ் வியாபாரக் கூட்டத்துடன் சிரியா நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். திரும்பி வரும் வழியில் நோய் வாய்ப்பட்டார். எனவே மதீனாவில் பனூநஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த தனது மாமன்மார்களிடத்தில் தங்கியிருந்தார். அங்கேயே அவருக்கு மரணம் ஏற்பட்டு அடக்கமும் செய்யப்பட்டார். ஆமினாவிற்கு கர்ப்ப காலம் முடிந்து பிரசவ நாள் நெருங்கியது. பிரசவ வலி ஏற்படும் நேரமும் ஆரம்பித்தது. எனினும் பிரசவ நேரத்தில் பெண்களுக்கு வழக்கமாக ஏற்படும் வலியையும் சிரமத்தையும் அவர் உணரவில்லை. கி.பி. 570 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் 12 ஆம் நாள் ஆமினா தனது குழந்தையைப் பெற்றெடுத்தார். அப்போது அது யானை ஆண்டாக இருந்தது.

## யானை வரலாறு

இதன் வரலாற்றுச் சுருக்கம்: அபீஸீனிய நாட்டு மன்னர் நஜ்ஜாஷியின் பிரதிநிதியாக யமனில் ஆட்சி செய்த அப்ரஹா என்பவன் ஸன்ஆ என்ற ஊரில் பெரிய சர்ச் ஒன்றைக் கட்டினான். ஹஜ்ஜுக்குச் செல்லும் அரபியரை அதன்பால் திருப்பி விட விரும்பினான். இதைக் கேள்வியுற்றதும் அரபுக் குலங்களில் ஒன்றான பனூகினானா குலத்தைச் சேர்ந்த ஒருவன் இரவில் அந்த சர்ச்சினுள் நுழைந்து அதன் சுவர்களில் மலத்தைத் தேய்த்து விட்டான். இதைக் கேள்வியுற்றதும் அப்ரஹா கொதித்தெழுந்தான். ஆறாயிரம் போர் வீரர்கள் கொண்ட மிகப்பெரும் படையுடன் கஅபதுல்லாஹ்வை இடிப்பதற்காகப் புறப்பட்டான். அப்படையில் ஒன்பது யானைகள் இருந்தன. அவற்றில் பெரிய யானையைத் தனக்காகத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்.

தொடர்ந்து முன்னேறிக் கொண்டே வந்து மக்காவுக்குச் சமீபமாக வந்துவிட்டான். தன் படையைத் தயார்படுத்தி மக்காவிற்குள் நுழைய ஆயத்தமானான். எனினும் அவனது யானை மக்காவை நோக்கிச் செல்லாமல் படுத்துவிட்டது. வேறு திசைகளின் பக்கம் திருப்பினால் ஓட ஆரம்பிக்கின்றது. மக்காவை நோக்கித் திருப்பினால் படுத்துக் கொள்கின்றது. இந்நிலையில் அவர்கள் மீது அல்லாஹ் ‘அபாபீல்’ பறவைகக் கூட்டங்களை அனுப்பிவைத்தான். அவை சூடேற்றப்பட்ட சிறு சிறு கற்களை அவர்கள் மீது எறிந்தன. அதனால் மென்று தின்னப்பட்ட வைக்கோல் போன்று அல்லாஹ் அவர்களை ஆக்கிவிட்டான். எல்லா பறவைகளும் கொண்டைக் கடலை அளவிலான மூன்று கற்களைக் கொண்டு வந்தன. ஒன்று அவற்றின் அலகிலும் மற்ற இரண்டு இரு கால்களிலும் இருந்தன. ஒருவன் மீது அது விழுந்து விட்டால் அவனுடைய உறுப்புகள் துண்டு துண்

டாகிஅவன் அழிந்தே போவான். அவர்கள் வெருண்டோடும்போது வழியிலேயே வீழுந்து அழிந்தனர்.

அப்ராஹாவின் கதி என்னவெனில் அல்லாஹ் அவன் மீது ஒரு நோயை அனுப்பி னான். அதன் காரணமாக அவனுடைய விரல்கள் அழுகி வீழுந்தன. ஸன்ஆவை அடை ந்தபோது ஒரு குருவிக் குஞ்சைப்போல குறுகி அங்கேயே செத்து மடிந்தான். குறை ஷிகளோ அப்படையைக் கண்டு தம் உயிர்களுக்குப் பயந்து கணவாய்களில் பிரிந்து சென்று மலைகளில் ஏறி தங்களைக் காத்துக் கொண்டனர். பிறகு யானைப் படையி னருக்கு நேரவேண்டியது நேர்ந்த பிறகு குறைஷிகள் அச்சமற்றவர்களாக வீடு திரும் பினர். இந்நி கழச்சி நபிகள் நாயகம் பிறப்பதற்கு ஐம்பது நாட்களுக்கு முன்பு நடை பெற்றது.

அரபியர்களிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதாவது ஆரோக்கியமான உடல் வளர்ச் சிக்குரிய காரணிகள் தங்கள் குழந்தைகளுக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களின் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கும்படி கிராம வாசிகளிடம் அனுப்பிவைப்பார்கள். நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் பிறந்த சமயம் பனூஸஃத் கோத்திரத்தைச் சேர்ந்த கிராமவாசிகளின் ஒரு பிரிவினர் இந்நோக்கத்தி ற்காக மக்காவுக்கு வந்தனர். அவர்களில் பெண்கள் வீடு வீடாகச் சுற்றித் திரிந்தனர். அவர்கள் அனைவருமே நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் புறக்கணித்தனர். கார ணம் நபியவர்கள் அநாதையாகவும் ஏழையாகவும் இருந்ததே! இத்தகையவர்களில் ஹலீமத்துஸ் ஸஃதிய்யா என்ற பெண்ணும் ஒருவராக இருந்தார். மற்ற பெண்களைப் போன்றே இவரும் நபிகள் நாயகத்தைப் புறக்கணித்தார். எனினும் அதிகமான வீடுக ளை அவர் சுற்றியலைந்தும் தான் தேடிச் சென்ற காரியம் அருக்குக் கைகூடவில்லை. பாலூட்டுவதற்கென எடுத்துச் செல்வதற்கு எந்தக் குழந்தையும் அவருக்குக் கிடைக் கவில்லை. அப்படியொரு குழந்தை கிடைத்தால் தன்னுடன் எடுத்துச் சென்று அந்த வகையில் கிடைக்கும் கூலியைக் கொண்டு வாழ்க்கையில் குறிப்பாக அந்த பஞ்ச ஆண் டில், தன்னை எதிர்கொள்ளும் கஷ்டத்தையும் நெருக்கடியையும் சமாளித்துக் கொள் வார். எனவே இவ்வாறு சிந்தித்தவாறு ஹலீமா அநாதைக் குழந்தையையும் அற்பக் கூலியையும் பொருந்திக் கொண்டு ஆமீனாவின் வீட்டிற்குத் திரும்பி வந்தார்.

மெலிந்த, மெதுவாகச் செல்லக்கூடிய பெண் கழுதையில் பயணமாகி ஹலீமா தன் னுடைய கணவருடன் மக்காவுக்கு வந்திருந்தார். திரும்பிச் செல்லும் வழியில் ஹலீமா நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை தனது மடியில் வைத்திருக்கும்போது அக்கழுதை வேகமாக ஓட ஆரம்பித்தது. எல்லா வாகனங்களையும் பின்னால் தள்ளிவிட்டது. வழி யில் செல்லும் பயணக் கூட்டத்தினர் மிகவும் ஆச்சரியப்படலானார்கள்.

மேலும் ஹலீமா கூறியதாவது: அவருடைய மார்பகத்தில் கொஞ்சம் கூட பால் சுரக் காமல் பால் குடிக்கும் அவரது குழந்தை கடுமையான பசியின் காரணமாக எப்போதும் அழுதுகொண்டிருக்கும். ஆயினும் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுக்கு அவர் பாலூட் டியபோது அவரது மார்பில் அதிகம் பால் வந்தது. மேலும் ஸஃது கிளையாரின் பகுதியி லிருந்த வறண்டு போயிருந்த தனது பூமியைப் பற்றியும் கூறினார்: இக்குழந்தைக்குப் பாலூட்டும் பாக்கியம் பெற்றதும் அவரது பூமியும் கால்நடைகளும் பலன் தந்தன. அவ ரது நிலையே முற்றிலும் மாறியது. அவரது கஷ்டம் செழிப்பாகவும் அவரது வறுமை செ ல்வமாகவும் மாறியது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹலீமாவின் பராமரிப்பில் இரண்டாண்டுகளைக் கழித்தார்கள். அவர்களின் மீது ஹலீமா முழுமையான ஆர்வம் கொண்டிருந்தார். இக் குழந்தையைச் சூழ்ந்திருக்கக்கூடிய வழக்கத்திற்கு மாற்றமான விஷயங்களையும் நிலைமைகளையும் நன்கு உணர்ந்திருந்தார். இவ்விரண்டாண்டிற்குப் பின் குழந்தையை மக்காவிலுள்ள அவரது தாய், பாட்டனாரிடத்தில் கொண்டு வந்தார். எனினும் அக்குழந்தையின் பரகத்தால் தனது நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட ஹலீமா இரண்டாம் முறையும் அக்குழந்தையைத் தன்னுடன் வைத்துக்கொள்ள இணங்குமாறு ஆமினாவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். அதற்கு ஆமினாவும் சம்மதித்து விட்டார். ஹலீ மா அநாதைக் குழந்தையுடன் ஸஃது கிளையாரிடம் மீண்டும் திரும்பி வந்தார். மகிழ்ச்சி அவரைச் சூழ்ந்து கொண்டது. பாக்கியம் அவரை வளைத்துக் கொண்டது.

## நெஞ்சு பிளக்கப்படுதல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு வயதை நெருங்கி விட்டபோது ஒரு நாள் ஹலீமாவின் மகனான தம்முடைய பால்குடிச் சகோதரருடன் கூடாரங்களை விட்டும் தூரமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஹலீமாவின் மகன் ஓடிவந்தார். அவரது முகத்தில் திடுக்கத்தின் அடையாளம் தெரிந்தது. தன்னுடைய தாயிடம் தன் குறைஷிச் சகோதரரைக் காண வரும்படிக் கேட்டுக்கொண்டார். நடந்த விஷயம் என்ன வென்று தாய் அவரிடம் கேட்கவும் அதற்கு அவர், வெண்மையான ஆடையில் இரு மனிதர்களைக் கண்டேன். அவ்விருவரும் எங்களிடமிருந்து அவரைப் பிடித்து அவரைப் படுக்க வைத்து அவரின் நெஞ்சைப் பிளந்தனர்...என்று செய்தியைப் பூரணமாக முடிப்பதற் குமுன் ஹலீமா நபிகள் நாயகத்திடம் விரைந்து சென்றார். அப்போது அந்த இடத்திலேயே அவர்கள் அசையாமல் நிற்பதைக் கண்டார். அவர்களது முகத்தில் மஞ்சள் நிறம் படிந்திருந்தது. அவர்களின் நிறம் பயத்தால் மாறியிருந்தது. என்ன நடந்தது என்று அவர்களிடம் கைசேதத்துடன் கேட்டார். அதற்கவர்கள் தாம் நலமுடன் இருப்பதாகவும் தம்மிடம் வெண்மையான ஆடையில் இரு மனிதர்கள் வந்து தம்மைப் பிடித்து தமது நெஞ்சை பிளந்து இதயத்தை வெளியே எடுத்து அதிலிருந்து ஒரு கருப்புத் துண்டை அகற்றி அதை எறிந்துவிட்டார்கள். பிறகு இதயத்தை குளிர்ந்த நீரால் கழுவி உள்ளே வைத்து விட்டு நெஞ்சின் மேல் கையால் தடவினார்கள். அதன் பிறகு அவ்விருவரும் அவ்விடத்தை விட்டுச் சென்று மறைந்து விட்டனர் எனவும் நடந்ததைக் கூறினார்கள். ஹலீமா பிளந்த இடத்தைத் தடவிப் பார்த்தார். எந்த அடையாளத்தையும் காணவில்லை. பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கூடாரத்திற்குக் கூட்டி வந்தார்.

அடுத்த நாள் காலையில் நபியவர்களை அவர்களின் தாயாரிடம் திரும்பக் கொண்டு சென்றார். ஹலீமா குழந்தையைத் திரும்பக் கொண்டு வந்தது ஆமினாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்நேரம் திரும்பக் கொண்டு வருவதற்குரிய நேரமாகவும் இல்லை. மட்டுமல்லாமல் ஹலீமாவுக்கு அக்குழந்தையின் மீது ஆர்வமும் இருந்ததே! அதனால் ஆமினா அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார். வற்புறுத்திக் கேட்ட பின்னால் ஹலீமா நெஞ்சு பிளக்கப்பட்ட நிகழ்ச்சியைக் கூறினார்.

ஆமினா தன்னுடைய அநாதைக் குழந்தையுடன் பனூநஜ்ஜார் கோத்திரத்திலுள்ள தன் மாமன்மார்களைச் சந்தித்து வருவதற்காக மதீனாவுக்குச் சென்றார். அங்கு சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு திரும்பும் வழியில் அப்வாஃ என்னுமிடத்தில் மரணமடைந்தார். அங்கேயே அடக்கமும் செய்யப்பட்டார்.

இதோ! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஆறாம் வயதில் தாயையும் இழந்து விடுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் ஈடான அரவணைப்பையும் ஆதரவையும் நபியவர்களுக்கு அளிப்பது பாட்டனார் அப்துல் முத்தலிபின் கடமையாக ஆனது. அப்துல் முத்தலிப் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பேணிப் பராமரித்து வந்தார். அவர்கள் மீது அன்பு செலுத்தி வந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எட்டு வயது பூர்த்தியானபோது அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபும் மரணமடைந்தார். அதன் பிறகு நபியவர்களை அவர்களின் பெரிய தகப்பனார் அபூதாலிப் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டார். அவருக்கு குழந்தைகள் அதிகமாக இருப்பதுடனே பொருளாதாரம் குறைவாக இருப்பதுடனேயே இவ்வாறு ஏற்றார். அவரும் அவரது மனைவியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தங்களின் பிள்ளைகளில் ஒருவராகவே நடத்தி வந்தனர். அநாதையான அக்குழந்தை பெரிய வயதை அடையும் வரை தம் பெரிய தகப்பனாருடனேயே வாழ்ந்து வந்தது.

இத்தகைய சூழ்நிலையில்தான் நபியவர்களது ஆரம்ப வாழ்க்கை துவங்கியது. உண்மை, நம்பிக்கை, நாணயம் ஆகிய பண்புகளின் மீது வளர்ந்து வந்தார்கள். உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என்பது அவர்களை அறிமுகப்படுத்தும் சிறப்புப் பட்டப் பெயராய் ஆனது. நம்பிக்கைக்குரியவர் வந்து விட்டாரெனக் கூறப்பட்டால் நிச்சயமாக அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் என்று அறியப்பட்டது. சிறிது பெரியவராக அவர்கள் வளர்ந்த பின்னர் தமது வாழ்கை விவகாரங்களிலும் சம்பாத்தியத்திலும் தமது சொந்தக் காலில் நிற்க ஆரம்பித்தார்கள். அந்த வகையில் தமது உழைப்பு மற்றும் சம்பாத்தியத்தின் பயணத்தைத் தொடங்கினார்கள். குறைஷிகளில் ஒருவரிடம் கூலிக்கு ஆடுகள் மேய்க்கும் வேலையைச் செய்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரியா நாட்டுக்கு ஒரு வியாபாரக் கூட்டத்தினருடன் பயணம் மேற்கொண்டார்கள். அவ்வியாபாரத்தில் குவைலதின் மகள் கதீஜா அதிகமான செல்வத்தை முதலீடு செய்திருந்தார். அவர் செல்வச் சீமாட்டியாக இருந்தார். அப்பயணத்தில் கதீஜாவின் பொருள்களுக்கு அவருடைய அடிமையும் அவரின் காரியங்களை நிர்வகிப்பவருமான மைஸரா பொறுப்பாளராக இருந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாக்கியத்தாலும் அவர்களின் நாணயத்தாலும் கதீஜாவுக்கு இதற்கு முன்னர் கிடைக்காத அளவுக்கு மிகப் பெரும் இலாபம் கிடைத்தது. இப்பெரும் இலாபத்திற்குரிய காரணத்தை தனது அடிமை மைஸராவிடம் கதீஜா கேட்டார். அதற்கவர் இவ்வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலுடைய பொறுப்பை அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் ஏற்றிருந்தார். மக்கள் அவரை நோக்கி பெரும் கூட்டமாக வந்தனர். மேலும் இப்பெரும் இலாபம் எவ்வித அநீதமின்றிக் கிடைத்தது எனத் தெரிவித்தார். தனது அடிமை மைஸரா சொல்வதை கதீஜா மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரும் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதைப் பற்றி சில விஷயங்களை அறிந்திருந்தார். இப்போது அவரின் மீது அவருக்கு பிரியம் அதிகரித்தது.

கதீஜா ஏற்கனவே திருமணமானவர். அவருடைய கணவரோ மரணித்துவிட்டார். தற்போது அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது (ஸல்) அவர்களைக் கணவராகப் பெற்று புதியதொரு அனுபவத்தில் புக விரும்பினார். இவ்விஷயத்தில் அவர்களது விருப்பத்தைத் தெரிந்து வருவதற்காகத் தன்னுடைய உறவினர்களில் ஒரு பெண்ணை தூது அனுப்பினார். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருபத்தைந்து வயதை எட்டியிருந்தார்கள். கதீஜாவை மணந்து கொள்ளக் கேட்டு நபியவர்களிடம் அந்தப் பெண்

தூது வந்தபோது அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். திருமணம் முடிந்தது. அவ் விருவரும் பரஸ்பரம் பாக்கியமிகு வாழ்வை அடைந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் கதீஜாவின் சொத்துக் காரியங்களை நிர்வாகம் செய்ய ஆரம்பித்தார்கள். அதில் தமது கவனத்தையும் சக்தியையும் செலுத்தினார்கள். கதீஜா தொடர்ந்து கர்ப்பமுற்று ஸைனப், ருகைய்யா, உம்முகுல்ஸூம், ஃபாத்திமா ஆகிய பெண் மக்களையும் காசிம், அப்துல்லாஹ் என்ற இரு ஆண் மக்களையும் பெற்றெடுத்தார்கள். காசிம், அப்துல் லாஹ் ஆகிய இருவரும் சிறுவயதிலேயே இறந்துவிட்டார்கள்.

## நபித்துவம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதை நெருங்கியபோது மக்கா வுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மலையில் ஹிரா என்னும் குகையில் அதிக நாட்களைத் தனிமையில் கழித்தார்கள். அங்கேயே பல இரவு பகல்கள் தங்கினார்கள். அவர்கள் தமது நாற்பதாம் வயதை அடைந்ததும் ரமலான் மாதம் இருபத்தொன்றாம் இரவில் ஹிரா குகையில் தங்கியிருந்தபோது அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) வந்து நீர் ஓதுவீ ராக! எனக் கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஓதத் தெ ரியாது எனக் கூறினார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் ஓதுவீராக எனக் கூறினார்கள். மூன்றாம் முறை "படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக! கருக்கட்டியிலிருந்து அவன் மனிதனைப் படைத் தான். ஓதுவீராக! உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில் அவனே எழுது கோலின் மூலம் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற் றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்" (96:1-5) எனக் கூறினார்கள். பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் தங்கியிருக்க முடியவில்லை. உள் ளம் நடுங்கியவர்களாக வீட்டிற்குத் திரும்பி கதீஜா (ரலி) யிடம் வந்தார்கள். என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்! எனக் கூறினார்கள். வீட்டிலுள்ளோர் நபிய வர்களைப் போர்த்தினார்கள். இறுதியில் பயம் அவர்களை விட்டும் நீங்கியது. பின்னர் தமக்கு ஏற்பட்டதை கதீஜாவிடம் கூறி தமக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என தாம் பயந்து போய்விட்டதாகவும் கூறினார்கள். அப்போது கதீஜா (ரலி) அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக அல்லாஹ் ஒரு போதும் உங்களை இழிவுப டுத்தமாட்டான். ஏனெனில் நீங்கள் சொந்த பந்தங்களுடன் இணைந்து வாழ்கிறீர்கள். ஆதரவற்றோரை அரவணைக்கிறீர்கள். வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள். விருந்தி னரை உபசரிக்கிறீர்கள். உண்மையான சோதனைகளில் ஆட்பட்டோருக்காக உதவுகி றீர்கள் எனக் கூறினார்கள்.

சில நாட்களுக்குப் பின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வணக்கத்தைத் தொடர்வதற்காகவும் ரமலானில் எஞ்சியிருக்கும் நாட்களை நிறைவு செய்வதற்காகவும் மீண்டும் ஹிரா குகைக்குத் திரும்பினார்கள். ரமலான் மாதம் முடிந்ததும் மக்காவுக்குத் திரும்பிச் செல்வதற்காக ஹிராவிலிருந்து இறங்கி வந்தார்கள். பதனுல்வாதி என்னும் இடத்தில் சென்று கொண்டிருக்கும்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் வானத்திற்கும் பூமி க்குமிடையே ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்தவர்களாகத் தோன்றினார்கள். பிறகு "போர் த்திக் கொண்டு படுத்திருப்பவரே! எழுந்து எச்சரிக்கை செய்வீராக! மேலும் உம் இறை வனைப் பெருமைப்படுத்துவீராக! உம்முடைய ஆடைகளைத் தூய்மையாக்குவீராக!

அசுத்தத்திலிருந்து விலகியிருப்பீராக!" (74:1-5) என்ற வசனங்கள் இறங்கின. அதன் பின்னர் வஹீ தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அழைப்புப் பணியைத் தொடங்கியபோது சிறப்பிற்குரிய அவர்களுடைய மனைவி ஈமானின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். அல்லாஹ் ஏகனென்றும் தம் கணவர் நபி என்றும் சான்று பகர்ந்தார்கள். இவர்கள் தான் இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்றுக் கொண்டவராவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தாயாருக்கும் பாட்டனாருக்கும் பின்னர் தம்மைப் பொறுப்பேற்று வளர்த்த தம்முடைய பெரிய தந்தை அபூதாலிபின் உதவிக்குப் பகரமாக அவருடைய மக்களில் அலீ (ரலி) யை எடுத்து வளர்த்து வரலானார்கள். அவர்களுக்காக செலவு செய்தார்கள். இக்காலகட்டத்தில் அலீ (ரலி) யின் உள்ளம் தெளிவடைந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள். இதன் பின்னர் இவர்களைத் தொடர்ந்து கதீஜாவின் அடிமை ஸைத் பின் ஹாரிஸா (ரலி) யும் ஈமான் கொண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் நெருங்கிய நண்பரான அபூபக்கர் (ரலி) அவர்களிடம் சத்தியத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களும் எவ்வித தடுமாற்றமுமின்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரகசியப் பிரச்சாரத்தை தொடர்ந்து செய்தார்கள். இரகசியப் பிரச்சாரம் என்று சொன்னால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தோழர்களும் அவர்களைப் பின்பற்றக் கூடியவர்களும் அவர்கள் யாருக்கெல்லாம் அழைப்புவிடுக்கின்றார்களோ அவர்கள் அனைவரும் இரகசியமாக ஒன்று கூடி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் இடம் இரகசியமாக இருப்பதாகும். திண்ணமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அதிகமானோர் ஏற்றுக் கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் தாங்கள் இஸ்லாத்தை ஏற்றதை இரகசியமாக வைத்துக் கொண்டார்கள். ஏனெனில் அவர்களில் யாராவது ஒருவருடைய விவகாரம் வெளியே தெரிந்துவிட்டால் அவர் இஸ்லாத்தை விட்டுவிட வேண்டுமென்பதற்காக குறைஷி நிராகரிப்பாளர்கள் இழைத்த கொடுமையான வேதனைகளுக்குப் பலியாக வேண்டியதிருந்தது!

## பகிரங்கப் பிரச்சாரம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனித்தனி நபர்களை அழைப்பதில் மூன்றாண்டுகளைக் கழித்த பின்னர் "உமக்கு கட்டளையிடப்பட்டிருப்பதை பகிரங்மாக அறிவிப்பீராக! இணைவைப்பவர்களைப் புறக்கணிப்பீராக!" (15:94) என்ற வசனம் இறங்கியது. உடனே ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபா குன்றின் மீது நின்றுகொண்டு குறைஷிகளை அழைத்தார்கள். அவர்கள் முன் அதிகமானோர் ஒன்று கூடினார்கள். அவர்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தகப்பனார் அபூலஹபும் இருந்தான். அவன்தான் குறைஷிகளிலேயே அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கடுமையான விரோதியாகத் திகழ்ந்தான். மக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூடியதும், "இம்மலைக்குப் பின்னால் எதிரிகள் உங்களை அழிக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என நான் உங்களிடம் கூறினால் நீங்கள் என்னை நம்புவீர்களா?" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கவர்கள் ஆம்! உண்மையையும் நம்பிக்கையையும் தவிர வேறு எதையுமே நாங்கள் உங்களிடம் இருந்து அறிந்ததில்லை எனக் கூறினார்கள். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நிச்சயமாக நான் கடுமையான வேதனை குறித்து உங்களை எச்சரிக்கை செய்கிறேன்

எனக் கூறினார்கள். பின்பு அவர்களை அல்லாஹ்வின் பக்கமும் சிலை வணக்கங்களை விட்டுவிடுமாறும் அழைக்க ஆரம்பித்தார்கள். அப்போது அக்கூட்டத்திலிருந்த அபூலஹப் கொதித்தெழுந்தான். உனக்கு நாசம் உண்டாகட்டும்! இதற்காகவா எங்களை ஒன்று கூட்டினாய்? எனக் கேட்டான். இதன் பிறகு அல்லாஹ் இந்த அத்தியாயத்தை இறக்கிவைத்தான்: "அபூலஹபின் இரு கைகளும் நாசமாகட்டும்! அவனும் நாசமாகட்டும்! அவனுடைய செல்வமும் அவன் சம்பாதித்தவையும் அவனுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை. விரைவில் அவன் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் போடப்படுவான். (இங்கும் அங்கும்) புறம் பேசித்திரிபவளான அவனுடைய மனைவியும் (நெருப்பில போடப்படுவாள்) அவளின் கழுத்தில் முறுக்கேற்றப்பட்ட கயிறுஇருக்கும்". (111:15)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்ந்து அழைப்புப் பணியை மேற்கொண்டார்கள். மக்கள் கூடுமிடங்களிலெல்லாம் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்து அவர்களை இஸ்லாத்தின் பால் அழைக்க ஆரம்பித்தார்கள். கஅபதுல்லாஹ்வில் தொழுது வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இறைநிராகரிப்பாளர்கள் கொடுத்து வந்த தொல்லைகள் அதிகமாயின. யாஸிர் (ரலி), சுமையா (ரலி) மற்றும் அவர்களின் மகன் அம்மார் (ரலி) ஆகியோருக்கு ஏற்பட்ட சோதனைகள் இதற்கு உதாரணமாகும். ஆம்! அம்மார் (ரலி) அவர்களின் தாய் தந்தையர் இருவரும் உயிர்த்தியாகிகளாக மரண மடைந்தார்கள். இஸ்லாத்தில் முதன் முதலாக உயிர்த்தியாகம் செய்த பெண்மணி சுமையா (ரலி) அவர்கள்தான். குறைஷிகள் இழைத்த கொடுமையினாலேயே அவர்கள் மரணமடைந்தார்கள்.

அதுபோல பிலால் (ரலி) அவர்களுக்கும் அபூஜஹ்ல், உமையா பின் கலஃப் ஆகிய இருவரால் துன்பம் ஏற்பட்டது. காரணம் பிலால் (ரலி) அவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்கள் மூலமாக இஸ்லாத்தை ஏற்றிருந்தார்கள். அவர்களின் எஜமான் உமையா பின் கலஃப், இதை அறிந்ததும் பிலால் (ரலி) இஸ்லாத்தை விட்டுவிட வேண்டுமென்பதற்காக அவர்களின் மீது கடும் வேதனைகளைக் கட்டவிழ்த்து விட்டான். எல்லா வகையான வேதனைகளையும் பிரயோகித்துப் பார்த்தான். ஆயினும் பிலால் (ரலி) மறுத்து விட்டார்கள். இஸ்லாமிய மார்க்கத்தையே உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். பிலால் அவர்களை உமையா சங்கிலியால் கட்டி மக்காவிற்கு வெளியே கொண்டு வந்தான். அனல் பறக்கும் மணலில் படுக்க வைத்து அவர்களின் நெஞ்சில் மிகப் பெரும் பாரங்கல்லை வைத்து அவனும் அவனைச் சார்ந்தவர்களும் சாட்டையால் மாறி மாறி பிலாலை அடித்தனர். பிலால் (ரலி) அவர்கள் அஹத்! அஹத்! -ஏகன்! ஏகன்! என்றே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்கள். இந்நிலையில் பிலாலை அபூபக்கர் (ரலி) கடந்து செல்லும்போது உமையாவிடமிருந்து அவர்களை விலைக்கு வாங்கி அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு விடுதலை அளித்தார்கள்.

இத்தகைய கொடுமைகள் நிகழ்ந்தபோதுதான் தாங்கள் இஸ்லாத்தைத் தழுவியதை முஸ்லிம்கள் பகிரங்கப்படுத்த வேண்டாமென நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்தது அறிவார்ந்த செயலாக ஆனது! இதுபோலதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களைச் சந்தித்து உரையாடுவதும் இரகசியமாகவே இருந்தது! ஏனெனில் அவர்களைச் சந்திப்பது, உரையாடுவது பகிரங்கமாக நடந்திருந்தால் நபியவர்களை -முஸ்லிம்களுக்கு நற்போதனை அளிக்க விடாமலும் நல்வழி காட்ட விடாமலும் இணைவைப்பாளர்கள் நிச்சயம் தடுத்திருப்பார்கள்! ஒருக்கால் அந்தச் சூழ்நிலை இரு சாராருக்கும் மோதலை உருவாக்கும் அளவுக்குச் சென்றிடலாம். அப்படி ஒரு மோதல் உரு

வானால் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்ககே அது வழிவகுத்திட லாம். ஏனெனில் அந்த அளவு அப்போது முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இரு ந்தது. நிராயுதபாணிகளாகவும் இருந்தனர். எனவே தான் மறைவாகச் செயல்படுவது விவேகமாக இருந்தது. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரையில் குறைஷி இறைநிராகரிப்பாளர்களின் தொல்லைகள் தமக்கு இருந்தபோதிலும் தம் பிரச் சாரத்தையும் வணக்க வழிபாட்டையும் இணைவைப்பவர்களுக்கு மத்தியில் பகிரங்கமா கவே செய்து வந்தார்கள்.

## அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தல்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை- குறிப்பாக பலவீனர்ளை-இணைவைப்பவ ர்கள் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டிருந்தபோது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் அவர்களுடைய மார்க்கத்தைக் காத்துக் கொள்வதற்காக அபீசீ னியாவை நோக்கி- அங்குள்ள மன்னர் நஜ்ஜாஷியிடம் ஹிஜ்ரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். குறிப்பாக அவரிடம் மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமெ ன்பதால். ஏனெனில் பெரும்பாலான முஸ்லிம்கள் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் குறைஷிகளால் தீங்கு ஏற்படுமோ எனப் பயந்து கொண்டிருந்தனர். இது நடந்தது நபி த்துவத்தின் ஐந்தாம் ஆண்டில்.

சுமார் எழுபது முஸ்லிம்கள் தம் குடும்பத்துடன் அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த னர். இவர்களில் உஸ்மான் (ரலி) அவர்களும் அவர்களின் மனைவியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளுமான ருகைய்யா (ரலி) அவர்களும் உண்டு. அந்த முஸ்லிம்கள் அபீசீனியாவில் தங்கியிருக்கும் சூழ்நிலையையும் இணைவைப்பவர்கள் குலைத்திட முய ற்சி செய்தார்கள். அபீசீனிய மன்னருக்கு அன்பளிப்புகள் அனுப்பி வைத்து தங்களது நாட்டிலிருந்து ஓடி வந்த முஸ்லிம்களைத் தங்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கேட் டுக் கொண்டார்கள். மேலும் முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்களையும் அவர்களின் தா யாரையும் திட்டுகிறார்கள் என்று புகார் கூறினார்கள். இதுபற்றி நஜ்ஜாஷி மன்னர் முஸ் லிம்களிடம் விளக்கம் கேட்டபோது அதற்கவர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி இஸ்லாம் கூறுவதை அவருக்குத் தெளிவுபடுத்தி உண்மையை விளக்கிக் கூறியதும் மன்னர் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார். குரைஷிகளிடம் அவர்களைத் திருப்பி ஒப்படைக்க மறுத்து விட்டார்.

இதே ஆண்டு ரமலானில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்குச் சென்றார் கள். அங்கு குரைஷிகளின் பெரும் கூட்டமொன்று இருந்தது. அங்கு நின்று கொண்டு திடீரென நஜ்ம் அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தார்கள். இந்த இறைநிராகரிப்பாளர்கள் இதற்கு முன் அல்லாஹ்வின் வார்த்தையைச் செவியேற்றது கிடையாது. காரணம் நபி கள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எதையும் செவியேற்காதீர்கள் என்று தொடர்ந்து அவர்கள் பரஸ்பரம் கூறிக்கொண்டிருந்தார்கள். இப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் திடீரென இந்த அத்தியாயத்தை ஓதிக்காட்டியபோது- ஈர்ப்பு சக்தியுள்ள இத்தெய் வீக வாக்கு அவர்களின் செவிகளைத் தட்டியபோது அவர்களில் ஒவ்வொருவரும் அதை செவிதாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதல்லாத வேறெதுவும் அவர் களின் உள்ளத்தில் ஊசலாடவில்லை. இறுதியாக "அல்லாஹ்வுக்கே சிரம்பணியுங்கள்! அவனையே வணங்குங்கள்!" என்ற வசனத்தை ஓதி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுஜூது செய்தபோது அவர்கள் அனைவரும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடி

யாமல் ஸுஜூதில் விழுந்தார்கள். இந்நிகழ்சியில் கலந்துகொள்ளாத அனைத்து இணைவைப்பவர்களும் இவர்களைப் பழித்தனர். அப்போது அவர்கள்,தாம் ஸுஜூது செய்ததை நியாயப்படுத்துவதற்காக, 'இவர் நம் சிலைகளைப் புகழ்ந்து கூறியதோடு அவைகளின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கூறினாரென' நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் மீது பொய்யுரைத்தனர்.

## உமர்(ரலி) இஸ்லாத்தைத் தழுவுதல்

உமருப்னுல் கத்தாப் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது முஸ்லிம்களுக்கு உதவியாக யிருந்தது. நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அவர்களுக்கு ஃபாரூக்- சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிபவர்- எனப் பெயரிட்டார்கள். ஏனெனில் அல்லாஹ் அவர்களின் மூலமாக சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டினான். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சில நாட்களுக்குப் பின்னால் உமரவர்கள், அல்லாஹ்வின் தூதரே! நாம் சத்தியத்தில்தானே இருக்கிறோம்? எனக் கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்)ஆம்! என்று கூறினார்கள். அப்படியானால் நாம் ஏன் இப்பணியை ஒளிந்து மறைந்து செய்ய வேண்டும்? என்று அவர்கள் கேட்டார்கள்.

அதன் பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அர்க்கமா என்பவரின் வீட்டில் தங்களுடன் இருந்த முஸ்லிம்களை இரண்டு அணிகளாகப் பிரித்து ஒரு அணிக்கு ஹம்ஸாவையும் மற்றொரு அணிக்கு உமரையும் தலைமையாக்கி அழைப்புப் பணியில் தங்களுக்கிருக்கும் வலிமையை அறிவிக்கும் முகமாகவும் அப்பணியை பகிரங்கப்படுத்தும் முகமாகவும் மக்காவின் பல வீதிகளில் புறப்பட்டுச் சென்றார்கள்.

இவ்வழைப்புப் பணியை எதிர்க்கும் வழியில் குரைஷிகள் பல்வேறு வழிமுறைகளைப் பின் பற்றினர், துன்பம் கொடுத்தனர், கொடுமைகள் இழைத்தனர், ஆசை வார்த்தைகளைக் காட்டினர், அச்சுறுத்தினர். ஆயினும் இவையனைத்தும் இஸ்லாத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்பதற்கும் முஃமின்கள் அதிகமாவதற்குமே வழிவகுத்தன. இப்போது குறைஷிகளின் உள்ளத்தில் புதியதொரு திட்டம் பளிச்சீட்டது! அதுதான் முஸ்லிம்களையும் பனூ ஹாஷிம் கிளையினரையும் சமூகப் பகிஷ்காரம் செய்ய வேண்டும். அவர்களிடம் கொடுக்கல் வாங்கல், திருமணம், உதவி போன்ற எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு ஏட்டில் எழுதி அதில் அவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு கஅபதுல்லாவின் உள்ளே தொங்கவிட வேண்டும் என்பது!

எனவே முஸ்லிம்கள் மக்காவிற்கு வெளியே ஒரு கணவாய்ப் பகுதிக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள். அபூதாலிப் கணவாய் என்று அதற்குப் பெயர் வழங்கப்படுகிறது. அங்கு முஸ்லிம்கள் மிகக் கடுமையான கஷ்டத்திற்கானார்கள். பசியையும் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்தனர். அவர்களில் வசதியுள்ளவர்கள் தங்களின் பெரும் பொருளைச் செலவிட்டனர். கதீஜா(ரலி)அவர்கள் தம் செல்வம் அனைத்தையும் செலவு செய்தார்கள். முஸ்லிம்களுக்கு மத்தியில் நோய் நொடிகள் பரவியது. பெரும்பாலோர் அழிந்துவிடும் நிலைக்கு ஆளானார்கள். எனினும் அவர்கள் நிலை குலையாமல் உறுதியோடும் பொறுமையோடும் இருந்தார்கள். அவர்களில் எவரும் தன் மார்க்கத்திலிருந்து பின்வாங்கவில்லை.

இந்தச் சமூகப் புறக்கணிப்பு மூன்றாண்டுகள் நீடித்தது. பின்னர் குரைஷிகளில் பனூ ஹாஷிம்களுடன் உறவுமுறைத் தொடர்பு வைத்திருந்த சில முக்கியஸ்தர்கள் ஏட்டிலுள்ள ஒப்பந்தத்தை முறித்தார்கள். அதை மக்களிடையே பகிரங்கப்படுத்தினார்கள்.

அவர்கள் அந்த ஏட்டை வெளியே எடுத்தபோது அதைக் கரையான்கள் அரித்திருந்ததைக் கண்டார்கள். ஒரு சிறிய பகுதியைத் தவிர வேறெதுவும் எஞ்சியிருக்கவில்லை. அதில் 'இறைவா! உனது திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன்' என்ற வாசகம் இருந்தது. நெருக்கடி நீங்கி முஸ்லிம்களும் பனூஹாஷிம்களும் மக்காவிற்குத் திரும்பினர். என்றாலும் குறைஷிகள் முஸ்லிம்களை எதிர்த்துப் போராடுவது என்ற உறுதியான நிலையிலேயே இருந்துவந்தனர்.

## துயர ஆண்டு

இதோ அபூதாலிபின் உடலில் பல பகுதிகளிலும் நோய் பரவியது. படுக்கையிலேயே அவர் முடங்கிவிட்டார். பின்னர் மரண வேளையை அவர் நெருங்கிக் கொண்டிருக்கும் போது நபி(ஸல்)அவர்கள் அவரின் தலைமாட்டில் இருந்தார்கள். அவர் மரணத்திற்கு முன்பு லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை மொழிந்துவிடுமாறு அபூதாலிபிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவருக்குப் பக்கத்திலிருந்த அவருடைய தீய நண்பர்கள்- அபூஜஹ்ல் அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான்- லாஇலாஹ இல்லல்லாஹ் கூறவேண்டாமென அவரைத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். உமது தந்தையர் மற்றும் பாட்டன்மார்களின் மார்க்கத்தை விட்டுவிடாதீர்கள்! எனவும் கூறிக் கொண்டிருந்தார்கள். பிறகு அவர் இணைவைப்பிலேயே மரணமடைந்தார். இஸ்லாத்தை ஏற்காத நிலையிலேயே அவரை இழந்ததற்காக நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் துயரம் இரு மடங்காக அதிகரித்தது.

அபூதாலிப் மரணமடைந்து சுமார் இரண்டு மாதங்களில் கதீஜா(ரலி)அவர்களும் மரணமடைந்தார்கள். அதன்பேரில் நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் கடுமையாகத் துயரப்பட்டார்கள். பெரிய தகப்பனார் அபூதாலிபும் தமது மனைவி கதீஜாவும் மரணமடைந்த பின் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுக்கு அவர்களுடைய கூட்டத்தினர் கொடுத்து வந்த துன்பம் கடுமையானது!

## தாயிஃப் பயணம்

முஸ்லிம்களுக்கு குரைஷிகள் தொடர்ந்து துன்பம் கொடுத்துக் கொண்டும் அநியாயம், அக்கிரமம் இழைத்துக் கொண்டும் வந்தனர். குறைஷிகளின் இந்தப் போக்கு மாறவே மாறாது என நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் நிராசையடைந்து விட்டனர். அதனால் தாயிஃப் நகரம் பற்றி சிந்திக்கலானார்கள். அங்குள்ள மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டக்கூடுமென யோசித்தார்கள். தாயிஃபுக்குப் பயணம் மேற்கொள்வது எளிதான காரியமல்ல. காரணம் தாயிஃபைச் சுற்றிலும் உயரமான மலைகள் இருந்தன. பாதையும் கஷ்டமானதாக இருந்தது. எனினும் அல்லாஹ்வின் பாதையில் எல்லாக் கஷ்டமும் இலேசாகிவிடுகிறது. நபியவர்கள் தாயிபுக்கு பயணமானார்கள். ஆயினும் தாயிஃப் மக்கள் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களை மிகவும் மோசமான முறையில் நிராகரித்தனர். அவர்களுக்கு எதிராக சிறுவர்களைத் தூண்டிவிட்டனர். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களைக் கல்லால் எறிந்து அவர்களின் இரு கணுக்கால்களில் இரத்தம் வரும் அளவுக்கு காயப்படுத்தினார்கள். அவர்கள் கவலையுற்றவர்களாக வந்த வழியே மக்காவை நோக்கித் திரும்பினார்கள். அப்போது நபியவர்களிடம் ஜிபரீல்(அலை), வந்தார். அவருடன் மலைகளுக்குப் பொறுப்பாளரான மலக்கும் இருந்தார். நபியவர்களை ஜிப்ரீல் அழைத்து, நீங்கள் விரும்பியதை ஆணையிடுவதற்காக உம்மிடம் மலைகளுக்

குரிய மலக்கை அல்லாஹ் அனுப்பிவைத்துள்ளான் எனக் கூறினார். அப்போது மலைக ளுக்குரிய மலக்கு முஹம்மதே! நீர் விரும்பினால் மக்காவைச் சூழ்ந்துள்ள இரு மலை களை இவர்களின் மீது புரட்டிவிடுகிறேன் என்றார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள், வேண்டாம்! அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காமல் அவனை மட்டுமே வணங்கக்கூடிய சந்ததிகளை இவர்களிலிருந்து அல்லாஹ் தோற்றுவிப்பான் என நான் நம்புகிறேன் எனக் கூறினார்கள்.

இணைவைப்பவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு தர்க்கம் செய்து வந்த விஷயங்களில் ஒன்று என்னவெனில் அற்புதங்களைக் காண்பிக்குமாறு நபியவர்களிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் என்பதாகும். அதன் நோக்கம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இயலாதவர்களாக ஆக்கவேண்டும் என்பது. இக்கோரிக்கை பல முறை அவ ர்களிடமிருந்து வந்தது. ஒரு முறை சந்திரனை இரு கூறாகப் பிளந்து காட்டும்படி நபி கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வேண்டினார்கள். அவ்வாறே நபியவர்கள் தம் இறைவ னிடம் வேண்டிக் கொண்டு சந்திரனை இரு கூறாகப் பிளந்து காட்டினார்கள். குறை ஷிகள் அந்த அற்புதத்தை நீண்ட நேரம் கண்டார்கள். எனினும் அவர்கள் அதை நம்ப வில்லை. முஹம்மத் எங்களுக்கு சூனியம் செய்துவிட்டாரெனக் கூறினார்கள். அப்போது ஒரு மனிதர் இவர் உங்களுக்கு சூனியம் செய்து விட்டாலும் அனைத்து மக்களுக்கும் அவரால் சூனியம் செய்ய முடியாது. எனவே இதன் உண்மை நிலையை அறிந்து கொ ள்வதற்காக பயணக் கூட்டத்தினரை எதிர்பாருங்கள் எனக் கூறினார். பின்னர் பயணி கள் வந்தபோது அவர்களிடம் இதுபற்றிக் கேட்டனர். அதற்கவர்கள் ஆம்! நாங்களும் அதைக் கண்டோம் எனக் கூறினர். எனினும் குறைஷிகள் இதன் பின்னரும் நிராகரிப்பி லேயே பிடிவாதமாக இருந்தனர். சந்திரன் பிளந்த இந்நிகழ்ச்சி அதை விடப் பெரிய தோர் அற்புதத்திற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். அதுதான் இஸ்ரா, மிஃராஜ்- விண்வெளிப் பயணமாகும்.

## இஸ்ரா, மிஃராஜ்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் சென்று திரும்பிய பிறகு அவர்களுக்கு அங் கு ஏற்பட்ட துன்பங்கள், பிறகு அபூதாலிபின் மரணம், அதைத் தொடர்ந்து கதீஜா (ரலி) யின் மரணம், அதன் பின்னர் குறைஷிகளின் கடும் தொல்லைகள் ஆகியவற்றிற்குப் பிறகு அவர்களின் உள்ளத்தில் கவலைகள் அதிகமாகிவிட்டன. அப்போது தமது இறைவனி டமிருந்து சங்கைக்குரிய இந்நபிக்கு ஆறுதல் வந்தது. நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு ரஜப் மாதம் 27-ஆம் இரவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் புராக் எனும் வாகனத்தைக்கொண்டு வந்தார்கள். அது இரண்டு இறக்கைகள் கொண்ட மின்னலைப் போன்று விரைந்து செல்லக்கூடிய குதி ரையைப் போன்ற ஒரு பிராணியாகும். ஜிப்ரீல் (அலை) அதன் மீது அவர்களை ஏற்றி ஃபல ஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்தஸ் எனும் பள்ளிவாசலுக்கு கொண்டு சென்றார்கள். பிறகு அங்கிருந்து அவர்களை வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர் கள் தமது இறைவனின் மாபெரும் அத்தாட்சிகளைக் கண்டார்கள். வானில் வைத்தே ஐவேளைத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டன. அதே இரவில் அவர்கள் தெளிந்த உள்ளத்துடனும் அழுத்தமான உறுதியுடனும் மக்காவிற்குத் திரும்பி வந்தார்கள்.

மறுநாள் காலையில் கஅபதுல்லாவிற்குச் சென்று நடந்ததை மக்களிடம் கூறினார் கள். அப்போது இறைநிராகரிப்பாளர்கள் அவர்களைப் பொய்யர் என்று கடுமையாகத்

தூற்றினர். கேலியும் கிண்டலும் செய்தனர். பின்பு அங்கு அமர்ந்திருந்த சிலர் பைத்துல் முகத்தஸ் எப்படி இருந்தது என்பதைக் கூறும்படிக் கேட்டனர். இவ்வாறு அவர்கள் கேட்டதன் நோக்கம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இயலாதவர்களாக ஆக்க வேண்டுமென்பதே! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் ஒவ்வொரு பகுதி பற்றி விரிவாகக் கூற ஆரம்பித்தார்கள். இறைநிராகரிப்பாளர்கள் இப்படிக் கேட்டதோடு நின்று விடவில்லை. மாறாக வேறொரு ஆதாரமும் எங்களுக்கு வேண்டுமெனக் கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழியில் மக்காவை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு வியாபாரக் கூட்டத்தைச் சந்தித்தேன் என்று கூறினார்கள். அவர்களின் தன்மைகளையும் அவர்களின் ஒட்டகங்களின் எண்ணிக்கையையும் அவர்கள் வந்த நேரத்தையும் அவர்களிடம் தெரிவித்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ உண்மையையே கூறினார்கள். ஆனால் இறைநிராகரிப்பாளர்களோ தமது இறைநிராகரிப்பு, பிடிவாதம், நம்ப மறுப்பது ஆகிவற்றிலேயே அமிழ்ந்து வழிதவறிக் கொண்டிருந்தார்கள்.

மிஃராஜ் சென்று வந்த காலையில் ஜீப்ரீல் (அலை) வந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஐவேளைத் தொழுகைகளின் முறைகளையும் அதற்குரிய நேரங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அதற்கு முன்னர் தொழுகை காலையிலும் மாலையிலும் இரண்டு ரக்அத்துகளாக இருந்தது.

குறைஷிகள் சத்தியத்தை வெறுப்பதில் உறுதியாக இருந்து கொண்டிருந்த இந்த நேரத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு வரக்கூடிய மக்களை அவர்களுடைய கூடாரங்களிலும் அவர்கள் வந்து தங்கியிருக்கக் கூடிய இடங்களிலும் சந்தித்து அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துக் கூறிக்கொண்டும் அதை அவர்களுக்கு விளக்கிக் கொண்டும் இருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தகப்பனார் அபூலஹபோ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அவர்களைக் குறித்தும் அவர்களின் பிரச்சாரம் குறித்தும் மக்களை எச்சரித்து வந்தான். ஒரு தடவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து வந்த ஒரு கூட்டத்தாரிடம் சென்று அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். அதை அவர்கள் கவனமாகக் கேட்டார்கள். அவர்களை ஈமான் கொண்டு அவர்களைப் பின்பற்றுவ தென முடிவு செய்தார்கள்.

ஒரு நபி அனுப்பப்பட இருக்கிறார் என்றும் அவர் வரும் காலம் அண்மித்து விட்டது என்றும் யூதர்கள் வழியாக மதீனாவாசிகள் கேட்டிருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்ததும் யூதர்கள் கூறிய நபி இவர்தான் என்பதை அறிந்து கொண்டு விரைந்து வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இது விஷயத்தில் யூதர்கள் தங்களை முந்திவிடக்கூடாதெனவும் கூறிக் கொண்டார்கள். அவர்கள் மொத்தம் ஆறு பேர். மறு ஆண்டு 12 ஆண்கள் வந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்று சேர்ந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்.

அவர்கள் மதீனாவுக்கு திரும்பிச் சென்றபோது அவர்களுக்கு குர்ஆனைப் படித்துக் கொடுப்பதற்காகவும் மார்க்கச் சட்டங்களை விளக்கிக் கூறுவதற்காகவும் முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்களை நபியவர்கள் அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்களால் மதீனாவாசிகளுக்கு நல்லதொரு பலனை ஏற்படுத்த முடிந்தது. ஓராண்டிற்குப் பின் அவர்கள் மக்காவுக்கு திரும்பி வந்தபோது அவர்களுடன் 72 ஆண்களும் 2 பெண்களும் இருந்தனர். அவர்களை நபிகள் நாயகம்

(ஸல்)அவர்கள் ஒன்று கூட்டினார்கள். அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு உதவி புரிவதற்கும் அவர்களின் கட்டளையை ஏற்று நடப்பதற்கும் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன் பின்னர் அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

## அழைப்புப் பணியின் புதிய கேந்திரம்

சத்தியத்திற்கும் சத்தியவாதிகளுக்கும் புகலிடமாகவும் பாதுகாப்பான இடமாகவும் மதீனா ஆகிவிட்டது. மதீனாவை நோக்கி முஸ்லிம்களின் ஹிஜ்ரத் பயணம் தொடங்கியது. எனினும் குறைஷிகள் முஸ்லிம்களை ஹிஜ்ரத் செய்யவிடாமல் தடுக்க உறுதி கொண்டனர். ஹிஜ்ரத் செய்பவர்களில் சிலர் பலவகையான துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்தனர். முஸ்லிம்கள் குரைஷிகளுக்குப் பயந்து ரகசியமாக ஹிஜ்ரத் செய்து கொண்டிருந்தனர். உமர்(ரலி)அவர்களின் ஹிஜ்ரத் வீரத்திற்கும் சவாலுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. ஏனெனில் அவர்கள் தமது வாளை உருவிக் கொண்டு தமது வில்லையும் ஏந்திக்கொண்டு கஅபதுல்லாவிற்குச் சென்று அதை வலம் வந்துவிட்டு பின்னர் இணைவைப்பவர்களை நோக்கி, "எவன் தனது மனைவியை விதவையாக்க விரும்புகிறானோ அல்லது தனது குழந்தையை அநாதையாக்க விரும்புகிறானோ அவன் என்னிடம் வரட்டும்! இதோ நான் ஹிஜ்ரத் புறப்படுகிறேன்!" எனக் கூறிவிட்டுச் சென்றார்கள். எவரும் அவரைத் தடுக்கத் துணியவில்லை. அபூபக்ர்(ரலி)அவர்கள், தான் ஹிஜ்ரத் செல்வதற்கு நபிகள் நாயகம்(ஸல்)அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அதற்கவர்கள் அவசரப்படாதீர்கள் அல்லாஹ் உங்களுக்கு ஒரு பயணத் தோழரை வழங்கலாமெனக் கூறினார்கள்.

இறுதியாக பெரும்பாலான முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து விட்டனர். இதைப் பார்த்ததும் குறைஷிகள் கொதித்தெழுந்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அந்தஸ்தும் அவர்களின் பிரச்சாரமும் மேலோங்கி வருவது குறித்து அஞ்சினார்கள். இது விஷயமாக அவர்கள் ஆலோசனை நடத்தி நபிகள் நாயகம்(ஸல்)அவர்களைக் கொன்றுவிடத் தீர்மானித்தார்கள். அபூஜஹ்ல் கூறினான்: நம்மிலுள்ள எல்லாக் கோத்திரத்திலிருந்தும் திடகாத்திரமான ஒரு வாலிபனைத் தேர்வு செய்து அவர்களிடம் வாளைக் கொடுத்து விடவேண்டும். அவர்கள் முஹம்மதைச் சுற்றி வளைத்து எல்லோரும் சேர்ந்து ஒரு மனிதன் வெட்டுவது போன்று ஒரே வெட்டாக அவரை வெட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் அவரின் கொலைக் குற்றம் எல்லா கோத்திரத்திலும் பிரிந்து சென்றுவிடும். அதன் பிறகு பனூஹாஷிம்களால் எல்லோரையும் பகைத்துக் கொள்ள முடியாது. இதுவே எனது கருத்தாகும். இந்த சதித்திட்டத்தை அல்லாஹ் சங்கைக்குரிய தனது நபிக்கு தெரிவித்து விட்டான்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அபூபக்கர்(ரலி)அவர்களுடன் ஹிஜ்ரத்துச் செய்ய முடிவு செய்தார்கள். அந்த இரவில் நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அலீ(ரலி)யிடம் தம்முடைய இடத்தில் உறங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இதன் நோக்கம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது வீட்டிலேயே இருக்கிறார்கள் என மக்கள் எண்ணிக்கொள்ள வேண்டும் என்பதே. மேலும் அலீ(ரலி)யிடம் உமக்கு எந்தத் துன்பமும் நேராது எனவும் தெரிவித்தார்கள். சதிகாரர்கள் வந்து வீட்டை முற்றுகையிட்டார்கள். படுக்கையிலிருந்த அலீ(ரலி)யைப் பார்த்துவிட்டு அவர் முஹம்மதுதான் என எண்ணிக் கொண்டார்கள். அவர் எப்போது வெளியே வருவார் என்பதை எதிர்பார்த்துக் கொண்

டிருந்தார்கள் அவரைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்பதற்காக. அவர்கள் வீட்டை முற்றுகையிட்டிருக்கும் நிலையிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மண்ணை அள்ளி அவர்களின் தலையில் தூவிவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அல்லாஹ் அவர்களின் பார்வையைப் பறித்து விட்டான். ஆகவே அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்றதை உணரவில்லை.

நபி (ஸல்) அவர்கள் நேராக அபூபக்கர் (ரலி) யிடம் சென்றார்கள். பிறகு இருவரும் சேர்ந்து சுமார் ஐந்து மைல் தூரம் சென்று ஸவ்ர் எனும் குகையில் ஒளிந்து கொண்டனர். குறைஷி இளைஞர்கள் காலை வரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். காலையில் அலி (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கையிலிருந்து எழுந்ததும் குறைஷிகளிடம் பிடிபட்டார்கள். அவர்களிடம் முஹம்மத் எங்கே? எனக் கேட்டார்கள். அதற்கவர்கள் எதுவுமே கூறவில்லை. அதனால் அவர்கள் அவர்களை அடித்து இழுத்துச் சென்றார்கள். ஆனால் எந்தப் பலனுமில்லை. பின்னர் குறைஷிகள் எல்லா பாகங்களிலும் தேடுவதற்கு ஆள் அனுப்பினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வருபவருக்கு நூறு ஒட்டகங்கள் பரிசாகத் தரப்படுமென அறிவித்தார்கள். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தேடி அந்தக் குகை வாசலுக்கே வந்து விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் ஒருவன் கீழே குனிந்து தனது பாதங்கள் வழியாகப் பார்த்து விட்டால் அவர்கள் இருவரையும் கண்டு கொள்வான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என அபூபக்ர் (ரலி) கடுமையான கவலை கொண்டார்கள். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்ரே! நாம் இருவர் என எண்ணிக்கொண்டீரா? அல்லாஹ்வுடன் சேர்ந்து நாம் மூவரல்லவா? எனவே நீங்கள் கவலைப்படாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்! எனக் கூறினார்கள். ஆனால் அக்கூட்டத்தினர் அவ்விருவரையும் பார்க்கவில்லை. இருவரும் குகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்துவிட்டு பிறகு மதீனாவை நோக்கி நடந்தனர். பயணம் நீண்ட பயணமாக இருந்தது. வெயில் தீயாகக் கொளுத்தியது.

இரண்டாம் நாள் மாலையில் அவ்விருவரும் ஒரு கூடாரம் அருகே சென்றனர். அதில் உம்மு மஅபத் எனச் சொல்லப்படும் ஒரு பெண்மணியைக் கண்டனர். அவரிடம் உணவும் தண்ணீரும் கேட்டனர். அவரிடம் எதுவுமே இல்லை. மெலிந்த ஒரே ஒரு ஆட்டைத் தவிர! அதன் பலவீனம் அதை மேய்ச்சலுக்குச் செல்ல முடியாதவாறு தடுத்திருந்தது. அதில் துளிப் பால் கூட இல்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் அருகில் சென்று அதன் பால் மடியைத் தடவி பால் கறந்து ஒரு பெரிய பாத்திரத்தை நிரப்பினார்கள். அதைப் பார்த்து விட்டு உம்மு மஃபத் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தார். பிறகு அனைவரும் தாகம் தீர அருந்தினர். பிறகு இரண்டாம் முறையும் பால் கறந்து பாத்திரத்தை நிறைத்து விட்டு அதை உம்மு மஅபதிடம் கொடுத்துவிட்டு நடையைத் தொடர்ந்தனர்.

மதீனாவாசிகள் ஒவ்வொரு நாளும் மதீனாவிற்கு வெளியே நின்று கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்து சேர்வதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நபியவர்களும் அபூபக்ரும் மதீனா சென்றடைந்த நாளன்று அவர்களை வாழ்த்துச் சொல்லி மகிழ்வோடு வரவேற்றனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் மேட்டுப் பகுதியிலுள்ள குபா என்னுமிடத்தில் இறங்கினார்கள். அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். அங்கு குபா பள்ளிவாசலை நிர்மாணித்தார்கள். இஸ்லாத்தில் முதன் முத

லில் கட்டப்பட்ட பள்ளி இதுதான். ஐந்தாம் நாள் மதீனாவுக்குப் புறப்பட்டார்கள். அன்ஸாரிகளில் பெரும்பாலோர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு விருந்துபசரிப்பதன் சிறப்பைத் தாங்களே பெற முயற்சித்தார்கள். அதனால் போட்டி போட்டுக்கொண்டு அவர்களுடைய ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு நன்றி கூறி ஒட்டகத்தை விட்டுவிடுங்கள்! நிச்சயமாக அது இறை ஆணைக்குக் கட்டுப்பட்டதெனக் கூறினார்கள். அல்லாஹ் ஏவிய இடத்தை அடைந்ததும் அந்த ஒட்டகம் படுத்துக் கொண்டது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து இறங்கவில்லை. உடனே அது எழுந்து சிறிது தூரம் நடந்தது. பிறகு திரும்பி வந்து மீண்டும் அதன் முதல் இடத்திலேயே படுத்துக் கொண்டது. அதன் பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து இறங்கினார்கள். அதுதான் மஸ்ஜிதுன் நபவீ-நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டிய பள்ளிவாசல் உள்ள இடமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஅய்யூப் அல்-அன்சாரி வீட்டில் தங்கினார்கள். அலீ (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் மூன்று நாட்கள் மக்காவில் தங்கிவிட்டு பிறகு மதீனா புறப்பட்டார்கள். குபாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வந்து சேர்ந்தார்கள்.

## மதீனாவில் நபிகள் நாயகம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகம் படுத்த இடத்தை அதற்குரியவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய பின் அந்த இடத்தில் பள்ளிவாசலைக் கட்டினார்கள். முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதர பந்தத்தை ஏற்படுத்தினார்கள். (மக்காவைத் துறந்து மதீனா வந்தவர்கள் முஹாஜிர்கள். முஹாஜிர்களுக்கு உதவி செய்த மதீனாவாசிகள் அன்ஸாரிகள்) அதாவது அன்ஸாரிகளில் ஒவ்வொருவருக்கும் அவரின் சொத்தில் கூட்டுச் சேர்ந்து கொள்ளும் சகோதரராக முஹாஜிர்களில் ஒருவரை ஆக்கினார்கள். முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ஒன்றாகவே செயல்படத் தொடங்கினர். அவர்களிடையே சகோதரத்துவ பந்தம் அதிகரித்தது. குறைஷிகளுக்கு மதீனாவிலுள்ள யூதர்களுடன் தொடர்பிருந்தது. அந்த யூதர்கள் முஸ்லிம்களிடையே பிரிவினையையும் குழப்பங்களையும் தோற்றுவிக்க முயற்சித்தார்கள். குரைஷிகளும் முஸ்லிம்களை அச்சுறுத்திக் கொண்டும் அவர்களைத் தீர்த்துக்கட்டிவிடுவோம் என்று எச்சரித்துக்கொண்டுமிருந்தனர். இவ்வாறாக முஸ்லிம்களுக்கு மதீனாவின் உள்ளேயும் வெளியேயும் ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தன. தம்முடன் ஆயுதங்கள் இல்லாமல் நபித்தோழர்கள் இரவைக் கழிக்க முடியாத அளவுக்கு நிலமை சென்று விட்டிருந்தது.

இந்த ஆபத்தான காலகட்டத்தில்தான் அல்லாஹ் போர் செய்வதற்கு அனுமதியளித்தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் எதிரிகளின் வியாபாரக் கூட்டத்தினர் மீது தங்களின் பிடியை இருக்கிக் கொள்வதற்காக அவர்களை வழிமறிப்பதற்காகவும் சிறு சிறு படைகளை அனுப்ப ஆரம்பித்தார்கள். இதன் நோக்கம் முஸ்லிம்களின் வலிமையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அதனால் அவர்கள் முஸ்லிம்களுடன் இணக்கமாகி முஸ்லிம்களை இஸ்லாத்தின்படி செயல்படுவதற்கும் இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் சுதந்திரமாக விட்டு விடவேண்டும் என்பதுதான். அதுபோல சில கூட்டத்தாருடன் நேச உடன்படிக்கையும் செய்து கொண்டார்கள்.

## பத்ருப் போர்

ஒரு முறை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் குரைஷிகளின் வியாபாரக் கூட்டம் ஒன்றை வழிமறிக்க முடிவு செய்து 313 பேர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் இரண்டு குதிரைகளும் எழுபது ஒட்டகங்களும் மட்டுமே இருந்தன. குறைஷிகளின் அந்த வியாபாரக் கூட்டத்திடம் ஆயிரம் ஒட்டகங்கள் இருந்தன. அக்கூட்டத்தினரை அபூசுஃப்யான் வழிநடத்தி வந்தார். அவருடன் 40 பேர் இருந்தனர். ஆயினும் அபூசுஃப்யான் முஸ்லிம்கள் புறப்பட்டு வருவதை அறிந்து மக்காவிற்குச் செய்தி அனுப்பி உதவி தேடினார். மேலும் தனது வழியை மாற்றி வேறு வழியில் சென்றார். அவர்களை வெல்ல முஸ்லிம்களால் முடியவில்லை. குரைஷிகளோ ஆயிரம் படைவீரர்களுடன் புறப்பட்டு வந்தனர். எனினும் அவர்களிடம் அபூசுஃப்யானின் தூதர் வந்து வியாபாரக் கூட்டம் தப்பித்துவிட்டதை தெரிவித்து மக்காவிற்கே திரும்பிச் செல்லும்படி வேண்டினார். ஆனால் திரும்பிச் செல்ல அபூஜஹ்ல் மறுத்து விட்டான். குறைஷிகளின் படை தொடர்ந்து பயணமாகி பத்ரு மைதானத்தை அடைந்தது.

குறைஷிகள் புறப்பட்டு வருவதை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் தமது தோழர்களிடம் கலந்தாலோசித்தார்கள். அனைவரும் இறைநிராகரிப்பாளர்களோடு போர் செய்ய சம்மதம் தெரிவித்தனர். ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ரமலான் 17 அன்று வெள்ளிக் கிழமை காலை இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்து கடும் போர் செய்தனர். முஸ்லிம்களின் வெற்றியுடன் போர் முடிந்தது. முஸ்லிம்களில் 14 பேர் உயிர்த்தியாகம் செய்தனர். இணைவைப்பவர்களில் 70 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தப் போர் நடந்து கொண்டிருக்கும்போதே நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் மகளும் உஸ்மான் (ரலி)அவர்களின் மனைவியுமான ருகைய்யா (ரலி)அவர்கள் (மதீனாவில்) மரணமடைந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் உஸ்மான் (ரலி)அவர்களை நோயாளியான அவர்களின் மனைவியுடன் இருக்கவேண்டுமென வேண்டிக்கொண்டதால் அவர்கள் போருக்கு வராமல் தம் மனைவியுடன் தங்கிவிட்டார்கள். இப்போருக்குப் பிறகு நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு தமது இரண்டாவது மகள் உம்மு குல்ஸூம் (ரலி) யை மணமுடித்துக் கொடுத்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இரு பெண் மக்களை மணந்து கொண்டதால் உஸ்மான் (ரலி)அவர்கள் துன் நூரைன்- இரண்டு பிரகாசம் உடையவர்-என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பட்டார்கள்.

பத்ருப்போர் முடிந்த பின்னர் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் உதவி குறித்து மகிழ்சியடைந்தவர்களாக மதீனாவுக்குத் திரும்பினர். கைதிகளையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு வந்தனர். போரில் கிடைத்த பொருட்களும் இருந்தன. கைதிகளைப் பொறுத்தவரை சிலர் பிணைத் தொகை கொடுத்து விடுதலை பெற்றார்கள். வேறு சிலர் பிணைத் தொகையின்றி விடுதலை பெற்றார்கள். மற்றும் சிலரோ பத்து முஸ்லிம் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து அதையே ஈடாகத் தந்து விடுதலை பெற்றார்கள்.

## உஹதுப் போர்

பத்ருப் போருக்குப் பிறகு முஸ்லிம்களுக்கும் மக்காவிலுள்ள இறைநிராகரிப்பாளர்களுக்குமிடையே பல போர்கள் நடந்தன. இரண்டாவதாக நடந்த போர் உஹதுப் போராகும். இப்போரில் இணைவைப்பாளர்களே வென்றார்கள் முஸ்லிம்கள் தோற்றார்கள். காரணம் முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் மாறு செய்தார்கள். அவர்களுக்காக நபியவர்கள் தீட்டிய திட்டத்தைக் குலைத்தார்

கள். இப்போரில் மக்காவாசிகளிடம் மூவாயிரம் போர் வீரர்கள் இருந்தனர். முஸ்லிம்கள் சுமார் எழுநூறு பேர்தான் இருந்தனர். இந்தப் போருக்குப் பின்னர் யூதர்களில் சிலர் மக்காவா சிகளிடம் சென்று மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் மீது போர் தொடுக்குமாறு அவர்களைத் தூண்டினர். அவர்களுக்கு உதவி செய்வதாகவும் வாக்களித்தனர். அதை அவர்களும் ஏற்றுக்கொண்டனர். பிறகு யூதர்கள் வேறு பல குலங்களையும் முஸ் லிம்களுக்கெதிராகப் போர் செய்யுமாறு தூண்டினர். அவர்களும் சம்மதம் தெரிவித்த னர். எல்லா இடங்களிலிருந்தும் இணைவைப்பவர்கள் மதீனாவை முன்னோக்கி வந்த னர். இறுதியாக மதீனாவைச் சுற்றி பத்தாயிரம் போர் வீரர்கள் ஒன்று திரண்டுவிட்டனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளின் நடவடிக்கைகளை அறிந்ததும் தோழ ர்களிடம் கலந்தாலோசித்தார்கள். அப்போது ஸல்மான் ஃபாரிஸி (ரலி) அவர்கள் மதீனா வைச் சுற்றி மலைகளில்லாத பகுதிகளில் அகழ் தோண்டுமாறு ஆலோசனை கூறினார் கள். முஸ்லிம்கள் அகழ் தோண்டுவதில் அனைத்து முஸ்லிம்களும் பங்குகொண்டு விரைவாகத் தோண்டி முடித்தார்கள். இணைவைப்பவர்கள் அகழைக் கடக்க முடியா மல் சுமார் ஒரு மாத காலமாகத் தங்கிவிட்டனர். பின்னர் இணைவைப்பவர்களின் மீது ஒரு பயங்கரமான காற்றை அல்லாஹ் அனுப்பிவைத்தான். அது அவர்களின் கூடாரங்க ளைப் பெயர்த்தெறிந்தது. அவர்களுக்குப் பயம் ஏற்பட்டு விரைவாக ஊருக்குத் திரும் பிவிட்டனர்.

## மக்காவை வெற்றி கொள்ளுதல்

ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் மீது படையெடு க்கவும் அதை வெற்றிகொள்ளவும் திட்டமிட்டார்கள். ரமலான் 10 ஆம் நாள் பத்தாயிரம் படை வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். கொல்லத்தக்க வகையிலான எந்தச் சண்டையும் நிகழாமல் மக்காவினுள் நுழைந்தார்கள். குறைஷிகள் சரணடைந்தார்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவி செய்தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹரம் ஷரீஃபிற்குச் சென்று கஅபதுல்லாவை வலம் வந்து அதனுள் இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். அதன் பின்னர் கஅபா ஆலயத்தினுள்ளும் அதன் மேலும் நாட்டப்பட் டிருந்த சிலைகள் அனைத்தையும் உடைத்தெறிந்தார்கள். பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவின் வாசலின் மீது நின்றார்கள். குறைஷிகள் கீழே அணி வகுத்து நின்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை என்ன செய்யப் போகிறார்களோ என எதிர்பார் த்துக் கொண்டிருந்தனர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குறைஷிகளே! நான் உங்களை என்ன செய்ய வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள்? எனக் கேட் டார்கள். அதற்கவர்கள், நீங்கள் சிறந்த சகோதரர்! சிறந்த சகோதரனின் மகன்! நல் லதையே செய்வீர்கள்! எனக் கூறினர். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல் லுங்கள்! நீங்கள் அனைவரும் விடுதலை பெற்றவர்கள் எனக் கூறினார்கள்.

தம் தோழர்களைக் கொடுமைப்படுத்தி, கொலையும் செய்து, தமக்கும் தொல்லை கொடுத்து, நாட்டை விட்டே தம்மை வெளியேற்றிய விரோதிகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்து விட்டதில் மிகப் பெரும் உதாரண புரசராகத் திகழ்ந்தார் கள். மக்கா வெற்றிக்குப் பின்னர் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்த னர். ஹிஜ்ரீ 10 ஆம் ஆண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ் செய்தார்கள். அது தான் அவர்கள் செய்த ஒரே ஹஜ். அவர்களுடன் லட்சத்திற்கும் அதிகமானோர் ஹஜ்

செய்தனர். நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் ஹஜ்ஜை நிறைவு செய்த பின்னர் மதீனாவுக்குத் திரும்பினார்கள்.

## நபிகள் நாயகத்தின் மரணம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஹஜ்ஜிலிருந்து திரும்பி இரண்டரை மாதத்திற்குப் பிறகு அவர்களுக்கு நோய் ஏற்படத் தொடங்கியது. அது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்த இயலாமலானபோது அபூபக்ரை மக்களுக்குத் தொழுகை நடத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் 12 ஆம் நாள், திங்கட் கிழமை நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் மரணமடைந்தார்கள். உயர்வு மிக்க நண்பனான அல்லாஹ்விடம் திரும்பிவிட்டார்கள். அப்போது அவர்கள் 63 வயதை நிறைவு செய்திருந்தார்கள். இச்செய்தி நபித்தோழர்களுக்குக் கிடைத்ததும் உணர்விழந்து போகும் அளவு துக்கம் அடைந்தனர். இச்செய்தியை அவர்கள் நம்பவில்லை. பிறகு அவர்களுக்கு மத்தியில் அபூபக்ர்(ரலி)அவர்கள் உரை நிகழ்த்தி அவர்களை அமைதிப்படுத்தினார்கள். மேலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் மனிதர்தான். ஏனைய மனிதர்கள் மரணமடைந்து விடுவது போலவே அவர்களும் மரணமடைந்து விடுகிறார்கள் என்பதை விளக்கிக் கூறினார்கள். பிறகு மக்கள் அமைதியடைந்தனர். அதன் பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் குளிப்பாட்டப்பட்டு, கஃபன் செய்யப்பட்டு, அடக்கமும் செய்யப்பட்டார்கள். அதன் பின்னர் முஸ்லிம்கள் அபூபக்ர் சித்தீக்(ரலி)அவர்களைத் தங்களுக்கு கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள்தான் நேர்வழி பெற்ற கலீஃபாக்களில் முதல் கலீஃபா. நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் மக்காவில் நபியாக ஆவதற்கு முன் நாற்பது ஆண்டுகளும் நபியாக ஆன பிறகு பதிமூன்று ஆண்டுகளும் மதீனாவில் பத்து ஆண்டுகளும் வாழ்ந்துள்ளார்கள்.

## நற்குணங்கள்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்கள் அனைவரினும் வீரமிக்கவர்களாக இருந்தனர். அலீ(ரலி) அவர்கள் கூறினார்கள்: "எதிரிப் படையினரும் நாமும் நேருக்கு நேர் மோதி, போர் உக்கிரமமாக நடைபெறும்போது நாங்கள் நபி(ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று போரிடுவதுகொண்டு எங்களைத் தற்காத்துக் கொள்வோம்." நபியவர்கள் மக்கள் அனைவரினும் பெரும் கொடைவள்ளலாகத் திகழ்ந்தார்கள். அவர்களிடம் யாரும் எதையும் கேட்டு அவர்கள் இல்லையெனக் கூறியதில்லை. அவர்கள் மக்களில் பெரும் சகிப்புத் தன்மை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமக்காக யாரையும் பழி வாங்கியது கிடையாது. தமக்காக யாரையும் கோபப்பட்டதும் கிடையாது. ஆனால் அல்லாஹ்வினால் புனிதமாக்கப்பட்டவற்றிற்குப் பங்கம் ஏற்படுத்தப்பட்டால் அப்போது அல்லாஹ்வுக்காக என்று மட்டுமே பழிவாங்குபவர்களாக இருந்தார்கள்.

உரிமைகள் விஷயத்தில் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களிடம் தம்மவர், அந்நியர் பலமிக்கவர், பலவீனர் அனைவரும் சமமே. மேலும் "இறையச்சத்தைக் கொண்டே தவிர ஒருவர் இன்னொருவரை விடச் சிறந்து விளங்க முடியாது. மக்கள் அனைவரும் சமமே! முன் சென்ற சமுதாயம் அழிந்து போனதற்குக் காரணம் அவர்களில் செல்வா க்கு மிக்கவன் திருடினால் அவனை விட்டுவிடுவார்கள். பலவீனன் திருடினால் அவனுக்கு தண்டனை நிறைவேற்றுவார்கள்"என்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்கள். மேலும் "அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடினாலும் அவரது கையையும் தறித்துவிடுவேன்" என்றும் கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. விரும்பினால் உண்பார்கள். விரும்பமில்லையென்றால் விட்டுவிடுவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர், வீட்டில் நெருப்பு மூட்டப்படாமலேயே ஓரிரு மாதங்களைக் கழித்திருக்கின்றனர். பேரீத்தம் பழமும் தண்ணீரும்தான் அவர்களின் உணவாக இருந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பசியின் காரணமாக தமது வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். செருப்பு அறுந்துவிட்டால் அதைத் தாங்களே செப்பனிடுவார்கள். கிழிந்த ஆடையைத் தைத்துக் கொள்வார்கள். வீட்டு வேலையில் தமது மனைவியருக்கு உதவி செய்வார்கள். நோயாளிகளைச் சந்திக்கச் செல்வார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) மக்களில் மிக்க பணிவு உள்ளவர்களாக இருந்தனர். செல்வந்தர், ஏழை, செல்வாக்குள்ளவர், செல்வாக்கில்லாதவர் என யார் விருந்திற்காக அழைத்தாலும் ஏற்றுக் கொள்வார்கள். ஏழைகளை நேசிப்பார்கள். அவர்களின் ஜனாஸாவில் கலந்து கொள்வார்கள். ஏழை நோயாளிகளையும் நோய் விசாரிக்கச் செல்வார்கள். ஏழை என்பதற்காக யாரையும் இழிவாகக் கருதமாட்டார்கள். அதிகாரத்தின் அடிப்படையில் எந்த அரசனுக்கும் பயப்படமாட்டார்கள். குதிரை, ஒட்டகம், கழுதை, கோவேறு கழுதை முதலியவற்றில் பயணம் செய்திருக்கிறார்கள்.

மக்களிலேயே அதிகப் புன்னகை உடையவர்களாகவும் முகம் மலர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். எத்தனை எத்தனை துன்பங்கள், துயரங்கள் அவர்களை வாட்டினாலும் சரியே! நறுமணத்தை விரும்புவார்கள். அருவறுக்கத்தக்க வாடையை வெறுப்பார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்குணங்களையும் நற்செயல்களையும் ஒருசேரக் கொடுத்திருந்தான். முன்னோர் பின்னோர் யாருக்குமே வழங்கப்படாத கல்வி ஞானத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான். இத்தனைக்கும் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்! மனிதர்களில் யாரும் அவர்களுக்கு ஆசிரியராக இருந்தது கிடையாது. அல்லாஹ்விடமிருந்தே இந்தக் குர்ஆனைக் கொண்டுவந்தார்கள். இதுபற்றி அல்லாஹ் கூறும்போது "மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முயன்றாலும் இதைப் போன்று அவர்களால் கொண்டுவர முடியாது. அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே!" (17:88) என்று கூறுகிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறு வயது முதல் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே வளர்ந்து வந்ததால்தான் அவர்கள் வேதத்தை பிறரிடமிருந்து எழுதிக் கொண்டார்கள் அல்லது கற்றுக்கொண்டார்கள் அல்லது மற்றவர்களின் புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொண்டார்கள் என அவர்களைப் பற்றி பொய்யுரைப்பவர்கள் பொய்யுரைக்க வழியில்லாமல் போய்விட்டது!

## நபிகள் நாயகத்தின் அற்புதங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் அற்புதம் திருக்குர்ஆனாகும். அது பண்டிதர்கள் அனைவரையும் இயலமலாக்கியது. அல்லாஹ் திருக்குர்ஆன் மூலம் எல்லோருக்கும் சவால்விட்டான். இதுபோன்ற பத்து அத்தியாயங்களையோ ஒரு அத்தியாயத்தையோ ஒரு வசனத்தையேனும் கொண்டு வாருங்களென்று. திண்ணமாக திருக்குர்ஆன் ஓர் அற்புதம்தான் என்பதற்கு இணைவைப்பவர்களே சான்று பகர்ந்தார்கள்.

இணைவைப்பவர்கள் தங்களுக்கோர் அற்புதம் காட்டும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டனர். அதற்கவர்கள் சந்திரன் பிளப்பதைக் காண்பித்தார்கள். சந்தி ரன் இரு கூறாகப் பிளந்தது. பல முறை அவர்களின் விரல்களிலிருந்து நீர் பீறிட்டியிருக் கிறது. அவர்களின் உள்ளங்கையிலிருந்த கல் தஸ்பீஹ் செய்தது- இறைவனை துதி பாடியது. பின்பு அதை அபூபக்ர், உமர், உஸ்மான் (ரலி) ஆகியோர்களின் கையில் வைத் தார்கள். அப்போதும் அது தஸ்பீஹ் செய்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாப்பிட் டுக் கொண்டிருந்தபோது உணவு தஸ்பீஹ் செய்ததை மக்கள் கேட்டனர். அவர்கள் நபியாக அனுப்பப்பட்டதற்குப் பிறகு கற்களும் மரங்களும் பல இரவுகளில் அவர்களுக்கு ஸலாம் கூறியிருக்கின்றன.

நபிகள் நாயகத்தை விஷம் கொடுத்துக் கொன்றுவிட வேண்டுமென்பதற்காக ஒரு யூதப் பெண் விஷம் கலந்த ஆட்டிறைச்சியை அன்பளிப்பாக வழங்கியபோது அது அவர் களிடம் பேசியது. ஒரு கிராமவாசி தனக்கொரு அற்புதம் காட்டும்படி அவர்களிடம் வே ண்டியபோது நபியவர்கள் ஒரு மரத்தைத் தம்மிடம் வரும்படி ஏவினார்கள். அது வந் தது. பிறகு அதைத் திரும்பிச் செல்லுமாறு ஏவியதும் அதன் இடத்திற்கே அது திரும்பிச் சென்றது. பாலில்லாத ஒரு ஆட்டின் மடியை அவர்கள் தடவியதும் அதில் பால் சுரந்தது. அதைக் கறந்து தாமும் அருந்தி அபூபக்ருக்கும் அருந்தக் கொடுத்தார்கள். அலீ (ரலி) அவர்களுக்கு கண் வலி ஏற்பட்டபோது அவர்களின் கண்களில் நபிகள் நாயகம் உமிழ் ந்ததும் அவர்கள் குணமடைந்தார்கள். ஒரு நபித்தோழரின் கால் முறிந்து விட்டபோது அதை நபிகள் நாகம் தமது கையால் தடவியதும் அது குணமடைந்தது. அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்களுக்காக நீண்ட ஆயுளுக்கும் அதிகமான செல்வத்துக்கும் குழந் தைப்பேறுகளுக்கும் துஆச் செய்தார்கள். அவற்றில் அல்லாஹ் அவர்களுக்கு பரகத் செய்யும்படியும் வேண்டினார்கள். அதன்படி அவர்களுக்கு 120 குழந்தைகள் பிறந்தன. அவர்களின் பேரீத்த மரம் வருடத்தில் இரு முறை காய்த்தன. சாதரணமாக ஒரு மரம் ஆண்டுக்கு ஒரு முறைதான் காய்க்கும். அவர்கள் 120 ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பரில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது அவ ர்களிடம் பஞ்சம் குறித்து முறையிடப்பட்டது. அவர்கள் அல்லாஹ்விடம் துஆச் செய்தா ர்கள். வானில் மேகமே இல்லாதிருந்தும் உடனே மலைகள் போன்று மேகங்கள் உரு வாகி மறு ஜும்ஆ வரை கடும் மழை பொழிந்தது. மீண்டும் அவர்களிடம் கடும் மழை பற்றி முறையிடப்பட்டது. உடனே அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். மழை நின்று மக்கள் வெயிலில் நடந்து சென்றனர். அகழ்ப்போரில் கலந்து கொண்ட ஆயிரம் பேருக்கு சுமார் இரண்டரை கிலோ கோதுமையையும் ஒரு ஆட்டையும் கொண்டு உணவளித்தனர். அவ ர்கள் அனைவரும் வயிறு நிரம்பி திரும்பிச் சென்றனர். உணவு குறையாமல் அப்படியே இருந்தது. இதுபோன்றே பஷீர் பின் ஸஅத் (ரலி) யின் மகள் தனது தந்தைக்கும் மாமா வுக்கும் கொண்டு வந்த சிறிது பேரீத்தம் பழத்தை நபிகள் நாயகம் (ஸல்) அகழ்ப் போ ரில் கலந்து கொண்ட அனைவருக்கும் உண்ணக் கொடுத்தார்கள். மேலும் அபூஹுரை ரா (ரலி) அவர்களின் பையிலிருந்த சிறிது உணவை படையினர் அனைவருக்கும் வயிறார உண்ணக் கொடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள், தங்களைக் கொல்வதற்காக எதிர்பா ர்த்துக் கொண்டிருந்த நூறு குறைஷிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சென் றார்கள். அவர்களால் நபியவர்களைப் பார்க்க முடியவில்லை. சுராக்கா பின் மாலிக் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக அவர்களைப் பின் தொடர்ந்தார். அவர் நெருங்கி வந்தபோது நபியவர்கள் அவருக்கெதிராகப் பிரார்த்தனை செய்தார் கள். அவருடைய குதிரையின் பாதங்கள் மண்ணில் புகுந்தன.

# உணவின் சட்டங்கள்
# أحكام الأطعمة

அல்லாஹ் தன்னுடைய அடியார்களைத் தூய்மையானவற்றை உண்ணுமாறு ஏவியுள்ளான். அசுத்தமானவற்றை உண்ண வேண்டாமெனத் தடுத்துள்ளான். "ஈமான் கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்"(2:172) உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை சட்டத்தின் அசல் நிலை ஆகுமென்பதே! எவற்றை உண்ணக் கூடாதென தடுக்கப்பட்டுள்ளதோ அவற்றைத் தவிர! எனவே அல்லாஹ் தனது அடியார்களுக்கு தூய்மையானவற்றை அனுமதித்திருக்கிறான் என்று சொன்னால் அதன் மூலம் அவர்கள் பயன் பெறவேண்டும் என்பதற்காகத்தான். பாவங்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பயன்படுத்தக் கூடாது.

அல்லாஹ் என்னென்ன உணவு, பானங்களை-ஹராம்-விலக்கப்பட்டதாக்கியுள்ளானோ அவற்றைத் தன்னுடைய அடியார்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: நிர்பந்தமான சூழ்நிலைகளைத் தவிர மற்ற சமயங்களில் அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்துள்ளவை பற்றி திண்ணமாக அவன் உங்களுக்கு விளக்கியுள்ளான். (6:119) எனவே அல்லாஹ் ஹராமென தெளிவாகக் கூறாதவை ஹலாலாகும். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நிச்சயமாக சில கடமைகளை கடமையாக்கியுள்ளான், அவற்றை பாழாக்கிவிடாதீர்கள். சில வரம்புகளை விதித்துள்ளான், அவற்றை மீறிவிடாதீர்கள். சில பொருட்களைத் தடை செய்துள்ளான், அவற்றை ஆகுமாக்கி இறைச் சட்டத்தை பங்கப்படுத்திவிடாதீர்கள், சில விஷயங்கள் பற்றி மறதியின்றி உங்களின் மீது கிருபை கொண்டு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்துள்ளான் அவை பற்றி நுணகிப் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.

உணவுகள், பானங்கள், உடைகள் இவற்றில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஹராம் என்று தெளிவாகக் கூறாதவற்றை நாம் ஹராமாக்கக் கூடாது. அடிப்படை என்னவென்றால் தூய்மையான கெடுதியிழைக்காத அனைத்து உணவுகளும் ஹலாலானவையே. செத்தவை, இரத்தம், மதுபானம், புகையிலை, அசுத்தமானவை போன்ற அசுத்தமான உணவுகள் நீங்கலாக! ஏனெனில் இவை ஹராமாகும். காரணம் இவை அசுத்தமானவையாகவும் கெடுதியிழைக்கக் கூடியவையாகவும் உள்ளன. செத்தவை என்றால் மார்க்கம் அனுமதித்த முறையில் அறுக்கப்படாமல் உயிர் பிரிந்தவை ஆகும். இரத்தம் என்பது அறுக்கப்பட்ட பிராணியிலிருந்து வெளியேறியதாகும். அறுக்கப்பட்ட பின் மாமிசத்திலும் நரம்புகளிலும் தங்கியிருக்கும் இரத்தம் ஹலாலாகும்.

அனுமதிக்கப்பட்ட உணவுகளில் பிராணிகள், தாவரங்கள் என இரு வகை உள்ளன. அவற்றில் கெடுதியில்லாதவை ஹலாலாகும். பிராணிகளில் கடலில் வாழக்கூடியவை, தரையில் வாழக்கூடியவை என இரு வகை உள்ளன. கடலில் வாழக்கூடியவைனைத்தும் பொதுவாக ஹலாலாகும். அவற்றை அறுக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. காரணம் கடல்வாழ்ப் பிராணிகளில் செத்தவைகளே ஆகுமானவையாக உள்ளன!

தரையில் வாழக்கூடிய பிராணிகளில் இஸ்லாம் ஹராமாக்கியவற்றைத் தவிர ஏனைய அனைத்தும் ஹலாலாகும். அவை:

1- நாட்டுக் கழுதை 2- கழுதைப் புலி நீங்கலாக கீறிக்கிழிக்கக் கூடிய பற்கள் உள்ளவை. 3- பறவைகளில் வேட்டையாடக் கூடிய நகங்கள் உள்ளவை நீங்கலாக அனை

த்தும் அனுமதிக்கப்பட்டவையாகும். மிருகங்களில் கீறிக்கிழிக்கக் கூடிய பற்கள் உள்ளவற்றையும் பறவைகளில் வேட்டையாடக் கூடிய நகங்கள் உள்ளவற்றையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

பறைவைகளில் பிணம் தின்னக் கூடியவை ஹராமாகும். கழுகு, பருந்து, காகம் போன்று. ஏனெனில் இவை அசுத்தாமானவற்றைத் தின்கின்றன. பாம்பு, எலி, புழு, பூச்சிகள் போன்ற அறுவருக்கத்தக்கவையும் ஹராமாகும்.

மேலே கூறப்பட்ட பிராணிகள், பறவைகள் தவிர அனைத்தும் ஹலாலாகும். உதாரணமாக குதிரை, ஆடு, மாடு, ஒட்டகம், கோழி, காட்டுக் கழுதை, மான், ஒட்டகச்சிவிங்கி, தீக்கோழி, முயல் இன்னும் இவை போன்றவை. இவற்றில் நஜீஸை- அசுத்தத்தை அதிகமாக உண்ணக் கூடியவை நீக்கப்பட்டுள்ளது. அவற்றை மூன்று நாட்கள் அடைத்து வைத்து சுத்தமானவற்றை உணவாகக் கொடுக்கப்படும் வரை உண்பது ஹராமாகும். வெறுக்கத்தக்க வாடையுள்ள பூண்டு, வெயங்காயம் போன்றவற்றை உண்பது வெறுக்கத்தக்கதாகும். குறிப்பாக பள்ளிவரசலுக்கு வரும்போது.

விலக்கப்பட்ட (ஹராமான) உணவை உண்ண வேண்டிய நிர்பந்தம் ஒருவனுக்கு ஏற்பட்டால்- அதை உண்ணவில்லையானால் அழிந்துபோவான் என அஞ்சுவது போன்ற நிலைமை எனில், தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவு அதை உண்பது அவனுக்குக் கூடும். ஆனால் நஞ்சைத் தவிர!

ஒருவன் ஒரு தோட்டத்தைக் கடந்து செல்கிறான், அதன் கனிகள் மரத்தில் இருக்கின்றன அல்லது கீழே விழுந்து கிடக்கின்றன என்றால் அத்தோட்டத்திற்கு மதில் சுவரும், காவலாளியும் இல்லை என்றால் அதிலிருந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் எடுத்துச் செல்லக் கூடாது. ஆனால் மரத்தில் ஏறியோ அல்லது எதையாவது கொண்டு எறிந்தோ அல்லது சேகரித்து வைக்கப்பட்டதிலிருந்தோ நிர்ப்பந்தமின்றி உண்பது கூடாது. நிர்பந்த சூழ்நிலைக்கு விதிவிலக்கு உண்டு!

## அறுப்பதன் சட்டங்கள்

தரைவாழ்ப் பிராணிகள் ஹலால் ஆக வேண்டுமானால் அவற்றை அறுப்பது நிபந்தனை என்று ஷரீஅத் சொல்வதால் அறுப்பது பற்றிய சட்ட நிலைகளை அறிவது அவசியமாகிறது.

அறுக்கும்போது தரைவாழ்ப் பிராணியின் தொண்டையையும், உணவுக் குழாயையும் முறிக்கும் அளவு அறுக்க வேண்டும். அறுக்க இடமளிக்காத பிராணியைக் குத்தி வீழ்த்தி அறுக்க வேண்டும். சக்திக்குட்பட்ட எந்தப் பிராணியையும் அறுக்காமல் உண்பது ஹலாலாகாது. ஏனெனில் அறுக்கப்படாதவை செத்தவையாகும்.

## அறுப்பதற்குரிய விதிகள்

அறுப்பதற்கு சில விதிகள் உள்ளன. அவை வருமாறு:

1- அறுக்கத் தகுதியானவனாக இருக்கவேண்டும். அதாவது அறுப்பவன் புத்தி சீர் நிலையில் உள்ள, மார்க்கமறிந்த முஸ்லிமாகவோ அல்லது வேதம் கொடுக்கப்பட்டவனாகவோ இருக்க வேண்டும். போதையுள்ளவன், பைத்தியக்காரன், விபரமில்லாத சிறுவன் ஆகியோர் அறுத்தது கூடாததாகும். ஏனெனில் இவர்களில் விளங்கும் தன்மையில்லாததால் அறுப்பதன் நோக்கம் இவர்களில் செல்லாது. மேலும் சிலை வண

ங்கக்கூடிய காபிரோ, நெருப்பு வணங்கியோ, கப்ருவணங்கியோ அறுத்ததும் ஹலா லாகாது.

2- அறுக்கும் கருவியை நன்றாகத் தீட்டிக்கொள்ள வேண்டும். இரத்தத்தை ஓட்டக் கூடிய இரும்பு, கல் அல்லது இது போன்ற கூர்மையானவற்றைக் கொண்டு அறுப்பது கூடும். பல் (எலும்பு), நகத்தைக் கொண்டு அறுப்பது கூடாது.

3- தொண்டையை- மூச்சுக் குழாயை அறுக்க வேண்டும். மேலும் உணவுக் குழாய், பிடரி நரம்புகளில் ஒரு நரம்பு ஆகியவற்றையும் அறுக்க வேண்டும். குறிப்பாக இந்த இடத்தில் இவற்றை அறுப்பதற்குரிய தத்துவம் இரத்தத்தை வெளியேற்றுவதேயா கும். ஏனெனில் இந்த இடம் தான் நரம்புகள் ஒன்று சேருமிடமாகும். மேலும் இது விரைவாக உயிர் பிரிவதற்கு ஒரு வழியாகவும் பிராணிகளுக்கு சிரமமில்லாமல் இலே சாகவு மிருக்கும். அத்துடன் மாமிசம் மிகச் சுவையாகவும் இருக்கும்.

- மேலே கூறப்பட்ட பகுதியில் அறுக்க இயலவில்லையெனில்-உதாரணமாக வேட்டைப் பிராணி போன்று- அதன் உடலில் ஏதேனும் ஓர் இடத்தில் காயப்படுத்துவது கொ ண்டு அதன் அறுப்பு நிறைவேறிவிடும்.
- கழுத்து நெறிக்கப்பட்ட, அடிபட்ட, உயரமான இடத்திலிருந்து வீழ்ந்த, மோதப்பட்ட, கொடிய விலங்குகளால் கடித்துக் குதறப்பட்ட பிராணிகளை உண்பது கூடாது. ஆனால் அவை உயிர் பிரியாமல் இருந்து அவற்றை அறுத்து விட்டால் அவற்றைச் சாப்பிடுவது ஹலாலாகும்.

4- அறுக்கும்போது அறுக்கக் கூடியவன் பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும். அத்து டன் அல்லாஹு அக்பர் என்பதையும் சேர்த்துக் கூறுவது சுன்னத்தாகும்.

## அறுக்கும் ஒழுங்குமுறைகள்

1- பிராணிகளை கூர்மையற்ற ஆயுதங்களைக் கொண்டு அறுப்பதும், அவை பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஆயுதங்களைக் கூர்மைப்படுத்துவதும், கிப்லா அல்லாத திசைகளில் அவற்றைப் படுக்கவைத்து அறுப்பதும், அது மரணிக்கு முன் அதன் கழுத்தை வெட்டுவதும், தோலை உரிப்பதும் வெறுக்கத்தக்கதாகும்.

2- ஆடு, மாடுகளை இடது பாகமாக படுக்கவைத்தும், ஒட்டகத்தை அதன் இடது கா லைக் கட்டி நிறுத்தி வைத்தும் அறுப்பது சுன்னத்தாகும். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## வேட்டையாடுதல்

தேவைக்காக மிருகங்களை வேட்டையாடுவது கூடும். வீண், விளையாட்டுக்காக வேட்டையாடுவது மக்ருஹ்-வெறுக்கத்தக்கதாகும். வேட்டையாடி பிடிபட்ட பிராணிக்கு இரு நிலைகள் உள்ளன.

1- உயிருடன் பெற்றுக் கொள்வது, அப்போது அதை அறுப்பது கட்டாயமாகும்.

2- இறந்த நிலையிலோ அல்லது நிலையற்ற உயிருடனோ பெற்றுக் கொள்ளப்பட்டால் அவை ஹலாலாகும்.

- அறுக்கக் கூடியவனுக்குரிய நிபந்தனைதான் வேட்டையாடக் கூடியவனுக்கும் உள் ளது. அவை வருமாறு:

1- புத்தி சீர் நிலை உள்ள முஸ்லிமாக அல்லது வேதக்காரனாக இருக்க வேண்டும். பைத்தியக்காரன், போதையுள்ளவன், நெருப்பு வணங்கி, சிலை வணங்கி, கப்ரு வணங்கி போன்ற காஃபிர்கள் அறுத்தவற்றை முஸ்லிம் உண்பது கூடாது.

2- அறுக்கக்கூடிய ஆயுதம் இரத்தத்தை ஓட்டக் கூடிய வகையில் கூர்மையானதாக இருப்பது நிபந்தனையாகும். எலும்பு, நகத்தைக் கொண்டு அறுக்கக்கூடாது. வேட்டைப் பிராணியை ஆயுதத்தின் அழுத்தத்தினால் காயப்படுத்தாமல் அதன் கூர்மை கொண்டு காயப்படுத்தியிருக்க வேண்டும்.

- வேட்டையாடக் கூடிய நாய் மற்றும் பறவைகள் பயிற்றுவிக்கப்பட்டவையாக இருந்தால் அவை கொன்றவற்றை சாப்பிடுவது கூடும். பயிற்றுவிக்கப்பட்ட வேட்டைப் பிராணி என்பது அதைப் போ என அனுப்பி வைத்தால் போகும், வா என அழைத்தால் திரும்பி வரும். மேலும் அது ஒரு வேட்டையைப் பிடித்தால் தனது எஜமானனிடம் வரும் வரை எஜமானனுக்காகவே பிடித்து வைத்துக் கொள்ளும். தனக்காக பிடித்துக் கொள்ளாது.

3- வேட்டையாடுபவன் வேட்டைப் பிராணியை நோக்கி கருவியை எறிய வேண்டும். அவனது கையிலிருந்து ஆயுதம் கீழே விழுந்து ஒரு பிராணியைக் கொன்று விட்டால் அது அவனுக்கு ஹலாலாகாது. ஏனெனில் அதை வேட்டையாடுவது அவனது நோக்கமாக இருக்கவில்லை. ஒரு நாய் தானாகவே சென்று ஒரு பிராணியைக் கொன்றுவிட்டால் அதன் எஜமானன் அதை அனுப்பாததாலும் அவன் வேட்டையை நாடாததாலும் அவனுக்கு அது ஹலாலாகாது.

- ஒருவன் ஒரு பிராணியை எறிந்து அது வேறு பிராணியையோ அல்லது பிராணிகளின் ஒரு கூட்டத்தையோ கொன்று விட்டால் அவை அனைத்தும் அவனுக்கு ஹலாலாகி விடும்.

4- அம்பை அல்லது காயப்படுத்தக் கூடியதை அனுப்பும்போது பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும். அத்துடன் அல்லாஹு அக்பர் என சேர்த்துக் கூறுவது சுன்னத்தாகும்.

குறிப்பு: நபி(ஸல்)அவர்கள் அனுமதி வழங்காத காரியங்களுக்காக நாய் வளர்ப்பது ஹராமாகும். அவர்கள் அனுமதி வழங்கியவை வேட்டை, கால்நடைகளைப் பாதுகாத்தல், விவசாயத்தைப் பாதுகாத்தல் ஆகிய மூன்று காரியங்களாகும்.

# உம்ராவின் சட்டதிட்டங்கள்
# أحكام العمرة

## உம்ரா

உம்ரா செய்வது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் வாழ்நாளில் ஒரு முறை கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வுக்காக உம்ராவையும் ஹஜ்ஜையும் நீங்கள் நிறைவு செய்யுங்கள். (2:196) உம்ரா, ஒரு முஸ்லிம் முடிந்தவரை திரும்பத் திரும்ப செய்ய வேண்டிய சிறந்த செயல்களில் ஒன்றாகும். உம்ரா செய்யக் கூடியவர் உம்ராவுடைய வணக்கங்களில் முதன் முதலில் செய்ய வேண்டியது இஹ்ராமாகும்.

## இஹ்ராம்

இஹ்ராம் என்பது ஹஜ் அல்லது உம்ரா உடைய வணக்கத்தில் பிரவேசிப்பதாகும். இஹ்ராமிலுள்ளவருக்கு அதற்கு முன்னர் ஹலாலாக இருந்த சில காரியங்கள் ஹராமாகி விடுகின்றன. ஏனெனில் அவர் ஒரு வணக்கத்தில் புகுந்துவிட்டார். ஹஜ் அல்லது உம்ராவை விரும்புகிறவர் மக்காவிற்கு வெளியில் நபி(ஸல்)அவர்கள் நிர்ணயம் செய்த எல்லைகளில் ஏதேனும் ஒரு எல்லையிலிருந்து முன்னோக்கி வருபவராக இருந்தால் இஹ்ராம் கட்டாயமாகும்.

## எல்லைகள்

1- துல்ஹுலைஃபா: இது மதீனாவிற்குச் சமீபமாக உள்ள ஒரு கிராமமாகும். தற்போது இதற்கு (அப்யார் அலி) எனக் கூறப்படுகிறது. இது மதீனாவாசிகளுக்குரிய எல்லையாகும்.
2- அல்ஜுஹ்ஃபா: இது ராபிஃக் என்னும் ஊருக்கு அருகில் உள்ள ஒரு சிறிய ஊராகும். தற்போது மக்கள் ராபிஃகிலிருந்தே இஹ்ராம் கட்டிக் கொள்கிறார்கள். இது சிரியா வாசிகளின் எல்லை.
3- கர்னுல் மனாஸில்: (ஸைலுல்கபீர்) இது தாயிஃபிற்குச் சமீபமான ஒரு இடம். இது நஜ்து வாசிகளின் எல்லையாகும்.
4- யலம்லம்: இது மக்காவிலிருந்து சுமார் 70 கி.மீ. தூரத்திலுள்ளது. இது யமன்வாசிகளின் எல்லையாகும். (இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கும் இதுவே எல்லையாகும்.)
5- தாதுல் இர்க்: இது இராக்வாசிகளின் எல்லையாகும்.

இவ்வைந்து இடங்களும் மேலே குறிப்பிட்ட ஊர்வாசிகளுக்கும் இவ்விடங்கள் வழியாக வருகின்றவர்களுக்கும் எல்லைகளாகும். இந்த எல்லைளுக்கு உள்ளே உள்ளவர்களும் ஹரமில் உள்ளவர்களும் அவர்கள் இருக்கின்ற இடங்களிலிருந்தே இஹ்ராம் செய்து கொள்ள வேண்டும்.

## இஹ்ராமின் சுன்னத்கள்

இஹ்ராமுக்கு முன் செய்ய வேண்டிய சுன்னத்தான காரியங்கள்:

1- நகங்களை வெட்டுவது, அக்குள் முடிகளைப் பிடுங்குவது அல்லது மழிப்பது, மீசையைக் கத்தரிப்பது, மர்மஸ்தலத்தின் முடியை மழிப்பது, குளிப்பது, ஆடைகளிலன்றி உடம்புக்கு மட்டும் மணம் பூசிக்கொள்வது. ஆடைகளுக்குப் பூசக்கூடாது.

2- தையலாடைகளைக் களைவது, வேஷ்டி உடுத்தி, துண்டைப் போர்த்திக் கொள்வது, பெண் தான் விரும்பிய ஆடைகளை அணிந்து கொள்ளலாம். தன்னை மூடி மறைத்துக் கொள்வதிலும் அழகலங்காரங்களை வெளிப்படுத்தாதிருப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். அன்னிய ஆடவர்கள் வரும்போது முகத்தையும் முன் கைகளையும் மறைத்துக் கொள்ளவேண்டும். கையுறைகளையும் முகத்தை மறைப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

3- பள்ளிக்குச் சென்று அந்நேரம் தொழுகை நேரமாக இருந்தால் ஜமாஅத்துடன்தொழுவது அல்லது உளூவின் சுன்னத்தான இரு ரக்அத்துகளைத் தொழுவது. அதன் பின்னர் இஹ்ராமைத் தொடங்குவது.

## இஹ்ராம் முறை

லப்பைக் உம்ரதன் என்று கூறி இஹ்ராம் செய்ய வேண்டும். இஹ்ராம் செய்த பின்னர் தல்பியாச் சொல்வதும் அதை இஹ்ராம் செய்ததிலிருந்து கஅபதுல்லாஹ்வை அடைந்து தவாஃப்-வலம் வருவதை ஆரம்பிக்கும் வரை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பதும் சுன்னத்தாகும்.

தல்பியா:

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لَا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَاشَرِيْكَ لَكَ

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லப்பைக் லாஷரீக்கலக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிஃமத்த லகவல் முல்க், லாஷரீக்க லக்.

(பொருள்: உன்னிடம் வந்துவிட்டேன். இறைவா! உன்னிடமே வந்துவிட்டேன். உன்னிடமே வந்துவிட்டேன். உனக்கு யாதொரு இணையுமில்லை. உன்னிடமே வந்து விட்டேன் நிச்சயமாக புகழும் அருட்பாக்கியங்களும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு யாதொரு இணையுமில்லை)

## இஹ்ராமில் தடுக்கப்பட்டவை

இஹ்ராம் கட்டிக் கொண்டவருக்கு பின் வருபவை ஹராமாகும்.

1- தலை முடியையும் உடம்பின் ஏனைய பாகங்களிலுள்ள முடிகளையும் நீக்குவது. எனினும் தேவையின் நிமித்தம் இலேசாகத் தலையைச் சொரிவதால் (முடிவீழுவதால்) குற்றமில்லை.

2- நகங்களை வெட்டுதல். எனினும் நகம் உடைந்து விட்டால் அல்லது அது அவனுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தால் அதை வெட்டுவது குற்றமல்ல.

3- வாசனைப் பொருட்களை உபயோகிப்பது (வாசனைச் சோப்புக்கும் இதே சட்டம்தான்)

4- உடலுறவு கொள்ளல், அதைத் தூண்டக் கூடிய காரியங்களைச் செய்தல். உதாரணமாக திருமணம் முடித்தல், மனைவியை இச்சையுடன் பார்த்தல், அணைத்தல், முத்தமிடுதல் போன்றவை!

5- கையுறைகள் அணிதல்.

6- வேட்டைப் பிராணிகளைக் கொல்லுதல்.

இவ்வனைத்தும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஹராமானதாகும். ஆண்களுக்கு அதிகப்படியாக இன்னும் சில ஹராமாகின்றன.

அ- தையல் ஆடை அணிவது. எனினும் இஹ்ராமிலுள்ளவன் பெல்ட், கண்ணாடி, வாட்ச் போன்ற தேவையுள்ள பொருட்கள் அணிவது கூடும்.

ஆ- தலையை ஒட்டினாற்போல ஏதேனும் ஒன்றைக் கொண்டு தலையை மறைத்தல். தலையோடு ஒட்டாமல் சற்று உயரமாக வைத்து தலையை மறைத்துக் கொள்வது குற்றமில்லை. உதாரணமாக குடை, வாகனம், கூடாரம் போன்று!

இ- காலுறை அணிவது. செருப்புக் கிடைக்கவில்லையானால் காலுறை அணிந்து கொள்ளலாம்.

தடுக்கப்பட்ட இவற்றில் ஒன்றை யாரேனும் செய்துவிட்டால் அவனுக்கு மூன்று நிலைகள் உள்ளன:

1- தக்க காரணமின்றிச் செய்பவன். இவன் பாவியாவான். அபராதம் உண்டு.
2- தேவைக்காகச் செய்பவன். இவன் பாவியாகமாட்டான். அபராதம் உண்டு.
3- தக்க காரணத்துடன் செய்பவன். அதாவது அறியாமலோ, மறந்தோ, நிர்ப்பந்தமாகவோ செய்வது போல. இவனுக்கு குற்றமுமில்லை. அபராதமுமில்லை.

## தவா..ப் (வலம் வருதல்)

மஸ்ஜிதுல் ஹராமில் (கஅபத்துல்லாவில்) நுழையும் போது வலது காலை வைத்து

بِسْمِ اللّٰهِ وا لصَّلَاةُ والسَّلَامُ عَلَى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ اغْفِرْ لِي ذُنُوْبِي وَا فْتَحْ لِي اَبْوَابَ رَحْمَتِكَ

பிஸ்மில்லாஹி, வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ் அல்லாஹும்ம க்..பிர்லீ துனூபி வ..ப்தஹ்லீ அப்வாப ரஹ்மத்திக்க என்று கூறுவது சுன்னத்தாகும். (பொருள்: அல்லாஹ்வின் பெயர் கூறி நுழைகிறேன். கருணையும் ஈடேற்றமும் அல்லாஹ்வின் தூதர் மீது உண்டாவதாக! இறைவா! என்னுடைய பாவங்களை மன்னித்துவிடு. உனது அருள் வாயில்களை எனக்குத் திறந்துவிடு)

இந்த துஆ எல்லாப் பள்ளிகளுக்கும் பொதுவானதாகும். பின்னர் கஅபாவை வலம் வருவதற்காக அதை முன்னோக்க வேண்டும்.

தவா..ப் என்பது அல்லாஹ்விற்கு வணக்கம் செய்யும் எண்ணத்தில் ஹஜருல் அஸ்வதிலிருந்து ஆரம்பித்து இடது புறமாக கஅபாவை ஏழு முறை சுற்றி வருவதாகும். முடிக்கும் போது ஹஜருல் அஸ்வதில் முடிக்க வேண்டும். தவா..ப் செய்யும் போது உளூவுடன் இருக்க வேண்டும்.

## தவா..ப் செய்யும் முறை

1- ஹஜருல் அஸ்வதின் பக்கம் சென்று அதைத் தனது வலது கையால் தொட்டு பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் எனக் கூற வேண்டும். இத்துடன்

اَللّٰهُمَّ اِيْمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ وَاتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ

அல்லாஹும்ம ஈமானம்பிக வதஸ்தீகம் பிகிதாபிக வவ..பாஅம் பிஅஹ்திக வத்திபாஅன் லிசுன்னத்தி நபிய்யிக. என்பதையும் சேர்த்து சொன்னால் சிறப்பாகும். (பொருள்: இறைவா! உன்னை நம்பிக்கை கொண்டு, உன்னுடைய வேதத்தை உண்மைப்படுத்தி, உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி, உன்னுடைய நபியின் சுன்னத்தை பின்பற்றியவனாக இதை நான் செய்கிறேன்) முடிந்தால் அக்கல்லை முத்தமிட வேண்டும். அதை முத்தமிட முடியவில்லையெனில் கல்லைத் தொட்ட

தனது கையை முத்தமிட்டுக் கொள்ள வேண்டும். ஹஜருல் அஸ்வதைத் தொட முடியவில்லையானால் அதை முன்னோக்கி அல்லாஹு அக்பர் எனக் கூறி தனது கை கொண்டு அதன்பால் சுட்டிக் காட்ட வேண்டும். தனது கையை முத்தமிடக் கூடாது. பின்னர் கஅபத்துல்லாவை தனது இடப்புறமாக்கி தவாஃபைத் தொடங்க வேண்டும். தான் விரும்பிய துஆக்களைக் கேட்கலாம் அல்லது தனக்குத் தெரிந்த குர்ஆன் வசனங்களை ஓதலாம். தனது மொழியில் தனக்கும் தான் விரும்பியவருக்கும் துஆச் செய்யலாம். இங்கு துஆச் செய்வதற்கென குறிப்பான துஅக்கள் ஏதமில்லை.

2- ருக்னுல் யமானியை அடைந்துவிட்டால், முடிந்தால் அதைத் தொட்டு பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் எனக் கூற வேண்டும். தனது கையை முத்தமிடக் கூடாது. முடியாவிட்டால் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டும். அதன் பக்கம் தனது கையால் சுட்டிக் காட்டவும், தக்பீர் சொல்லவும் கூடாது. ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதுக்குமிடையில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

“ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன் நார்” எனக் கூற வேண்டும். (எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மையைத் தருவாயாக! நரக வேதனையை விட்டும் எங்களைக் காப்பாயாக!)

3- ஹஜருல் அஸ்வதை அடைந்து விட்டால் வலது கையால் அதைத் தொட வேண்டும். முடியவில்லையானால் அல்லாஹு அக்பர் எனக் கூறி தனது கையால் சுட்டிக் காட்ட வேண்டும். இப்படிச் செய்வது கொண்டு தவாஃபின் ஏழு சுற்றுக்களில் ஒரு சுற்று முடிவடைந்து விடுகிறது. மீதமுள்ள சுற்றுக்களையும் இவ்வாறே பூர்த்தி செய்யவும்.

4- தொடர்ச்சியாக வலம் வந்து கொண்டிருக்க வேண்டும். ஏழு சுற்றுக்களைப் பூர்த்தியாக்கும் வரை முதல் சுற்றில் செய்தது போலவே செய்ய வேண்டும். ஹஜருல் அஸ்வதைக் கடந்து செல்லும் போதெல்லாம் தக்பீர் சொல்லிட வேண்டும். இதுபோன்றே ஏழாவது சுற்றுக்குப் பின்னரும் தக்பீர் சொல்ல வேண்டும்.

முதல் மூன்று சுற்றுக்களில் தொங்கோட்டம் ஓடுவது சுன்னத்தாகும். மீதமுள்ள நான்கு சுற்றுக்களில் நடந்தே செல்ல வேண்டும். தொங்கோட்டம் என்பது கால் எட்டுகளை சுருக்கி வைத்து சற்று வேகமாக நடப்பதாகும். மேலும் இந்த தவாஃபில் மேல் அங்கியின் நடுப்பகுதியை வலது அக்குளுக்குக் கீழ் சுற்றிக் கொண்டு வந்து இரு ஓரங்களையும் இடது தோள் புஜத்தின் மீது போட்டுக் கொள்ள வேண்டும். வலது தோள் புஜம் மட்டும் திறந்திருக்க வேண்டும். இதுவும் சுன்னத்தாகும்.

தொங்கோட்டமும் மேலங்கியை இவ்வாறு போட்டுக்கொள்வதும் உம்ரா செய்யக் கூடியவரும், ஹஜ் செய்யக் கூடியவரும் மக்காவுக்கு வரும்போது செய்யக் கூடிய முதல் தவாஃபில் மட்டும்தான். மேலும் இவ்விரண்டும் ஆண்களுக்கு மட்டும்தான்.

## தவாஃபுக்குப் பின்னர்

தவாஃபுக்குப் பின்னர் மகாம் இப்றாஹீமுக்குப் பின்னால் நின்று இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது சுன்னத்தாகும். அப்படித் தொழும்போது மகாம் அவனுக்கும் கஅபத்துல்லாவுக்குமிடையே இருக்க வேண்டும். தொழுவதற்கு முன்னால் மேலங்கியை இரண்டு தோள் புஜங்கள் மீதும் நெஞ்சின் மீதும் போட்டுக் கொள்ள வேண்டும். முதல் ரக்

அத்தில் ஃபாத்திஹாவும் குல்யாஅய்யுஹல் காஃபிருனும் இரண்டாவது ரக்அத்தில் ஃபாத்திஹாவும் குல்ஹுவல்லாஹு அஹதும் ஓத வேண்டும். கடுமையான நெருக்கடியினால் மகாம் இப்றாஹீமுக்குப் பின்னால் தொழ முடியவில்லையானால் பள்ளியின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தொழுது கொள்ளலாம். பிறகு ஸம் ஸம் தண்ணீரை வயிறு புடைக்க அதாவது அதிகமாகக் குடிப்பது சுன்னத்தாகும்.

## ஸயீ செய்வது

பின்னர் ஸயீ செய்யுமிடத்திற்குச் சென்று ஸஃபாவின் பக்கமாகச் செல்ல வேண்டும். அதை நெருங்கும் போது إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ "இன்னஸ் ஸஃபா வல்மர்வத மின் ஷஆயிரில்லாஹ்" எனும் வசனத்தை ஓதிக்கொள்ள வேண்டும். (பொருள்: ஸஃபா, மர்வா இரு குன்றுகளும் அல்லாஹ்வின் சின்னங்களில் உள்ளவையாகும்) கஅபாவைக் காணுமளவிற்கு ஸஃபாவில் ஏற வேண்டும். பின்னர் கஅபாவை முன்னோக்கி தனது இரு கைகளையும் உயர்த்தி, அல்லாஹ்வைப் புகழ்ந்து தான் விரும்பிய துஆவைக் கேட்க வேண்டும். உதாரணமாக

لا إِلَهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرْ؛ لا إِلَهَ إِ لاَّ اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ؛ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِي وَيُمِيْتُ وَهُوَ عَلَي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ؛ لا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ أَنجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தா அன்ஜஸ வஃதா வநஸர அப்தா வஹஸமல் அஹ்ஸாப வஹ்தா

(பொருள்: வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன் அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்குரியதே! புகழ் அனைத்தும் அவனுக்கே! மேலும் அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் நிறைந்தவன்! அல்லாஹ் ஒருவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. அவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றினான். தன் அடியாருக்கு உதவினான். அவன் மட்டுமே எதிரிக் கூட்டத்தினரைத் தோல்வியுறச் செய்தான்!.)

என மூன்று முறை கூறிக் கொண்டு நீண்ட நேரம் துஆச் செய்ய வேண்டும். பின்னர் அதிலிருந்து இறங்கி மர்வாவை நோக்கிச் செல்லவேண்டும். பச்சைத் தூணை அடைந்தால் அடுத்த பச்சைத் தூணை அடையும் வரை முடிந்த அளவு விரைந்து செல்வது சுன்னத்தாகும். இப்படிச் செய்யும் போது யாருக்கும் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். (விரைந்து செல்வது ஆண்களுக்கு மட்டுமே பெண்களுக்கல்ல)

மர்வாவை அடைந்துவிட்டால் அதில் ஏறி கிப்லாவை முன்னோக்கி கைகளை உயர்த்தி ஸஃபாவில் கூறியது போலக் கூற வேண்டும். இப்படி ஒருவர் செய்துவிட்டால் அவர் ஸயீக்குரிய ஏழு தடவைகளில் ஒன்றை முடித்துவிட்டார். துஆவிற்குப் பின்னர் மர்வாவிலிருந்து இறங்கி ஸஃபாவை நோக்கிச் செல்ல வேண்டும். முதல் தடவை செய்தது போலவே செய்து கொள்ளவேண்டும். ஸயீயின் போது துஆவை அதிகப்படுத்திக் கொள்வது சுன்னத்தாகும்.

ஸயீ செய்த பிறகு தலை முடியை முழுவதும் மழித்துக் கொள்ள வேண்டும். அல்லது முழுவதும் குறைத்துக் கொள்ள வேண்டும். என்றாலும் மழிப்பதே சிறந்தது. ஆனால் பெண்கள் தம் அனைத்து முடிகளிலிருந்தும் விரல் நுனி அளவிற்கு (சுமார் 3 செ.மீ) வெட்

**டிக் கொள்ள வேண்டும். இதன் பிறகு உம்ராவிலிருந்து விடுபட வேண்டும். இதுவே உம்ரா செய்யும் முறை.**

## உம்ராவின் ருகுன்கள்

(முதன்மை நிலைக் கடமைகள்)

**1- இஹ்ராம்**

**2- தவா∴ப்**

**3- ஸயீ**

**இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒருவர் விட்டுவிட்டால் அதை நிறைவு செய்யாத வரை அவரது உம்ரா பூர்த்தியாகாது.**

## உம்ராவின் வாஜிபுகள்

(இரண்டாம் நிலைக் கடமைகள்)

**1- எல்லையில் இஹ்ராம் செய்தல்**

**2- தலை முடியை மழித்தல் அல்லது குறைத்தல்.**

**இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒருவர் விட்டுவிட்டால் அவர் குர்பானீ கொடுக்க வேண்டும். அதன் இறைச்சியை ஹரம் பகுதியிலுள்ள ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டும்.**

مطبعة النرجس التجارية
NARJIS PRINTING PRESS
تلفون : ٢٣١٦٦٥٣ / ٢٣١٦٦٥٤
فاكس : ٢٣١٦٨٦٦ الرياض

# قائمة بأسماء وعناوين بعض المكاتب التعاونية لتوعية الجاليات بالمملكة

| م | المكتب | الهاتف | الفاكس | العنوان |
|---|---|---|---|---|
| ١ | شعبة الجاليات (بالوزارة) | ٠١-٤٠١٠٩٣٢ | ٠١-٤٠١٠٨٩٢ | الرمز ١١١٣١ |
| ٢ | مكتب الجاليات بالروضة | ٠١-٤٩٢٢٤٢٢ | ٠١-٤٩٧٠٥٦١ | الرياض ١١٦٤٢ ص.ب ٨٧٢٩٩ |
| ٣ | مكـ البطحاء بالرياض | ٠١-٤٠٣٠١٤٢ | ٠١-٤٠٥٩٣٨٧ | الرياض ١١٤٦٥ ص.ب ٢٠٨٢٤ |
| ٤ | مكتب البديعة بالرياض | ٠١-٤٣٣٠٤٧٠ | ٠١-٤٣٠١١٢٢ | الرياض ١١٤٥٦ ص.ب ٢٤٩٣٢ |
| ٥ | مكتب الربوة بالرياض | ٠١-٤٩٧٠١٢٦ | ٠١-٤٩٧٠١٢٦ | الرياض ١١٤٥٧ ص.ب ٢٩٤٦٥ |
| ٦ | مكتب الجاليات بالخرج | ٠١-٥٤٤٠٦٦٢ | ٠١-٥٤٤٠٩٨٣ | الخرج ١١٩٤٢ ص.ب ١٦٨ |
| ٧ | مكتب الجاليات بشقراء | ٠١-٦٢٢٢٠٦١ | ٠١-٦٢٢١٧١١ | شقراء ١١٩٦١ ص.ب ١٥٢ |
| ٨ | مكتب الجاليات بمكة المكرمة | ٠٢-٥٧٤٤٩٦٦ | ٠٢-٥٤٢٩٢٨٧ | مكة المكرمة شارع الستين |
| ٩ | مكتب جاليات حي السلامة بجدة | ٠٢-٦٨٢٩٨٩٨ | ٠٢-٦٦٢٢٦٦٢ | جدة ٢١٤٥٢ ص.ب ٦٨٩٧ |
| ١٠ | مكتب الجاليات بالطائف | ٠٢-٧٣٦٠٨٢٢ | ٠٢-٧٣٦٠٨٢٢ | الطائف ٨١٥ |
| ١١ | مكتب الجاليات بالدمام | ٠٣-٨٢٧٢٧٧٢ | ٠٣-٨٢٧٤٧٠٠ | الدمام ٣٠٠٣١ |
| ١٢ | مكتب الجاليات بالأحساء | ٠٢-٥٨٦٦٦٧٢ | ٠٣-٥٨٧٤٦٦٤ | الهفوف ٣١٩٨٢ ص.ب ٢٠٢٢ |
| ١٣ | مكتب الجاليات بالخبر | ٠٣-٨٩٥٢٤٤٤ | ٠٣-٨٩٥٤٣٢٢ | الدمام ٣١١٣١ |
| ١٤ | مكتب الجاليات بالخفجي | ٠٣-٧٦٦١٩٦٩ | ٠٣-٧٦٦١٩٦٩ | الخفجي ٣١٩٧١ ص.ب ١٥٨ |
| ١٥ | مكتب الجاليات بالقريات | ٠٤-٦٤٣٤٠٨٩ | ٠٤-٦٤٢٤٠٨٩ | القريات ص.ب ٣٥٦ |
| ١٦ | مكتب الجاليات بتبوك | ٠٤-٤٢١١٣١٥ | ٠٤-٤٢٢٨٥١١ | مركز الدعوة بتبوك |
| ١٧ | مكتب الجاليات بعرعر | ٠٤-٦٦١٠٥١٣ | ٠٤-٦٦١٠٥١٣ | عرعر ص.ب ٨٧٥ |
| ١٨ | مركز توعية الجاليات بالقصيم/بريدة | ٠٦-٢٢٤٨٩٨٠ | ٠٦-٣٢٤٥٤١٤ | بريدة ص.ب ١٤٢ |
| ١٩ | مكتب الجاليات بعنيزة | ٠٦-٣٦٤٤٥٠٦ | ٠٦-٣٦٤٤٥٠٦ | عنيزة ص.ب ٨٠٨ |
| ٢٠ | مكتب الجاليات بالبكيرية | ٠٦-٣٣٥٩٢٦٦ | ٠٦-٣٣٥٩٢٦٦ | البكيرية ص.ب ٢٩٢ |
| ٢١ | مكتب الجاليات بالمجمعة | ٠٦-٤٣٢٣٩٤٩ | ٠٦-٤٣٢٣٩٤٩ | المجمعة ١١٩٥٢ ص.ب ١٠٢ |
| ٢٢ | مكتب الجاليات بالزلفي | ٠٦-٤٢٢٥٦٥٧ | ٠٦-٤٢٢٤٢٣٤ | ص.ب ١٨٢ الزلفي ١١٩٣٢ |
| ٢٣ | مكتب الجاليات بحائل | ٠٦-٥٣٣٤٧٤٨ | ٠٦-٥٤٣٢٢١١ | حائل ص.ب ٢٨٤٣ |
| ٢٤ | مكتب الجاليات بالباحة | ٠٧-٧٢٥١٨٥١ | ٠٧-٧٢٧٠٢٧٩ | الباحة / مكتب الدعوة والإرشاد |
| ٢٥ | مكتب الجاليات ببيشة | ٠٧-٦٢٢٢٤٧٤ | ٠٧-٦٢٢٢٤٧٤ | بيشة ص.ب ٣٥ |

# مركز توعية الجاليات بالقصيم

## أهداف المركز

### يسعى المركز إلى تحقيق الأهداف التالية

دعوة غير المسلمين للإسلام وترغيبهم في اعتناق الدين الإسلامي.
متابعة من أسلم وتعليمه الأحكام الشرعية والمبادئ الهامة.
دعوة المسلمين إلى تصحيح ما عندهم من أفكار خاطئة وحثهم على انتهاج المنهج الإسلامي المبني على هدي الله عز وجل وسنة رسوله ﷺ .
تدريب المسلمين لدعوة غير المسلمين، وذلك وفق أصول شرعية وباستنارة من أهل الخبرة في هذا المجال.
الاتصال والتنسيق والتعاون مع الهيئات والمراكز الإسلامية بما يخدم الإسلام والمسلمين.
طبع ونشر الكتاب والشريط الإسلامي بعدة لغات في أبواب التوحيد والإيمان والآداب والأخلاق والأحكام وتوزيعها في الداخل والخارج.
نستقبل التبرعات على حساب الصدقات رقم (٨/١٧٤٤٠) الراجحي الخبيب بريدة، والزكاة بحساب (١/٤٨٠٠) الراجحي السادة بريدة.


ردمك : ٠ - ٧٧ - ٨١٣ - ٩٩٦٠

مطبعة النرجس- ت: ٢٣١٦٦٥٣ ف: ٢٣١٦٨٦٦



KINGDOM OF SAUDI ARABIA
FOREIGNERS GUIDANCE CENTER
IN GASSIM ZONE
Tel.: 06 / 3248980 - 3243100 - 3231405 Fax: 06 / 3245414
P.O. Box : 142 BURAIDAH



[ طبع على نفقة مركز توعية الجاليات بالقصيم عام ١٤٢٤هـ - ٢٠٠٣م ]